866
16.1.2007

வெளியீடு : 1-8-2007

Issued : 1-8-2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
எழும்பூர்

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, மார்ச் 27, 2007—தொகுதி 22—எண் 1**

**Tuesday the 27th March, 2007—Volume 22—No. 1**

...மன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...tive Assembly Secretariat, Chennai-600 009

[Price Rs. 3.00

227557

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
எழும்பூர்

27-3-2007

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
| --- | --- |
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| 1. **வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2) | 1-124 |
| 2. **தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 125-126 |
| 3. **வரவு-செலவுத் திட்டம், 2007-2008, பொது விவாதம்**—தொடர்ச்சி | 126-248 |
| *திரு. இரா. குமரகுரு | 126-132 |
| திரு. மு. அப்பாவு | 144-156 |
| *முனைவர் கு. ஜெயக்குமார் | 157-169 |
| *திரு. கோ. எதிரொலி மணியன் | 169-176 |
| திரு. கே. மகேந்திரன் | 176-185 |
| *திரு. எஸ். இராசசேகரன் | 190-197 |
| *திரு. து. ரவிக்குமார் | 198-209 |

| | பக்கங்கள் |
|---|---|
| **3. வரவு-செலவுத் திட்டம், 2007-2008, பொது விவாதம்**—தொடர்ச்சி | |
| *திரு. ஆர்.கே. பாரதி மோகன் | 209-214, 218,219 |
| *திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன் | 220-228 |
| திரு. பா. வேலதுரை | 229-231, 233,234, 236-242 |
| *திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் | 242-248 |
| **4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 248-249 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227559
சென்னை-600 008
நூலகம்



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms.

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottrge Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 18. **Minister for Labour** | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:**<br>Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment |
| 19. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:**<br>Hindu Religious and Charitable Endowments |
| 20. **Minister for Handlooms** | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:**<br>Handlooms and Textiles |
| 21. **Minister for School Education** | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:**<br>School Education and Archaeology |
| 22. **Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:**<br>Commercial Taxes |
| 23. **Minister for Environment** | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**<br>Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 24. **Minister for Forests** | .. | **The Hon. Thiru N. Selvaraj:**<br>Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 25. **Minister for Highways** | .. | **The Hon. Thiru M.P. Saminathan:**<br>Highways and Ports |
| 26. **Minister for Social Welfare** | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes |
| 27. **Minister for Animal Husbandry** | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:**<br>Animal Husbandry |
| 28. **Minister for Adi Dravidar Welfare** | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:**<br>Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 29. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P.P. Samy:**<br>Fisheries and Fisheries Development Corporation |
| 30. **Minister for Dairy Development** | .. | **The Hon. Thiru U. Mathivanan:**<br>Milk and Dairy Development |
| 31. **Minister for Khadi** | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:**<br>Khadi and Village Industries Board. Bhoodhan and Gramadhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்*

## பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி*

## மாற்றுத் தலைவர்கள் #

*திரு. ப. ரங்கநாதன்*

*திரு. துரை சந்திரசேகரன்*

*டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்*

*திரு. தி. வேல்முருகன்*

*செல்வி கே. பாலபாரதி*

*திரு. வை. சிவபுண்ணியம்*

## செயலாளர்

*திரு. மா. செல்வராஜ்*

---

# 26-3-2007 **அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.**

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |



| | |
|---|---|
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |

## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி—1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்

66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்

68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ)

74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)

75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)

76. சாமி, திரு. ஆர். .. மேலூர்

77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்

78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்

80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்

84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி

87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)

88. சின்னப்பன், திரு. போ. .. விளாத்திகுளம்

89. சின்னராஜ், திரு. ஓ.கே. .. மேட்டுப்பாளையம்

90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்

95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்

96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்

97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)

98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி

100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி

101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்

102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை

103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்

104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்

105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)

106. செல்வராஜ், திரு. என். .. முசிறி

107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்

108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. .. திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. .. மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. .. மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. .. குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். .. சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. .. அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. .. திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. .. வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. .. சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. .. ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. .. ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. .. பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. .. சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. .. பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. .. பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. .. திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. .. சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. .. காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. .. கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. .. புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி .. திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. .. நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. .. ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. .. பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். .. மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். .. சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. .. அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். .. புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. .. திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. .. திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | .. தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | .. அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | .. கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | .. ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | .. ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | .. பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | .. பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | .. கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | .. பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | .. விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | .. பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | .. செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | .. திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | .. உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | .. பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | .. திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | .. பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | .. கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | .. மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | .. திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | .. குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | .. நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | .. திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | .. முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ். | .. மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | .. சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | .. ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. சேலம்—I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | .. சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | .. கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | .. பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | .. மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | .. தொட்டியம் |

200. ராஜன், திரு. அ. .. நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. .. ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. .. திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. .. போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. .. குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. .. திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. .. விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. .. காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. .. விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. .. போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. .. செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். .. பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. .. சேலம்–2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. .. தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. .. பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. .. பேரூர்
221. வேல்துரை. திரு. பா. .. சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்
235. (வெற்றிடம்) .. மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 13, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மார்ச் 27, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்*
*தொகையறிந்த தூய்மை யவர்"*

*ஒவ்வொரு சொல்லின் தன்மையையும் உணர்ந்துள்ள நல்ல அறிஞர்கள், அவையில் கூடியிருப்போரின் தன்மையையும் உணர்ந்து அதற்கேற்ப ஆராய்ந்து பேசுவார்கள்.*

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

*(பட்டியல்கள் 1 மற்றும் 2)*@

### முதலாவது பட்டியல்

1—

### நவீன தொழில்நுட்பம்

**வினா எண் 37—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பொருத்தி புதுமையாக்க அரசு முன்வருமா?

---

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள், அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் உடுமலைப்பேட்டை வட்டம், கிருஷ்ணாபுரத்தில் இயங்கி வரும், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ரூ. 593.00 இலட்சம் செலவில் நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பொருத்தி நவீனப்படுத்த ஆலையிலிருந்து திட்டம் பெறப்பட்டு, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**2—**

**காவல் குடியிருப்பு**

**வினா எண் 1373—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, கோட்டூர் காவல் நிலையம் பின்புறம் உள்ள காலியிடத்தில் காவல் குடியிருப்பு கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோவை மாவட்டத்திலுள்ள வால்பாறை தொகுதியில் அமைந்துள்ள கோட்டூர் காவல் நிலையப் பணியாளர்களுக்கு ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 9 காவலர் குடியிருப்புகள் உள்ளன. தற்போது இக்குடியிருப்புகள் மிகவும் சிதிலமடைந்த நிலையில் உள்ளன. எனவே பழுதடைந்த காவல் குடியிருப்புகளை மாற்றி, புதியதாக ஒரு உதவி ஆய்வாளர், 18 காவல் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள், ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து கட்ட பரிசீலனை செய்யப்படும்.

**3—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 1374—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்



வால்பாறை தொகுதி, கோட்டூர் காவல் நிலையத்திற்குப் போதுமான அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

வால்பாறை தொகுதி, கோட்டூர் காவல் நிலையம் தற்சமயம் அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி காவல் நிலையத்திற்கு, காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய கட்டடம் கட்டப்படும்போது, அடிப்படை வசதிகளும் செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**4—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 1740—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, முடிஸ் காவல் நிலையத்திற்கு அடிப்படை வசதிகளைச் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, முடிஸ், காவல் நிலையம் தற்போது தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. புதிய கட்டடம் கட்டுவதற்கு நிலம் ஏதும் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின், வருங்கால காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். புதிய கட்டடம் கட்டும்போது அடிப்படை வசதிகளுடன் சேர்த்து கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**5—**

**வீடு ஒதுக்கீடு**

**வினா எண் 1742—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) வால்பாறை தொகுதி, முடிஸ் காவல் நிலையத்தில் பணிபுரிபவர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்திலுள்ள முடிஸ் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவல் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கு தற்போது நிலம் கைவசம் இல்லை. நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

**6—**

## நிதி ஒதுக்கீடு

**வினா எண் 2213—திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, செய்துங்கநல்லூர் காவலர் குடியிருப்பு கட்டுவதற்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், நடப்பு நிதியாண்டில் குடியிருப்பு கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள செய்துங்கநல்லூரில் உள்ள காவல் நிலையத்தில் ஒரு ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் 29 தலைமைக் காவலர்கள்/காவலர்கள் உள்ளனர். தற்போது இவர்களுக்குக் காவலர் குடியிருப்புகள் ஏதும் இல்லை. காவல் துறை வசம் தகுந்த நிலம் இருப்பதால், ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து, வரும் 2007-2008 ஆம் ஆண்டில் புதிய குடியிருப்புகள் கட்டித் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2007 மார்ச் 27]

**7—**

## காவல் துறையில் பணி நியமனம்

**வினா எண் 3322—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

படித்துவிட்டு வேலையில்லாதவர்களுக்குக் காவல் துறைமூலம் பணியமர்த்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காவல் துறையில் காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் சார்-ஆய்வாளர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் ஆகிய பதவிகளுக்கு, போட்டித் தேர்வுகள் மூலம்அலுவலர்கள்/ஆளிநர்கள் நேரடி நியமனம் செய்யப்படுகிறார்கள். காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலமும், காவல் சார்-ஆய்வாளர் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் பதவிகளுக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்மூலமும் தகுதி மற்றும் திறமை அடிப்படையில், அரசின் இடஒதுக்கீடு கொள்கையை பின்பற்றி அலுவலர்கள்/ஆளிநர்கள் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப் படுகிறார்கள். உரிய கல்வித் தகுதி, உடற் தகுதி, வயது மற்றும் இதர தகுதிகள் பெற்றிருப்பின், அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் ஆகியவை நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று காவல் துறையில் பணி நியமனம் பெறலாம்.

**8—**

## சீருடைப் படி

**வினா எண் 1748—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப்பகுதியில் பணிபுரியும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு, துணிகளுக்குக் கொடுக்கும் படியைக் கூடுதலாகத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அவர்களது பதவி அடிப்படையில் வழங்கப்பட்ட சீருடைப் படி, காவல் துறையில் பணிபுரியும் காவலர்கள் மற்றும் காவல் அதிகாரிகள் அனைவருக்கும் சமமாக மாதம் ஒன்றுக்கு ரூ.100 என்று, அரசு நிலை ஆணை எண் 508, நாள் 20-06-2005-ல் உயர்த்தப்பட்டுள்ளது.

**9—**

## புதிய குடியிருப்புகள்

**வினா எண் 2876—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதியில் பணிபுரியும் காவல் துறையினருக்குப் புதிய வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் அனைத்து காவல் நிலைய காவல் பணியாளர்களுக்கும் தேவைப்படும் புதிய குடியிருப்புகள், ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து, வரும் 2007-2008 ஆம் ஆண்டில் குடியிருப்புகள் கட்டப்படும்.

**10—**

## மின் வாரிய விழிப்புப் பணி அலுவலகம்

**வினா எண் 5359—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் நகரில் இயங்கி வந்த தமிழ்நாடு மின் வாரிய விழிப்புப் பணி பிரிவு அலுவலகத்தை மீண்டும் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூரில் ஒரு துணை விழிப்புப் பணி அலுவலகம் அமைக்கப்பட்டு, 01-09-2006 முதல் இயங்கி வருகிறது.

**11—**

## தெரு விளக்குகள்

**வினா எண் 6173—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மோகனாவரம் கிராமத்திற்கு பஸ் கூட்டுரோடு வரை மின் விளக்குக் கம்பம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், மோகனாவரம் கிராமத்திற்கு பஸ் கூட்டுரோடு வரை மின் விளக்கு அமைத்துத்தர வேண்டி, வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திமிரி ஒன்றிய அலுவலகத்திடமிருந்து விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. தெரு விளக்குகள் அமைக்க வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**12—**

## சீரான மின் அழுத்தம்

**வினா எண் 7192—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை கிராமத்தில் சீரான மின் அழுத்தம் அளித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை கிராமத்திற்கு சித்திரசூர் 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து ஆராய்ச்சிக்குப்பம் 22 கி.வோ. மின்பாதைமூலம் சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது. மேலும், சீரான மின் அழுத்தத்தில் மின்சாரம் வழங்கும் பொருட்டு பத்திரக்கோட்டை மின்மாற்றி என்ற 100 கே.வி.ஏ. திறன் உள்ள புதிய மின்மாற்றி ரூ.3,48,000 மதிப்பீட்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**13—**

**மின் மாற்றிகள்**

**வினா எண் 7927—திரு. எஸ். இராசசேகரன்** : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் பெரும்பாலான பகுதிகளில் விவசாய மின் மோட்டாருக்கான மின் மாற்றிகள் அடிக்கடி பழுதடைவதால், புதிய மின் மாற்றிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

புதுக்கோட்டை மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட ஆலங்குடி தொகுதியானது, பெரும்பாலும் விவசாயத்தையே நம்பி வாழும் மக்கள் கொண்ட பகுதியாகும். இந்தப் பகுதியில் விவசாயத்திற்குப் போதிய நீர்வளம் இல்லாததாலும், நிலத்தடி நீர் மட்டம் 500 அடிக்குக் கீழே சென்று விட்டபடியாலும், பெரும்பான்மையான விவசாயப் பெருமக்கள்



2007 மார்ச் 27]

ஆழ்குழாய்க் கிணறு அமைத்து அவற்றிலிருந்து நிலத்தடி மோட்டார் மற்றும் கம்பிரசர் மோட்டார் மூலமாகத் தண்ணீரை வெளியேற்றி விவசாயத்திற்குப் பயன்படுத்தி வருகின்றனர். விவசாய ஆழ்குழாய்க் கிணறுகள் மிகவும் ஆழம் கொண்டவையாக இருப்பதால் அவற்றிலிருந்து தண்ணீரை வெளியேற்ற இயக்கப்படும் மோட்டார்களுக்கு அதிக மின்சக்தி தேவைப்படுவதால், அப்பகுதியில் உள்ள மின் மாற்றிகள் பழுதாகும் நிலை ஏற்படுகிறது. மின் மாற்றிகள் அடிக்கடி பழுதாகும் பகுதிகள் கண்டறியப்பட்டு, அந்தப் பகுதிகளில் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள மின் மாற்றியின் திறனை அதிகரிப்பதற்கும், மேலும் புதிய மின் மாற்றிகள் அமைக்க வாய்ப்பு இருக்கும் இடங்களில் புதிய மின்மாற்றிகள் அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**14—**

**மின்சார இணைப்புகள்**

**வினா எண் 7941—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகளில் அலுமினியக் கம்பிகள் வழியாக மின்சாரம் செல்வதால் பொதுமக்கள் பாதிப்பிற்குள்ளாவதால் மாற்று ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

தருமபுரி நகரில் வீடுகளுக்கு வழங்கப்படும் மின்சார இணைப்புகளில் அலுமினியக் கம்பிகள் வழியாக மின்சாரம் செல்வது முற்றிலுமாக அகற்றப்பட்டு, ACSR கம்பிகளின்மூலமே மின்சாரம் வழங்கப்படுவதால் பொதுமக்களுக்குப் பாதிப்பு எதுவும் இல்லை.

**15—**

**தார்ச் சாலை**

**வினா எண் 1709—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) தருமபுரி ஒன்றியம், மாரவாடி பழையூர் முதல், காமராஜ்நகர் வழியாக திருப்பத்தூர் பிரதான சாலை வரை, அக்கனமள்ளி ஊராட்சி, நடுப்பட்டி, தாசம்பட்டி, வேம்பரம்பட்டி வழி, D.துரிச்சம்பட்டி வரை, வெள்ளோலை ஊராட்சி, வெள்ளோலை-அத்திமாநகர் வரை, குப்பூர் ஊராட்சி, குப்பூர்-சித்தன்கொட்டாய் வரை, நாக்கினம்பள்ளி ஊராட்சி, சோளக்கொட்டாய் மேல்நிலைப்பள்ளி-சவுளூர் வரை R.R. திட்டத்தின் மூலம் தார்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், மாரவாடி பழையூர்—திருப்பத்தூர் பிரதான சாலை கொஞ்சிநாயக்கஅள்ளி ஊராட்சிக்கு உட்பட்ட சாலையாகும். இதன் நீளம் 1.80 கி.மீ. ஆகும். இது ஒரு கப்பிச் சாலை ஆகும். இச்சாலையில் கி.மீ.0/8-ல் காமராஜ்நகர் மற்றும் 1/2-ல் புதுகுடியான கொட்டாய் அமைந்துள்ளன. இதனை மேம்படுத்த ஊராட்சிமூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

தாசனம்பட்டி-கீழ் வேம்பரம்பட்டி சாலையானது 'நபார்டு' ஆர்.ஐ.டி.எப். XI திட்டத்தில் ரூ.23.60 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வெள்ளோலை-அத்திமாநகர் சாலை கி.மீ.0/0-1/6 வரை, தருமபுரி மாவட்ட சமூக பொருளாதாரத் திட்டம் 2005-2006-ல் கப்பிச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

குப்பூர்-சித்தன்கொட்டாய் சாலையானது 1.60 கி.மீ. நீளமுள்ள மண்சாலை. இச்சாலை சுமார் 4.25 மீட்டர்தான் அகலம் உள்ளது. இதன் இருபுறமும் பட்டா நிலங்கள் உள்ளதால் தற்போது இதனை தார்ச் சாலையாக அமைக்க இயலாது.

சோளக்கொட்டாய் மேல்நிலைப்பள்ளி-சவுளூர் சாலை கி.மீ. 0/0—1/6 தருமபுரி மாவட்ட சமூகப் பொருளாதாரத் திட்டம் 2005-2006-ல் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.



2007 மார்ச் 27]

**16—**

**மயானப் பாதை**

**வினா எண் 2090—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், குழிப்பாண்தண்டலம் ஊராட்சியில் குச்சிக்காடு கிராமத்திற்கு மயானப் பாதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், குழிப்பாண்தண்டலம் ஊராட்சியில் குச்சிக்காடு மயானப் பாதை அமைக்கத் தேவையான இடம் பட்டா நிலமாக உள்ளதால் மேற்படி நிலத்தைக் கையகப்படுத்தியபின் பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

**சிறு பாலம் அமைத்தல்**

**வினா எண் 2579—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, ஓமலூர் ஊராட்சியில் பாரதி தெரு சந்திப்பில் சிறு பாலம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, ஓமலூர் ஊராட்சியில் பாரதி தெரு சந்திப்பில் சிறு பாலம் அமைக்கும் பணி சம்பூர்ண கிராமின் ரோஜ்கார்

[2007 மார்ச் 27

யோஜனா திட்டம் (சிறப்பு உட்கூறு) வேலைக்கு உணவுத் திட்டத்தில் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 40,000 மதிப்பீட்டில் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**18—**

## இணைப்புச் சாலை

**வினா எண் 2588—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பேருந்து நிலையத்திலிருந்து ஈச்சங்கரணை கிராமத்திற்கும் மற்றும் கருமாப்பாக்கத்திலிருந்து ஈச்சங்கரணை வரை இணைப்புச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பேருந்து நிலையத்திலிருந்து ஈச்சங்கரணை கிராமத்திற்கும் மற்றும் கருமாப்பாக்கத்திலிருந்து ஈச்சங்கரணை வரையும் இணைப்புச் சாலை அமைக்க நடப்பு நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**19—**

## சாலை அமைத்தல்

**வினா எண் 2590—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், ஈச்சங்கரணை காலனி, நடுவக்கரை கிராமம், அமிஞ்சிகரை குடியிருப்பு பகுதி ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலை மற்றும் ஈச்சங்கரணை பிரதான சாலை, வென்பாக்கம் சாலை ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், ஈச்சங்கரணை காலனி, நடுவக்கரை கிராமம், அமிஞ்சிகரை குடியிருப்பு பகுதி ஆகிய இடங்களில் சிமெண்ட் சாலை மற்றும் ஈச்சங்கரணை பிரதான சாலை, வென்பாக்கம் சாலை ஆகிய பகுதிகளில் தார்ச் சாலை அமைக்க நடப்பு நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**20—**

## தார்ச் சாலை

**வினா எண் 2595—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், சென்னேரி கிராமத்திலிருந்து இருளர் மக்கள் குடியிருப்பு வரை இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், சென்னேரி கிராமத்திலிருந்து இருளர் மக்கள் குடியிருப்பு வரை இணைப்புச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற, ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் ரூ. 5.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்து முடிக்க ஊராட்சி ஒன்றியக் குழுவினால் 17-07-2006-ல் தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. இப்பணியை ஒப்பந்த அடிப்படையில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 மார்ச் 27

**21—**

## அகலச் சாலை

**வினா எண் 2596—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பழவேலி கிராமத்தில் கிராமச் சாலைகள் குறுகலாக உள்ளதால் அகலச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியம், பழவேலி கிராமத்தில் கிராமச் சாலைகளின் இருபுறங்களிலும் வீடுகள் கட்டியுள்ளதால், இச்சாலை மிகக் குறுகலாக உள்ளது. கட்டியுள்ள வீடுகளின் ஆக்கிரமணங்களை அகற்றினால்தான் இச்சாலையை அகலமாக மாற்ற இயலும். இது சம்பந்தமாக வருவாய்த் துறையுடன் தொடர்பு கொண்டு அகலச் சாலையாக மாற்ற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**22—**

## சோடியம் விளக்குகள்

**வினா எண் 3004—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, காளியாபுரம், ரமணமுதலிபுதூர், பெத்தநாயக்கனூர், சோமந்துறை தென்சித்தூர், தென்சங்கம்பாளையம் அர்த்தநாரிபாளையம் ஆகிய ஊராட்சிகளுக்கு 10 சோடியம் விளக்குகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்குறிப்பிட்ட ஊராட்சிகளில் சோடியம் விளக்குகளுக்கு மின்சாரக் கட்டணம், அதிகமாக வருகின்றது. இதை ஊராட்சிகளால் செலுத்த இயலுவதில்லை. அதனால் ஏற்கெனவே உள்ள சோடியம் விளக்குகளை எடுத்துவிட்டு, அங்கு சாதாரண குழல் விளக்குகள் பொருத்தப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றன.

**23—**

## புதிய மயானம்

**வினா எண் 4917—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, ஈங்கூர் ஊராட்சி, எழுதிங்கள்பட்டியில் புதிய மயானம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சி, எழுதிங்கள்பட்டியில் மயானம் அமைத்துத் தர இட வசதி ஏற்படுத்தித் தருமாறு வருவாய்த் துறையிடம் கோரப்பட்டுள்ளது. மயானம் அமைக்க ஏதுவாக வருவாய்த் துறையிடமிருந்து இட வசதி கிடைக்கப்பெற்ற பின்னர், மயானம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**24—**

## நிழற் குடை

**வினா எண் 5403—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, திருவண்ணாமலை - திண்டிவனம் சாலையில் மேல்பாப்பம்பாடியில் நிழற் குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, திருவண்ணாமலை-திண்டிவனம் சாலையில் மேல்பாப்பம்பாடி நெடுஞ்சாலையில் நிழற் குடை அமைக்கும் பணி மேற்கொள்ள 2006-2007 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ரூ. 40,000 ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**25—**

## கழிவுநீர்க் கால்வாய்

**வினா எண் 6606—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, காட்டுப்பாளையம் அண்ணா நகர் புதுக்காலனி மற்றும் வெள்ளோடு புங்கம்பாடி அரிசனக் காலனியில் கழிவுநீர்க் கால்வாய் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், வெள்ளோடு புங்கம்பாடி அரிசனக் காலனியில் SGRY திட்டத்தில் கழிவுநீர்க் கால்வாய் கட்டித் தரப்பட்டுள்ளது. காட்டுப்பாளையம் அண்ணா நகர் புதுக்காலனிக்குக் கழிவுநீர்க் கால்வாய், வரும் நிதியாண்டில் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.



2007 மார்ச் 27]

**26—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 6609—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, சென்னிமலை காலனியில் சாலை வசதி, கழிவுநீர்க் கால்வாய், மின்விளக்கு, பேருந்து வசதி, மருத்துவ வசதி, கழிப்பிட வசதி போன்ற அடிப்படைத் தேவைகளைச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், சென்னிமலை காலனியில் சாலை வசதி, கழிவுநீர்க் கால்வாய் வசதி ஆகியன மாநில நிதி ஆணையம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிகளிலிருந்து செய்யப்பட்டுள்ளன. மேலும், விடுபட்ட பகுதிகளுக்கு, வரும் நிதியாண்டில் வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து செய்து தரப்படும். பேருந்து வசதி செய்து தர, பொது மேலாளர், அரசுப் போக்குவரத்துக் கழகம், ஈரோடு அவர்களுக்கும், மருத்துவ வசதிக்கு, இணை இயக்குநர் (சு.ப.) அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**27—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 6611—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, பெருந்துறை ஒன்றியம், வடமுகம் வெள்ளோடு கிராமம், செம்மாண்டம்பாளையம், ஆதிதிராவிடர் காலனியில் சாலை வசதி, குடிநீர், மின்விளக்கு, கழிவுநீர்க் கால்வாய் வசதிகள் ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், வடமுகம் வெள்ளோடு கிராமம், செம்மாண்டம்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் கோரப்பட்டுள்ள வசதிகள், வரும் நிதியாண்டில் செய்து தரப்படும்.

**28—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 7086—திரு. வை. காவேரி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் கிராமம், ஆலாக்காடு பகுதியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் கிராமம், ஆலாக்காடு, சிறிய குக் கிராமமாகும். இங்கு சுமார் 20 குடும்பங்கள் மட்டுமே வசித்து வருகின்றன. இக்கிராமத்திற்கு அருகிலுள்ள மலையனூரில், ஏற்கெனவே சமுதாய நலக் கூடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. எனவே, மேற்கொண்டு கூடுதலாக சமுதாய நலக் கூடம் அவசியமில்லை.

**29—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 7134—திரு. தி. வேல்முருகன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 27]

(அ) பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுசாகை கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய்க் கிணறுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தந்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, புலியூர் காட்டுசாகை கிராமத்தில், 2003 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி தேசிய குடிநீர்த் திட்டத்தின்கீழ், 1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் செயலாக்கப்பட்டு ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தற்போது இக்குடியிருப்புக்குப் போதுமான அளவு குடிநீர் கிடைப்பதாலும், தேவையான அளவுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளதாலும், மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**30—**

**குடிநீர்த் தேக்கத் தொட்டி**

**வினா எண் 7344—திரு. தி. வேல்முருகன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிறுதொண்டமாதேவி நடுத்தெருவிலுள்ள பழுதடைந்த குடிநீர்த் தேக்கத் தொட்டியைச் சீர்செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஆம். கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, சிறுதொண்டமாதேவி நடுத்தெருவிலுள்ள பழுதடைந்த குடிநீர்த் தேக்கத்

தொட்டியினை நடப்பு நிதியாண்டில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சீர்செய்ய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**31—**

## கூடுதல் பள்ளிக் கட்டடம்

**வினா எண் 9396—திரு. வை. காவேரி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், குண்டுமலைக்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு ஊராட்சியில் உள்ள குண்டுமலைக்காடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட, இட வசதி இல்லாததால் கூடுதல் கட்டடம் கட்டித் தர இயலாத நிலை உள்ளது.

**32—**

## கலையரங்கம்

**வினா எண் 12495—திரு. ம. குணசேகரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், பொட்டப்பாளையம் ஊராட்சி, கரிசல்குளம், நயினார்பேட்டை, அச்சங்குளம், ஆணைக்குளம், பிரான்குளம், சொக்கனதிருப்பு, வாடனேந்தல் ஆகிய கிராமங்களில் கலையரங்கம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் ஒன்றியம், பொட்டப்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட உட்கடை கிராமங்களில் கலையரங்கம் கட்டுவதற்கான பணியினை மேற்கொள்ள மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியை ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் இப்பணியைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**33—**

## நாடக மேடை

**வினா எண் 12502—திரு. ம. குணசேகரன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், அழகாபுரி கிராமத்திற்கு நாடக மேடை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், அழகாபுரி கிராமத்திற்கு நாடக மேடை கட்டித் தர 2006-2007 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் இப்பணி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**34—**

## மண்டலப் பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 10422—திரு. த.அ. மேகநாதன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்க மண்டலப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 271, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஇ1) துறை, நாள் 16-11-2006-ன்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் பணியிடம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகத்திற்கான வாடகைக் கட்டடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான செலவினம் குறித்து அரசு அனுமதி வழங்கியபின் மண்டலப் பதிவாளர் அலுவலகம் செயல்படத் தொடங்கும்.

**35—**

**விரிவுரையாளர் நியமனம்**

**வினா எண் 4093—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் அரசுக் கலைக் கல்லூரியில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில் 1,020 விரிவுரையாளர்களை நியமனம் செய்ய, அரசு, ஆசிரியர் தேர்வு வாரியத்தைப் பணித்துள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியமும் அதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது. விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் நியமனம் செய்யப்படுவர்.



2007 மார்ச் 27]

**36—**

**தொழில்நுட்பக் கல்லூரி**

**வினா எண் 11615—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையில் புதியதாக அரசுத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**37—**

**தொழில்நுட்பக் கல்லூரி**

**வினா எண் 11744—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி, காவேரிப்பட்டணத்தில் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதி, காவேரிப்பட்டணத்தில் புதியதாக அரசு தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) எழவில்லை.

[2007 மார்ச் 27

**38—**

## போக்குவரத்து பகுதி அலுவலகம்

**வினா எண் 6064—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் பகுதிக்கென மேட்டூரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் தனியாகப் பிரித்து இந்த ஆண்டிலேயே ஓமலூரில் செயல்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது, மேட்டூரில் இயங்கி வரும் போக்குவரத்துப் பகுதி அலுவலக எல்லைக்குட்பட்ட போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களின் எண்ணிக்கையை, ஓமலூர் பகுதியில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, அனைத்து இனங்களிலும் மேட்டூரில்தான் அதிக அளவில் உள்ளன. மேலும், இப்பகுதி அலுவலகம் மேட்டூரில் இயங்குவதுதான் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக இருக்கும். இருப்பினும், பொதுமக்கள் பயன்பெறும் வகையில், ஓமலூரில் புதிய போக்குவரத்துப் பகுதி அலுவலகம் தொடங்க உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, மேட்டூரில் இயங்கும் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்தைத் தனியாகப் பிரித்து ஓமலூரில் செயல்படுத்தும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**39—**

## சிற்றுந்துகள்

**வினா எண் 7790—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரியில் தனியார் சிற்றுந்துகள், அனுமதிக்கப்பட்ட வழித் தடங்களில் செல்லாமல் விதி மீறப்படுவது தடுக்கப்படுமா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சிற்றுந்து திட்டத்தின்கீழ், அரசாணையின்படி நீலகிரி மாவட்டத்தில் பேருந்து வசதி பெற்ற வழித் தடத்தில் 8.00 கி.மீ. தூரம் வரையிலும், பேருந்து வசதி பெறாத பகுதியில் 16 கி.மீ. தூரம் வரையிலும், ஆக மொத்தம் 24 கி.மீ. தூரம் வரை சிற்றுந்து இயக்க அனுமதிச் சீட்டு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் சிற்றுந்து இயக்க வேண்டிய வழித் தடத்தைக் குறிப்பிட்டும் அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அனுமதிக்கப்பட்ட வழித் தடங்களில் செல்லாமல் விதி மீறப்படும் நிகழ்வுகளைக் கண்டறிய சிறப்புத் தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தணிக்கையின் அடிப்படையில் விதி மீறல் கண்டறியப்பட்டு, தணிக்கை அறிக்கை வழங்கி, மோட்டார் வாகனச் சட்டப் பிரிவு 86(1)-ன்கீழ் அனுமதிச் சீட்டு தற்காலிக தடை செய்தல் மற்றும் இணக்கக் கட்டணம் வசூல் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கடுமையான நடவடிக்கைகளின் காரணமாக விதி மீறல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**40—**

## சிற்றுந்து வசதி

**வினா எண் 9631—திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்போரூர் தொகுதியில் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தற்போது நடைமுறையிலுள்ள பகுதி திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம் வருவாய் மாவட்டத்திற்குள் இயக்க 250 சிற்றுந்துகளுக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. திருப்போரூர் தொகுதிக்கு உட்பட்ட வழித் தடங்கள் காஞ்சிபுரம் மாவட்ட எல்லைக்குள் இருக்குமேயானால், இத்திட்டத்தின்கீழ் அனுமதிச் சீட்டு வழங்க இயலும். திருப்போரூர் தொகுதிக்கு உட்பட்ட வழித் தடங்கள் ஏதேனும் சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதிக்குள் இருக்குமேயானால் அத்தகைய வழித் தடங்களுக்குச் சிற்றுந்து அனுமதிச் சீட்டு வழங்க இயலாது.

[2007 மார்ச் 27

41—

## சிற்றுந்து வசதி

**வினா எண் 10447—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில், கிராம மக்கள் பயன்பெறும் வகையில் சிற்றுந்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது உள்ள பகுதித் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 250 சிற்றுந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 1997 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தபட்ட இத்திட்டத்தின்படி ஆத்தூர் தொகுதியில் கிராம மக்கள் பயன்பெறும் வகையில் இதுவரை 26 சிற்றுந்துகளுக்கு அனுமதிச் சீட்டு வழங்கி போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சிற்றுந்து வசதி தேவைப்படும் தடத்திற்கு அனுமதிச் சீட்டு கோரி, விண்ணப்பம் பெறப்பட்டால், சேலம் வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அவர்களால் பரிசீலனை செய்து அனுமதி வழங்கப்படும்.

42—

## போக்குவரத்துப் பகுதி அலுவலகம்

**வினா எண் 10455—திரு. செ. குருசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிப்பாளையத்தை மையமாகக் கொண்டு செயல்படும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைப் பிரித்து, பவானியை மையமாகக் கொண்டு துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானியை மையமாகக் கொண்டு புதிய போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், அரசின் நிதி நிலைமைக்கேற்ப, பவானி நகரத்தில் புதிய போக்குவரத்துப் பகுதி அலுவலகம் தொடங்க உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

43—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 1985—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, அரசரடி, பாண்டியன் நகர்ப் பகுதி மக்களின் வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

மதுரை மாநகராட்சி எல்லைக்குள் வீட்டுமனை ஒப்படைப்புக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் இவ்விடத்தில் பட்டா வழங்க இயலாது.

44—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 3855—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோமந்துறை ஊராட்சியில் வீடு இல்லாதவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சோமந்துறை, தென்சித்தூர் கிராமம் க.ச.144/பி2-ல் 89 பட்டாக்களும் க.ச.144/பி1பி-ல் 61 பட்டாக்களும் மொத்தம் 150 வீட்டுமனைப் பட்டாக்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**45—**

## பொதுக் கழிப்பிடம்

**வினா எண் 5332—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நவீன பொதுக் கழிப்பிடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நவீன பொதுக் கழிப்பிடங்கள் ஏற்கெனவே தனியாரால் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**46—**

## நிழற் குடை

**வினா எண் 5879—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகரில் சார்பதிவாளர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் போன்ற இடங்களில் மக்கள் அமர்வதற்கு நிழற் குடை அமைத்துத் தர அரசு முன்வருமா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டத்திற்கு, வருவாய்த் துறை கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக 2006-2007 ஆம் ஆண்டிற்கு ரூ. 50.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது, இதில் திருப்பத்தூர் வட்டாட்சியர் மற்றும் வருவாய்க் கோட்ட அலுவலர் அலுவலகங்களின் பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூ. 9.96 இலட்சம் செலவில் பணிகள் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டுள்ளன. எனவே, அடுத்த நிதி ஒதுக்கீடு கிடைக்கும்போது வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பொதுமக்கள் அமர இட வசதியும், நிழற் குடையும் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

**47—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 6470—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, ராகல்பாவி ஊராட்சி, மஜரா ஆர். கிருஷ்ணாபுரம் கிராமத்தில் நடப்பு ஆண்டில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை வட்டம், ராகல்பாவி கிராமம், மஜரா ஆர். கிருஷ்ணாபுரத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க ஏதுவான அரசுப் புறம்போக்கு நிலம் ஏதுமில்லாத காரணத்தால், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**48—**

## கிராம நிர்வாக அலுவலகம்

**வினா எண் 8278—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

காங்கேயம் தொகுதி, பணியம்பள்ளியில் கட்டப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலகத்தைத் திறக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, பெருந்துறை வட்டம், சென்னிமலை உள்வட்டம் பணியம்பள்ளியில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடம், வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்டு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், அக்கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே இவ்வினா எழாது.

**49—**

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 9247—திரு. வை. காவேரி :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் கிராமம், காந்திநகர் மேற்குப்புறம் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) குன்றுப் புறம்போக்குகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க விதிக்கப்பட்டுள்ள தடை தற்போது அமலில் உள்ளது. எனவே, குன்றுப் புறம்போக்கு புல எண் 227/1-ல் அமைந்துள்ள எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் கிராமம், காந்திநகர் மேற்குப்புறம் வசித்துவரும் பொதுமக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.



2007 மார்ச் 27]

**50—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 9305—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகர் சந்தைப்பேட்டை பகுதியில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) அமராவதி நகர் கிராமம் க.ச.309/2 மற்றும் க.ச.510/2-ல் சுமார் 100 நபர்கள் வீடுகட்டி வசித்து வருகிறார்கள். இப்பகுதியில் நிலக்கிரயத்தின் பேரில் பட்டா வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களில் நான்கு பேர்களுக்கு மட்டுமே நிலக் கிரயத்தின் பேரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மற்றவர்கள் நிலக் கிரயம் செலுத்தினால் பட்டா வழங்க இயலும்.

**51—**

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 9306—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேவனூர் புதூர், வாளவாடி, அமராவதி நகர், சங்கராமநல்லூர், பள்ளபாளையம், செல்லப்பம்பாளையம், கொடிங்கியம்களையூர் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வாளவாடி கிராமம் க.ச.73/1-ல் 1415-ம் பசலியில் (2005) 47 நபர்களுக்கும், அமராவதி நகர் க.ச.673/2-ல் 46 நபர்களுக்கும்

சங்கராமநல்லூர் க.ச. 50-ல் 110 நபர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது; மற்றும், கொடுங்கியம் என்ற இடத்தில் ஆறு நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தேவனூர் புதூர், செஞ்செல்லப்பகவுண்டன்புதூர், வலையபாளையம் ஆகிய கிராமங்களில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க தகுதியான இடமில்லை.

**52—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 9307—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, பள்ளபாளையம் கிராமத்தில் உப்பள நாய்க்கர் பகுதியில் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், பள்ளபாளையம் கிராமத்தில் உப்பள நாய்க்கர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நத்தம் புறம்போக்கில் க.ச. 101-ல் காலி இடமில்லை. இருப்பினும் தற்போது குடியிருப்பவர்களுக்கு ஏற்கெனவே சுமார் 30 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுவிட்டது.

**53—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 10163—திரு. வை. காவேரி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், வீரப்பன்-மொட்டையன் தெரு, குரும்பப்பட்டி கிராம மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், வீரப்பன்-மொட்டையன் தெரு, குரும்பப்பட்டி கிராமம் புல எண் 185/1ஏ-ல் உள்ள 139 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு மேற்படி கிராமம் மோரி வளவு அருந்ததியர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க சங்ககிரி ஆதி திராவிடர் நல தனி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**54—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 10550—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியம், டி. மாரமங்கலம் கிராமம், தொளசம்பட்டி குடிநீர் கிணறு பகுதி முதல் குட்டப்பட்டி முதன்மைச் சாலை வரையுள்ள இருநூறு வீடுகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, டி. மாரமங்கலம் கிராமம், தொளசம்பட்டி குடிநீர் கிணறு பகுதி முதல் குட்டப்பட்டி முதன்மைச் சாலை வரையுள்ள பகுதியானது, புல எண் 65-இல் அமைந்துள்ளது. மேற்படி புலமானது வருவாய்க் கணக்குகளின்படி "ஏரி நீர்ப்பிடிப்பு" என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நீர்நிலைப் புறம்போக்குகளில் பட்டா வழங்க அரசின் தடை உள்ளதால், மேற்படி பகுதியில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

[2007 மார்ச் 27

**55—**

### விட்டுமனைப் பட்டா

**வினா எண் 10789—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, வால்பாறை சிறுவர் பூங்காவில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தற்போது பட்டா வழங்க இயலாது.

**56—**

### விட்டுமனைப் பட்டா

**வினா எண் 10791—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சோலையாறு அணைகரைப் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்விடத்தில் பட்டா வழங்க இயலாது.

**57—**

### நிலப் பட்டா

**வினா எண் 11938—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 27]

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, வெங்கிட்டாபுரம் மாநகராட்சி, சுப்ரமணியம் வீதியில் குடியிருப்பவர்களுக்கு நிலப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை வடக்கு வட்டம், தெலுங்குபாளையம் கிராமம் க.ச. 519/1 குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடமாகும். வெங்கிட்டாபுரம் சுப்பிரமணியம் வீதியில் குடியிருப்பவர்கள் முழு கிரயத் தொகையையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு செலுத்தினால்தான் கிரயப்பத்திரம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் வழங்கப்படும்.

**58—**

### நிலப் பட்டா

**வினா எண் 11939—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, பிள்ளையார்புரம் பகுதியில் நிலப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இவ்விடம் நகராட்சி நிர்வாகப் பகுதியில் உள்ளதால், நிலப் பட்டா வழங்க அரசின் தடை உள்ளதால், பட்டா வழங்க இயலாது.

**59—**

### விட்டுமனைப் பட்டா

**வினா எண் 12159—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சி, முத்தையன் கரடு பகுதி மற்றும் அமரகுந்தி ஊராட்சி, கஸ்பா பகுதியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநகர எல்லையில் இருந்து 16 கி.மீ. சுற்று வட்டாரத்திற்குள் நிலப் பட்டா வழங்க தடையுள்ளதால், சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்துநாய்க்கன்பட்டி ஊராட்சி, முத்தையன் கரடு மற்றும் அமரகுந்தி ஊராட்சி, கஸ்பா பகுதி ஆகியவை சேலம் மாநகராட்சி எல்லையில் இருந்து 16 கி.மீ. சுற்று வட்டாரத்திற்குள் அமைந்துள்ளதால், மேற்படி பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**60—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 12161—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கோணகாபாடி ஊராட்சி, கணபதி நகர், காமராஜ் நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) அரசு விதிப்படி மாநகர எல்லையில் இருந்து 16 கி.மீ. சுற்று வட்டாரத்திற்குள் நிலப் பட்டா வழங்க தடையுள்ளதால், சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கோணகாபாடி ஊராட்சி, கணபதி நகர், காமராஜ் நகர் ஆகிய பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.



2007 மார்ச் 27]

**61—**

## புதிய கட்டடம்

**வினா எண் 13170—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் கிளைச் சிறைக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

ஜெயங்கொண்டம் கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு 19 ஆகும். அங்கு தற்போது 39 சிறைவாசிகள் அடைக்கப்பட்டுள்ளனர். கிளைச் சிறைகளில் விசாரணை சிறைவாசிகள் மட்டுமே பெரும்பாலும் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், ஒரு மாதத்திற்கு மேல் கிளைச் சிறைகளில் சிறைவாசிகளை வைத்து இருப்பதில்லை. திருச்சி மத்திய சிறைக்கு மாற்றப்படுகின்றனர். சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 2006-2007 ஆம் ஆண்டு திட்டப் பணியில் ஜெயங்கொண்டம் கிளைச் சிறையில் ரூ.20.00 இலட்சம் செலவில் சுமார் 50 சிறைவாசிகள் வைக்கும் அளவில் புதிய கட்டடம் கட்டுவதற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பின் கட்டுமானப் பணிகள் துவங்கப்படும்.

**62—**

## சிறையைப் பலப்படுத்துதல்

**வினா எண் 13952—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறையைப் பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறைகளை நவீனமயமாக்குதல் திட்டம், நிதிக் குழுத் திட்டம், பகுதி 2 திட்டம், தொலைநோக்குத் திட்டம் போன்றவற்றின்கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியைக் கொண்டு, கோவை மத்திய சிறை உட்பட அனைத்து மத்திய சிறைகளும் தொடர்ந்து நவீனமயமாக்கப்பட்டு கட்டடங்களும், பாதுகாப்பு அமைப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

**63—**

## நவீன கழிப்பிடம்

**வினா எண் 13953—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மத்திய சிறைச்சாலைக்கு நவீன கழிப்பிடம் கட்டித்தா அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

கோவை மத்திய சிறையில் தற்போது 2,331 சிறைவாசிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சிறைவாசிகளுக்கு, பகல் நேரத்தில் பயன்படுத்த அறைகளுக்கு வெளியே தனியாகக் கழிப்பிட வசதிகளும், இரவு நேரத்தில் பயன்படுத்த அறைக்குள்ளே நவீன கழிப்பிட வசதிகளும் ஏற்கெனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளன. சிறைகளிலுள்ள அனைத்துக் கழிப்பிடங்களுக்கும் பாதி கதவுகள் ரூ.14.30 இலட்சம் செலவில் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.16.50 இலட்சம் அங்கீகரிக்கப்பட்டு 6, 7 மற்றும் 8 ஆம் தொகுதிகளில் நவீன கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 2006-2007 ஆம் ஆண்டு சிறைகளைப் பராமரிக்கும் நிதியின்கீழ், நீரடி கழிப்பிட வசதிகளை மேம்படுத்த, ரூ.16.90 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.



2007 மார்ச் 27]

**64—**

## நவீன கழிப்பிடம்

**வினா எண் 13956—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி கிளைச் சிறைச்சாலையில் நவீன கழிப்பிடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இட வசதி 72 ஆகும். அங்கு தற்சமயம் 52 சிறைவாசிகள் மட்டும் அடைக்கப்பட்டுள்ளனர். அங்கு தேவைப்படும் அளவு நீரடி கழிப்பிடங்கள், கழிவுநீர் வசதிகள், தண்ணீர் வசதிகள் ஆகியவை போதுமான அளவு உள்ளன. மேலும், அவ்வப்பொழுது தேவைப்படும் பணிகளைப் பொதுப் பணித் துறையினர் செய்து தருகின்றனர். எனவே, மேலும் புதிதாக நவீன கழிப்பிடங்கள் கட்டும் பணி ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

## கிளைச் சிறை

**வினா எண் 14234—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி கிளைச் சிறைச்சாலையில் இட நெருக்கடியைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சி கிளைச் சிறையில் அங்கீகரிக்கப்பட்ட இடவசதி 72 ஆகும். தற்பொழுது பொள்ளாச்சி கிளைச் சிறையில் 52 சிறைவாசிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொள்ளாச்சி கிளைச் சிறையின் சராசரி அடைப்பு அங்கீகரிக்கப்பட்ட அடைப்பை விட குறைவாக உள்ளதால், இட நெருக்கடி நேர்வு ஏதும் இல்லை. அதிகப்படியான அடைப்பு ஏற்படும் நேர்வுகளில் சிறைவாசிகள் அருகில் உள்ள கோவை மத்திய சிறைக்கு மாற்றம் செய்யப்படுவதால், பொள்ளாச்சி கிளைச் சிறையில் இடநெருக்கடியைப் போக்க வேண்டிய நேர்வு எழவில்லை.

**66—**

## உணவுப் பொருள் தரம்

**வினா எண் 14247—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் உள்ள சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அனைத்துச் சிறைகளிலும் உள்ள சிறைவாசிகட்கும் சிறை நடைமுறை நூல் தொகுதி 2-ன் அத்தியாயம் 22-ன்படி தரமான சமச்சீர் உணவு வகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கொள்முதல் செய்யப்படும் உணவுப் பொருட்கள் யாவும் கொள்முதலின்போதே தினமும் சிறை மருத்துவரால் பரிசோதிக்கப்பட்டு, தரமானது என மருத்துவர் உறுதி செய்த பின்னரே சிறையின் உணவுக் கிடங்கிற்கு சிறைக் கண்காணிப்பாளரால் அப்பொருட்கள் அனுப்பப்படுகின்றன. சிறையினுள் தயார் செய்யப்பட்ட உணவு வகைகள் யாவும் தினமும் சிறைக் கண்காணிப்பாளரால் உணவின் தரம், எடை மற்றும் ருசி ஆகியவை சரிபார்க்கப்பட்டு திருப்திகரமாக உள்ளது என உறுதி செய்த பின்னரே



2007 மார்ச் 27]

சிறைவாசிகட்கு வழங்கப்படுகிறது. சிறையினுள் தரமான உணவுப் பொருட்களைப் பெறுதல் மற்றும் உணவு தயாரித்து வழங்குதல் போன்ற பணிகளை இதற்கென நியமிக்கப்பட்டுள்ள துணைச் சிறை அலுவலர் ஒருவர் தனது நேரடிப் பொறுப்பில் கவனிக்கிறார். இந்நடைமுறை, முறையாக பின்பற்றப்படுகிறதா என வருடாந்திர தணிக்கை மற்றும் உயர் அலுவலர்களின் ஆய்வின்போது சரிபார்க்கப்படுகிறது. மேலும், சரக சிறைத் துறை துணைத் தலைவர் அடிக்கடி மத்திய சிறைகளை திடீர் விஜயம் செய்து ஆய்வு மேற்கொள்ளும்போது, உணவின் தரம் குறித்தும் பரிசோதிக்கின்றனர். எனவே, சிறைகளில் சிறைவாசிகட்கு வழங்கப்படும் உணவு வகைகள் யாவும் தரமாகவும் சுகாதார முறையிலும் தயார் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய சிறைகளில் உள்ள சிறைவாசிகட்கு வழங்கப்பட்டுவரும் உணவு அளவிற்கு இணையாக கிளைச் சிறை சிறைவாசிகட்கு வழங்க அரசாணை நிலை எண் 206, உள் (சிறை 3) துறை, நாள் 5-3-2006-ல் ஆணையிடப்பட்டு, 1-4-2003 முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

**67—**

## துணைச் சிறைச்சாலை

**வினா எண் 14255—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பெண் கைதிகளுக்குக் கிளைச் சிறைச்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் கோவை மத்திய சிறையின் இணைப்புச் சிறை மற்றும் மேட்டுப்பாளையம் கிளைச் சிறையில் பெண் சிறைவாசிகளை வைக்கும் பொருட்டு அவை பெண்கள் சிறைகளாக மாற்றப்பட்டுள்ளன. கோவை மத்திய சிறையின் இணைப்புச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு 84. அதில் தற்போது 49 பெண் சிறைவாசிகள் உள்ளனர். மேட்டுப்பாளையம் கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட அடைப்பு 18. அதில் தற்போது 10 சிறைவாசிகள் மட்டுமே உள்ளனர்.

[2007 மார்ச் 27

வால்பாறையைச் சேர்ந்த பெண் சிறைவாசிகள் அருகில் உள்ள மேட்டுப்பாளையம் மற்றும் கோவை மத்திய சிறையின் இணைப்புச் சிறையில் அடைக்கப்படுவதால், வால்பாறையில் பெண் சிறைவாசிகளுக்குக் கிளைச் சிறை ஏற்படுத்த வேண்டிய நேர்வு எழவில்லை.

**68—**

**உடைகள்**

**வினா எண் 14843—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறையில் உள்ள கைதிகளுக்கு சுத்தமான, தரம்வாய்ந்த உடைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சிறைவாசிகளுக்கு சிறை நடைமுறை நூல் தொகுதி 2-ன் அத்தியாயம் 23-ன்படி உடுக்கை மற்றும் படுக்கை வசதிகள், அரசு செலவில் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் அரசாணை எண் 575, உள் துறை, 21-6-2001-ன்படி சிறைவாசிகட்கு வழங்கப்பட்டுவந்த பருத்தி துணியிலான உடைகளுக்குப் (கால் சட்டை மற்றும் மேல் சட்டை) பதிலாக டெரிகாட்டன் துணியிலான உடைகள் வழங்கப்பட்டு வருகின்றன. விசாரணை சிறைவாசிகள் சிறையில் அவர்களது சொந்த ஆடைகளைப் பயன்படுத்திட அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறு அனுமதிக்கப்படும் விசாரணை சிறைவாசிகளில் போதிய அளவு உடுக்கை வசதியில்லாத மற்றும் உறவினர்களிடமிருந்து உடுக்கை வசதி பெற இயலாத ஆண் சிறைவாசிகளுக்கு வேஷ்டியும் மற்றும் பெண் விசாரணை சிறைவாசிகளுக்கு ரவிக்கையுடன் கூடிய சேலையும் அரசு செலவில் வழங்கப்பட்டு வருகிறது.

தற்பொழுது வழங்கப்பட்டு வரும் உடுக்கை மற்றும் படுக்கை வசதிகள், மேலும் தேவையான அனுமதிக்கப்பட்ட பிற பொருட்களைப் பெற்றிட, போதிய வழிவகைகள் அரசால் வழங்கப்பட்டு செயலாக்கத்தில் உள்ளன.



2007 மார்ச் 27]

**69—**

**தொழிற் பயிற்சி**

**வினா எண் 14844—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறைகளில் உள்ள கைதிகளுக்கு சுயதொழில் செய்ய பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகச் சிறைகளில் உள்ள அனைத்து சிறைவாசிகட்கும் சிறைகளில் இயங்கிவரும் கீழ்க்கண்ட தொழிற்கூடங்கள் மூலமாக தொழிற்பயிற்சி, உரிய தொழில்நுட்பப் பணியாளர்களால் அளிக்கப்பட்டு வருகிறது—

1. முத்திரை அரக்கு தயாரித்தல்
2. கூர் நாடாக்கள் செய்தல்
3. காலணி செய்தல்
4. கைத்தறி நெசவு
5. விசைத்தறி நெசவு
6. புத்தகக் கட்டுமானம்
7. கோப்பு கட்டும் அட்டைகள் உற்பத்தி
8. சலவை சோப்பு தயார் செய்தல்
9. கம்பள நெசவு
10. காகித உறைகள் தயார் செய்தல்
11. கருமார் தொழிற்பயிற்சி
12. அலுமினிய பாத்திரம் செய்தல்
13. டெரிகாட்டன் துணி உற்பத்தி செய்தல்

இவை தவிர, செங்கல் தயார் செய்தல், எளிய மின் பயிற்சி, குழாய்ப் பொருத்துதல் பயிற்சி, விளம்பரப் பலகை எழுதுதல், வர்ணம்

[2007 மார்ச் 27

பூசுதல் போன்ற சிறுதொழில் பயிற்சியும் தொழில்நுட்பப் பணியாளர்களால் அளிக்கப்பட்டு, பயிற்சி நிறைவுற்ற சிறைவாசிகட்கு உரிய தொழிற்கல்விச் சான்று, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநரகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சிறைவாசிகளுக்கு சிறையினுள் கணிப்பொறிப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றது. சிறைவாசிகளின் பயிற்சிக்காகக் கணிப்பொறிகளும் அரசுச் செலவில் வாங்கி வழங்கப்பட்டுள்ளன.

**70—**

## சிறைக் காவலர்களுக்குக் குடியிருப்புகள்

**வினா எண் 14913—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய சிறை காவலர்களுக்குப் புதிய வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறையில் பணிபுரியும் காவலர்களுக்கு மாநில அரசு நிதித் திட்டத்தின் கீழும், மத்திய அரசின் 75% நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழும், கீழ்க்காணும் விவரப்படி, குடியிருப்பு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன:—

| வருடம் | கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1998-99 | 28 |
| 2002-03 | 50 |
| 2003-04 | 12 |
| 2004-05 | — |
| 2005-06 | 12 |
| மொத்தம் .. | 102 |



2007 மார்ச் 27]

மேலும், 2004-05 ஆம் ஆண்டு சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 49 குடியிருப்புகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**71—**

## கல்வி வாய்ப்பு

**வினா எண் 14920—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறையில் உள்ள இளங்குற்றவாளிகளுக்குப் புதிய கல்வி வாய்ப்பை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 18 முதல் 21 வயது வரையிலான இளங்குற்றவாளிகளை அனுமதிக்க, புதுக்கோட்டையில், பார்ஸ்டல் பள்ளி ஒன்று இயங்கி வருகிறது. இப்பள்ளியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளி ஒன்று உள்ளது. இதன் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட இட வசதி 40 ஆகும். தற்போது இப்பள்ளியில் 12 மாணவர்கள் உள்ளனர். இதன்மூலம் இளங்குற்றவாளிகளுக்குக் கல்வி வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இளங்குற்றவாளிகள் உயர் கல்வி பயில விரும்பும்பட்சத்தில் அவர்களுக்கு தற்போதுள்ள விதிகளின்படி அரசுச் செலவில் பயில அனுமதிக்க வழிவகை உள்ளது.

**72—**

## அரசு கடனுதவி

**வினா எண் 14933—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள கைதிகள் விடுதலையாகி வரும்பொழுது, சிறிய கடைகள் வைத்து வாழ்க்கை நடத்திட, அரசு கடனுதவி வழங்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் சிறைவாசிகளின் நலன் மற்றும் விடுதலைக்குப் பின்னர் அவர்களது மறுவாழ்வுக்கு ஏற்ற வகையில் சிறைகளில் உள்ள தொழிற்கூடங்கள்மூலம் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் சிறைவாசிகள் விடுதலையாகி வரும் பொழுது சிறிய கடைகள் மற்றும் சிறு தொழில் துவங்க இத்துறையைச் சார்ந்த நன்னடத்தை அலுவலர்கள்மூலம் அவர்களது தகுதிக்கேற்றவாறு வேலைவாய்ப்பு மற்றும் அரசுடைமை வங்கிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் கடனுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

**73—**

### சுற்றுலா வளர்ச்சி

**வினா எண் 2724—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திட ஏதேனும் சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்ப்பதற்கு தமிழ்நாடு சுற்றுலாத் துறை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் வெளிநாட்டில் வெளிவரும் மாத/வார இதழ்களில் தொடர்ந்து விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்கள் பற்றி விளக்கும் கையேடுகள் வெளிநாடுகளில் உள்ள இந்திய சுற்றுலா அலுவலகம்மூலம் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்ப்பதற்குத் தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் சர்வதேசத் தரத்திற்கு ஏற்ப, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. வெளிநாட்டுப் பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிய, தற்போதைய உயர் தொழில்நுட்ப ஊடகங்களின் வாயிலாக, வெளிநாட்டுப் பயணிகள் மிக விரும்பி மகிழும் பாரம்பரிய சுற்றுலாத்



தலங்கள், கலைவண்ணம் காணும் நுண்கலை கற்சிற்ப திருக்கோயில்கள், சிறந்த கடற்கரைத் தலங்கள்பற்றி உடனடியாக அறிய மின்னணு மற்றும் வலைத்தளம் மூலம் தகவல் அளித்தல், ஆன்லைன் பதிவுகள் வசதி போன்றவற்றைத் தமிழ்நாடு சுற்றுலா மேம்படுத்தி உள்ளது. தமிழ்நாட்டின் வனப்புமிகு எழிலை வான்வழி சென்று கண்டு மகிழ உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி போன்ற தலங்களில் வான்வழி கம்பி பயணத் திட்டத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. முக்கிய சுற்றுலாத் தலங்களை இணைக்கும் அகல இருப்புப்பாதை மேம்படுத்துதல் மற்றும் தமிழகத்தில் அதிவேக ரயில் வசதிகளை அதிகரித்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தகவல் அளித்திடும் வகையில் ஐந்து தலங்களில் தலா 40 தகவல் தரும் வழிகாட்டிகள் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பயணிகளுக்கு வசதி அளிக்கும் வகையில் முக்கிய ஐந்து தலங்களில் சுற்றுலாக் காவலர்களை நியமிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**74—**

### சுற்றுலாத் தலம்

**வினா எண் 7089—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதிக்குட்பட்ட வாணியாறு அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டிலுள்ள எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. மொரப்பூர் தொகுதிக்குட்பட்ட வாணியாறு அணைக்கட்டுப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

1999-2000 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை ரூ. 3.50 இலட்சம் நிதியுதவி மூலம் வாணியாறு அணைப் பகுதியில் கழிப்பறை வசதிகள், சிறுவர் பூங்கா போன்ற கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி, மாநிலப் பொதுப் பணித் துறையின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

75—

## கட்டமைப்பு வசதிகள்

**வினா எண் 9139—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் சிறுமலையைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

சுற்றுலாத் துறையின் மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.

கிழக்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், திண்டுக்கல் மாவட்டம் சிறுமலையில் கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள, 2005-2006 ஆம் ஆண்டு ரூ. 5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

76—

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 10262—டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், திருவத்திபுரம் அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் அருள்மிகு திருவைத்தீஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றுலாத் துறை நிதியைக் கொண்டு அடிப்படை வசதிகள் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், திருவத்திபுரத்தில் அதிக சுற்றுலாப் பயணிகள் வரும் அருள்மிகு





திருவைத்தீஸ்வரர் திருக்கோயிலில் சுற்றுலாத் துறை நிதியைக் கொண்டு அடிப்படை வசதிகள் செய்து தர செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

77—

## கோயில் சுற்றுச் சுவர்

**வினா எண் 7599—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, காசனூரிலுள்ள அருள்மிகு ஓங்காளியம்மன் திருக்கோயிலுக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காசனூர், அருள்மிகு ஓங்காளியம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை கட்டுப்பாட்டில் இல்லாத பிற்படுத்தப்பட்டோர்கள் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயிலாகும். எனவே, அதற்கு நிதியுதவி வழங்கிட வழிவகையில்லை.

78—

## மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

**வினா எண் 8697—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறி நெசவாளர் சங்கப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி நெசவாளர் சங்கப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**79—**

## நெசவாளர்கள் வீடுகட்டும் திட்டம்

**வினா எண் 11418—திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கான வீடு கட்டும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) நெசவாளர்கள் வீடு கட்டும் திட்டம், 1979-80 ஆம் ஆண்டு முதல் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மத்திய அரசு 1985-86 ஆம் ஆண்டிலிருந்து இணைந்து, இத்திட்டம் இதுகாறும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**80—**

## ஜவுளிப் பூங்கா

**வினா எண் 11546—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூரில் ஜவுளிப் பூங்கா (டெக்ஸ்டைல் பார்க்) உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



விடை—

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

கரூர் சட்டமன்ற தொகுதி, கரூரில் ரூ. 66 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்பத்துடன், கூட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க உரிய பிரேரணை மத்திய அரசுக்கு ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**81—**

## ஜமக்காள உற்பத்தி

**வினா எண் 14502—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் - ஓமலூர் முதல் முத்துநாயக்கன்பட்டி வரையிலுள்ள சாலையில் 10 ஆண்டுகளாக உள்ள சுப்பிரமணியர் ஜமக்காள உற்பத்தி மற்றும் விநியோக சங்கத்தை மீண்டும் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுக்கா, முத்துநாயக்கன்பட்டி சுப்பிரமணியர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் 20-03-1981-ல் பதிவு செய்யப்பட்டு, 12-06-1981 முதல் செயல்படத் துவங்கியது. 1996-1997 ஆம் ஆண்டு வரையில் நன்முறையில் இயங்கிவந்த இச்சங்கம், 1997-1998 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து செயலிழந்து நட்டத்தில் இயங்கி வந்ததாலும், சங்கத்தில் மூன்றாண்டுகளுக்கு மேல் உற்பத்தி எதுவும் இல்லாத நிலையில் உறுப்பினர்கள் வேறு தொழிலுக்குச் சென்றுவிட்டதாலும், இச்சங்கத்தைப் புத்துயிர் அளித்து இயங்க வைக்க சாத்தியக்கூறுகள் இல்லாத நிலையில் 16-12-2002-ல் கலைக்கப்பட்டுள்ளது. கலைக்கப்பட்ட மேற்படி சங்க உறுப்பினர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் வர விரும்பும்பட்சத்தில் அவர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொணரப்பட்டு அவர்களுக்குத் தொடர்ந்து தொழில் வழங்குவது குறித்துப் பரிசீலிக்க இயலும்.

[2007 மார்ச் 27

82—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 8356—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி சரஸ்வதி நகரில் வணிக வரித் துறை அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

பண்ருட்டி நகரில், பண்ருட்டி (நகரம்) மற்றும் பண்ருட்டி (ஊரகம்) என்னும் இரண்டு துணை வணிக வரி அலுவலர் அலுவலகங்கள் இரண்டு தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவற்றுள் சரஸ்வதி நகர் தனியார் கட்டடத்தில் இயங்கும் வணிக வரித் துறை அலுவலகம் பண்ருட்டி (ஊரகம்) ஆகும். தனியார் கட்டடத்தில் இயங்கி வருகின்ற இரண்டு அலுவலகங்களுக்கும் அரசுக் கட்டடம் கட்ட, வருவாய்த் துறைமூலம் பண்ருட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள ட்டி.எஸ்.எண் 15/1-ல் உள்ள 0.0325 சதுர மீட்டர் நிலம் வணிக வரித் துறைக்கு நில உரிமை மாற்றம் 19-12-2001-ல் செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து திருத்திய மதிப்பீடு பெற்றவுடன், பண்ருட்டி துணை வணிக வரி அலுவலர் அலுவலகங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட நடவடிக்கை தொடரப்படும்.

83—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 3195—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் வாலிபால் மற்றும் கபடி விளையாட்டு மைதானம் ஒன்றை அரசு ஏற்படுத்தித் தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் வாலிபால் மற்றும் கபடி விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

84—

## கபடி, கைப்பந்துப் போட்டிகள்

**வினா எண் 4117—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கபடி மற்றும் கைப்பந்துப் போட்டிகளை ஆண்டுக்கு ஒருமுறை நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம். கபடி மற்றும் கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளை வால்பாறை தொகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் வைத்து நடத்த வாய்ப்பு உள்ளது.

(ஆ) ஆண்டுக்கு ஒருமுறை நடத்த வாய்ப்புள்ளது.

85—

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 4885—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, வெள்ளாணபட்டி ஊராட்சிக்கு விளையாட்டு மைதானத்துடன், உடற்பயிற்சி உபகரணங்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) சிங்காநல்லூர் தொகுதி, வெள்ளாணபட்டி ஊராட்சிக்கு விளையாட்டு மைதானத்துடன், உடற்பயிற்சி உபகரணங்கள் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**86—**

## விளையாட்டு உபகரணங்கள்

**வினா எண் 6959—திரு. வை. காவேரி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், குரும்பப்பட்டி கிராமம், கருங்கல்காட்டுவளவு பகுதியில் விளையாட்டு உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) தமிழகத்தில் மாவட்டத் தலைநகரங்களில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கங்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மட்டுமே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) ஒவ்வொரு தொகுதிக்கும், கிராமத்துக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவது தொடர்பான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. அவ்வாறு வழங்குவதற்கான திட்டம் ஏதும் செயல்படுத்தப்பட்டால், எடப்பாடி, கொங்கணாபுரம் ஒன்றியம், குரும்பப்பட்டி கிராமம், கருங்கல்காட்டுவளவு பகுதிக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.



2007 மார்ச் 27]

**87—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 7387—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் குதிரை சவாரி விளையாட்டு மைதானம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

(அ) வால்பாறையில் குதிரை சவாரி விளையாட்டு மைதானம் ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**88—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 8735—திரு. இரா. மாணிக்கம் :** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை நகராட்சிப் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

குளித்தலை நகராட்சிப் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**89—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 8873—திரு. க. இராஜேந்திரன் :** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

ஜெயங்கொண்டம் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

ஜெயங்கொண்டம் பகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

**90—**

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 8936—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சுங்ககாரம்பட்டி ஊராட்சி, மூர்த்திபட்டியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* சுங்ககாரம்பட்டி ஊராட்சி, மூர்த்திபட்டியில் விளையாட்டுத் திடல் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* நிலை எழவில்லை.

**91—**

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 8937—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மோகனூர் ஒன்றியம், மணப்பள்ளி கிராமத்தில், விளையாட்டுத் திடல் அமைத்து, விளையாட்டு உபகரணங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* மோகனூர் ஒன்றியம், மணப்பள்ளி கிராமத்தில் விளையாட்டுத் திடல் அமைத்து, விளையாட்டு உபகரணங்களை வழங்க, அரசு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* நிலை எழவில்லை.

**92—**

## விளையாட்டுத் திடல்

**வினா எண் 9919—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காவேரிப்பட்டணம் தொகுதி, காவேரிப்பட்டணம் நகரில் விளையாட்டுத் திடல் கட்டித் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* காவேரிப்பட்டணம் தொகுதி, காவேரிப்பட்டணம் நகரில் விளையாட்டுத் திடல் கட்டித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* நிலை எழவில்லை.

**93—**

## விளையாட்டு மைதானம்

**வினா எண் 11780—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, மருந்துகோட்டை அரசுப் புறம்போக்கு இடத்தில் விளையாட்டு மைதானம் (STADIUM) அமைக்க அரசு முன்வருமா?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

பத்மநாபபுரம் தொகுதி, மருந்துகோட்டை அரசுப் புறம்போக்கு இடத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**94—**

## நீச்சல் குளம்

**வினா எண் 12321—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவண்ணாமலையில் நீச்சல் குளம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலையில் நீச்சல்குளம் அமைக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் 2007-2008 ஆம் நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நீச்சல்குளம் அமைத்திட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**95—**

## கட்டட நிதி

**வினா எண் 12846—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள இஸ்லாமியர் பள்ளிவாசலான கொமரலிங்கம், உடுமலைப்பேட்டை பெரிய பள்ளிவாசலுக்குக் கட்டட நிதி வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், கொமரலிங்கம், பெரிய பள்ளிவாசல் நிருவாகத்தினரிடமிருந்து கட்டட நிதி உதவி கோரிய விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. தமிழக அரசால் வழங்கப்படும் சிறிய மராமத்து மானியம் (Minor Renovation Grant) மற்றும் பெரும் மராமத்து மானியம் (Major Renovation Grant) ஆகிய திட்டங்களின்கீழ் தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின்மூலம் நிதி உதவி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**96—**

## விளையாட்டு மேம்பாடு

**வினா எண் 13013—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) "கபிலமலை ஒன்றியம், வெங்கரை பேரூராட்சி, குச்சிப்பாளையம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைத்து விளையாட்டுப் பொருட்களையும், உடற்பயிற்சிக் கருவிகளையும் வழங்க அரசு ஆவன செய்யுமா?"*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கபிலமலை ஒன்றியம், வெங்கரை பேரூராட்சி, குச்சிப்பாளையம் கிராமத்தில் விளையாட்டு மைதானம் அமைத்து, விளையாட்டுப் பொருட்களையும், உடற்பயிற்சிக் கருவிகளையும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**97—**

## கட்டடப் பழுது செப்பனிடுதல்

**வினா எண் 7142—திரு. தி. வேல்முருகன் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, புலியூர் ஊராட்சியில் உள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைச் செப்பனிட்டுத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)* பண்ருட்டி தொகுதி, புலியூர் கால்நடை கிளை நிலையம் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தின் வாடகையில்லாக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அது குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ளதால், அக்கட்டடத்தின் பழுதுகளைச் செப்பனிட, குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தை அணுகப்பட்டுள்ளது.

**98—**

## தாட்கோமூலம் கடன்தொகை

**வினா எண் 3402—திரு. ம. குணசேகரன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் தாட்கோமூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கொடுக்கும் முறையை மாற்றி தாட்கோமூலமே பணப் பட்டுவாடா செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?



**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :**

*(அ)* மற்றும் *(ஆ)* தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கொடுக்கும் முறையினை மாற்றி தாட்கோமூலமே அனைத்துப் பயனாளிகளுக்கும் நேரடியாகக் கடன் தொகை பட்டுவாடா செய்யும் திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை. ஆனால், இந்து ஆதி திராவிடர்களின் முன்னேற்றத்திற்காக டெல்லியில் தேசிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நிதி மேம்பாட்டுக் கழகங்கள் (NSFDC and NSTFDC) போன்ற நிதி நிறுவனங்கள் வாயிலாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அவர்கள் கோரும் திட்டத்திற்கான கடன் தொகையினைக் குறைந்த வட்டியில் நேரடியாக தாட்கோமூலம் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும், தேசிய சுகாதாரப் பணியாளர் நிதி மேம்பாட்டுக் கழகத் திட்டம் (NSKFDC) மூலம் சுகாதாரப் பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு வருவாய் ஈட்டக்கூடிய தொழிலைச் சொந்தமாகத் தொடங்க, தாட்கோ மானியத்துடன்கூடிய கடன் தொகையினைக் குறைந்த வட்டியில் நேரடியாக தாட்கோமூலம் வழங்கும் திட்டம் தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

**99—**

## மானியக் கடன்

**வினா எண் 5551—திரு. தி.க. ராஜா :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜமம்புதூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு தாட்கோமூலம் மானியக் கடன் வழங்க அரசு முன்வருமா?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் :**

ஆம். தாட்கோமூலம் இந்து ஆதி திராவிட மக்கள் சுய தொழில் செய்ய மானியத்துடன்கூடிய கடனுதவி பெறுவதற்கு வேலூர் மாவட்டத்திலுள்ள தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்திற்கு பயனாளிகள் நேரில் சென்று விண்ணப்பங்களைப் பெற்று முறைப்படி பூர்த்தி செய்து, சாதிச் சான்று, வருமானச் சான்று, உணவுப் பொருள் பங்கீடு அட்டையின் நகல் மற்றும் வாங்க உத்தேசித்துள்ள பொருளின் விலைப்புள்ளி போன்ற ஆவணங்களை இணைத்து விண்ணப்பங்களை மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் கொடுத்தால், விதிமுறைகளுக்குட்பட்டு விண்ணப்பங்கள் தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, மானியத்துடன்கூடிய கடனுதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**100—**

## படகுகள் செய்யும் தொழிற்கூடம்

**வினா எண் 12654—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில், படகுகள் செய்யும் தொழிற்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர் :**

செங்கல்பட்டு தொகுதியில், துறைமூலம் படகுகள் செய்யும் தொழிற்கூடம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2007 மார்ச் 27]

## இரண்டாவது பட்டியல்

**1—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 1063—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை காவல் நிலையத்திற்கு அடிப்படை வசதிகளை செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை காவல் நிலையம் தற்போது பழமை வாய்ந்த, அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேற்படி காவல் நிலையத்திற்கு 2007-2008 ஆம் ஆண்டு காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய கட்டடம் கட்டப்படும்போது அடிப்படை வசதிகளும் செய்துதர நடவடிக்கை எடுக்கப்படும்.

**2—**

## குடியிருப்புகள்

**வினா எண் 1064—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை காவல் நிலையத்தில் பணிபுரிகின்றவர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோவை மாவட்டத்தில் உள்ள வால்பாறை காவல் நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட காவல் பணியாளர்களின்

[2007 மார்ச் 27

எண்ணிக்கை ஆய்வாளர்-1, உதவி ஆய்வாளர்-3, தலைமைக் காவலர்/காவலர்-20, தற்பொழுது ஒரு உதவி ஆய்வாளர் குடியிருப்பும், 14 தலைமைக் காவலர்/காவலர்கள் குடியிருப்புகளும் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒரு ஆய்வாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 8 தலைமைக் காவலர்கள்/ காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும். மேற்படி குடியிருப்புகள் ஆண்டுதோறும் 3,000 குடியிருப்புகள் கட்டும் திட்டத்தின்கீழ் சேர்த்து புதிய குடியிருப்புகள் கட்ட பரிசீலனை செய்யப்படும்.

**3—**

## உதவி ஆய்வாளர் நியமனம்

**வினா எண் 1369—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் உள்ள காவல் நிலையத்திற்குத் தனியாக உதவி ஆய்வாளர் ஒருவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சி உட்கோட்டத்திற்கு உட்பட்ட ஆழியாறு என்ற இடத்தில் புறக்காவல் நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. அரசு விதிமுறைகளின்படி புறக்காவல் நிலையத்திற்கு உதவி ஆய்வாளர் பதவி ஒப்பளிக்கப்படுவதில்லை. எனவே, வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் உள்ள புறக்காவல் நிலையத்திற்கு உதவி ஆய்வாளர் ஒருவரை நியமிக்க அரசு விதிமுறைகளின்படி இடமில்லை.

**4—**

## தாழ்த்தப்பட்டோர் நியமனம்

**வினா எண் 1377—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, காவல் துறையில் காலியாக உள்ள தாழ்த்தப்பட்டவர்களின் இட ஒதுக்கீடுகளைப் பூர்த்தி செய்ய அரசு முன்வருமா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இடஒதுக்கீடு, காவல் நிலையம் அல்லது மாவட்ட அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதில்லை. காவல் துறையில் காவலர், சார்-ஆய்வாளர் மற்றும் துணைக் கண்காணிப்பாளர் போன்ற நேரடி நியமனப் பதவிகளில் எழும் காலியிடங்கள் மாநில அளவில் கணக்கிடப்பட்டு அந்தந்தப் பதவிக்குரிய நேரடி நியமன அமைப்புகளால், அதாவது தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் (Tamil Nadu Uniformed Services Recruitment Board) மற்றும் அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Tamil Nadu Public Service Commission) ஆகிய அமைப்புகளால் அரசு விதிகளின்படி உரிய எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்டோர் நியமனம் செய்யப்படுகின்றனர். காவல் துறையில் தற்போது தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீடு முழுமையாக நிரப்பப்பட்டுள்ளது. அதனால் தேக்க நிலை (Back log) ஏதுமில்லை.

**5—**

## துணைக் காவல் கண்காணிப்பாளர்

**வினா எண் 1380—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவல் துறையில் வால்பாறை மலைப் பகுதியை மட்டும் தனியாகப் பிரித்து, ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சமீப காலத்தில் காவல் துறையில் கூடுதலாக 40 காவல் உட்கோட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டன. இவற்றுள் கோவை மாவட்டத்தில் வால்பாறை காவல் உட்கோட்டமும் ஒன்றாகும். புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட வால்பாறை காவல் உட்கோட்டம் 27-10-2005 முதல் ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த வால்பாறை உட்கோட்டம், அப்பகுதியில் உள்ள அனைத்து மலைப் பகுதியையும் உள்ளடக்கிய ஒன்றாகும். எனவே, வால்பாறை மலைப் பகுதியை

[2007 மார்ச் 27

மட்டும் தனியாகப் பிரித்து, மேலும் ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளரை நியமிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

6—

### முன்னுரிமை

**வினா எண் 1745—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் தொடர்ந்து பத்து ஆண்டுகள் பணிபுரியும் காவல் துறையைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளுக்குப் பள்ளி, கல்லூரிகளில் சேர முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியில் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணிபுரியும் காவல் துறையைச் சார்ந்தவர்களின் பிள்ளைகளுக்குப் பள்ளி, கல்லூரிகளில் சேர முன்னுரிமை வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. வால்பாறை பகுதி மட்டுமின்றி எந்தப் பகுதியிலும் காவலர்களின் குழந்தைகள் பள்ளி, கல்லூரிகளில் சேர முன்னுரிமை வழங்கும் திட்டம் நடைமுறையில் இல்லை.

7—

### பணிக்கு முன்னுரிமை

**வினா எண் 1751—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் உள்ள காவல் துறையினரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குக் காவல் துறையில் பணிக்கு ஆட்கள் எடுக்கும்போது முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு இரண்டாம் நிலைக் காவலர் மற்றும் காவல் சார்-ஆய்வாளர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்யும்போது 10 சதவீத பணியிடங்கள் ஒதுக்கப்பட்டு முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதன்படி வால்பாறை மலைப் பகுதியில் உள்ள காவல் துறையினரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

8—

### காவல் நிலையம்

**வினா எண் 1754—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வாட்டர் ஃபால்ஸ் காவல் நிலையத்தைப் பொதுப் பணித் துறை கட்டடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வாட்டர் ஃபால்ஸ் காவல் நிலையம், முழு காவல் நிலையம் அல்ல. புறக்காவல் நிலையமாகவே இயங்கி வருகிறது. வாட்டர் ஃபால்ஸ் புறக்காவல் நிலையம் அரசுக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. எனவே, பொதுப் பணித் துறை கட்டடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

9—

### புதிய காவல் நிலையம்

**வினா எண் 2173—திரு. அ. ராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவில் தொகுதி, தெங்கம்புதூரில் புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தெங்கம்புதூர் என்ற இடம் சுசீந்திரம் காவல் நிலைய எல்லைக்குள் அமையப் பெற்றுள்ளது. சுசீந்திரம் காவல் நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களைக் கொண்டு அக்காவல் நிலைய எல்லைக்குள் சட்டம்—ஒழுங்கு பாதுகாப்புடன் குற்ற நிகழ்வுகள் நிகழாவண்ணம் திறம்பட பராமரிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், தெங்கம்புதூர் பகுதியில் ஒரு புதிய காவல் நிலையம் அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு, தேவையெனில் தனியே கருத்துரு அனுப்பி வைப்பதாகக் காவல் துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். அவ்வாறு அனுப்பி வைக்கும்போது, அதுகுறித்து அரசு பரிசீலித்து, நிதி நிலைக்கேற்ப முடிவு எடுக்கப்படும்.

**10—**

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 2486—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல் துறையில் உள்ள காலியிடங்கள் எதிர்வரும் 04-09-2006 அன்று பயிற்சி முடிக்கும் 1899 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியில் சேரும்பொழுது நிரப்பப்படும்.

**11—**

## தமிழ் ஆட்சி மொழி

**வினா எண் 2633—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் ஆட்சி மொழியை அனைத்து நிலைகளிலும் நடைமுறைப்படுத்த அரசு முயற்சி எடுத்து வருகிறதா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் தமிழே ஆட்சி மொழி என்பதற்கு வழிவகை செய்யும் பொருட்டு, தமிழ் ஆட்சி மொழிச் சட்டம், சட்டம் எண் 39/1956-இல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தினைச் செயல்படுத்துமுகத்தான் அரசளவில் இருந்து பல ஆணைகள் வெளியிடப்பட்டன. ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கம் குறித்து தலைமைச் செயலகம், துறைத் தலைமை அலுவலகங்கள், அரசேற்பு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட சார்நிலை அலுவலகங்களில் ஆய்வு செய்யப்படுகிறது. ஆய்வில் கண்டறியப்படும் குறைகளைக் களைய அவ்வப்போது தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**12—**

## வேலைவாய்ப்பில் முன்னுரிமை

**வினா எண் 2871—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்மொழியில் பாடங்களைக் கற்போருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தமிழ்நாட்டில் அரசுப் பணிகளில் தேர்வாணையத்தின் அகப்பாட்டு எல்லைக்குள் வருகின்ற ஒழிவிடங்களை நிரப்புவதற்கான தேர்வுகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப் பெறுகின்றன. சில பிரிவுகளுக்கான நேரடி நியமனங்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வாயிலாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழை முதல் பாடமாகக் கொண்டும் பயிற்று மொழியாகக் கொண்டும் பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும் நிலை தற்போது நடைமுறையில் இல்லை.

**13—**

## அலுவலகக் கட்டடம்

**வினா எண் 6775—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரத்தில் செயல்படும் மின்சார அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், லெவிஞ்சிபுரத்தில் செயல்பட்டு வரும் மின்சாரப் பிரிவு அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டிட நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நிலம் கையகப்படுத்தியவுடன் கட்டடம் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**14—**

**சீரான மின்சாரம்**

**வினா எண் 7156—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வேப்பிலான்குளம் ஊராட்சி, கால்கரை கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வேப்பிலான்குளம் ஊராட்சிக்குட்பட்ட கால்கரை கிராமத்தில், புதிய 100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைக்க, ரூ.2,37,990/- செலவில் மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. விரிவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டபின், இந்தப் பகுதிக்குச் சீரான மின்சாரம் கிடைக்கும்.

**15—**

**மின் வசதி**

**வினா எண் 7338—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 27]

(அ) பண்ருட்டி தொகுதி, ஏரிப்பாளையம் கிராமத்திற்கு மின் வசதி அளித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி கோட்டத்திற்கு உட்பட்ட அங்குசெட்டிப்பாளையம் பிரிவில் உள்ள ஏரிப்பாளையம் கிராமத்திற்கு அங்குசெட்டிப்பாளையம் மின்மாற்றி X-ன் மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஏரிப்பாளையம் பகுதியில் 4 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 18 குழல் விளக்குகள் நல்ல முறையில் ஒளிர்வூட்டிக்கொண்டிருக்கின்றன.

மேலும், தெரு விளக்குகள் அமைக்க வேண்டி விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி தெரு விளக்குகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**16—**

**சீரான மின்சாரம்**

**வினா எண் 7528—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சமுட்டிக்குப்பம் கிராமத்தில் சீரான மின்சாரம் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சமுட்டிக்குப்பம் கிராமப் பகுதிகளுக்குக் கீழ்க்கண்ட மின்மாற்றிகள்மூலம் தடையில்லா சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

1. சமுட்டிக்குப்பம் மின்மாற்றி IV
2. சமுட்டிக்குப்பம் மின்மாற்றி XIV

[2007 மார்ச் 27

3. சமுட்டிக்குப்பம் மின்மாற்றி XVI

4. சமுட்டிக்குப்பம் மின்மாற்றி XVIII

5. சமுட்டிக்குப்பம் மின்மாற்றி XVII

மேற்கண்ட மின்மாற்றிகளில், மின்மாற்றி XIV-லிருந்து சமுட்டிக்குப்பம் வடக்குத் தெரு, விரும்பனார் கோயில் தெரு மற்றும் தெற்குத் தெரு, ஆகிய பகுதிகளுக்குச் சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது.

**17—**

## தற்காலிகப் பணி

**வினா எண் 8025—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்ற 2003 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட 500 தொகுப்பூதியப் பணிகளுக்கு 381 நபர்களை மட்டும் பணியில் சேர அனுமதித்து, மீதமுள்ள 114 நபர்களைப் பணியில் சேர அனுமதிக்காததால், அவர்களையும் பணியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேலை நிறுத்தத்தின்போது நியமிக்கப்பட்ட தற்காலிகத் தொகுப்பூதியப் பணியாளர்கள் 495 பேரில், 382 பேருக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டது. மீதமுள்ள 113 பேருக்கு பணியிடம் காலியின்மையால் பணி நியமனம் வழங்கப்படவில்லை. 12-9-2005 நாளிட்ட அரசு கடித எண் 45793-ன்படி, தற்போது பணியில் இருப்பவர்களைத் தவிர வேறு யாரையும் நியமனம் செய்ய வேண்டாமென அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால், 113 பேருக்கு மீண்டும் தற்காலிகப் பணி வழங்க வேண்டும் என்ற வினா எழவில்லை.

**18—**

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 1901—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 27]

(அ) வால்பாறை நகராட்சியில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகராட்சியில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**19—**

## நிழற் கூடம்

**வினா எண் 3725—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுககு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி கிராமம், சந்தனூர் பகுதி மற்றும் செம்மாண்டப்பட்டி ஊராட்சி சந்தைப் பகுதி ஆகிய இடங்களில் பயணிகள் நிழற் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சி, சந்தனூரில் நடப்பாண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பயணிகள் நிழற் கூடம் அமைக்க பணி தேர்வு செய்யப்பட்டுள்ளது. செம்மாண்டப்பட்டி ஊராட்சி சந்தைப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அல்லது அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் பணி செயல்படுத்தப்படும்.

**20—**

## சிறு பாலம் அமைத்தல்

**வினா எண் 3882—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாராபுரம் ஊராட்சி, புதுக்கோட்டை மாரியம்மன் கோவில் பகுதியில் சிறு பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், தாராபுரம் ஊராட்சி, புதுக்கோட்டை மாரியம்மன் கோவில் பகுதியில் தடுப்பணை கட்டப்பட்டுள்ளது. தடுப்பணை உள்ள பகுதியில் ஓடையின் குறுக்கே பொதுமக்கள் சென்று வருகின்றனர். சிறிது தூரம் தள்ளி சிறு பாலம் கட்டவேண்டுமெனில் பட்டாதாரர்களின் நிலத்தினை சாலை அமைக்க ஆர்ஜிதம் செய்ய வேண்டியுள்ளது. அதன் பின்னரே சிறு பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**21—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 3887—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஓமலூர் ஒன்றியம், கோட்ட மாரியம்மன் கோயில் ஊராட்சி, மேல்காமாண்டப்பட்டி, கரட்டூர் பகுதியில் பொதுநல சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோட்ட மாரியம்மன் கோயில் ஊராட்சி, மேல்காமாண்டப்பட்டியில் சுமார் 50 குடும்பங்கள் மட்டுமே உள்ளனர் என்பதால் இப்பகுதியில் சமுதாயக் கூடம் தேவையிலலை.

**22—**

## வாரச் சந்தை கட்டடம்

**வினா எண் 4194—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதிக்குட்பட்ட நரிக்குடி ஒன்றியம், கட்டனூரில் வாரச் சந்தைக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடம் நிதி ஒதுக்கீடு பெற்று 2006-2007 ஆம் ஆண்டிலேயே புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து நிதி கிடைக்காதபட்சத்தில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் வாரச் சந்தை கட்டடம் புதுப்பிக்கப்படும்.

**23—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 4571—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

மானாமதுரை தொகுதிக்குட்பட்ட நரிக்குடி ஒன்றியத்தில் உள்ள அ. முக்குளம், தச்சனேந்தல், கருவக்குடி மற்றும் எஸ். கல்விமடை கிராமங்களுக்கு ஒரு திருமண ஹால் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் நிதி கோரப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றால் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்கப்படும்.

**24—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 4664—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், பி. புளியங்குளத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியம், பி. புளியங்குளம் குடியிருப்பிற்கு, தற்போது கட்டனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து முழு அளவில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பி. புளியங்குளம் குடியிருப்பிற்கு அருகில் உள்ள வாகைக்குளம் குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம், பி. புளியங்குளம், பி. வாகைக்குளம் மற்றும் பட்டனேந்தல் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பி. புளியங்குளம் குடியிருப்புக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.



2007 மார்ச் 27]

**25—**

## பள்ளிக்குச் சுற்றுச் சுவர்

**வினா எண் 5281—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, சின்னபொம்மன் சாலையிலுள்ள பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சின்னபொம்மன் சாலை பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி திட்டத்தில் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

## கான்கிரீட் சாலை

**வினா எண் 5678—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்துக் கிராமங்களிலும் கான்கிரீட் சாலை அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும், கான்கிரீட் சாலை இல்லா தெருக்களுக்கும்,

[2007 மார்ச் 27

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சம்பூர்ண கிராம ரோஜ்கார் திட்டத்தின்மூலம் கான்கிரீட் சாலைகள் நிதி வசதிக்கேற்ப அமைத்துத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**27—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 6014—திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னத்தூர் முதல் துறவலூர் சாலை திருவள்ளுவர் நகர் பிரிவில் இருந்து வெங்கமேடு கிராமத்திற்குப் புதிய தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குன்னத்தூர் முதல் துறவலூர் சாலை திருவள்ளுவர் நகர் பிரிவில் இருந்து வெங்கமேடு கிராமத்திற்குச் செல்லும் சாலையான சேவூர்-குன்னத்தூர் சாலையில் இருந்து பிரிந்து வெங்கமேடு செல்லும் சாலை 2006-07 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1.4 கி.மீ. தூரத்திற்கு ரூ. 10,61,000/- மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**28—**

## தார்ச் சாலை

**வினா எண் 6692—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திற்கு உட்பட்ட புங்கம்பாடி ஊராட்சியிலுள்ள புனரவலசு ஆதி திராவிடர் காலனி முகாசிப்பிடாரியூர் பஞ்சாயத்து,



2007 மார்ச் 27]

நெசவாளர் பகுதி, ஈங்கூர், பாலபாளையத்தில், உச்சணகவுண்டர் புதூர், சக்தி நகர், முருகம்பாளையம், சின்னப்பிடாரியூர் ஆகிய இடங்களில் மயானத்திற்குச் செல்ல தார்ச் சாலை போட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், புங்கம்பாடி ஊராட்சி, புனரவலசு ஆதி திராவிடர் காலனி, முகாசிப்பிடாரியூர் நெசவாளர் பகுதிக்குத் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதர பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**29—**

## சாலை வசதி

**வினா எண் 6696—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திற்குட்பட்ட ஈங்கூர் ஊராட்சியில் உள்ள புலவனூரிலிருந்து ஈங்கூர் வரை செல்லும் தார்ச் சாலையைச் செப்பனிடவும் புதூர்பாளையம் கிராமத்திற்கு வடக்கே சென்னிமலைபாளையத்திற்குச் செல்லும் சாலை, புங்கம்பாடி கிராமம், ஆதி திராவிடர் காலனி அரவிளக்கு மேட்டுப்பாளையத்தில், வெள்ளோரி, ஞானிப்பாளையத்திலுள்ள வேலம்பாளையத்திற்குச் சாலை வசதி செய்து தரவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், ஈங்கூர் ஊராட்சியில் உள்ள புலவனூரிலிருந்து ஈங்கூர் வரை செல்லும் தார்ச் சாலையைச்

[2007 மார்ச் 27

செப்பனிடவும், புதுர்பாளையம் கிராமத்திற்கு வடக்கே சென்னிமலைபாளையத்திற்கு செல்லும் சாலை, புங்கம்பாடி கிராமம், ஆதி திராவிடர் காலனி அர விளக்கு, மேட்டுப்பாளையத்தில், வெள்ளேரி, ஞானிபாளையத்திலுள்ள வேலம்பாளையத்திற்கும் சாலை வசதி செய்து தரவும், ஈங்கூர் ஊராட்சியின்மூலம் வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**30—**

### சாலை வசதி

**வினா எண் 6788—திரு. வை. காவேரி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், சித்தூர் கிராமம், கூலையனூர் சித்தன் கொட்டாய் பகுதிக்குச் சாலை வசதி செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சித்தூர் கிராமம் கூலையனூர் சித்தன் கொட்டாய் பகுதிக்கு 2006-2007 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரீட் சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**31—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 6789—திரு. வை. காவேரி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 27]

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், குரும்பப்பட்டி, மசக்குமாரம்பாளையம் வைத்திலைக்காடு செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், குரும்பப்பட்டி கிராமம், மசக்குமாரம்பாளையம் சாலையில் இருந்து வைத்திலைக்காடு செல்லும் சாலை தற்போது வண்டிப் பாதையாக உள்ளது. இப்பாதையில் சுமார் 30 மீ. நீளம் தனியார் பட்டா நிலமாக உள்ளது. மேலும், 0.6 மீட்டர் நீளம் வண்டிப் பாதை உள்ளது. இதற்கு இரண்டு அடுக்கு கப்பியுடன் தார்ச் சாலை அமைக்க ரூ.2.25 இலட்சம் செலவாகும். இந்த வண்டிப் பாதை முழுவதும் தனியார் பட்டா நிலமாக இருப்பதால் பட்டாதாரர்களிடம் இருந்து, தான செட்டில்மெண்ட் பெற்றால்தான் பாதை அமைக்க இயலும். எனவே, மசக்குமாரம்பாளையம் சாலையில் இருந்து வைத்திலைக்காட்டிற்குச் சாலை அமைக்க இயலாத நிலை உள்ளது.

**32—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 7081—திரு. வை. காவேரி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகுடஞ்சாவடி ஒன்றியம், கவுண்டனேரி சாலையிலிருந்து சின்னமுத்தான்காடு வரை உள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கவுண்டனேரி சாலையிலிருந்து சின்னமுத்தான்காடு வரை உள்ள சாலையானது

[2007 மார்ச் 27

1.20 கி.மீ. நீளம் உடையது. இதனைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ.8 இலட்சம் தேவைப்படும். இச்சாலையினை நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**33—**

### தார்ச் சாலை

**வினா எண் 7082—திரு. வை. காவேரி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் பகுதி, பாசப்பாளிக்காடு பாறைக்கொட்டாய், கோணங்குட்டையூர் ஆகிய பகுதிகளிலுள்ள சாலைகளைத் தார்ச் சாலையாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, பாசப்பாளிக்காடு சாலை 1.60 கி.மீ. நீளம் உள்ளது. இச்சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ.12.80 இலட்சம் செலவாகும். கோணங்குட்டையூர், பாறைக்கொட்டாய் வழி மஞ்சக்கல்பட்டி சாலை 0.60 கி.மீ. நீளம் உள்ளது. இந்தச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ.5 இலட்சம் செலவாகும். மேற்காணும் பணிகளை 12-வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**34—**

### தார்ச் சாலை

**வினா எண் 7094—திரு. கே.வி. ராமநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட ஆம்பை கிராமம், தனவாய்பேட்டை, நரிச்சேரி இணைப்பு, ஆற்றுப் பரிசல்துறை,



2007 மார்ச் 27]

துருசாம்பாளையம், செங்கோடம்பாளையம், ஓலகடம் கிராமம், தாளபாளையம், ஜெயந்தி காலனி மயானத்திற்குச் செல்லும் பாதையைப் புதிய தார்ச் சாலையாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதி, பவானி ஊராட்சி ஒன்றியம், செங்கோடம்பாளையம் மயானத்திற்குச் செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக்க 2006-2007 ஆம் ஆண்டு புதிய, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**35—**

### சிறு பாலங்கள்

**வினா எண் 7105—திரு. கே.வி. ராமநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட வைரமங்கலம் கிராமம், குண்டுசெட்டிபாளையம் சாப்புகல் சாலையும், குண்டுசெட்டிபாளையம், ராஜேந்திரன் தோட்டத்திற்கு அருகில் ஆதி திராவிடர் காலனி மயானத்திற்குச் செல்லும் வழியில் ஆற்றங்கரையோரம் ஆகிய இடங்களில் சிறுபாலங்களும், சேலத்து மாரியம்மன் கோவில், சின்னப்புலியூர் ஆகிய இடங்களில் சுகாதார வளாகங்களும் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி சட்டமன்றத் தொகுதி, பவானி ஊராட்சி ஒன்றியம், குண்டுசெட்டிபாளையம் சாப்புகல்

சாலை கடந்த மூன்று வருடங்களுக்கு முன் புதியதாக பாதை அமைக்கப்பட்டது. மேற்படி இடத்தில் கல்வெர்ட் கட்டப்படும் அவசியம் உள்ளது. எனவே வரும் நிதியாண்டில் ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியம்மூலம் கட்டி முடிக்க நடவடிக்கை எடுத்துக் கட்டித் தரப்படும்.

மேலும், குண்டுசெட்டிபாளையம், ராஜேந்திரன் தோட்டம் அருகில் மற்றும் மயானம் செல்லும் வழியில் ஆற்றங்கரையோரம் ஆகிய இடங்களில் வரும் நிதியாண்டில் கல்வெர்ட் கட்டும் பணி எடுத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

சின்னப்புலியூரில் ஏற்கெனவே 6 சீட் கொண்ட கழிப்பிடம் ஒன்று கட்டப்பட்டு பெண்களால் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் வினாவில் கேட்கப்பட்டுள்ள மற்றொரு கழிப்பிடம் கட்ட போதிய புறம்போக்கு இடம் இல்லை. போதிய இடத்தை, ஊர் மக்கள் ஒப்படைத்தால் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**36—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 7136—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு கிராமத்தில் கிழக்குத் தெருவில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதி, மாளிகம்பட்டு கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மூலமாக போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், மேற்கொண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.



**37—**

## சாலை வசதி

**வினா எண் 7651—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆண்டியகவுண்டனூர் ஊராட்சியில் ஆண்டியகவுண்டனூர் ஜே.ஜே. நகர், ஆதி திராவிடர் காலனி, எலையமுத்தன் கிராமம் ஆதி திராவிடர் காலனி வடக்குப் பகுதிகளில் சாலை வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஆண்டியகவுண்டனூர், ஜே.ஜே. நகர் ஆதி திராவிடர் காலனி, எலையமுத்தன் கிராமம் ஆதி திராவிடர் காலனி ஆகிய பகுதிகளில் சாலை வசதி ஊராட்சியின் மூலம் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**38—**

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 7654—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில், கல்லாபுரம் ஊராட்சியில் வனத் துறை வழியாகச் செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதியில் கல்லாபுரம் ஊராட்சியில் வனத்துறை வழியாகச் செல்லும் சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலம் வரும் நிதியாண்டில் தார்ச் சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

**39—**

### தார்ச் சாலை

**வினா எண் 8197—திரு. தி. வேல்முருகன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குடியிருப்பு கிராமம், புதுப்பாளையம் கிராமம், எலந்தம்பட்டு கிராமம், சிலுவைப்பாளையம், நத்தம் கிராமம், வீரப்பெருமாநல்லூர் ஆகிய இடங்களிலுள்ள சுடுகாட்டுக்குச் செல்லும் சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்றி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குடியிருப்பு, புதுப்பாளையம், எலந்தம்பட்டு, நத்தம் வீரப்பெருமாநல்லூர், சிலுவைப்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள இடுகாடு சாலைகளை ஜல்லிச் சாலைகளாக மாற்ற 2006-2007 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம ரோஜ்கார் திட்டத்தில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

**40—**

### தரைப் பாலம்

**வினா எண் 8207—திரு. தி. வேல்முருகன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 27]

(அ) பண்ருட்டி தொகுதி, கெடிலம் எலந்தம்பட்டு கிராமம், கெடிலம் நதிக்கரையில், கம்மியன்பேட்டை மற்றும் பத்திரக்கோட்டை, நடுத்தெருவிலும் தரைப் பாலம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, எலந்தம்பட்டு, கெடிலம் நதிக்கரையில் பாலம் கட்டும் பணி மற்றும் பத்திரக்கோட்டை கிராம நடுத்தெரு ஆகிய கிராமங்களில் தரைப் பாலம் கட்டுவதற்கு அரசின் திட்டத்தில் தற்போது வழிவகை ஏதுமில்லை. நிதி ஆதாரத்திற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்ய பரிசீலிக்கப்படும்.

**41—**

### சமுதாயக் கூடம்

**வினா எண் 12695—திரு. கே.வீ. ராமநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாச்சி கிராமம், புதுவலவு காலனியில் புதிய சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம், பூனாச்சி கிராமம், புதுவலவு காலனியில் புதிய சமுதாயக் கூடம் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டால், புதிய சமுதாயக் கூடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2007 மார்ச் 27

**42—**

## நிலக்கடலை காய் பிரித்தெடுக்கும் கருவி

**வினா எண் 9675—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறு மற்றும் சிறிய விவசாயிகள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்ட நிலக்கடலை காய் பிரித்தெடுக்கும் கருவியை மானிய விலையில் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

நிலக்கடலை காய் பிரித்தெடுக்கும் கருவியை மானிய விலையில் வழங்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்போது இல்லை.

**43—**

## தார்ச் சாலை

**வினா எண் 1516—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, காடப்பநல்லூர் கிராமம், முத்துக்கவுண்டனூரிலிருந்து மேட்டூர் சாலை செல்ல 5 கி.மீ. சுற்றிச் செல்ல வேண்டியிருப்பதால், வலதுகரை கிளை வாய்க்கால் ஓரம் தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், காடப்பநல்லூர் கிராமம், முத்துக்கவுண்டனூர் மேட்டூர் மேற்குக்கரை கால்வாய், மைல் 19/2-300 பிரிவு வாய்க்காலின் கடைமடைப் பகுதியில் உள்ளது. மேட்டூர் சாலையில் இருந்து மேற்படி பிரிவு வாய்க்காலின் கரையை அகலப்படுத்தி சாலையாக மாற்றித் தரவும், முத்துக்கவுண்டனூருக்குச் செல்ல வாய்க்காலின் குறுக்கே ஒரு பாலம் கட்டிக் கொடுக்கவும் தேவையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நபார்டு வங்கியின் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. தற்போது வாய்க்காலில் பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டிருப்பதால், தண்ணீர் நிறுத்தப்பட்டவுடன் மேற்படி வேலைகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



2007 மார்ச் 27]

**44—**

## காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 3421—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் செயல்பட்டு வரும் அரசினர் ராஜகோபால சுவாமி கலைக் கல்லூரியில் காலியாக உள்ள பணியிடங்கள் உடன் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில் 1,020 விரிவுரையாளர்களை நியமனம் செய்ய அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தைப் பணித்துள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியமும் அதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது. தேர்வு வாரியத்தால் விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் நியமனம் செய்யப்படுவர்.

**45—**

## கூடுதல் பணியாளர்

**வினா எண் 8741—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பெருகிவரும் சுயநிதிக் கல்லூரிகளைக் கணக்கில் கொண்டு நிர்வாகப் பணிப் பளுவுக்கு ஏற்ப, தலைமை இயக்குநர் அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் கூடுதல் பணியாளர் நியமிக்கப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இக்கோரிக்கை, தேவையின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

**46—**

## பேராசிரியர்கள் நியமனம்

**வினா எண் 8808—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் பேராசியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில் 1,020 விரிவுரையாளர்களை நியமனம் செய்ய அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தைப் பணித்துள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியமும் அதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது. விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் நியமனம் செய்யப்படுவர்.

**47—**

## விரிவுரையாளர் பணியிடம்

**வினா எண் 9070—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அரசுக் கல்லூரியில் பற்றாக் குறையாக உள்ள விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரபப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களில் 1,020 விரிவுரையாளர்களை நியமனம் செய்ய அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தைப் பணித்துள்ளது. ஆசிரியர் தேர்வு வாரியமும் அதற்கான நடவடிக்கையை எடுத்து வருகிறது. விரிவுரையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், அரசுக் கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களில் நியமனம் செய்யப்படுவர்.

**48—**

## மாவட்ட ஆட்சியர் அலுவலகம்

**வினா எண் 2531—திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகம் விரைவில் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி தற்போது முடியும்தறுவாயில் உள்ளது. மேலும், இக்கட்டடம் தோராயமாக வரும் 15-1-2007-க்குள் முடிக்கப்படும்.

**49—**

## கழிப்பிட வசதி

**வினா எண் 5326—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, கோவை தெற்கு, கோவை வடக்கு வட்டாட்சியர் அலுவலகங்களில், நவீன பொதுக் கழிப்பிட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) இது குறித்து விண்ணப்பம் ஏதும் நிலுவையில் இல்லை.

(ஆ) கோரிக்கை குறித்து விண்ணப்பங்கள் பெறப்படின், நிதி உதவி பெற்று, கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

**50—**

**வருவாய் அலுவலர் அலுவலகம்**

**வினா எண் 9304—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை எரிசனம்பட்டியை மையமாகக் கொண்டு, வருவாய் அலுவலர் அலுவலகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) உடுமலை வட்டம், பெரியவாளவாடியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்டடம் தொடர்ந்து செயல்பட தகுதியுடையதாக இல்லை. அதற்குப் பதில், மையப் பகுதியாக எரிசனம்பட்டி இருப்பதால், எரிசனம்பட்டியில் 54.12 ச.கி.மீ. இடத்தில் புதிய வருவாய் ஆய்வாளர் கட்டடம் கட்ட கருத்துரு இருப்பதாக கோவை செயற்பொறியாளர் (பொதுப் பணித் துறை) தெரிவித்துள்ளார். இந்நேர்வில் அரசின் நிதிநிலைக்கேற்ப உடுமலை வட்டம் எரிசனம்பட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகக் கட்டடம், வரும் ஆண்டுகளில் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



2007 மார்ச் 27]

**51—**

**தட்டச்சர் நியமனம்**

**வினா எண் 10473—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களில் உள்ள 7-ஆம் நெம்பர் நீதிமன்றத்திற்குத் தனியாக தட்டச்சர் ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

கோயம்புத்தூர் குற்றவியல் நீதிமன்றம் VII-க்கு மற்ற நீதிமன்றங்களைப் போலவே ஒரு தட்டச்சர் பதவியிடம் ஏற்படுத்தி அரசாணை நிலை எண் 1699, உள் (நீ.ம.2) துறை, நாள்: 11-11-1996-ன்படி ஏற்கெனவே ஆணையிடப்பட்டு, அந்தத் தட்டச்சர் பணியிடம் நிரப்பப்பட்டது. மேலும் 30-06-2005 முடிய ஓராண்டுக்குப் பணியிட நீட்டிப்பு வழங்கி அரசாணை (வாலாயம்) எண் 2655, உள் (நீ.ம.2) துறை, நாள்: 15-07-2004-ல் உத்தரவிடப்பட்டது. 30-06-2006 பிற்பகலுடன் மேற்படி பணியிட நீட்டிப்பு காலாவதியாகிவிட்டதால், 01-07-2006 முதல் மேலும் ஓர் ஆண்டிற்குப் பணியிட நீட்டிப்பு வழங்கக்கோரி, சென்னை தலைமைப் பதிவாளரிடமிருந்து அரசுக்குக் கடிதம் அனுப்பப்பட்டு அரசு ஆணை (வாலாயம்) எண் 2061, உள் (நீ.ம) துறை, நாள் 22-12-2006-ன்படி 01-07-2006 முதல் மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள, கோவை குற்றவியல் அமர்வு நீதிமன்றம் VII-க்கென மட்டுமே (பிரத்யேகமாக) ஒரு தட்டச்சர் பணியிடம் நிரப்புவது குறித்து கருத்துரு ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

**52—**

**துப்புரவாளர் பணி நியமனம்**

**வினா எண்—10481—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) கோவை மாவட்டம், குற்றவியல் நீதிமன்றங்களில் போதிய துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) துப்புரவாளர், கழிவறை சுத்தம் செய்பவர், துடைப்பவர் மற்றும் தோட்டப் பராமரிப்பாளர் போன்ற தொகுதி "இ" இனங்களின், பணியாளர்களின் அனைத்து வேலைகளுக்கும், ஒப்பந்த அடிப்படையில், வெளியிலிருந்து பெறப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்று அரசாணை நிலை எண் 49, ப(ம) நி.சீ.(எப்) துறை, நாள்: 14-05-2006-ல் ஆணையிடப்பட்டுள்ளது. பல்வேறு அலுவலகங்களுக்கு, குறிப்பிட்ட இனங்களில் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முகவாண்மைகளைப் பணியில் ஈடுபடுத்துவதற்கான ஒப்பந்தத்தை முடிவு செய்யும் பொறுப்புகளை தலைமைச் செயலகத்தில் பொதுத் துறைக்கு, துறைத் தலைவர்கள் (ம) மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூர் மாவட்ட குற்றவியல் நீதிமன்றங்களில், துப்புரவாளர்களைப் பணி நியமனம் செய்வது குறித்து கருத்துரு ஏதும் அரசுக்கு வரப்பெறவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**53—**

## உரிமையியல் நீதிமன்றம்

**வினா எண் 12156—திருமதி இளமதி சுப்பிரமணியன் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வலங்கைமான் வட்டம், கும்பகோணத்திற்கு மாற்றப்பட்ட உரிமையியல் நீதிமன்றத்தை மீண்டும் வலங்கைமானுக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

இப்பொருள் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**54—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 12334—திரு. இல. வேலுசாமி :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, டொக்குபோதன அள்ளி ஊராட்சி, பூவல்மடுவு பகுதியில் விவசாயிகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் மற்றும் வட்டம், டொக்குபோதன அள்ளி பூவல்மடுவு அரசுப் பகுதியில் புல எண் 293-ல் சிலர் ஆக்கிரமிப்பு செய்து வருகின்றனர். அப்பகுதி மேய்ச்சல் தரை புறம்போக்கு ஆகும். மேய்ச்சல் தரை புறம்போக்கு நிலம் தடை செய்யப்பட்ட இனமாகும். எனவே, மேற்படி புலத்திற்குப் பட்டா வழங்க இயலாது.

**55—**

## சட்டப் பணிகள் ஆணைக் குழு

**வினா எண் 14239—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் இலவச சட்ட உதவி மையத்தின்மூலம் பணிகளைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

வால்பாறையில் ஏற்கெனவே தாலுகா சட்டப் பணிகள் ஆணைக் குழு நீதிமன்ற வளாகத்தில் இயங்கி வருகிறது. வாரத்தில் இரண்டு நாட்கள் பொள்ளாச்சியிலிருந்து பணியாளர் வால்பாறை சென்று ஏழை மக்களிடம் சட்ட ரீதியான மனுக்களைப் பெற்று அதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். மேலும், அனைத்துப் பணி நாட்களிலும் வால்பாறையில் உள்ள சட்டப் பணிகள் குழு இயங்கும் வகையில் முழு நேரப் பணியாளர் நியமித்து பணிகளைச் சீரமைக்க மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுமூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**56—**

### நிரந்தர விடு

**வினா எண் 14558—திரு. மு.க. பெரியசாமி :** *மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சின்னமேடு கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு, விடுபட்ட 25 மீனவ குடும்பங்களுக்கு நிரந்தர வீடு கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சின்னமேடு கிராமம், கடல் உயர் மட்ட அலைக் கோட்டிலிருந்து 1,000 மீட்டர் வரை உள்ளது. இயற்கை பாதிப்புகளைத் தாங்க இயலாத நிலையில் உள்ள கூரை வீடு, மண்சுவர் ஓட்டு வீடு மற்றும் பொறியாளர் இல்லாமல் கட்டப்பட்ட உறுதியில்லாத வீடுகளுக்குக் கணக்கெடுப்புப் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிந்து கணக்கெடுப்புக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நிரந்தர வீடு கட்டித் தரப்படும்.



2007 மார்ச் 27]

**57—**

### கணினிமயமாக்கல்

**வினா எண் 14856—திரு. கோவை தங்கம் :** *மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோவை மாநகரில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களைக் கணினிமயமாக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**58—**

### சட்ட ஆலோசகர்கள்

**வினா எண் 15307—திரு. கோவை தங்கம் :** *மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உதவியாகச் சட்ட ஆலோசகர்கள் நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தனியாக சட்ட அலுவலர் பணியிடத்தைத் தோற்றுவிக்கத் தேவையில்லை.

**59—**

### வேளச்சேரி ஏரி

**வினா எண் 4204—திரு. எஸ்.ஆர். இராஜா :** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2007 மார்ச் 27

*(அ)* தாம்பரம் தொகுதிக்குட்பட்ட வேளச்சேரி ஏரியில் தூர்வாரி, மதில்சுவர் அமைத்து, படகுச் சவாரி வசதி செய்து சுற்றுலாத் தலமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தாம்பரம் தொகுதிக்குட்பட்ட வேளச்சேரி ஏரியினைச் சுத்தப்படுத்தி, நீர் ஆதாரத்தை அதிகப்படுத்தவும், ஏரியினைச் சுற்றுலாத் தலமாக்குவது குறித்தும், பொதுப் பணித் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**60—**

## சுற்றுலா மையம்

**வினா எண் 5904—திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சோளிங்கர் தொகுதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சுற்றுலாத் துறையின்மூலம் எந்தவொரு பகுதியையும் சுற்றுலா மையமாக அறிவிப்பதில்லை.

சோளிங்கர் தொகுதியைச் சுற்றுலா மையமாக அறிவிக்க செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**61—**

## விடுதி மற்றும் உணவகம்

**வினா எண் 8539—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மார்ச் 27]

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக தங்கும் விடுதி மற்றும் உணவகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக தங்கும் விடுதி மற்றும் உணவகம் அமைக்கும் திட்டம் குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* கேள்வி எழவில்லை.

**62—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 9146—திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி, பேரையூரில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம், இயங்கும் கிடங்கிற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி; பேரையூரில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் இயங்கும் கிடங்கிற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*(ஆ)* மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி, பேரையூரில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் இயங்கும் கிடங்கிற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. டிசம்பர் 2006-ல் வேலைகள் துவக்கப்படும்.

[2007 மார்ச் 27

63—

## அறுவை அரங்கம்

**வினா எண் 1010—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை அரங்கம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதியில், சதுரங்கப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் அறுவை அரங்கம் கட்டப்பட போதுமான நிலம் உள்ளது. இனிவரும் காலத்தில் அறுவை அரங்கம் கட்டுவதற்கு நிதி நிலைமைக்கேற்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

64—

## துப்புரவுப் பணியாளர் நியமனம்

**வினா எண் 2199—திருமதி பெ. கமலாம்பாள் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம், அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில், துப்புரவுப் பணியாளர்களை மேலும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



D V20,2/07 07.02.07

2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம், அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்கள் பணியிடங்கள் 35 ஆகும். இவற்றில் 18 பணியிடங்கள் சம்பளவிகிதப் பணியாளர்கள்மூலமும், 6 பணியிடங்கள் வெளி ஆதாரம் (out sourcing) மூலமும் நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சிய 11 பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

65—

## காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 2766—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள பணியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

கோவை மாவட்டம், வால்பாறை அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடம் மொத்தம் ஐந்து. தற்போது இம்மருத்துவமனையில் நான்கு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், காலியாக உள்ள மருத்துவர் பணியிடத்தில் ஒரு மருத்துவருக்குப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட பிற பணியிடங்களும் படிப்படியாக விரைவில் நிரப்பப்படும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் 227559 சென்னை-600 008

[2007 மார்ச் 27

66—

## காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 2767—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனையில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர் பணியிடம் இரண்டு. தற்போது இரண்டு மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பிற பணியிடங்களும் படிப்படியாக விரைவில் நிரப்பப்படும்.

67—

## பணியிடங்கள் நிரப்புதல்

**வினா எண் 2768—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள பணியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு அரசால் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவர் பணியிடம் மொத்தம் நான்கு. தற்போது இம்மருத்துவமனையில் மூன்று மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். காலியாக உள்ள மருத்துவர் பணியிடம் இனிவரும் கலந்தாய்வின்மூலம்



2007 மார்ச் 27]

நிரப்பிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட பிற பணியிடங்களும் படிப்படியாக விரைவில் நிரப்பப்படும்.

68—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 2898—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், அங்கலகுறிச்சி ஊராட்சி உதவி ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி இரண்டு ஆரம்ப சுகாதார மையங்களுக்குக் குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், அங்கலகுறிச்சி கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் ஆழியாறுநகர் ஆரம்ப சுகாதார நிலையமும், 2 கிலோ மீட்டர் தொலைவில் கோட்டூர் அரசு மருத்துவமனையும் உள்ளன. எனவே, அங்கலகுறிச்சி கிராமத்தில் செயல்படும் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றியமைக்கச் சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

## வெள்ளத் தடுப்புச் சுவர்

**வினா எண் 2935—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, குன்னவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

சைதாப்பேட்டை சுகாதார மாவட்டத்தில் காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில், குன்னவாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம், குன்னவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சற்று தொலைவில் உள்ள மலையில், மழைக் காலங்களில், நீர் மேலிருந்து கீழ்நோக்கி வரும்போது ஓடுவதற்கு ஏதுவாக வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளது. மழை நீரினால் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்பதால், வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை. மேலும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அருகில் ஆறு எதுவும் இல்லை. வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் எதுவும் இல்லை.

**70—**

## கூடுதல் வசதி

**வினா எண் 2939—திரு. கி. ஆறுமுகம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் வசதிகள் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

காஞ்சிபுரம் மாவட்டம், சைதாப்பேட்டை சுகாதார மாவட்டம் திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில், நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகின்றது.



2007 மார்ச் 27]

தற்போது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரும் வெளி மற்றும் உள்நோயாளிகளின் தேவைக்கேற்ப தற்போதுள்ள 3 படுக்கை வசதிகள் போதுமானதாக உள்ளது. நெரும்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 மருத்துவ அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். தற்போதுள்ள மருத்துவ வசதி போதுமானதாக உள்ளதால், கூடுதல் வசதி ஏற்படுத்த தற்போது அவசியம் ஏதும் இல்லை.

**71—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 2957—திரு. சி. சண்முகவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, மானுப்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

திருப்பூர் சுகாதார பகுதி மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், அமராவதி நகர் ஆரம்ப சுகாதார நிலையம் சார்ந்த மானுப்பட்டியில் இயங்கும் துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட "நபார்டு வங்கியிடம்" கடன் உதவி கோரப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டவுடன், மானுப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**72—**

## யானைக்கால் நோய்

**வினா எண் 3332—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதியில் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனரா?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதியில் யானைக்கால் நோயால் எவரும் பாதிக்கப்படவில்லை.

**73—**

## கலப்படமில்லா உணவுப் பொருட்கள்

**வினா எண் 4465—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பொது மக்களுக்கு நுகர்பொருட்கள் கலப்படம் இல்லாமல் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில் உணவு கலப்படத் தடுப்புச் சட்டம் 1954-ன்படி உணவு ஆய்வாளர்களால் கலப்படம் எனச் சந்தேகிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், உணவு மாதிரிகள் எடுத்து பகுப்பாய்வாளருக்கு அனுப்பி, மேற்படி உணவுப் பொருள் கலப்படம் என அறியப்பட்டால் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**74—**

## கலப்படத் தடை

**வினா எண் 6620—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எண்ணெய், பருப்பு வகைகளில் கலப்படம் செய்து விற்பனை செய்வதை அரசு தடை செய்யுமா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

எண்ணெய், பருப்பு வகைகளில் கலப்படம் செய்து விற்பனை செய்வதை, உணவு கலப்படத் தடைச் சட்டம் 1954-ன்படி மேற்படி எண்ணெய், பருப்பு வகைகள் உணவு மாதிரிகள் உணவு ஆய்வாளர்களால் எடுக்கப்பட்டு, பகுப்பாய்வாளரால் மேற்படி உணவுப் பொருட்கள் கலப்படம் செய்யப்பட்டுள்ளது என அறியப்பட்டால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றம்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2005-06 ஆம் ஆண்டுகளில் 534 எண்ணெய் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டதில், 43 மாதிரிகள் கலப்படம் என்று கண்டறியப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு மூன்று வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டுகளில் 365 எண்ணெய் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு, 351 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டதில், 24 மாதிரிகள் கலப்படம் என்று கண்டறியப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2005-2006 ஆம் ஆண்டுகளில் 904 பருப்பு உணவு மாதிரிகள் உணவு ஆய்வாளர்களால் எடுக்கப்பட்டன. 923 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் 101 மாதிரிகள் கலப்படம் என்று கண்டறியப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு இரண்டு வழக்குகளுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டுகளில் 688 பருப்பு உணவு மாதிரிகள் உணவு ஆய்வாளர்களால் எடுக்கப்பட்டன. 898 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. அதில் 55 மாதிரிகள் கலப்படம் என்று கண்டறியப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**75—**

## கலப்படம் செய்வோர்மீது நடவடிக்கை

**வினா எண் 7883—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

கோவை மாவட்டத்தில் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்பவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

ஆம். உணவு ஆய்வாளரால், உணவுப் பொருட்கள் மாதிரி எடுக்கப்பட்டு அவை பரிசோதனைக்காக பகுப்பாய்வுக் கூடத்திற்கு அனுப்பப்படுகின்றன. அவ்வாறு அனுப்பப்படும் உணவு மாதிரிகள் கலப்படமாகவோ/தப்புக் குறியீடு என்றோ பகுப்பாய்வாளரால் சான்று அளிக்கப்படுமாயின், சம்பந்தப்பட்டவர்கள்மீது நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்து, அவர்களுக்குத் தகுந்த தண்டனை நீதிமன்றத்தால் வழங்கப்படுகிறது.

**76—**

## சித்த மருத்துவம்

**வினா எண் 9168—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை டாப்சிலிப் பகுதியில் சித்த மருத்துவத்திற்கென்று தனி வார்டு ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) அரசின் நிதி நிலைமைக்கேற்ப வால்பாறை டாப்சிலிப் பகுதியில் சித்த மருத்துவத்திற்கென்று தனி வார்டு ஒன்று ஏற்படுத்தப்படும்.

(ஆ) கேள்வி எழாது.



2007 மார்ச் 27]

**77—**

## இலவச மருத்துவ முகாம்

**வினா எண் 9220—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் இலவச மருத்துவ முகாம் நடத்துவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம், அரசு "வருமுன் காப்போம்" திட்டத்தின்கீழ், கிராமப்புறங்களில் 5,000 மக்கள் தொகை கொண்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஒரு மருத்துவ முகாம் வீதமும், நகர்ப் புறங்களில் 30,000 மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஒரு மருத்துவ முகாம் வீதமும் (மாதம் 400 மருத்துவ முகாம் வீதம்) தமிழ்நாட்டில் அனைத்துக் கிராமப்புறங்களிலும்/நகர்ப்புறங்களிலும் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில் "வருமுன் காப்போம்" திட்டத்தின்கீழ் 9,000 மருத்துவ முகாம்கள் நடப்பு ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் நடத்தப்படும்பொழுது இப்பகுதியிலும் சிறப்பு முகாம் நடத்தப்படும்.

**78—**

## துணைச் சுகாதார நிலையம்

**வினா எண் 9328—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, அங்கலகுறிச்சி ஊராட்சி, உதவி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த, அங்கலகுறிச்சி துணைச் சுகாதார நிலையத்தில் பழுதுகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.5,00,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பழுதுபார்ப்புப் பணிகள் நிறைவடைந்து, தற்போது துணைச் சுகாதார நிலையம் செயல்படுகிறது. கிராம சுகாதார செவிலியர், அத் துணைச் சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பில் தங்கிப் பணிபுரிகிறார்.

**79—**

### சுகாதார நிலையம் பழுதுபார்த்தல்

**வினா எண் 10221—திரு. கே.வீ. ராமநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, வைரமங்களம் ஊராட்சி, குட்டிபாளையம் துணைச் சுகாதார மையத்தைப் பழுதுபார்க்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி ஊராட்சி ஒன்றியம், பெரியபுளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட குட்டிபாளையம் துணைச் சுகாதார நிலையத்தைப் பழுதுபார்க்க, ரூ.2,05,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்நிலையத்தில் கிராம சுகாதார செவிலியர் தங்கிப் பணிபுரிந்து வருகிறார்.



**80—**

### துணைச் சுகாதார நிலையம்

**வினா எண் 12158—திருமதி இளமதி சுப்பிரமணியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான், ஆலூர், மாத்தூர் கிராமங்களுக்கு துணை மருத்துவமனை அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :**

திருவாரூர் மாவட்டத்திலுள்ள, வலங்கைமான் தொகுதியில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 18 துணைச் சுகாதார நிலையங்களும் தாய்-சேய் நலப் பணிகள் மற்றும் மருத்துவப் பணிகளைச் செய்து வருகின்றன. இதில் வலங்கைமான் கிராமத்தில் வலங்கைமான் (கிழக்கு) மற்றும் வலங்கைமான் (மேற்கு) ஆகிய 2 துணைச் சுகாதார நிலையங்களும், ஆலூர் கிராமத்தில் உள்ள ஆலூர் துணைச் சுகாதார நிலையமும் அடங்கும். இத்தகைய சூழலில் வலங்கைமான் தொகுதியிலுள்ள மாத்தூரில் மேலும் ஒரு துணைச் சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

**81—**

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 13754—திரு. ரூா. ஜாண் ஜோசப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதி களியல் (கடையால் ஊராட்சி) கருவாக்குழி (அடைக்காக்குழி ஊராட்சி) ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

குமரி மாவட்ட விளவங்கோடு தொகுதி களியல், கருவாக்குழி மற்றும் அடைக்காக்குழிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லை. அப்பகுதியில் துணைச் சுகாதார நிலையங்கள் மட்டும் செயல்பட்டு வருகின்றன. துணைச் சுகாதார நிலையங்களுக்கு மருத்துவ அலுவலர் பணியிடம் அனுமதிக்கப்படுவதில்லை. அங்கு கிராம சுகாதார செவிலியர் பணியில் உள்ளனர்.

**82—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 3851—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர், ஆதி திராவிடர், முற்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த படித்துவிட்டு வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை கொடுக்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

படித்த வேலையில்லாத இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கான நிறுவனங்கள் அந்தந்தப் பிரிவினைச் சார்ந்த இளைஞர்கள் சுய வேலைவாய்ப்பு பெற, கடன் வசதிகள் செய்து தந்து தொழில் தொடங்கிட ஏற்பாடு செய்யப்படுகிறது.

ஆதி திராவிட இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறும் நிலையில் ஆறு மாதம் முதல் பன்னிரண்டு மாதம் வரை 'தாட்கோ' நிறுவனம் மூலம் பல்வேறு அரசு மற்றும் அரசு சாராத் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் தொழில் முனைவோருக்கான பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சிக்குப் பின்னர் சுய வேலை பெற ஏதுவாகக் கடன் வசதிகள் பெற்றுத்தர நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், தொழிற்பயிற்சி, இன்ஜினியரிங் பட்டயம் மற்றும் பட்டதாரி படிப்பு ஆகியவற்றிற்கான சான்றிதழ்களைப் பெற்ற ஆதி திராவிட இளைஞர்கள் மேற்படி 'தாட்கோ' நிறுவனம் மூலம் சுய வேலைவாய்ப்பு தொடங்க அரசு வழி வகுத்துள்ளது.





நேரடி நியமனத் தடையாணை விலக்கிக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் பணியாளர் தேர்வு நிறுவனங்கள்/வாரியங்கள் மூலமாக அனைத்துத் துறைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**83—**

### நிதியுதவி

**வினா எண் 4849—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தின்னப்பட்டி ஊராட்சி, தின்னப்பட்டி (சாளையூர்) கிராமத்தில் ஆதி திராவிடர் திருக்கோவிலான மதுரைவீரன் கோவில் கட்டித் தர ரூ.25,000/- நிதி உதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, தின்னப்பட்டி ஊராட்சி, சாளையூர் கிராமத்திலுள்ள மதுரைவீரன் திருக்கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் இல்லாத ஆதி திராவிடர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு 20' x 20' பரப்பில் கருவறையும் 20' x 15' பரப்பில் சிமெண்ட் தகடு கூரையுடன் முன்மண்டபமும் உள்ளது. 1998-1999 முதல் 2005-2006 ஆம் ஆண்டு வரை உடுமலைப்பேட்டை தொகுதியில் மொத்தம் 58 ஆதி திராவிடர் பகுதி திருக்கோயில்களுக்கு, திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.25,000/- வீதம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

[2007 மார்ச் 27

84—

## கோயில் திருப்பணி

**வினா எண் 8622—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, ஏழுமலையான் சுவாமி திருக்கோயிலுக்கு நிதி வழங்கி திருப்பணி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இத்திருக்கோயிலுக்கு ரூபாய் 42,501-மதிப்பில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 1-11-2006 அன்று குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டதால் மீண்டும் திருப்பணி செய்ய வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

85—

## பள்ளிக்கு இடம்

**வினா எண் 8625—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருள்மிகு பிரசன்ன விநாயகர் கோயில் இடத்தில் 3 ஏக்கர் நிலத்தில் பெரியகோட்டை ஊராட்சி, சிவசக்தி காலனி உயர்நிலைப் பள்ளிக்கு இடம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் உள்ள 3 ஏக்கர் நிலத்தை, அரசு நிர்ணயிக்கும் தொகையினைக் கொடுப்பதற்கான சம்மதத்துடன் கூடிய கோரிக்கை கல்வித் துறையிடமிருந்து வரப்பெற்றால், பெரிய கோட்டை ஊராட்சி, சிவசக்தி காலனி உயர்நிலைப் பள்ளிக்கு இடம் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.





86—

## சர்க்கரை கொள்முதல்

**வினா எண் 11330—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயாரிக்க ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெரியார் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனை மையமான கவுந்தம்பாடி மார்க்கெட்டிங் கமிட்டியின்மூலம் சர்க்கரை வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பஞ்சாமிர்தம் தயாரிக்கத் தேவையான கரும்பு சர்க்கரை (ஹைட்ரோஸ் கெமிக்கல் கலக்காதது) ஈரோடு மாவட்டம், கவுந்தம்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயில் தேவைக்கேற்ப கரும்புச் சர்க்கரை கிடைக்காத பட்சத்தில், கவுந்தம்பாடி வெளிமார்க்கெட்டில் நல்ல தரமான ஹைட்ரோஸ் கலக்காத கரும்புச் சர்க்கரை கொள்முதல் செய்யப்படுகிறது.

87—

## கல்லூரி அமைத்தல்

**வினா எண் 11816—திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் கள்ளிமந்தயத்தில் பொறியியல் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருகோயில் ஏற்கெனவே 9 கல்வி நிறுவனங்களை நடத்தி வருவதால், இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான கள்ளிமந்தயம் கிராமம் அருகிலுள்ள புஞ்சை நிலத்தில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்மூலம் மருத்துவக் கல்லூரியோ அல்லது பொறியியல் கல்லூரியோ அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**88—**

## ஜவுளிப் பூங்கா

**வினா எண் 11542—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, கரூரில் நவீன தொழில்நுட்பத்துடன் துணிநூல் ஆய்வு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூரில் ரூ.66 கோடி மதிப்பீட்டில் நவீன தொழில்நுட்பத்துடன் கூட்டு ஜவுளிப் பூங்கா அமைக்க உரிய பிரேரணை மத்திய அரசுக்கு ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் சர்வதேசத் தரத்துடன்கூடிய ஆய்வகம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.



2007 மார்ச் 27]

**89—**

## விளையாட்டு உபகரணங்கள்

**வினா எண் 5556—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஓமகுப்பம் கிராம இளைஞர் விளையாட்டுச் சங்கத்திற்குத் தேவையான உபகரணங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டிபிஎம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தனியார்கள், தனியார் குழுக்கள் மற்றும் சங்கங்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் அரசின் மூலமாக நேரடியாக வழங்கப்படுவதில்லை. தமிழகத்தின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் இயங்கிவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையப் பிரிவு அலுவலகத்திற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமையகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இதனை ஆர்வமிக்க விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகள் மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் பயன்படுத்தி, பயன்பெற்று வருகின்றனர்.

**90—**

## மாசு ஏற்படுத்தும் ஆலை

**வினா எண் 8819—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, செம்பனார்கோயில் ஒன்றியம், காளகஸ்திநாதபுரம் ஊராட்சியில் தனியார் நிறுவனம் நிறுவியுள்ள மாசு கலந்த எலும்பு உருக்கு ஆலைக்குத் தடை விதிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியம், காளகஸ்திநாதபுரம் கிராமம் சர்வே எண் S.No.142/4C 5 மற்றும் 3-ல் அமைந்துள்ள பிரித்திபீட்ஸ் நிறுவனத்திற்கு, கடந்த 2005 ஆம் ஆண்டு ஆலை நிறுவுவதற்கு உரிமம் வழங்கப்பட்டது. கடந்த 3-11-2006 அன்று ஆய்வு செய்யப்பட்டபோது வாரியத்தின் உரிய செல்லத்தக்க இசைவாணையின்றி இயங்குவது அறியப்பட்டது. மேலும், இந்த ஆலை எலும்பு உருக்கும் ஆலை அல்ல என்பதும் மாமிச தசை நாரிலிருந்து (Sinews) கோழித் தீவனம் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதும் கண்டறியப்பட்டதாகவும் மற்றும் ஆய்வின் அடிப்படையில் ஆலை நிர்வாகத்திற்கு, உரிய முகாந்திரம் கேட்டு 3-11-2006 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், ஆலை நிர்வாகத்தினர் அம்முகாந்திர கடிதத்திற்கு கடந்த 4-11-2006 முதல் ஆலை இயக்கப்படுவதை நிறுத்திவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

**91—**

## சுற்றுச்சூழல் பாதிப்பு

**வினா எண் 9016—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வெள்ளக்கல் பகுதியில் மதுரை மாநகராட்சி சேகரிக்கும் குப்பைக் கழிவுகளைத் தீ வைத்து எரிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பினைத் தடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

மதுரை மாநகராட்சியில் தினசரி உருவாகும் சுமார் 350 டன் குப்பைகள், மதுரை மேற்கு வட்டம், அவனியாபுரம் நகராட்சியில் வெள்ளக்கல் பகுதியில் கொட்டப்படுகின்றன. மாநகராட்சியின் நடவடிக்கையால் தற்போது குப்பைகளை எரிப்பது குறைந்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண, மதுரை மாநகராட்சியால் திருவாளர்கள் இரத்தின பூமி எண்டர்பிரைசஸ் என்ற தனியார் நிறுவனத்தின்மூலம் மக்கும் குப்பைகளை தரம் பிரித்து உரமாக மாற்றுவதற்கும், மக்காத குப்பைகளை மறு சுழற்சி செய்வதற்கும்



2007 மார்ச் 27]

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டத்தை விரைந்து செயல்படுத்த, மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் வாரியத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**92—**

## கால்நடை உதவி மருத்துவர்

**வினா எண் 8633—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகரில் உள்ள கால்நடை மருந்தகத்தில் மருத்துவர் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி நகரில் கால்நடை மருந்தகம் தோற்றுவிக்கப்படாத நிலையில் கால்நடை உதவி மருத்துவரை நியமிப்பது குறித்த வினா எழாது.

**93—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 1897—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள ஆதி திராவிட மாணவ, மாணவிகள் தங்கும் விடுதிக்குப் போதுமான அடிப்படை வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2006-2007ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்குப் பராமரிப்புப் பணிகளுக்காக

[2007 மார்ச் 27

ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையைக் கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**94—**

### தடுப்புச் சுவர்

**வினா எண் 1900—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் ஆதி திராவிடர் மாணவர் தங்கும் விடுதியைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் நலத் துறையைச் சார்ந்த விடுதிகளில் சுற்றுச் சுவர் இல்லாத விடுதிகளுக்கு 2006-07 பகுதி II திட்டத்தின்கீழ் சுற்றுச் சுவர் கட்ட பரிந்துரை செய்ததில் நிதி ஆதாரத்தைக் கருத்தில்கொண்டு, 14 மாணவியர் விடுதிகளுக்கு மட்டுமே சுற்றுச் சுவர் கட்டுவது தொடர்பாக 2006-07 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் பரிசீலனை செய்யப்பட்டு, ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. சுற்றுச் சுவர் கட்ட மீதமுள்ள விடுதிகளுக்கு வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்கப்படும்போது, கோட்டூர் மாணவர் விடுதிக்கும் தடுப்புச் சுவர் கட்டுவது தொடர்பாகப் பரிசீலனை செய்யப்படும்.

**95—**

### விடுதிக்குப் புதிய கட்டடம்

**வினா எண் 3397—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொள்ளிடத்தில் ஆதி திராவிட மாணவர்கள் தங்கும் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



2007 மார்ச் 27]

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் 1178 நல விடுதிகள் இயங்கி வருகின்றன. 1178 ஆதி திராவிடர் நல விடுதிகளில் 945 அரசுக் கட்டடங்களிலும் 233 வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. சீர்காழி தொகுதி, கொள்ளிடம் மாணவர் விடுதி அரசு ஆணை (நிலை) எண் 9, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந.4) துறை, நாள் 13-1-2006-ன் மூலம் புதியதாக திறக்க ஆணையிடப்பட்டு வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இவ்விடுதி கட்டத் தேவையான பணித் தளம் தேர்வு செய்யப்பட்டவுடன் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**96—**

### அடிப்படை வசதிகள்

**வினா எண் 5159—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**97—**

### கல்வி உதவித் தொகை

**வினா எண் 7523—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை உரிய காலத்தில் கிடைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மார்ச் 27

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான (6 முதல் 10ஆம் வகுப்பு வரை) கல்விக் கட்டணம் இத்துறை மூலமாக சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு அளிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்கள், இதற்கான கேட்புப் பட்டியலைச் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு அனுப்பி அதற்கான தொகையினைப் பெற்றுக்கொள்கின்றனர்.

2. உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும், 11, 12 ஆம் வகுப்பு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள் மூலம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

3. மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு பெற்று இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகையினையும் உரிய காலத்தில் வழங்குவதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதி மாதம் முதல் வாரம் முதன்மைக் கல்வி அலுவலரால் தலைமையாசிரியர்களின் ஆய்வுக் கூட்டம் நடத்தி, மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் மூலம் உதவித் தொகை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**98—**

## தேனீ வளர்த்தல்

**வினா எண் 4510—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, சங்கரன்குடி மலை ஜாதி மக்கள் தேனீ வளர்க்க அரசு உதவி செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி, சங்கரன்குடி மலை ஜாதி மக்கள் தேனீ வளர்க்க அரசு உதவும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2007 மார்ச் 27]

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியக் கட்டுப்பாட்டின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அம்சியிலும், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜமுனாமரத்தூரிலும் தேன் பதப்படுத்தும் மற்றும் தேன் நிரப்பும் அலகுகள் செயல்பட்டு வருகின்றன. மேற்படி அலகுகளில் நிறுவப்பட்டுள்ள தேன் பதப்படுத்தும் இயந்திரத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் பச்சைத் தேன் பதப்படுத்தப்பட்டு வாரியத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இருப்பினும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது, மும்பை, கதர் கிராமத் தொழில் குழுவின் மூலம் கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை மானியம் வழங்கும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்படி ரூ.10.00 இலட்சம் வரை திட்ட மதிப்பில் 25% கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகையாகத் தரப்படும். ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.25.00 இலட்சம் வரையில் உள்ள திட்டங்களுக்கு ரூ.10.00 இலட்சம் வரை 25% மதிப்புள்ள மதிப்பிற்கு 10% விளிம்புத் தொகை தரப்படும்.

தாழ்த்தப்பட்டோர்/மலைவாழ்வோர் ஏனைய பிற்படுத்தப்பட்டோர்/ மகளிர்/உடல் ஊனமுற்றோர்/முன்னாள் இராணுவத்தினர்/ சிறுபான்மையினர் போன்றவர்களுக்கும், மலை எல்லைப்புறம் பழங்குடிப் பகுதிகள், வடகிழக்குப் பகுதி சிக்கிம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், இலட்சத்தீவு ஆகிய பகுதிகளுக்கு ரூ.10.00 இலட்சம் வரையிலான திட்ட மதிப்பில் 30%, அதற்குமேல் ரூ.25.00 இலட்சம் வரையில் மீதியுள்ளவைக்கு 10% வரையும் விளிம்புத் தொகை வழங்கப்படும்.

எனவே, வால்பாறை தொகுதி, சங்கரன்குடி மலை ஜாதி மக்கள் தேன் வளர்க்கும் தொழில் செய்ய தொடர்புடைய திட்டத்துடன் முன்வருவார்களேயானால், அவர்களுக்குக் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் விளிம்புத் தொகை திட்டத்தின்கீழ் 25 முதல் 30 விழுக்காடு வரை மானியத்துடன் விளிம்புத் தொகை கடன் பெற வாய்ப்புள்ளது.

**99—**

## தேனீ வளர்ப்புத் தொழில்

**வினா எண் 11519—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மார்ச் 27

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்புத் தொழில் தொடங்க மேற்கு மலைத் தொடர்ச்சி திட்டத்தில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்புத் தொழில் தொடங்க, மேற்கு மலைத் தொடர்ச்சி திட்டத்தில் சேர்க்க, அரசிடம் செயற்குறிப்பு எதுவும் தற்பொழுது பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**100—**

### குடிசைத் தொழில்களுக்கு மானியம்

**வினா எண் 14320—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் குடிசைத் தொழில்களுக்கு மானியம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதியில் குடிசைத் தொழில்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2007 மார்ச் 27]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன?

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 56-ன்கீழ் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதனை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. அவை எல்லாம் 2 ஆம் தேதிக்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும். ஆய்வில் இருக்கின்றன. Reply கேட்டிருக்கிறோம்; வந்ததற்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. மு. கண்ணப்பன்:** 5 நாட்கள் ஆகின்றன கொடுத்து. அவசரமான பிரச்சினை; அதனால்தான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் காலையில் வந்து கேட்டீர்கள். நான் உங்களுக்குப் பதில் சொன்னேன். நீங்கள் அதைக் கேட்டுவிட்டு இங்கே வந்து மீண்டும் இந்தப் பிரச்சினையைக் கிளப்பினால் என்ன அர்த்தம்? அங்கே சரி என்று சொல்லிவிட்டு, திரும்ப இங்கே வந்து கேட்டுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) காலையிலே என் அறைக்கு வந்தீர்கள். நான் நிலவரத்தைச் சொன்னேன். சொன்னவுடன் ஒப்புக்கொண்டு, 'இரண்டாம் தேதிக்குப் பிறகு எடுத்துக்கொள்ளுங்கள்' என்று என்னிடம் சொல்லிவிட்டு வந்தீர்கள். திரும்பவும் அந்த subject-ஐக் கிளப்பினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஆளுநர் உரைமீது விவாதம் நடக்கும்போதும், வரவு-செலவுத் திட்டத்தின்மீது விவாதம் நடக்கும்போதும், பல ஆண்டுக்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2007 மார்ச் 27

காலமாக இந்த அவையில் ஒத்திவைப்புத் தீர்மானங்களோ அல்லது வேறு எதையுமே எடுப்பதில்லை என்றும், இந்தத் தீர்மானங்களை எல்லாம் மானியக் கோரிக்கைகள் வரும்போது எடுத்துக்கொள்வது என்றும் ஏற்கெனவே பேரவைத் தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். அதே முறையைத்தான் நீங்களும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நானும் பின்பற்றி கொண்டிருக்கிறேன்.

## 3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2007–2008* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம் தொடர்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு. (குறுக்கீடுகள்) அது நேற்றே முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரகுரு, பேசுங்கள்.

***திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயக் குடும்பத்தில், வறுமையிலும் வற்றாத தேசப் பற்றுக் கொண்ட தியாகி இராமசாமி–நல்லம்மாள் இவர்களின் மகனாகப் பிறந்து, கழகத்தின் அடிமட்டத் தொண்டனாகிய என்னை, அம்மாவின் ஆசியால் ஒன்றிய துணைச் செயலாளராக்கி, திருப்பெயர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் தலைவராக்கி, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் இயக்குநராக்கி, கழகத்தின் ஒன்றியச் செயலாளராக்கி, மாவட்டக் கழகச் செயலாளராக்கி, திருநாவலூர் தொகுதிக்கு இந்த எளியவனைச் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் எங்களின் குல தெய்வமாம், தாய் தந்தையற்ற எனக்குத் தாயும், தந்தையுமாகி வாழ்வளித்த தெய்வம், மங்காப் புகழ் கொண்ட மாசற்ற தலைவி, உலகமே போற்றும் உன்னதத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் பாதுகாப்புத் திட்டம் தந்த ஒப்பற்ற தலைவி, அதிசயத்தின் ஆணி வேர் 'எங்களின் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதத்தில் நன்றியைச் சமர்ப்பித்து, அவர் இருக்கும் திசை நோக்கிப் பணிவாக வணங்கி' எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு திருநாவலூர் தொகுதியில் சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட்ட, கடைகோடி கழகத் தொண்டனான என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்கிய திருநாவலூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது



2007 மார்ச் 27] [திரு. இரா. குமரகுரு]

வெற்றிக்காக உழைத்திட்ட கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும் எனது பணிவான நன்றி கலந்த வணக்கத்தை இந்த வேளையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

என்னைத் தேர்ந்தெடுத்த திருநாவலூர் தொகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்துதர, இந்த மாமன்றத்தில் சில கோரிக்கைகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

திருநாவலூர் ஒன்றியத்தில் வாழும் விவசாயப் பெருமக்களுக்கு நிலத்தடி நீரைப் பெறுவதற்குக் கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பு அணை கட்டி பாசன வசதி செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநாவலூர் தொகுதியைச் சார்ந்த பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கிடைக்கும் கரும்புச் சக்கையைக் கொண்டு, காகிதத் தொழிற்சாலை ஒன்றினை ஏற்படுத்திட வேண்டுமெனவும் அல்லது மருத்துவத்திற்குப் பயன்படும் வகையில் spirit தொழிற்சாலை அமைத்துத்தர வேண்டுமெனவும் கேட்டு, இதனால் அப்பகுதியில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திடவும், வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் ஏதுவாக இருக்கும் என்று இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 9–35*

திருநாவலூர் தொகுதியில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே, ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் டெண்டர் விடப்பட்டு, இன்னும் பணிகள் துவங்கப்படாத கிழக்குமருதூர் ஆற்று மேம்பாலத்தை உடனடியாகக் கட்ட வேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

திருநர்வலூர் தொகுதியில் மழைக் காலங்களில் துண்டிக்கப்படும் கொத்தனூர்–கொண்டசமுத்திரம் பகுதியில் ஒரு மேம்பாலமும், ஆனத்தூர்–சேமங்கலம் மலட்டாற்றில் ஒரு மேம்பாலமும், உளுந்தூர்பேட்டை–திருவெண்ணெய்நல்லூர் நெடுஞ்சாலையில் பிள்ளையார் குப்பம், கெடிலம் ஆற்றில் ஒரு மேம்பாலமும், தென்மங்கலம் ஆற்றில் ஒரு பாலமும் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருநாவலூர் ஒன்றியத்திலுள்ள 70 கிராமங்கள் பயனடையும் வகையில், 70 கிராமங்களையும் உள்ளடக்கிய வேளாண்மை

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்றைத் திருநாவலூரை மையமாகக் கொண்டு திருநாவலூரில் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருநாவலூரைச் சுற்றியுள்ள கிராமங்கள், குடிசைப் பகுதிகள் அடங்கியுள்ள கிராமங்கள் என்பதால், திருநாவலூரை மையமாகக் கொண்டு ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைத்துத்தர வேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சியில், இட நெருக்கடியால் நெரிசல் ஏற்பட்டு, விவசாயிகள் படும் இன்னல்களைத் தவிர்க்கும்படியாக, வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அங்கே அமைந்துள்ளது. அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தைப் பேரூராட்சி எல்லைக்கு அருகிலுள்ள ஏமாப்பூர் சாலையில் அமைத்துத்தர வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திருநாவலூர் ஒன்றியம், கூவாகம் அருள்மிகு கூத்தாண்டவர் கோயில் அலிகள் திருவிழாவிற்கு இந்தியா முழுவதுமிருந்து பக்தர்கள் வருகின்றனர். இந்தத் தலத்தைச் சுற்றுலா மையமாக அறிவித்து, அடிப்படை வசதிகளான தங்கும் விடுதி மற்றும் சுகாதார வளாகங்களை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்தில் 30 கிராமங்கள் பயனடையும் வகையில், நிலத்தடி நீரை அதிகம் பயன்படுத்தும்வகையிலே, 20 கிலோ மீட்டர் தூரத்தில் மலட்டாற்றில் தூர் வாரும் பணியைச் செய்து முடிக்க வேண்டுமாய் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், இந்த நிதிநிலை அறிக்கையில், பக்கம் 3–ல், பத்தி 8–ல் விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான வட்டியை 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக இந்த அரசு குறைத்தது என்றும், மீண்டும் 7 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைக்கப்படும் எனறும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இது ஏமாற்று வேலை. உண்மை இதுவல்ல. இது மத்திய அரசு குறைத்துள்ள சதவீதமாகும். மாநில அரசு குறைத்ததுபோல விவசாயிகளை ஏமாற்றுகின்றீர்கள். ஆனால், மாநில அரசிற்கு எந்த இழப்பீடும் இதில் இல்லை; உங்களது பங்கீடும் இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



தற்போது தமிழகத்தில் கரும்பு விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ளும் அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். கரும்பு வெட்டப்பட வேண்டிய காலக்கெடு முடிந்தும், வெட்டு உத்தரவு வழங்கப்படாமல் உள்ள நிலை, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட அனைத்து ஆலைகளிலும் உள்ளது. வெட்டு உத்தரவு கிடைக்காத காரணத்தால், தமிழகத்தில் பல இலட்சம் டன் கரும்புகள் பாழாகி, தீ வைத்துக் கொளுத்தப்படுகின்ற நிலை, தற்போது தமிழகத்தில் உருவாகிக் கொண்டிருக்கின்றது. உதாரணமாக, எனது திருநாவலூர் தொகுதியில் உள்ள செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில், 7 இலட்சம் டன் கரும்பு,• அரைவைக்கு எடுத்துக்கொள்வதாக ஒப்பந்தம் செய்துவிட்டு, தற்போது 4½ இலட்சம் டன் கரும்பு மட்டுமே அரைவைக்கு எடுத்துக்கொள்ள முடியும் என ஆலை நிருவாகம் கூறியுள்ளதால், மீதமுள்ள 2½ இலட்சம் டன் கரும்பு ப்யிரிட்ட கரும்பு விவசாயிகளின் நிலைமை மிகவும் மோசமாகப் பரிதாபத்திற்குரியதாக உள்ளது. விவசாயிகளின் அவலநிலை இந்த அரசின் அலட்சியத்தால் தொடர்ந்துகொண்டே இருக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு எந்தவொரு நன்மையும் பயக்கவில்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மைனாரிட்டி தி.மு.க. அரசு தாக்கல் செய்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையில், விஷம்போல் ஏறிவரும் விலைவாசி உயர்வைக் குறைப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்காமல், ஏழை எளிய நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களைப் பாதித்துக்கொண்டிருக்கின்ற விலைவாசிப் பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து யோசனைகூட இந்த பட்ஜெட்டில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

உணவுப் பொருள்கள் மற்றும் கட்டுமானத்திற்குத் தேவையான இரும்புக் கம்பி, சிமென்ட், மணல் போன்ற பொருள்களின் விலை, வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு உயர்ந்துள்ளது. இதற்கு மைனாரிட்டி தி.மு.க. அரசு என்ன பதில் சொல்கிறது? நாமக்கட்டிக்கு விலை குறைத்தால் மட்டும் மக்களுக்குப் போதுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாட்டிலே சட்டம்–ஒழுங்கைப் பாதுகாப்பதும், மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுப்பதும், காவல் துறையின் முக்கிய கடமையாக இருந்து வருகிறது. ஆனால், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், காவல் துறையில் பணியாற்றி வருபவர்களுக்கே பாதுகாப்பில்லை என்பதை எண்ணிப் பார்ப்பதற்கே அச்சமாக இருக்கிறது.

சென்னைக் காவல் துறை ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களே போராடும் அவலநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். உதாரணமாக, திருக்கோவிலூர் காவல் நிலையத்திலேயே உதவி ஆணையர் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டிருக்கின்றார். அதேபோல, விருத்தாசலம் காவல் நிலையத்தில் பணியாற்றிய பெண் உதவி ஆய்வாளர் தூக்கிலிட்டுத் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றார்.

திருநெல்வேலி மாவட்டம், மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் ஒரு நிகழ்ச்சிக்காக வந்திருந்த நாளிலேயே, சங்கரன்கோவில் உதவி ஆய்வாளர், விடுதி ஒன்றில் தற்கொலை செய்துகொண்டு பிணமாகக் கிடந்திருக்கின்றார். இத்தகைய சோக முடிவுகளுக்கு அடிப்படையான காரணத்தைக் கண்டறிந்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இந்த அரசு முன்வரவேண்டும். இதற்கு மாறாக, காவல் துறையை, அரசியல் காரணங்களுக்காக, எதிர்க்கட்சிகளை அடக்கி ஒடுக்குவதற்காகத் தவறாகப் பயன்படுத்தும் அவலநிலைதான் தற்போது இந்த மைனாரிட்டி அரசில் பெருகி வருகிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினராகிய என் மீதே இரண்டு பொய் வழக்குகள் இந்த அரசாங்கத்தினால் போடப்பட்டு, இப்போது வழக்குகளைச் சந்திக்க நேரிட்டது என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்னை மாநகராட்சித் தேர்தலிலே, காவல் துறை எந்த அளவிற்கு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டது என்பதை உயர் நீதிமன்றம் சமீபத்தில் சுட்டிக்காட்டியதன்மூலமாகக் காவல் துறை எந்த அளவிற்கு மோசமான நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும்.

*முற்பகல் 9–40*

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொண்டன் ஒருவனைக்கூட எந்த அடக்குமுறையாலும் செயலிழக்கச் செய்யமுடியாது என்பதைத் திட்டவட்டமாக நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சத்துணவிற்கு ரேஷன் அரிசியே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அரிசி பல இடங்களில் தரக்குறைவாக உள்ளதால், உணவை உட்கொள்ளும் மாணவர்கள் பாதிப்பிற்குள்ளாகிறார்கள். பள்ளிகளில் தரப்படும் தரமில்லாத



உணவை உட்கொள்ளுவதன் காரணமாக, நிறைய பள்ளிகளில் மாணவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுக்குத் தரமான அரிசி வழங்குவதுகூட உறுதி செய்ய முடியாத நிலையில்தான், இந்த அரசின் நிருவாகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த உருளைக்கிழங்கு, பயறு வகைகள் போன்ற சத்தான உணவு வகைகளைப் புறக்கணித்துள்ளதை மீண்டும் வழங்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

வருமானம் ஈட்டுகிற பெற்றோர் இறந்துவிட்டால், பள்ளியில் படிக்கின்ற மாணவ, மாணவிகளின் கல்விக்காக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலே அவர்களின் பெயரிலே ரூபாய் 50,000/– வங்கியில் முதலீடு செய்து வழங்கப்பட்டது. அந்தத் திட்டத்தை மைனாரிட்டி தி.மு.க. அரசு முடக்கி வைத்துள்ளது. இது மீண்டும் செயல்படுத்தப்பட வேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது உள்ளாட்சி அமைப்புகளில் தி.மு.க.–வினர் வெற்றி பெற்ற பகுதிகளில் மட்டும், பணிகளுக்கான நிதி ஒதுக்கப்படுகிறது. குறிப்பாக அ.தி.மு.க. வெற்றி பெற்ற வார்டுகள், மாநகராட்சிகளாக இருந்தாலும், நகராட்சிகளாக இருந்தாலும், ஒன்றிய கவுன்சிலாக இருந்தாலும் அங்கே அவர்களது பணிகள் புறக்கணிக்கப்படுகின்றன. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. அனைத்துப் பகுதிகளுக்கும் சம அளவு நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்துக் கழகங்களில் எதிர்க்கட்சித் தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஓட்டுநர், நடத்துனர்களுக்குப் பணி வழங்கப்படாமல், மாதத்திற்கு 5 நாட்கள்கூட பணி வழங்கப்படாமல் புறக்கணித்து, வறுமையில் அவர்கள் வாடுகின்ற அவலநிலையை மாமன்றத்தின் வாயிலாகச் சுட்டிக்காட்டுகின்றேன். பழி வாங்கும் போக்கைக் கைவிட வலியுறுத்துகிறேன்.

மக்களைப்பற்றிக் கவலைப்படாமல் ** கூட்டணிக் கட்சிகளைச் சரி செய்வதற்குக்கூட நேரம் போதாத நிலையில், தயாரிக்கப்பட்டுள்ள இந்த பட்ஜெட்டில் தமிழக மக்கள் நலன் துளியும் இல்லை. தமிழகத்தின் முன்னேற்றம் குறித்து எந்தவொரு அம்சமும் இல்லை. படித்து வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குவது குறித்து எந்த ஒரு திட்டமும் இல்லையென்பதை நான் இங்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. இரா. குமரகுரு] [2007 மார்ச் 27

சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும் தமிழக மக்களின் நலன்தான் முக்கியம் என்று வாழ்ந்து வருகின்ற ஓரே தலைவர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவிரிப் பிரச்சினைக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோது, 4 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். தற்போது எதிர்க்கட்சித் தலைவராக கடந்த 18 ஆம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்திலே வரலாறு காணாத மக்கள் வெள்ளத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை, அரசிதழில் வெளியிட வேண்டும் என வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால், தமிழைச் சொல்லி, ** (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) இப்படிப்பட்ட மக்கள் விரோத மைனாரிட்டி பட்ஜெட்டை.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அப்புறம் பேசுங்கள்; உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலேயிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்வது மட்டுமல்ல; காவிரிப் பிரச்சினையில் ** காரணம், இந்தக் காவிரியினுடைய இன்றைய வெற்றியின் ஒவ்வொரு அணுவிலும் கலைஞருடைய முயற்சி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் காவிரிப் பிரச்சினை, குறித்து முதலில் கர்நாடகத்தோடு பேசியவர் கலைஞர் அவர்கள்தான்; ஜெயலலிதா அல்ல. அன்றைக்கு இருந்த வீரேந்திர பாட்டீலோடு பேசியது மட்டுமல்ல; இதை மத்திய அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நடுவர் மன்றம் வேண்டும் என்று அறிஞர் அண்ணா இருக்கிறபோதே குரல் எழுப்பியவர்தான் கலைஞர் அவர்களே தவிர, ஜெயலலிதா அல்ல. (கூச்சல்–குழப்பம்) பிறகு மத்திய அமைச்சராயிருந்த ... (குறுக்கீடுகள்) நாங்கள் செய்ததை, நாங்கள் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) நாங்கள் செய்ததை, நாங்கள் சொல்கிறோம். (குறுக்கீடுகள்) நாங்கள் செய்ததை, நாங்கள் சொல்கிறோம். (கூச்சல்–குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2007 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். அமைச்சர் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதேபோன்றுதான், மத்திய அரசில் அன்றைக்கு நீர்வளத் துறை அமைச்சராக இருந்த டாக்டர் கே.எல். ராவ் அவர்களிடத்திலே... (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லட்டும். முதலில் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்தப் பிரச்சினையைக் கொண்டுபோய், மத்திய அரசு அவையிலே பேச வைத்தவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞரே தவிர, ஜெயலலிதா அல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நடுவர் மன்றத்தைக் கொண்டு வந்தவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். அந்த நடுவர் மன்றத்தில், இடைக்காலத் தீர்ப்பு கொடுக்க முடியாது என்று சொன்னபொழுது, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, அதற்காக வாதாடி மறுபடியும் 205 டி.எம்.சி.யை வாங்கித் தந்தவரும் அவர்கள்தான். (குறுக்கீடுகள்) வாங்கிக் கொடுத்தத் தீர்ப்பை அமல்படுத்துவதற்காக ஒரு அத்தாரிட்டியைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இறுதித் தீர்ப்பைக் கொண்டு வந்தவரும் கலைஞர் அவர்கள்தான். (கூச்சல்–குழப்பம்) எனவே, இந்த 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் முடிந்துவிட்டது (குறுக்கீடுகள்) என்று காட்டிக் கொடுத்தது ஜெயலலிதாதான். (கூச்சல்–குழப்பம்)

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நீங்கள் ஒரு தடவை பெயரைச் சொன்னால், நாங்கள் ஆயிரம் தடவை சொல்வோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, உட்காருங்கள். உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) திரு. குமரகுரு, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

[2007 மார்ச் 27

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** திரு. குமரகுரு பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமரகுரு கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகின்றன. (கூச்சல்—குழப்பம்) அமைதியாகக் கருத்தைச் சொல்ல வேண்டும். எதற்காக ஒருவரை ஒருவர் தாக்கிப் பேச வேண்டும்? தேவையில்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. குமரகுரு, நீங்கள் பேசுகிறீர்களா? அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவா? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது, நம்முடைய முதலமைச்சர் காவிரிப் பிரச்சினையில் . . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அதில்லை. (குறுக்கீடுகள்) அதைச் சொன்னார். என்னுடைய கையிலே இருப்பது (குறுக்கீடுகள்) என்னுடைய கையிலே இருப்பது பெங்களூரிலிருந்து வருகின்ற "தினச்சுடர்" பத்திரிகை. இந்தப் பத்திரிகையிலே அந்த பெங்களூர் மாநிலத்தினுடைய அ.தி.மு.க.வினுடைய செயலாளர் கே.ஆர். கிருஷ்ணாராவ்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலமைச்சரைச் சந்தித்து மனு கொடுக்கிறார். (குறுக்கீடுகள்) என்ன கொடுக்கிறார் என்று சொன்னால், முதல்வர் குமாரசாமியை, கர்நாடக மாநில அ.தி.மு.க. செயலாளர் கே.ஆர். கிருஷ்ணாராவ் சந்தித்து, மனு கொடுத்தபோது, முதல்வர் குமாரசாமிக்கு அ.தி.மு.க.வினர், காவிரிப் பிரச்சினையில் முழு ஒத்துழைப்புத் தருவதாக மனு கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) ஆக, ஒரு பக்கத்திலே அங்கே காவிரிக்கு ஒத்துழைப்புத் தருகிறேன் என்று சொல்கிறார்கள். இங்கே காவிரிக்கு முதல்வர்மீது பழி சுமத்துகிறீர்கள். இது என்ன நியாயம் என்பதைத்தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமரகுரு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்ன? எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையைப்பற்றி, 16 ஆண்டுகளுக்குப் பின்னால், நடுவர் மன்றத்தில் ஒரு நல்ல தீர்ப்பை எதிர்பார்த்து, தமிழக மக்களைப் பாதிக்கின்ற வகையில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்தத்



2007 மார்ச் 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தீர்ப்பினை விவாதிப்பதற்காக, சபையை ஒத்தி வைத்து, விவாதம் நடத்தப்பட வேண்டும். எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கின்ற அத்துணை கட்சிகளினுடைய கருத்துகளையும் கேட்டு, அரசு இந்தக் காவிரித் தீர்ப்புபற்றி என்ன சொல்கின்றது, ** அந்த விவாதத்தில் வைத்துக்கொள்ளலாம் என்றுதான் ஒத்திவைப்புத் தீர்மானம் வழங்கப்பட்டிருந்தது. நீங்கள் மறுத்திருக்கின்றீர்கள். ஆனால், அமைச்சருக்கு இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டு, எங்களுக்குப் பேச அனுமதி மறுத்து, அமைச்சர்கள் பதில் சொல்கின்ற ஒரு சூழ்நிலை இங்கே ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் (குறுக்கீடுகள்) மறுத்திருக்கின்றீர்கள் என்று சொல்கிறீர்கள் இல்லையா? (குறுக்கீடுகள்) மறுத்திருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள் இல்லையா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, இல்லை, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாருங்கள், "முதலிலே கொடுத்திருக்கிறோம்; அதை மறுத்திருக்கிறீர்கள்" என்றீர்கள் இல்லையா? அது உண்மை அல்ல. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** Point of order.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவருக்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபொழுது, ** என்ற வார்த்தையைப் படித்தார். நான் கேட்கிறேன், ** (கூச்சல்—குழப்பம்) (குறுக்கீடுகள்) எத்தனை முறை சொல்லியிருக்கிறீர்கள் நீங்கள்? எத்தனை முறை கலைஞருடைய பெயரைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உங்கள் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவருடைய பெயரை நான் உச்சரித்தேன் என்று சொல்லுகிறார்கள். (குறுக்கீடுகள்) நான் கேட்கிறேன்... (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் அப்படிச் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்த அவையில் மாண்புமிகு பன்னீர்செல்வம் இருந்தார். மாண்புமிகு ஜெயக்குமார் இருந்தார். எத்தனை முறை வெறும் கருணாநிதி, கருணாநிதி என்று, உறுப்பினர் என்றுகூட சொல்லாமல் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (கூச்சல்–குழப்பம்) ஆனால், நான் எதிர்க்கட்சி என்று சொல்லியிருக்கிறேன். (கூச்சல்–குழப்பம்) என்ன தவறு என்று கேட்கிறேன். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள் எல்லோரும். (கூச்சல்–குழப்பம்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். (கூச்சல்–குழப்பம்) அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். மற்றவர்கள் எல்லாம் ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதிலே நான் ஒரு விளக்கத்தைக் கொடுத்தேன். (குறுக்கீடுகள்) நான் ** என்று சொல்லவில்லை. ** என்று பேசியது யார்? (கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அமைதியாக உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. காவிரிப் பிரச்சினையைப் பற்றி யார் வேண்டுமானாலும் இந்த அவையில் பேசலாம். பேசுவதற்கு எந்தத் தடையும் கிடையாது. அதுவும் பொது விவாதம், ஆகவே அவரவர்களுடைய கருத்தை எல்லாக் கட்சித் தலைவர்களும் பேசலாம். ஆனால் **துரோகம் செய்தார் என்ற வார்த்தை, unparliamentary; மரபை மீறியது. நாடாளுமன்ற, சட்டமன்ற முறைகளிலே துரோகம் செய்ததாக நேரடியாக ஒருவரைக் குறிப்பிட்டு— எங்கேயோ வரலாற்றில் ஒரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



துரோகம் நடந்தது என்று சொன்னால் அது வேறு; அந்த வார்த்தை வேறு—நேரடியாக ஒருவருக்கொருவர் துரோகம் செய்ததாகச் சொன்னால், அதை அவைத் தலைவர் அவர்கள் உடனடியாக நீக்க வேண்டும். அந்த துரோகம் என்ற வார்த்தையை நீக்கிவிட்டால் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த துரோகம் என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (கூச்சல்–குழப்பம்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது. (கூச்சல்–குழப்பம்) நான் என்னுடைய முடிவைச் சொல்லியாகிவிட்டது. (கூச்சல்–குழப்பம்) முடிவைச் சொல்லியாகிவிட்டது. (கூச்சல்–குழப்பம்) நான் சொல்வதைக் கேளுங்கள். (கூச்சல்–குழப்பம்) நான் சொல்கிறேன், கேளுங்கள். (கூச்சல்–குழப்பம்) நான் சொல்வதை முதலில் நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்) கேட்க முடியாது என்றால், இங்கே பேச அனுமதிக்க மாட்டோம். (கூச்சல்–குழப்பம்) அது இப்போது தேவையில்லை. நான் சொன்னதைக் கேட்டுவிட்டு நீங்கள் பதில் சொன்னால் போதும். தெரிகிறதா? (கூச்சல்–குழப்பம்) உங்கள் சொல்படி நாங்கள் நடக்க முடியாது. (கூச்சல்–குழப்பம்) என் சொல்படி நீங்கள் நடக்க வேண்டும். ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (கூச்சல்–குழப்பம்) இல்லை. நீங்கள் முதலில் அவையில் உண்மைக்குப் புறம்பான வார்த்தைகளைப் பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) ஆமாம். நீங்கள் ஒரு எதிர்க்கட்சித் துணைத் தலைவர். அதுபோலப் பேசுவது அழகில்லை. (கூச்சல்–குழப்பம்) என்ன பேசுகிறீர்கள்? (கூச்சல்–குழப்பம்) நீங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் மறுத்திருக்கிறேனா? (கூச்சல்–குழப்பம்) மறுத்திருக்கிறேனா நான்? (கூச்சல்–குழப்பம்) நான் அனுமதித்தால்தான் நீங்கள் பேசமுடியும். உட்காருங்கள் (கூச்சல்–குழப்பம்) முடியாது, (குறுக்கீடுகள்) அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காவிரிப் பிரச்சினைபற்றி முன்னாள் முதலமைச்சரும், அந்தக் கட்சித் தலைவர்களும் ஒரே பல்லவியைப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். (கூச்சல்–குழப்பம்) சொல்லிவிடுகிறேன்; சொல்லிவிடுகிறேன். உங்களுடைய தலைவர் முன்னாள் முதல்வர் மறைந்த பெரியவர் எம்ஜிஆர்., காவிரிப் பிரச்சினையில் தி.மு.க. தலைவர் கலைஞருடைய கருத்து என்னவோ, அதுதான் என்னுடைய கருத்து என்று பேசி இந்த மன்றத்தில் பதிவாகி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, நீங்கள் "காவிரி சம்பந்தமாகக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன்" என்றீர்கள். (குறுக்கீடு) எதற்கு? (குறுக்கீடு) பின்னர் நான் மறுத்துவிட்டேன் என்று ஏன் சொன்னீர்கள் நீங்கள்? (குறுக்கீடுகள்) உண்மைக்கு மாறானதை ஏன் அவையிலே சொல்கிறீர்கள்? கொடுப்பதும், கொடுக்காததும் என் இஷ்டம். நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது. (கூச்சல்-குழப்பம்) என்னைக் கட்டாயப்படுத்த முடியாது. (கூச்சல்-குழப்பம்) கட்டாயப்படுத்த முடியாது. (கூச்சல்-குழப்பம்) என்னைக் கட்டாயப்படுத்த முடியாது நீங்கள். (கூச்சல்-குழப்பம்) சொல்லுங்கள். உட்காருங்கள், மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரிதான், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) திரு. ஜெயக்குமார், எச்சரிக்கிறேன். உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்)

முற்பகல் 9-55

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் முதலமைச்சரைப் பற்றியோ, எதிர்க் கட்சியினுடைய தலைவரைப் பற்றியோ விளித்துக் கூறுகின்றபோது, அவர்களுடைய பெயரைக் கூறக் கூடாது என்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் வாக்குறுதி அளித்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் சொன்னது அப்படி? (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சொல்வதைக் கேளுங்கள் நீங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னங்க நீங்க?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இல்லாததை (குறுக்கீடு) இல்லாததைப் பேசக் கூடாது. (குறுக்கீடு) சரி, பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடு) பேசுங்கள், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உட்காருங்கள். நான் பேச்சை முடித்துவிடுகிறேன். நான் பேச்சை முடித்துவிடுகிறேன்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஒரேயொரு நிமிடம். பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேச்சை முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) நான் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மனதில் கை வைத்துச் சொல்லட்டும். எத்தனை முறை எங்கள் தலைவருடைய பெயரை மொட்டையாக உச்சரித்திருப்பீர்கள். அதைக்கேட்டு, அன்றைக்கு எங்கள் உள்ளம் என்ன பாடுபட்டிருக்கும்? ஆனால், நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்று சொல்லிவிட்டுத்தான் அந்த அம்மையாருடைய பெயரை உச்சரித்தேனே தவிர, மொட்டையாக அல்ல. ஆனால், தலைவருடைய பெயரை நீங்கள் மொட்டையாக, பட்டுபட்டென்று உச்சரித்தீர்களே, நூற்றுக்கணக்கான நேரம். நெஞ்சம் இருக்கிறதா? மனசாட்சி இருக்கிறதா? (குறுக்கீடுகள்) தொட்டுப் பார்த்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ. பன்னீர்செல்வம், பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்று முதன்முதலாக யாரும், யாருடைய பெயரையும் உச்சரிக்கவில்லை. குமரகுரு என்ன பேசிக் கொண்டிருந்தார்? காவிரியில். . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) பிறகு நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி? காவிரிப் பிரச்சினையில்... (குறுக்கீடுகள்) கேளுங்கள். காவிரிப் பிரச்சினையில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேச்சை முடிக்கட்டும். உறுப்பினர் சொல்லுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் பேச்சை முடிக்கட்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ** என்ற வார்த்தையைத்தான் அவர் சொன்னார். (குறுக்கீடுகள்) ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே எழுந்து...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ** நீங்கள் அசெம்பிளியில் இருந்திருக்கிறீர்கள். கொஞ்ச காலம் முதலமைச்சராகக்கூட இருந்திருக்கிறீர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி முடித்துவிடுகிறேன். அப்புறம் பதிலைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன். துரோகம் என்பது un-parliamentary word என்பது உங்களுக்குத் தெரியாதா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதை நீக்கிக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்னர் என்ன? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியிலே பேசிய உறுப்பினர் ** என்று சொன்னார். ஆனால் ** என்ன நடந்தது என்றுதான் சொன்னேன். ஆனால், ** பட்டியலிட வேண்டுமானால் மளமளவென்று இடுவதற்கு நான் தயார். ஒத்துக்கொள்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விசுவநாதன், விசுவநாதன், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டியலிடுவதைப் பற்றி பின்னால் வைத்துக்கொள்ளலாம். நாங்கள் எதற்கும் தயாராகத்தான் இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தெரிந்துகொள்ளுங்கள். ஆனால், இன்றைக்குள்ள பிரச்சினை, யார் பெயரைச் சொன்னது? நாங்கள் பெயரைச் சொல்லிப் பேசினோமா? நாங்கள் பெயரைச் சொல்லிப் பேசவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் பெயரைச் சொல்லிப் பேசியதால்தான் இந்தப் பிரச்சினை எழுந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒன்றைச் சொல்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அதற்குத் தீர்ப்பினை நீங்கள்—நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை கேட்டுவிட்டு, அதற்குப் பின்பு நீங்கள் தீர்ப்பைச் சொல்லுங்கள். அதைக் கேட்காமல் நீங்கள் பாட்டுக்கு என் பேச்சையே வழிமறித்துக் கொண்டிருந்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் கேட்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இந்த அறையிலே போன முறை இருந்தவர் அமைச்சராக. (குறுக்கீடு) நீங்கள் இல்லை, நீங்கள் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் இல்லை. மாண்புமிகு பல உறுப்பினர்கள் இந்த அவையிலே சென்ற முறை இருந்தவர்கள் இருக்கிறார்கள். பத்திரிகைத் துறையிலே அன்றைக்கு இருந்தவர்கள் இருக்கிறார்கள், Record இருக்கிறது. என்றைக்காவது எங்கள் தலைவரை முன்னாள் முதலமைச்சர் என்று சொன்னதுண்டா? Record–லே எடுத்துக்காட்ட முடியுமா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகாலத்தைப் பற்றி நாம் இப்போது பேசவில்லை. இப்போது சபையிலே இந்தப் பிரச்சினை உருவானது... (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினை உருவானது, (குறுக்கீடு) பேசுவதற்கு அனுமதி தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்தப் பிரச்சினை எப்படி ஆரம்பித்தது? நீங்கள் அம்மா பெயரைச் சொல்லவும்தான் பிரச்சினை வந்ததேயொழிய (குறுக்கீடு) அவர் பெயரைச் சொல்லவில்லையே? பெயரைச் சொன்னாரா அவர்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினை பெயரைச் சொன்னதால் வரவில்லை. துரோகம் செய்தார் என்று சொன்னதால்தான் பிரச்சினை வந்தது. அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அதை முதலிலே... (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவர் துரோகம் செய்தார் என்று சொன்னது தப்பு என்று சொல்லி, நீங்களே அதை நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுக்கச் சொன்னீர்கள் என்றால் பிரச்சினையே கிடையாது. அதைச் சொல்லுங்கள். வேலை முடிந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், இங்கே சட்டமன்ற உறுப்பினர் பெயரிலே அவர்கள் பெயரைச் சொல்லித்தான் உறுப்பினராகக் காண்பித்து இருக்கிறார்கள். அதனால் பெயரைச் சொல்வதில் ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ஏற்கெனவே கடந்த சட்டமன்றப் பேரவையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

முற்பகல் 10-00

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏற்கெனவே போன சட்டமன்றக் கூட்டத்திலே... (குறுக்கீடுகள்) இப்படிப் போய் உட்கார வைத்துக்கொண்டு, என்னங்க இது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** போன சட்டமன்றக் கூட்டத்திலே மாண்புமிகு அமைச்சர்கள் பேசியிருக்கிறார்கள். இப்போதும் அவையிலே இருக்கிறார். அவர் சொன்னாரா? சொல்லவில்லையா என்பதை அவரே சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமரகுரு. (குறுக்கீடுகள்) என்ன? திரு. சிவபுண்ணியம், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்மீது பொது விவாதத்தில் காவிரியைப்பற்றிய கருத்துகளை அந்தந்தக் கட்சிகள் அவரவர்களுடைய விருப்பத்திற்கேற்ப சொல்லலாம். அதிலே ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. என்னைப் பொறுத்தவரையில் நான் பணிவாக வேண்டுவது, காவிரி நடுவர் மன்றத்தைப்பற்றிய தீர்ப்பு வெளிவந்திருக்கிற இந்த நேரத்தில், 16 ஆண்டுக் காலம் காத்திருக்கிற, காவிரிப் பகுதியில் வாழ்கிற, விவசாயப் பெருமக்களுடைய மிகப் பெரிய ஏக்கத்திற்கு விடை காண வேண்டுமென்று அவர்கள் ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிற இந்த வேளையில், திரும்பவும் இலாவணிக் கச்சேரியாக இந்த அவையை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாற்றிவிட்டு, யார் என்ன செய்தார்கள் என்பதைப்பற்றிப் பேசியே காலத்தைக் கடத்தி, காவிரி நீர்ப் பிரச்சினையிலே ஒரு தீர்வைக் கண்டு அந்த விவசாயிகளுக்கும் தமிழகத்திற்கும் ஒரு தீர்வு காண்பதற்குரிய வாய்ப்பில்லாமல் செய்வதற்கு, அரசியல் ஆக்குவதற்குரிய முயற்சியை அ.தி.மு.க. தொடர்ந்து எடுத்துக்கொண்டேயிருக்கிறது. (குறுக்கீடுகள்) இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த அவையை இலாவணிக் கச்சேரியாக மாற்றுவதற்கு தயவுசெய்து ஈடுபடக் கூடாது என்று நான்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமரகுரு, உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அவர்களைக் கண்டிக்கிறேன். தொடர்ந்து, இந்தக் காவிரிப் பிரச்சினை என்பது, எங்களுடைய வாழ்வுப் பிரச்சினை. நாங்கள் உயிரா, சாவா என்று இருக்கிறபோது நீங்கள் அதிலே விளையாடிக் கொண்டிருப்பதை எங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குமரகுரு, உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. இந்த அவையிலே இப்படிப்பட்ட விவாதம் என்பது ஒரு சரியான, முறையான விவாதம் அல்ல. அதை அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். திரு. குமரகுரு, (குறுக்கீடுகள்) திரு. குமரகுரு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. குமரகுரு, பேசுகிறீர்களா, அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவா? (குறுக்கீடுகள்) பேசுகிறீர்களா, அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவா? (குறுக்கீடுகள்)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, காவிரியின் இறுதித் தீர்ப்பு வந்து தமிழகத்திற்குத் தண்ணீர் ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறீர்களா, உட்காருகிறீர்களா? (குறுக்கீடுகள்) இல்லை, முடிந்தது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் இல்லை. Not permitted. உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசிவிட்டார். எல்லோரும் உட்காருங்கள்.

உட்காருங்கள். திரு. குமரகுரு, பேசுங்கள். (குறுக்கீடுகள்) பேசுகிறீர்களா? (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர், மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடுகள்) கூப்பிடப் போகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு. (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகம், தேர்தல் அறிக்கையிலே கொடுத்த வாக்குறுதியை, 2006 ஆம் ஆண்டு (குறுக்கீடுகள்) வரவு–செலவுத் திட்டத்திலே, தேர்தல் அறிக்கையையே வரவு–செலவுத் திட்டமாகத் தந்து, 315 நாட்களுக்குள்...

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையை விட்டு வெளியேறினர்.)*

தேர்தல் அறிக்கையையே வரவு–செலவுத் திட்டத்தின்மூலம் நிறைவேற்றி, 315 நாட்களுக்குள் மீண்டும் ஓர் அருமையான வரவு–செலவுத் திட்டத்தை, தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகின்ற அளவில் சிறப்பான ஒரு திட்டத்தை, மிகச் சிறப்பான ஒரு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, (மேசையைத் தட்டும் ஒலி) தனது அறிவு, திறமை, பண்பு, அனுபவம் அத்தனையும் கொண்டு, தமிழக மக்கள் மனம் குளிரும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும்வகையில், தந்தவர் நம்முடைய மாண்புமிகு இனமானப் பேராசிரியர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

ஓர் உண்மையை இந்த நேரத்திலே இந்த அவைக்கு நான் சொல்லியாக வேண்டும். 2001 ஆம் ஆண்டு, முன்னாள் முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றபோது, கடந்தகால ஆட்சியிலே தமிழக முதல்வர் 28 ஆயிரம் கோடி ரூபாயைக் கடனாக வைத்துச் சென்றுவிட்டார்; ஆகவே நிதிநிலை சரியில்லை என்று சொல்லி, காலிப் பணியிடங்களில் ஒன்றேகால் இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதைத் தவிர்த்தவர் முன்னாள் முதல்வர் அவர்கள். அதுமட்டுமல்ல; ஏழை எளிய மக்கள் பயன்பெற்று வந்த திருமண உதவித் திட்டம், நமக்கு நாமே திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம் போன்ற நல்ல திட்டங்களையெல்லாம் நடைமுறைப்படுத்தாமல் நிதியைக் காட்டித் தப்பித்தவர் முன்னாள் முதல்வர். ஆனால், நம்முடைய முத்துவேலர் அவர்களும், அஞ்சுகத்து அம்மையார் அவர்களும்,



இன்றைய முதல்வர் அவர்கள் பிறந்தவுடனேயே, ஒருபோதும் நிதி குறையக்கூடாது என்பதற்காக, கருணையையும், நிதியையும் அள்ளிக் கொடுத்த காரணத்தினால், அமுதசுரபியாக நிதி வற்றாமல் வந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*(முற்பகல் 10–05*

மத்தியிலே அன்னை சோனியா காந்தியினுடைய வழிகாட்டுதலோடும், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதலோடும், மாண்புமிகு பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் ஒரு நல்லாட்சி; மாநிலத்திலே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் ஒரு நல்லாட்சி. ஆக, இரண்டும், மத்தியிலும், மாநிலத்திலும் இப்படிப்பட்ட நல்லாட்சிகள் தொடர்ந்து அமைவது மிக அரிது. 1967–க்குப் பிறகு இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் எல்லாம் மிகக் குறைந்த அளவில்தான் கிடைத்தன.

இப்போது ஒன்றை நான் சொல்கின்றேன். மத்தியிலே ஆளுகின்ற காங்கிரஸ் கூட்டணியை, காங்கிரஸ் கட்சியை வழி நடத்துகின்ற அன்னை சோனியா காந்தி அவர்களுடைய ஒரே எண்ணம், இந்தியத் திருநாட்டை நல்வழியில் நடத்தவேண்டும்; இந்தியத் திருநாட்டை முன்னேற்ற வேண்டும் என்கின்ற ஒரே இலட்சியம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தமிழகத்திலே முதல்வராக இருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக்க வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தோடு, (மேசையைத் தட்டும் ஒலி) இவர்கள் ஆட்சி செய்கின்ற இந்தக் காரணத்தினால்தான், இன்றைக்குத் தமிழகத்திலுள்ள பட்டிதொட்டிகளில் உள்ள பாமர மக்கள் எல்லாம் பயன்பெறுகின்ற அருமையான வரவு–செலவுத் திட்டத்தைத் தந்து, அல்லும் பகலும் நம்முடைய தமிழக மக்களைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்.

'நிதி இல்லையே! என்ன செய்வார்' என்று சொல்லி ஏளனம் செய்தவர்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்கிறேன். 84 வயதில் டெல்லிக்குச் செல்கின்றார்; வரும்போது சும்மா வரவில்லை; 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதியைப் பெற்று வந்தவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) 14 ஆயிரம் கோடி ரூபாயை! அதுமட்டுமா? வந்தவுடனே சொல்கின்றார்; "தம்பி, மாண்புமிகு துரைமுருகா, டெல்லிக்குச் செல்" என்கின்றார்.

[திரு. மு. அப்பாவு] [2007 மார்ச் 27

கிட்டத்தட்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் நிதியோடு, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வருகின்றார். இவற்றிற்கெல்லாம் காரணம் என்னவென்றால், 24 மணி நேரமும் மக்களைப்பற்றியே, மக்களுக்கு என்ன செய்யலாம் என்று சிந்திக்கிற காரணத்தினால்தான், மக்களுக்கு நல்ல பணிகளை ஆற்றுகின்ற திட்டங்களைக் கொண்டு வருகின்றார்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த நாட்டில் வறுமை இருக்கக்கூடாது; பசி இருக்கக்கூடாது என்பதற்காக இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியைத் தந்தார். "ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாயா, தாத்தா?" என்று சொல்லி மத்தியிலே ஆளுகின்ற மாண்புமிகு தயாநிதி மாறன் அவர்கள், ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு நீங்கள் தந்தால், ஒரு ரூபாய்க்கு Hello என்று சொல்லும் திட்டத்தை நான் தருகிறேன் என்று சொல்லி, இந்தியா முழுவதும் தொலைபேசியிலே ஒரு ரூபாய்க்குப் பேசுகின்ற அந்த வாய்ப்பைத் தந்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, மத்தியிலே ஆட்சியிலே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டி.ஆர். பாலு அவர்கள், நம்முடைய கனவுத் திட்டமான, 150 ஆண்டுகளாகக் கனவாக இருந்த திட்டமான சேது சமுத்திரத் திட்டத்தைத் தந்திருக்கின்றார். நம்முடைய தமிழக மக்கள் ஆவலோடு எதிர்பார்த்த நம்முடைய தமிழ் மொழிக்குச் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுத் தந்ததும் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மத்தியிலே ஒரு ஆட்சி, நமக்கு இணக்கமான ஒரு ஆட்சி இருக்கிறதென்றால், அந்த ஆட்சியின்மூலம் மத்திய அரசிடமிருந்து திட்டங்களைப் பெறுவதுதான் இந்த அரசினுடைய நோக்கமாக இருக்கிறது என்று சொல்லி, 24 மணி நேரமும் இந்த மக்களுக்காக உழைக்கின்றார். ஆகவேதான், இப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் செய்ய முடிகின்றது.

இன்னும் பல பேர் சிந்திக்கின்றார்கள்! எதைச் சிந்திக்கின்றார்கள் என்றால், **ஆகவே, அவர்களுடைய சிந்தனைகள், 24 மணி நேரமும் அந்தளவில் செல்கின்ற காரணத்தினால்தான், (குறுக்கீடுகள்) அவர்களால் நாட்டைப்பற்றிச் சிந்திக்க முடியவில்லை. (கூச்சல்–குழப்பம்) நாட்டைப்பற்றிச் சிந்திக்கவும், இந்த நாட்டிலே. . . (கூச்சல்–குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2007 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** இந்த நாட்டிலே வரவு–செலவுத் திட்டத்தைக்கூட பல பேர், பல தலைவர்களுக்கு . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** இந்த நாட்டிலே வரவு–செலவுத் திட்டத்தைக்கூட வாசிக்க நேரமில்லை. (குறுக்கீடுகள்) வாசிப்பதற்கென்று ஆள் வைத்திருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** வாசிப்பதற்கு ஆள் வைத்து, அவர்கள் எழுதிக் கொடுப்பதை மட்டும் வாசிப்பதைத்தவிர, வேறு வழியில்லாமல் இருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. அப்பாவு அவர்கள் பேசுகின்ற நேரத்தில், ஏற்கெனவே பிரச்சினைக்குரிய இரண்டு பெயர்களைக் குறிப்பிட்டார்கள். இரண்டு ஊர்களுடைய பெயர்கள். அவை விசாரணையிலே இருப்பதாலும், அவை ஏற்கெனவே விமர்சனத்திற்கு ஆளானதாலும், இந்த அவையிலே அவற்றைப் பேசி, அவையினுடைய மரபுக்கு ஊறு விளைவிக்க வேண்டாம் என்பதால், அந்த இரண்டு ஊர்களுடைய பெயர்களையும் அவைக்குறிப்பிலேயிருந்து எடுக்க தாங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் குறிப்பிட்ட அந்த ஊர்களுடைய பெயர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

முற்பகல் 10–10

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், நம்முடைய படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெறவேண்டும்

என்பதற்காக, 1996 முதல் 2001 வரை ஆட்சி செய்த காலத்தில், சென்னையிலே, தரமணியிலே டைடல் பூங்கா ஒன்றை ஆரம்பித்து, பல ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தந்தவர். அதன் பின், கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஒரு பூங்கா தமிழகத்தின் எந்தப் பகுதியிலாவது ஆரம்பித்திருக்கிறார்களா என்றால் எந்த இடத்திலும் நாம் காட்ட முடியாது. ஆனால், ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்ற அடுத்த நிமிடமே, மீண்டும் இந்தப் பகுதி மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும்; நம்முடைய படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு பெரிய பெரிய தொழில்கள் எல்லாம் நம்முடைய பகுதிக்கு வரவேண்டும் என்பதற்காக ஓடோடிச் சென்று, பலபேரை இங்கு அழைத்து வந்து, உடனடியாக வேலையைத் தொடங்குவதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடச் செய்தார். இதற்கு முன்னால் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட வேண்டுமென்றால், 8 துறையினரிடமிருந்து அனுமதி பெற்று, அதன் பின்புதான் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட முடியும். ஆனால், தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இங்கு வந்து தொழில் தொடங்க வரும் தொழில் முனைவோரை, உடனடியாக ஐந்தே நாட்களுக்குள் ஒரே விண்ணப்பப் படிவத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடச் செய்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான், Motorola, Apollo Tyres, Tessolve, Dell Computers, Growth Link, Samsung, Mahindra-Renault-Nissan மற்றும் Caparo ஆகிய 8 நிறுவனங்கள், கிட்டத்தட்ட 315 நாட்களுக்குள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் ஆரம்பிக்கப்பட்டு, 96 ஆயிரம் படித்த இளைஞர்களுக்கு, அவற்றால் வேலைவாய்ப்புத் தருகின்ற திட்டத்தை ஆரம்பித்துத் தந்திருக்கிறார் நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதுமட்டுமா? தம்பி வேல்முருகன் அவ்ர்கள் எப்போதும் கேட்பார்கள், கடலூரிலே கப்பல் கட்டும் தொழில் வேண்டுமென்று. எண்ணூரிலும், கடலூரிலும் கப்பல் கட்டும் தொழிலுக்காக 3,700 கோடி ரூபாய் செலவில் 2.5 ஆயிரம் பேர், அந்தப் பகுதி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற திட்டத்தைத் தந்திருக்கின்றார் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். சிவகங்கையிலே கிராபைட் தொழிற்சாலை தந்திருக்கின்றார் தமிழக முதல்வர் டார்க்டர் கலைஞர் அவர்கள். அதுமட்டுமா? தரமணியிலே ஆரம்பிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்குப் பிறகு, தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் தொழிற்பூங்கா அமைக்கவில்லை. மீண்டும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் ஐந்தாவது முறையாக



பொறுப்பேற்ற பின்பு, 24-2-2007-லே, கோவையிலே தொழிற்பூங்கா ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; அந்த இடத்திலேயே சொல்லிவிட்டார், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, மேலும் தரமணியில் ஒரு இடத்தில் என்று. ஆக, அத்தனை இடங்களிலும் தொழிற்பூங்கா ஆரம்பிக்கப்பட்டு, தமிழகத்தில், படித்து முடித்து வெளியே வருவதற்குள் அத்தனை பேர்களுக்கும் வேலைவாய்ப்பு தருகின்ற திட்டத்தைத் தந்தவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகிறேன்.

அதுமட்டுமல்ல; இப்போது கணினித் துறையிலே படித்துவிட்டு சென்னையிலே வேலை பார்க்கின்ற பெண்மணிகளுக்குப் பாதுகாப்பான இடம் வேண்டும்; அருமையான விடுதி வேண்டும்; என்ன செய்வது என்று ஏங்கித் தவித்தவர்களுடைய கனவைப் போக்குகின்றவண்ணமாக பெண்கள் விடுதி ஒன்று பாதுகாப்புடன், நவீன வசதிகளுடன் கூடிய அருமையான ஒரு திட்டத்தை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருப்பதை இந்த நேரத்திலே நான் வரவேற்று, இந்தத் தமிழகத்திற்கு மிகப் பெரிய நல்ல திட்டத்தைத் தந்த தலைவர் கலைஞரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல; சென்னையிலே, இன்றுகூட நம்மிடையே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. குமரகுரு, திரு. குணசேகரன் போன்றவர்கள் எல்லாம் ஏதோ எழுதிக் கொடுத்ததை வாசித்தாலும்கூட, (கூச்சல்-குழப்பம்) கோரிக்கை என்று வரும்போது பாலம் கட்டித் தாருங்கள்; மேம்பாலம் கட்டித் தாருங்கள்; ரோடு போட்டுத் தாருங்கள் என்று இந்த அரசிடம்தான் கேட்கின்றார்கள். அவர்களுக்கும் தெரிகின்றது; இந்த அரசுதான் மேம்பாலம் கட்டித் தரும்; இந்த அரசுதான் பாலம் கட்டித் தரும்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசுதான் சாலை போட்டுத் தரும் என்பதை நன்றாக உணர்ந்த காரணத்தினால்தான் ஒவ்வொருவரும் பட்ஜெட்டிலே பேசுவதைவிட, மிக அதிகமான கோரிக்கையை வைக்கின்றார்கள். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எந்தக் கட்சிக்கும் அப்பாற்பட்டு அத்தனை பேர்களுக்கும் நல்ல திட்டங்களைக் கொடுப்பவர். ஏன்? 'சிங்காரச் சென்னை' என்று போர்டிலே பார்த்தோம்; இன்று சென்னையிலே ஓரளவுக்குப் போக்குவரத்து நன்றாக இருக்கிறது என்றால், அது நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞருடைய அருமைப் புதல்வர், நம்முடைய உள்ளாட்சியிலே நல்லாட்சியைத் தருகின்ற எங்களுடைய

வழிகாட்டி, தளபதி அவர்கள் மேயராக இருந்த காலத்தில், (மேசையைத் தட்டும் ஒலி) அருமையான மேம்பாலங்கள் கட்டப்பட்டதால்தான். அதன்பின், சென்னையிலே ஒரு மேம்பாலமாவது கட்டியதாக யாராவது சொல்ல முடியுமா? யாரும் சொல்ல முடியாது. ஆனால், இந்த 315 நாட்களுக்குள், டெல்லியைப் போன்று Metro train என்ற Metro Railway வசதியை நம்முடைய சென்னையிலும் உருவாக்கிட, 9 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் 50 கிலோ மீட்டர் நீளத்திற்கு, Metro train விடுகின்ற ஒரு நல்ல திட்டத்திற்கு இந்த வரவு–செலவுத் திட்டத்திலேயே 50 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியவர் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தி, இன்னும் ஐந்தாண்டுக் காலத்தில் இந்தப் பணிகள் எல்லாம் முழுமையாக முடிவடைந்து, சிறப்பாக, சிங்காரச் சென்னையாக மீண்டும் உருவெடுக்கும் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10–15

இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். சென்னையிலிருந்து திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளுக்குத் தொடர் வண்டிமூலம்—train மூலம்—செல்கின்ற எங்களுக்கு இருவழிப் பாதையாக மாற்றித் தருகின்ற திட்டத்தை நீங்கள் முயற்சி செய்து எங்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்திலே நான் வைக்க விரும்புகின்றேன்.

அதேபோன்று கல்வியைப் பாருங்கள். பட்டிதொட்டிகளில் எல்லாம் பள்ளியைத் திறந்து எட்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வியைத் தந்தவர் மறைந்த பெருந்தலைவர் காமராஜர். அவருக்குப் பிறகு, 10 ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வியைத் தந்தவர் தலைவர் கலைஞர். 12 ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வியைத் தந்தவர் தலைவர் கலைஞர். இன்று கல்லூரிவரை படிக்கின்ற மாணவர்களுக்கும் இலவசக் கல்வியைத் தந்திருக்கின்றார் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமா? பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு ஒன்றல்ல; இரண்டல்ல; வாரத்திற்கு மூன்று முட்டைகளை தந்து நம்முடைய இளைஞர்களுடைய, நம்முடைய மாணவர்களுடைய முன்னேற்றத்திற்காக உழைக்கின்றவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே இருக்கின்றவர்களை, இந்த அவையிலே இருக்கின்றவர்களை நான் கேட்கின்றேன், கல்விக்காக, பள்ளிக் கல்விக்காக ஒரு வேன் இருந்தால், ஒரு இருக்கைக்கு 150 ரூபாய் கட்டணம், அதை 50 ரூபாயாகக்



குறைத்தவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரிக்குச் செல்கின்ற மாணவர்களுக்கு ஒரு இருக்கைக்கு 150 ரூபாய் என்பதை 100 ரூபாயாகக் குறைத்தவர் நம்முடைய தமிழக முதல்வர். ஏன்? பொறியியல் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு 10,350 ரூபாய் என்று இருந்த கட்டணத்தை 6,350 ரூபாயாகக் குறைத்து நம்முடைய ஏழையெளிய மாணவர்கள் வாழ்வில் ஒளியேற்றியவர் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன்? 10, 12 ஆகிய வகுப்புகளில் தேர்வு எழுதுவதற்குத் தேர்வுக் கட்டணம் அறவே இரத்து என்று சொல்லி ஏழை மாணவர்களுக்கு உதவியவர் தலைவர் கலைஞர். அதுமட்டுமா? கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு காலத்தில் அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, மேல்படிப்பிலே அவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காக, 1996 முதல் 2001 வரை 15 சதவீத இட ஒதுக்கீடு கொடுத்தார். அதற்குப் பின்னால் ஆட்சிக்கு வந்தவர்கள் 25 சதவீதமாக்கி, யாரோ ஒருவரை வைத்து வழக்கு மன்றத்திற்குச் சென்று அதை முழுமையாக நிறுத்திவிட்டார்கள். ஆனால், இது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு வந்தபோது, நுழைவுத் தேர்வையே இரத்து செய்வோம் என்று சொல்லி, அந்த நுழைவுத் தேர்வையே இரத்து செய்து, கிராமப்புற மாணவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றியவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்.

ஓர் உண்மைச் சம்பவத்தைச் சொல்கின்றேன். நம்முடைய விவசாயிகளைப்பற்றி இந்த நாட்டில் யாருமே சிந்திக்கவில்லை. இன்றுகூட பத்திரிகையைப் பார்த்தால், கேரளாவிலே 101 பேர் தற்கொலை செய்து கொண்டார்கள் என்று செய்தி வந்திருக்கின்றது. ஆனால் பாருங்கள்; யாரும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. 1989 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார். ஒன்றல்ல, இரண்டல்ல, பம்பு செட் வைத்துள்ள 16 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தைத் தந்தவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். இப்போது ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும், மேலும் 2,40,000 பேர்களுக்கு இலவச மின்சாரத்தைத் தந்தவர் தலைவர் கலைஞர். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அடுத்த நிமிடமே ஏழை விவசாயிகள் வாங்கிய கடனை இரத்து என்று கையொப்பமிட்டு, ஒரு வார காலத்திற்குள் ஏழை விவசாயிகளுடைய வீட்டுக் கதவைத் தட்டி உனக்குக் கடன் இல்லை என்று சொல்லி நற்சான்றிதழைக் கொடுத்தவர் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓர் உண்மைச் சம்பவம். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ஒருவர், 12 இலட்சம் ரூபாய் அளவில் வாங்கிய கடன் இரத்து செய்யப்பட்டது. அவர் அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர். அவர் வீட்டில் எப்பொழுதும் அ.இ.அ.தி.மு.க கொடி பறந்து கொண்டே இருக்கும். இந்தக் கடன் இரத்து; இந்த மின் கட்டண இரத்து என்பதை அறிந்து உடனடியாக அடுத்த நிமிடமே அந்தக் கொடியை இறக்கிவிட்டு நன்றிக் கடனாக திராவிட முன்னேற்றக் கழகக் கொடியைப் பறக்கவிட்டிருக்கின்றார். நன்றி உள்ள நல்ல மனிதர். அதுமட்டுமல்ல; அவருக்குப் பேரன் பிறந்திருக்கிறான். அந்தப் பேரனுக்கு, நன்றிக் கடனாக தலைவர் கலைஞருடைய பெயரை வைத்து மகிழ்ந்திருக்கின்றார். தமிழ்நாடு முழுவதும் இதே நிலைதான். ஆக, அந்த அளவில், விவசாயிகள் 22 இலட்சம் பேர் இந்தக் கடன் இரத்து செய்ததிலே பயன்பெற்றிருக்கிறார்கள். அத்தனை பேர்களுமே பெரும்பாலானவர்கள், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் நம்முடைய தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் கடன் என்று நிரம்ப வாங்கியிருந்தாலும்கூட, 2,000 ரூபாயில் ஒரு மருந்து அடிக்கின்ற Pump–ஐத்தான் தோளிலே தூக்கிப்போட்டு மருந்து அடித்துக் கொண்டிருப்பார்களேதவிர, வேறு பெரிய அளவிலே இல்லை. Loan வாங்கின அத்தனை பேருமே எதிர்கட்சியைச் சேர்ந்தவர்கள்தான்.

(முற்பகல் 10–20

அதுமட்டுமல்ல; புயல், வறட்சி, வெள்ளம் ஆகிய இயற்கைச் சீற்றங்களிலிருந்து பயிரைப் பாதுகாப்பதற்கு, பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்காக, 15 கோடி ரூபாயைத் தந்து, 10 இலட்சம் விவசாயிகள் பயன்படச் செய்தவர், நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். அதுமட்டுமா? 2000 ஆம் ஆண்டிலே விவசாய நல வாரியம் அமைத்தவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். அதை ஐந்தாண்டுக் காலததிற்கு நிறுத்தி வைத்தவர் முன்னாள் முதல்வர். இப்போது மீண்டும் அதை ஆரம்பிக்கும்வண்ணமாக, 26–2–2007–லே, தஞ்சாவூரிலே, 57 இலட்சத்து 30 ஆயிரம் விவசாயிகள் பயன்படுகின்ற அளவிற்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, 152 கோடி ரூபாய் நிதியை விவசாயிகளுக்கு அள்ளித் தந்திருக்கின்றார் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் கொடுப்போம் என்றார். எந்த நிலத்தை? எந்தக் கிராமத்தில் இருக்கிறதோ, அந்தக் கிராமத்தில் உள்ள, நிலம் இல்லாத ஏழைக்கு. ஒன்றிரண்டு பேருக்கா



கொடுக்கப்பட்டிருக்கின்றது? விளை நிலம் என்றால், பெரிய பெரிய வசதி படைத்தவர்களெல்லாம், அந்த நிலத்தை வைத்திருப்பார்கள். தனக்கு என்று ஒரு செண்ட் நிலம் கிடைக்காதா என்று ஏங்கித் தவித்தவர்களுக்கு, கருணையுள்ளத்தோடு தலைவர் கலைஞர் அவர்கள் 71,755 ஏழை விவசாயிகளுக்கு 77,177 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தித் தந்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) இது உண்மைக்குப் புறம்பான செய்தியா?

நாமத்தைச் சொன்னீர்களே, யாருக்கு நாமம்? நாமத்திற்கும் நம்முடைய ஆட்சியிலே விலையைக் குறைத்திருக்கின்றார்கள். (குறுக்கீடு) வரியைக் குறைத்திருக்கின்றார்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள், ஏற்கெனவே மூன்று முறை நாமக்கட்டிக்கு வரியை இரத்து செய்திருக்கின்றார்கள். தலைவர் கலைஞர் யாருக்கும் நாமம போட்டவர் அல்ல. யாருக்கும் நாமம் போடுகின்றவர் அல்ல, தலைவர் கலைஞர். (குறுக்கீடு) ஆனால், ஏழை மக்கள் கேட்கின்றார்கள், நாமத்திற்கு வரிவிலக்கு வேண்டுமென்று. எதற்கென்று சொன்னால்,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, அமைதியாக இருங்கள். திரு. அரி, நீங்கள் ஏன் நாமக்கட்டி, நாமக்கட்டி என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. அப்பாவு, பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** ஏழையெளிய விவசாயிகளெல்லாம், நாமக்கட்டிக்கு விலையைக் குறையுங்கள் எனறு கேட்கிறார்கள். எதற்கென்றால், ஏற்கெனவே சட்டமன்றத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளாட்சித் தேர்தலிலே ஐந்தாண்டுக் காலம் எங்களுக்குப் பணியாற்றாதவர்களுக்கு நாமம் போட்டோம்; இன்னும் 2009 ஆம் ஆண்டிலே நாடாளுமன்றத் தேர்தல் வர இருக்கின்றது; அதற்கும் அவர்களுக்கு நாமம் போட வேண்டும்; எங்களுக்கு நாமக்கட்டிக்கு வரியை விலக்குங்கள் என்று கேட்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், நாமக்கட்டிக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது.

நான் சொல்கின்றேன்; பிரிட்டிஷ்காரர் காலத்திலிருந்து. தமிழ்நாட்டிலே கட்டப்பட்டுள்ள எந்த அணைக்கட்டை எடுத்துக்கொண்டாலும், ஒன்று பிரிட்டிஷ்காரன் கட்டியிருப்பான்; அல்லது பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் கட்டப்பட்டிருக்கும். இல்லையென்றால், 1967–க்குப் பிறகு, எங்களுடைய நெல்லை மாவட்டத்தை எடுத்துக்கொள்ளுங்கள்; 15 அணைக்கட்டுகள்

கட்டப்பட்டிருக்கின்றன. இரண்டு அணைக்கட்டுகள், மணிமுத்தாறு, பாபநாசம் ஆகியவற்றைத் தவிர, 13 அணைக்கட்டுகள், பொய்கையாறு, நம்பியாறு, கொடுமுடியாறு, வடக்குப் பச்சையாறு என அத்தனை அணைக்கட்டுகளையும் தந்தவர் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள், கடந்த வாரம். வீணாகக் கடலுக்குப் போகின்ற தாமிரபரணி ஆற்றுத் தண்ணீரை சாத்தான்குளம், நாங்குனேரி, திசையன்விளை, திருச்செந்தூர் ஆகிய பகுதிகளுக்குக் கொண்டு செல்கின்ற அளவிற்கு 198 கோடி ரூபாய் திட்டத்தைத் தந்திருக்கிறார் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் முதல்வர் அவர்கள், சாத்தான்குளம் இடைத்தேர்தல் நடந்தபோது ஒன்றைச் சொன்னார்கள். வெற்றி பெற்றதும், அந்த வெற்றி மேடையிலே சொன்னார், என்னுடைய செல்லக் குட்டிக்கு எம்.எல்.தேரி திட்டத்தைத் தருவேன் என்று அவர் சொன்னார். அந்தக் குட்டி எங்கே போனதோ; சொன்ன அந்தத் தாய் எங்கே போனதோ, தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) திட்டம் எங்கே போனதோ தெரியவில்லை. ஆனால், அந்தத் திட்டத்தையும், முன்னாள் முதல்வர் அவர்கள் வைத்த அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித் தந்திருக்கின்றார் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, எந்தப் பணியாக இருந்தாலும் சரிதான், சென்னையிலே கோயம்பேடு பேருந்து நிலையமா? (மணியடிக்கப்பெற்றது) அதுவும் தலைவர் கலைஞர் ஆட்சியில் கட்டப்பட்டதுதான். அதுபோல, திருநெல்வேலியிலே இருக்கின்ற அந்தப் பேருந்து நிலையமும் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில்தான் கட்டப்பட்டது. இதுபோக, நெல்லை மாவட்டம் மட்டுமல்ல; தென் மாவட்ட மக்கள் அனைவருக்கும் தாகம் தீர்க்க தண்ணீர் தந்தவர் தலைவர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்மூலம், இராமநாதபுரம், புதுக்கோட்டை, சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும், 616 கோடி ரூபாய் செலவில் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை 30-1-2007-ல் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தென் மாவட்ட மக்களுக்குக் குடிநீரைத் தந்தவர் தலைவர் கலைஞர். கடந்த ஆண்டு மட்டும் 60 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கின்றார். இந்த ஆண்டு மேலும்



50. கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கின்றார். கடந்த ஆண்டு 7,000 கிராமங்களுக்குக் குடிநீர்; இந்த ஆண்டு 9,000 கிராமங்களுக்குக் குடிநீரைத் தந்தவர் நம்முடைய உள்ளாட்சித் துறையிலே நல்லாட்சி நடத்துகின்ற மாண்புமிகு தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமா? சுனாமியால் பாதிக்கப்பட்டு, உலகமே கண்ணீர் வடித்தது. மத்திய அரசு 4,897 கோடி ரூபாயைக் கொடுத்தது. ஒரு ரூபாய்கூட கொடுத்து, அவர்களுக்கு இருப்பதற்கு வீடு கட்டிக் கொடுக்கவில்லையே? தலைவர் கலைஞர் பொறுப்பேற்ற பின்புதான், 24-6-2006-ல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட ஆட்சியர்கள் அனைவரையும் அழைத்து, எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்று அறிந்து, அதை எண்ணிப் பார்த்தவுடன், மனம் வேதனைப்பட்டார். உடனடியாக அவர்களை அழைத்து, 1,000 கோடி ரூபாய் நிதியைக் கொடுத்து, கிட்டத்தட்ட 22 ஆயிரத்து, 420 வீடுகளைக் கட்டச் சொன்னவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** தனியார்கள் தொண்டு நிறுவனங்கள் 3,000 வீடுகளைக் கட்டுவதற்காக ஏற்பாடு செய்து கட்டமுடியாமல் போட்டனர். அதையும் கட்டித் தந்தவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர். அதுமட்டுமல்ல; கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை இருக்கின்ற குடிசையில் வாழுகின்ற அனைவருக்கும் வீடுகள் கட்டுவதற்கு நிதியைக் கொடுத்து, 22,000 வீடுகள் கட்ட ஆணை வழங்கியவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்.

ஊனமுற்றோருக்கு நல வாரியம் அமைக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். ஊனமுற்றோருக்காக மூன்று சதவீத இட ஒதுக்கீடு வழங்கியவர், ஊனமுற்றோருக்காக மாதந்தோறும் 200 ரூபாய் என்பதை 400 ரூபாயாக உயர்த்திக் கொடுத்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே கூறி, ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைத்து நான் இந்த நேரத்திலே என்னுடைய உரையை நிறைவுசெய்ய விரும்புகின்றேன்.

1991 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட்ட, சிறுபான்மையினரால் ஆரம்பிக்கப்பட்ட அல்லது தரம் உயர்த்தப்பட்ட

[திரு. மு. அப்பாவு] [2007 மார்ச் 27

பள்ளிகளுக்கு நீங்கள் நிதியுதவி வழங்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் கடலிலே மீன் பிடிக்கச் செல்லும்போது, யாராவது காணாமல்போனால் உடனடியாக அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வலம்புரி என்ற படகை, தூத்துக்குடியிலே ஆரம்பித்து, 1996 ஆம் ஆண்டு தந்தார்கள். ஆட்சிப் பொறுப்பை விட்டு தலைவர் அவர்கள் 2001–லே வந்ததும், அந்தப் படகு எங்கு சென்றதோ, தெரியவில்லை. இப்பொழுது அந்த மாவட்ட மக்கள், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மீன் பிடிக்கச் செல்கின்றவர்களைத் தேடுவதற்குப் படகும் இல்லை; ஹெலிகாப்டரும் இல்லை. நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஹெலிகாப்டர் ஒன்றை அந்த மீனவ மக்களுக்காக வாங்கித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

அதேபோல, நம்முடைய திருநெல்வேலியிலே ஐயா செல்லபாண்டியன் அவர்களுடைய சிலை அருகே மேம்பாலம் ஒன்றைக் கட்டித்தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, நம்முடைய கால்டுவெல் அவர்கள் தமிழுக்காகத் தொண்டாற்றியவர். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய ஐந்து மொழிகளையும் கற்று, ஒப்பிலக்கணம் எழுதி, திராவிடன் என்ற சொல்லை முதன்முதலாகப் பயன்படுத்திய அவரைப் பெருமைப்படுத்தும்வண்ணம், நம்முடைய தமிழக முதல்வரே, நேப்பியார் பாலம் அருகே முதல் சிலையாக கால்டுவெல் சிலையை வைத்திருக்கின்றீர்கள். அவருக்குத் தபால் தலை வெளியிடுவதோடு, அவருடைய பிறந்த தினத்தை திராவிடர் தினமாக அறிவிக்க வேண்டுமென்ற அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்க விரும்புகிறேன்.

இந்த அருமையான வரவு-செலவுத் திட்டத்தை யாரோ எழுதிக் கொடுத்ததை வாசிக்கவில்லை; படித்தேன். படித்ததோடு மட்டுமல்ல, கிராமம் கிராமமாகச் சென்று மக்கள் மனதில் இருப்பதை இங்கே வெளிப்படுத்தினேன். பல பேர் நம்முடைய மண்டபத்தைக் காப்பாற்றலாமா என்று யாராவது எழுதிக் கொடுத்ததை வாசிப்பதுபோல அப்பாவு வாசிக்கவில்லை. இந்த மக்கள் அனைவரும் இந்த வரவு–செலவுத் திட்டத்தைப் பாராட்டுகின்றார்கள் என்று கூறி, இந்த நல்ல வாய்ப்பிற்கு நன்றி சொல்லி முடிக்கிறேன்.



2007 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கு. ஜெயக்குமார்.

***முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மதிப்பிற்குரிய ஆசிரியப் பெருந்தகை நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துகளை எடுத்து வைப்பதற்காக இங்கே நான் எழுந்து நிற்கின்றேன். என்னுடைய கருத்துகளை இங்கே எடுத்துச் சொல்வதற்கு முன்பாக, இந்த அவையிலே இருப்பதற்கு நான் எத்தகைய பேறு பெற்றிருக்கின்றேன் என்பதை ஓரிரு வார்த்தைகளிலே கூறுவது இந்த நேரத்திலே சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன். பத்து ஐந்தாண்டுகள் இந்த அவையிலே உறுப்பினராக இருக்கின்ற, ஐந்தாவது முறையாக முதல்வராக வீற்றிருக்கின்ற, பார் போற்றத்தக்க பணிகளைச் செய்திருக்கின்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே ஐந்தாவது முறையாக முதல்வராக இருக்கின்ற நேரத்திலே, அவருக்குத் தமிழகத்தைச் சார்ந்தவர், இந்த இந்தியத் துணைக் கண்டத்தின் குடியரசுத் தலைவர் வருகின்ற மே மாதம் 10 ஆம் தேதி அளவிலே இங்கே வந்து வாழ்த்துரைகளை வழங்கவிருக்கின்ற இந்த நேரத்திலே, அத்தகையதொரு சிறப்பான நாளிலே இந்தச் சபையிலே உறுப்பினராக இருப்பதற்கான பேறு பெற்றமைக்காக நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகின்றேன்; புளகாங்கிதம் கொள்கின்றேன். இதற்காக மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வாழ்த்துவதற்கு எனக்கு வயது இல்லையென்ற காரணத்தினால் வணங்கி, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது ஓரிரு கருத்துகளை எடுத்து வைப்பது சாலப் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன்.

*முற்பகல் 10–30*

கடந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தாக்கல் செய்தபோது, அந்த நிதிநிலை அறிக்கையானது கானல் நீர் என்றும், மணல் கோட்டை என்றும், புத்தகம் இல்லா நூலகம் என்றும், உபகரணம் இல்லாத ஒரு பரிசோதனைக் கூடம் என்றும் இங்கே கருத்துகளை எடுத்து வைத்தார்கள். இன்றையதினம் நடக்கின்ற இந்த விவாதம் இரண்டாம் தின விவாதமாக இருக்கின்ற காரணத்தால், இன்னும் அதுபோன்ற நிலைப்பாடுகள், சொற்கள் இங்கே வரவில்லையென்றே நான் கருதுகிறேன். பேராசிரியர் அவர்கள் இந்த

நிதிநிலை அறிக்கையை இந்த ஆண்டிற்கு இங்கே தாக்கல் செய்கின்றபோது,

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்ற குறளை இங்கே சொன்னார்கள். பொய்யாமொழிப் புலவர், தமிழ்மறை யாத்த குறளை இங்கே அவர் சொல்லிய பிறகு, இங்கே கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரங்களை நான் சற்று ஆழமாகவே அலசிப் பார்த்தேன். மாநிலத்தின் சொந்த வருவாய் 33,834 கோடியாக உயர்த்தப்பட்டு, அது செலவினங்களை எதிர்கொள்வதற்குப் போதாது என்ற காரணத்தால் மத்திய அரசிடமிருந்து 10,698 கோடி ரூபாயைப் பெற்று மாநிலத்தின் மொத்த வருவாயாக 44,532 கோடியை இங்கே காட்டியிருக்கிறார்கள். இதற்குச் செலவாக 44,633 கோடியைக் காட்டி, பற்றாக்குறையாக 101 கோடியையும் இங்கே காட்டி, மூலதனச் செலவிலே 7,699 கோடியையும் இங்கே குறிப்பிட்டு, மொத்த பற்றாக்குறையாக 7800 கோடியை இங்கே காட்டியிருக்கிறார்கள். இங்கே ஒரு விதியையும் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. பற்றாக்குறையானது மாநிலத்தின் மொத்த உற்பத்தித் திறனிலே 3 சதவிகிதத்தைத் தாண்டக் கூடாது என்பது ஒரு கோட்பாடு. அந்தக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கும் விதத்திலே, 18 நல்ல திட்டங்களை 13,333 கோடி அளவிலே அறிவித்து, அதேநேரத்தில் இந்தப் பற்றாக்குறையை 2.8 சதவிகிதத்திற்குள்ளாகவே வைத்திருக்கின்றபோது முதலிலே நான் சொன்ன குறளுக்குப் பதிலாக,

"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை
போகாறு அகலாக் கடை"

என்ற பொய்யாமொழிப் புலவரின் குறளைப் பின்பற்றிதான், பேராசிரியர் பெருந்தகை இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்து இருக்கின்றாரோ என்று எனக்குத் தோன்ற விழைகின்றது.

இங்கே சட்டமன்றத்திலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் இரத்து செய்ததைப் பற்றிப் பெருமையாகவே பேசினார்கள். அந்தத் தேர்தல் வாக்குறுதியைக் கொண்டு, நானும் இந்தச் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டவன் என்ற நிலையிலே நானும் அதற்காகப் பெருமைப்படுகின்றேன். ஆனால், எனக்கு இந்த 7 ஆயிரம் கோடி ரூபாய் இரத்து செய்தது அவ்வளவு பெரியதாகத் தோன்றவில்லை. அதைவிடப் பெரியது இங்கே எதிர்க்கட்சிகள் சார்பிலே இருக்கின்ற ஒருசில



உறுப்பினர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். 7 ஆயிரம் கோடி ரூபாயை இரத்து செய்ததன் காரணமாக, அந்தக் கூட்டுறவு வங்கிகளின் நிலை என்ன ஆகும் என்று, நேற்று எனக்கு முன்பாகப் பேசிய ஓர் உறுப்பினர்கூட இதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றதா என்ற ஒரு ஐயப்பாட்டை இங்கே எழுப்பினார்கள்.

2006-2007 ஆம் ஆண்டிற்காக, 1,435 கோடி ரூபாயும், இந்த வருடத்திற்காக 1,628 கோடி ரூபாயும் என இதுவரை 3,063 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்தக் கூட்டுறவு வங்கிகள் இன்னும் சிறப்பாகச் செயல்படவேண்டுமென்றும், 2006-2007 ஆம் ஆண்டிலே, 1,153 கோடி ரூபாய் புதிய கடன்களாகவும் நடக்க இருக்கிற ஆண்டிலே 1,360 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 2,513 கோடி ரூபாய் புதிய கடன்களாகவும் கொடுப்பதற்கு வழிவகை செய்த இந்த அரசின் செயல்பாடு, கடன் இரத்து செய்ததைவிடப் போற்றத்தக்கது; புகழத்தக்கது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், தேர்தல் காலங்களிலே கொடுக்கின்ற வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்ற வேகத்திலே பின்விளைவுகள் என்னவென்று பாராமல் செய்துவிடுகின்ற காலக்கட்டங்கள் உண்டு. பின்விளைவுகளையும் மனதிலே வைத்துச் செயல்படுகின்ற ஓர் எச்சரிக்கையாக நடந்துகொள்கின்ற அரசாக இது இருக்கின்றது.

அது மட்டுமல்ல; புதிய கடன்களுக்கு 9 சதவிகித வட்டியை 7 சதவிகிதமாகக் குறைத்து, உரிய காலத்திலே கடனைத் திருப்பிச் செலுத்துகின்ற விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்ற விதத்திலே, அந்த வட்டியையும் 5 சதவிகிதமாகக் குறைத்து இருப்பது போற்றத்தக்கது. இந்தக் கடனை இரத்து செய்திருக்கின்ற நேரத்திலே பயனாளிகள் யாராக இருப்பார்கள் என்று நான் பார்த்த மாத்திரத்திலே, பெரும் பயனைப் பெற்றவர்கள் எல்லாம் உண்மையிலேயே, இந்தக் கடன் தொல்லையால் பாதிக்கப்பட்டவர்கள் அல்ல என்பதே என்னுடைய கருத்து. ஏனென்றால் என்னுடைய தொகுதியிலேகூட, 15, 20 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன் தள்ளுபடி பெற்ற தனி நபர்கள் உண்டு.

முற்பகல் 10-35

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு கருத்தை இங்கே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே இந்த கடன்பட்டவர்களிலே வகுப்புவாரியாகப் பார்க்கின்றபொழுது,

பிற்படுத்தப்பட்ட, *ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், குறிப்பாக, *ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள், நிலம் இல்லாதவர்கள். இந்தக் கடன்களைப் பெறுவதற்கே அருகதை அற்றவர்கள்; வாய்ப்பு இல்லாதவர்கள். ஆக, இதனால் பயன்பெற்றவர்களை, சமுதாய அடிப்படையிலே பிரித்துப் பார்க்கின்றபொழுது, *ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் ஒரு சதவிகிதம் அல்லது இரண்டு சதவிகிதமாகதான் இருப்பார்கள் என்பது என்னுடைய கருத்து. இதனால் அவர்கள் பயன்பெறாமல், அதே நேரத்தில் அவர்கள் தாட்கோமூலமாக சிறு சிறு கடன்களைப் பெற்றிருக்கின்றார்கள். நீங்கள் 7 ஆயிரம் கோடி ரூபாயை இங்கே இரத்து செய்திருக்கின்றீர்கள். தாட்கோ மூலமாக இவர்கள் பெற்றிருக்கின்ற கடனோ ரூபாய் 75 கோடியைக்கூட தாண்டவில்லை. விகிதாச்சாரத்தைப் பார்த்தீர்களென்றால், அந்த 7 ஆயிரம் கோடி ரூபாயிலே இந்த 75 கோடியானது இரண்டு சதவிகிதத்தைக்கூட எட்டாது என்பதை இங்கே வலியுறுத்தி, அந்த மக்களின் சார்பாக, சாத்தியமில்லா தொழில்களை, நஷ்டம் ஏற்படுகின்ற தொழில்களைச் செய்து, அந்த விளங்காத தொழில்களைச் செய்து நஷ்டம் ஏற்பட்டு இன்னும் கடனிலே முடங்கிக் கிடக்கின்ற அவர்களை நீங்கள் காப்பாற்ற வேண்டும்; இந்த 75 கோடி ரூபாயையும் நீங்கள் தாட்கோவிற்கு இரத்து செய்ய வேண்டும்; அதனால் அவதியுறுகின்ற இந்த அடிநிலையிலே இருக்கின்ற மக்கள் பயன்பெற வேண்டுமென்ற கருத்தை உங்களுக்கு நான் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே நீர்ப் பாசனத்திற்காக 2,547 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கின்றது உலக வங்கியிலேயிருந்து மட்டும் பெற்று என்று இங்கே சொல்லியிருக்கின்றீர்கள். இது போற்றத்தக்கது; புகழத்தக்கது. காரணம், விவசாயிகளினுடைய நீர்ப் பற்றாக்குறையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை அவர் சொன்னார். அதை எடுத்துவிட்டு ஆதி திராவிடர் என்று மாற்றிக்கொள்ளுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மன்னிக்க வேண்டும். ஆக, 2,547 கோடி ரூபாயிலே நீர்நிலை ஆதாரங்களை ஏற்படுத்த முனைந்திருக்கின்றீர்கள். நல்லதொரு முயற்சி. ஆனால், இது எனக்கு அவ்வளவு பெரியதாகத் தோன்றவில்லை. ஏனென்றால், அண்டை மாநிலத்தை நான் திரும்பிப்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பார்க்கின்றேன். கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செயலாளர் என்ற முறையிலே ஆந்திர மாநிலப் பொறுப்பை வகித்தவன் நான். அங்கே இருக்கின்ற காங்கிரஸ் தலைமையிலான அரசு, 47 ஆயிரம் கோடி ரூபாய்க்கு உலக வங்கியிலேயிருந்து கடனைப் பெற்று, நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்தி, இன்னும் 25, 30 ஆண்டுகளுக்கு அங்கே விவசாயிகளுக்கு நீர்த் தட்டுப்பாடு இல்லாத நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைக்கு 50 ஆண்டுகள் இந்தச் சட்டமன்றத்திலே பணியாற்றி இருக்கின்ற முதல்வர் அவர்கள், அவருடைய நினைவாக, தமிழகத்திலே, எதிர்காலத்திலே விவசாயிகளுக்கு நீர்ப் பற்றாக்குறையே ஏற்படக்கூடாது என்ற ஒரு நோக்கத்தைக் கொண்டு, ஆந்திர மாநிலத்தைப் போன்று ஒரு 50 ஆயிரம் கோடி ரூபாயை நீங்கள் உலக வங்கியிலேயிருந்து பெற்று நல்ல பல திட்டங்களைச் செயலாற்ற வேண்டுமென்று நான் என் கருத்தாகச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, மலிவு விலையிலே அரிசியை நாம் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம், 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்று. இன்றைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு அவருடைய கவனத்திற்கு ஒரு கருத்தை என் சார்பாக வைக்க நான் விழைகின்றேன். நீங்கள் இன்றைக்கு 1,950 கோடி ரூபாயை மானியமாகக் கொடுத்து, அதிலே அரிசிக்கு மட்டும் குறைந்தபட்சம் 1,600 கோடி ரூபாய் மானியமாக வரும் என்று நான் கருதுகின்றேன். ஆனால், எல்லோருக்கும் நீங்கள் அரிசியைக் கொடுக்கின்றீர்கள் என்றே நான் கருதுகின்றேன். ஆகவேதான், உங்களுக்கு 1,950 கோடி ரூபாய் மானியம் ஏற்படுகின்றது, அரிசிக்காக 1,400 கோடி ரூபாய் தோராயமாக. இங்கே வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கின்ற மக்கள் சுமார் தமிழகத்திலே அதிகபட்சமாக எடுத்துக்கொண்டால் 30 சதவிகிதம் என்று எடுத்துக்கொண்டாலும்கூட, 44 இலட்சம் குடும்பங்கள்தான் இருக்கும். இந்த 44 இலட்சம் குடும்பங்களுக்கும் 30 கிலோ அரிசியை, 2 ரூபாய்க்கு அல்ல, இலவசமாக நீங்கள் கொடுத்தாலே உங்களுக்கு வருடத்திற்கு இப்பொழுது கொடுக்கின்ற மானியம் 1,950 கோடி ரூபாய்க்குப் பதிலாக 30 கிலோ அரிசியை இனாமாக, இலவசமாக மத்திய அரசு கொடுக்கின்ற விலைப்படி கிலோ 5.50 ரூபாய்க்குப் பெற்றுக் கொடுத்தாலே உங்களுக்கு 800 கோடியைத் தாண்டாது. ஆக, தமிழகத்திலே வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கின்ற அத்தனைக் குடும்பங்களுக்கும் இலவச அரிசி நீங்கள் வழங்க வேண்டுமென்றாலும்கூட, இன்றைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற 1,600 கோடி ரூபாய் மானியத்திற்குப் பாதியாக 800 கோடி ரூபாய்

மானியத்திலே நீங்கள் இலவசமாகவே அரிசியைக் கொடுக்கக்கூடும் என்ற ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் உங்களுக்குச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

அதுமட்டுமல்ல; மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது பள்ளிக் கல்வித் துறையிலே ஒரு இளைஞரை, வல்லவரை, நல்லவரை, மாண்புமிகு தங்கம் தென்னரசு அவர்களை, இந்த அமைச்சரவை அமைச்சராகப் பெற்றிருக்கின்றது. அவர் ஒரு புதிய முறையைத் துவக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இந்த அரசின் ஒப்புதலோடு 1 முதல் 4 வகுப்பு வரை தொடக்கப் பள்ளியிலே செயல்வழிக் கல்வியைத் துவக்க இருக்கின்றார்கள். இந்தச் செயல்வழிக் கல்வியானது, ஆந்திர மாநிலத்திலே Rishi Valley என்கிற இடத்திலே ஒரு முன்மாதிரியாக, ஒரு N.G.O.-வால் பயன்படுத்தப்பட்டு, அங்கே இருக்கிற மலைவாழ் மக்கள் மத்தியிலே இந்தக் கல்வி முறை பரவப்பட்டு, அது வெற்றிகரமாக நடந்தது என்பதை அறிந்து, அது மிகவும் நல்ல வழியாக இருக்கிறது என்பதையும் அறிந்து இங்கே செயல்படுத்துகிறார்கள் என்பதாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அரசின் தரப்பிலே என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. இந்த 1 முதல் 4 ஆம் வகுப்பு வரை செயல்வழிக் கல்வி, அதாவது கூடியமட்டும் புத்தகம் இல்லாமலே, பொருட்களை வைத்தே கல்வியைக் கற்பிப்பதாக வந்திருக்கிற ஒரு புதிய முறை என்று நான் அறிவேன். இந்த முறை எந்த அளவிற்கு நகர்ப்புறங்களிலே, குறிப்பாக மாநகராட்சிப் பள்ளிகளிலே ஏற்றதாக இருக்கும் என்பதை நன்றாகவே ஆராய்ந்திருப்பார்கள் என்று நான் அறிவேன். ஒருசிலர் இதில் ஐயப்பாட்டை ஏற்படுத்துகிறார்கள். அதை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மனதிலே கொள்ள வேண்டுமென்பதை என்னுடைய வேண்டுதலாகச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

இங்கே இளங்கலை பயிலும் கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் கட்டணம் இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களுக்கும், இந்த அரசிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலனிலே முதன்முதலாக இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாட்டில் Special State Assistance— மத்தியிலே கொடுக்கிறார்கள், Special Central Assistance என்று; அதற்குப் பதிலாக Special State Assistance— என்பதை முதன்முதலாகத் தமிழகம்தான்



நடைமுறைப்படுத்தி இருக்கிறது. கடந்த நிதிநிலை அறிக்கையிலே 25 கோடி ரூபாயும், இந்த நிதிநிலை அறிக்கையிலே 25 கோடி ரூபாயையும் ஒதுக்கியிருக்கின்றீர்கள். இது போற்றத்தக்கது.

அதேநேரத்தில் ஆதி திராவிடர் மக்களுக்காக ஒரு கருத்தை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது இட ஒதுக்கீடு. இட ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில், கடந்த முறை கலைஞருடைய அரசு, இங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, உயர் நீதிமன்றத்திற்கு ஓர் உத்தரவாதத்தைக் கொடுத்தது. இந்த ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற இடங்கள் அனைத்தும், 5 ஆண்டுக் காலத்திற்குள்ளாக நாங்கள் நிரப்பி விடுவோம் என்று ஓர் உத்தரவாதத்தைக் கொடுத்தும், அதற்குப் பின்புவந்த அரசு, வேலைக்கு ஆட்களை எடுக்காத ஒரு நிலையை ஏற்படுத்தியதால், இதுநாள்வரையில் இந்த இடங்கள் எல்லாம் இன்னும் காலியாகவே இருக்கின்றன. குறிப்பாக, உயர்தட்டிலே, 'A' Category-யிலே 19 சதவிகிதம் நிரப்பப்பட வேண்டும் என்ற நிலையிலே, 10 சதவிகிதம் இடங்கள் இன்னும் நிரப்பப்படாமல் இருக்கின்றன. இதற்கு அதிகாரிகள் பல தடைகளைப் போடுகிறார்கள்; தவறான வழிகளைக் காட்டுகிறார்கள்; அரசைச் செயல்படவிடாமல் செய்கிறார்கள் என்று சொன்னால்கூட அது பொருந்தும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம், உங்களுடைய ஒரு கையெழுத்து இருந்தால், எத்தனையோ முன்மாதிரிகள் இல்லாத இடங்களில் எல்லாம் உங்கள் ஒரு கையெழுத்து முன்மாதிரியை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த வெற்றிடங்களை எல்லாம் நிரப்புவதற்காக, உடனடியாக 6 மாத காலத்திற்குள்ளாக இந்த இடங்கள் எல்லாம் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

இங்கே Special Component Plan என்ற ஒரு நிதியைச் சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்காக ஒதுக்க வேண்டியது இந்த அரசின் கடமை. கடந்த முறைகூட, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையை நிகழ்த்தியபிறகு, "18 சதவிகிதம் ஒதுக்க வேண்டிய இடத்திலே, 9 சதவிகிதமே ஒதுக்கியிருக்கின்றீர்கள்; ஏன் இதுவும் நம்முடைய தேர்தல் வாக்குறுதிதானே, ஏன் இதைச் செய்யவில்லை?" என்றவொரு கேள்வியை நான் எழுப்பியபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், 'இது துவக்கம்தான், போகப் போக அது சரி செய்யப்படும்' என்று சொன்னார்கள்; ஓரளவுக்குச் சரி செய்திருக்கின்றீர்கள்.

9 சதவிகிதம் உங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கி, இன்றைக்கு Revised Estimate-லே அதை 10.6 சதவிகிதமாக உயர்த்தியிருக்கின்றீர்கள். ஆனால், இந்த வருடத்தினுடைய நிதிநிலை அறிக்கையிலே 18 சதவிகிதத்தை நீங்கள் ஒதுக்கியிருக்கலாம். அதற்குப் பதிலாக நீங்கள் 11 சதவிகிதம்தான் ஒதுக்கியிருக்கின்றீர்கள். 2,520 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டிய இடத்திலே, நீங்கள் 1,638 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதாவது, 2,520 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டும், ஆனால், 1,638 கோடி ரூபாய், 11.7 சதவிகிதம்தான் ஒதுக்கியிருக்கின்றீர்கள். இந்த இழப்பை வருகின்ற காலங்களிலே நீங்கள் ஈடு செய்ய வேண்டும். இது நீங்கள், இந்த ஏழை மக்களுக்குச் செய்கின்ற உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

தாட்கோமூலம் 208 கோடி ரூபாயிலே, ஒரு இலட்சத்து 97 ஆயிரம் பயனாளிகள் பயனடையச் செய்ததாக நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டும். ஒரு நபருக்கு எவ்வளவு பணம் என்றால், 10,000 ரூபாய்தான். இந்த 10 ஆயிரம் ரூபாயைக் கொடுத்து யாரையும் பொருளாதார ரீதியாக முன்னேற்றிவிட முடியும் என்பது தவறான கருத்து. ஆகவே, இந்த 10 ஆயிரம் ரூபாயிலே ஒருவரைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றிவிட முடியாது. அதிக நிதி ஒதுக்கப்படவேண்டும். சாத்தியக்கூறான திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்துகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இங்கே என் அருகிலே அமர்ந்திருக்கின்ற குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஒரு கருத்தை அவசர முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாக இந்த அவையிலே குறிப்பிட வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவருடைய தொகுதியிலே இருந்து 6-3-2007 அன்று 10 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றார்கள். அவர்கள் இதுநாள் வரையில் என்ன ஆனார்கள், எங்கே சென்றார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்களைச் சிங்கள இராணுவத்தினர்தான் இழுத்துச் சென்றுவிட்டார்களோ என்ற ஐயப்பாடும், அச்சுறுத்தலும் இருக்கிறது. இந்த 10 மீனவர்களைக் கண்டுபிடிப்பதிலே இந்த அரசு முனைப்புக் காட்டவேண்டுமென்பதை இங்கே நான் அவர் வாயிலாகச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

எனக்கு முன்பாக இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள்கூட மூன்று முட்டைகள் வழங்குவதுபற்றிக் குறிப்பிட்டார்கள்.



இந்த மூன்று முட்டைகள் வழங்கும் திட்டத்தைப்பற்றி, இந்த அவையிலே அதிகமாக மகிழ்ச்சி கொள்ளக்கூடியவன் நானாகத்தான் இருக்கவேண்டும். ஏனென்றால், இங்கே குழந்தைகளெல்லாம் மூன்று முட்டைகளை உண்ணப் போகின்றது என்பது பயனாளிகளைப் பொறுத்தமட்டில், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் அகமகிழ்வீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனால், அந்த முட்டைகளை வழங்குகின்ற தொகுதியிலிருந்து உறுப்பினராக வந்திருக்கின்ற நான், அங்கே அந்த முட்டையைச் சாகுபடி செய்கின்ற அந்த முட்டை தொழிலாளர்களுக்கு நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்தித் தந்த இந்த அரசுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு கலைஞர் அவர்கள் தன்னுடைய நீண்ட அரசியல் வாழ்வில், தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மூத்த தலைவர்களையும் கௌரவித்துள்ளார்கள். இராஜாஜி அவர்களுக்கு மணி மண்டபமும், காமராசர் அவர்களுக்கு மண்டபமும், பக்தவத்சலனாருக்கு மண்டபமும், இன்னும் சொல்ல வேண்டுமானால், தந்தை பெரியார் திரைப்படத்திற்கு நிதியுதவியும் என்று இப்படிப் பல தலைவர்களைக் கௌரவிக்க வேண்டுமென்று செய்திருக்கிறார்கள். 'இந்த அவையிலே உறுப்பினராக இருந்த, கறைபடாத கரத்திற்குச் சொந்தக்காரராக, எளிமையே தன்னுடைய வாழ்வின் குறிக்கோளாக, மற்றவர்களுக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்த கக்கன்ஜி அவர்களைப் பற்றிய ஒரு திரைப்படம் தயாரிக்கப்படவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கக்கன்ஜி அவர்களுடைய வாழ்க்கை வரலாறு என்பது இன்றைக்கு இருக்கின்ற இளைஞர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும், முன்மாதிரியாகவும் அமையும். அரசியலிலே எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு ஒரு வழிகாட்டியாகத் திகழும். எனவே, கக்கன்ஜி அவர்களைப்பற்றி யாராவது படம் எடுக்க முன்வருவார்களானால், அதற்கு நீங்கள் நிதி ஒதுக்கவேண்டுமென்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரி என்பது சிறப்பான திட்டம். சில மாவட்டங்களில் அது நடந்து கொண்டிருக்கின்றது. நாமக்கல் மாவட்டத்திலே அதைச் செயல்படுத்தவேண்டும். இன்றைக்கு நாமக்கல் மாவட்டத்திலே இருக்கின்ற மருத்துவமனையை, நீங்கள் தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை தலைமை மருத்துவமனைகளுக்கும்

ranking கொடுத்தீர்களென்றால், பட்டியலிட்டால், சிறப்பாகச் செயல்படுகின்ற மருத்துவமனையாக, சுகாதாரம் மிக்க மருத்துவமனையாக, மற்ற மருத்துவமனைகளோடு ஒப்பிட முடியாத அளவிற்கு உயர்ந்த தரத்திலே, சுகாதார முறையிலே சிறந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மருத்துவமனை. அந்த இடத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்பதை நான் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழில் துறையில் 11 ஆயிரம் கோடி ரூபாய்... (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொள்கின்றேன்... 11 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடாக வரவிருக்கிறது என்பதை இந்த அறிக்கையிலே நான் பார்த்தேன். இதில் 7 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏற்கெனவே ஒப்பந்தம் ஆகிவிட்டது என்றும், கார் தொழிற்சாலை நிறுவ, 4 ஆயிரம் கோடி ரூபாயில் வருகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் ஒன்றை நாம் கவனிக்கவேண்டும். அத்தனை தொழில் முதலீடுகளும் ஒரு குறிப்பிட்ட இடத்திலே மட்டும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, திருப்பெரும்புதூர் மற்றும் அந்தப் பகுதிகளிலே மட்டும் ஏற்படுகிறது. பெங்களூரைச் சற்றுத் திரும்பிப் பாருங்கள். இதுபோன்று ஒரே இடத்திலே இந்தத் தொழிற்சாலைகளெல்லாம் குவிந்ததன் காரணமாக, மிக அதிகமான நெரிசல் ஏற்பட்டு, இரண்டு, மூன்று மணி நேரம் அங்கே பயணம் செய்வதற்குக் காலதாமதம் ஆகின்றது. ஆக, இந்தத் தொழிற்சாலைகளெல்லாம் ஒரே இடத்தில் ஏற்படாமல், தமிழகத்தின் பல பகுதிகளிலே பரவிட வேண்டுமென்பதை இங்கே வலியுறுத்துகின்றேன்.

கடந்த நிதிநிலை அறிக்கையின்மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலளிக்கின்ற நேரத்திலே சொன்னார்கள்; "நாமக்கல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், ஒரு வாகனத் தொழிற்பேட்டையை தொகுதியிலே கேட்டிருக்கிறார்கள்; கண்டிப்பாக அவருடைய கோரிக்கை கவனிக்கப்படும்" என்று சொன்னார்கள். தயவுசெய்து அந்த வாகனத் தொழிற்பேட்டையை நாமக்கல்லிலே தொடங்க வேண்டிய வேலைகளைத் தொடங்க வேண்டுமென்பதை நான் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

தொழில்நுட்பப் பூங்காவைத் தமிழகத்திலே பல இடங்களிலே நிறுவி வருகின்றீர்கள். சிறப்பான திட்டம் இது. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மட்டுமல்ல; நல்ல ஊதியம் கொடுக்கின்ற திட்டமாக இது அமைந்திருக்கின்றது. நாமக்கல்லானது, கல்விக்குப் பெயர் பெற்ற இடம். பல கல்வி நிலையங்கள் இருக்கின்ற இடம். ஆக நல்ல மாணவர்களைப் பயிற்றுவித்துத் தருகின்ற அந்த நாமக்கல் பகுதியிலேயும் ஒரு தொழில்நுட்பப் பூங்காவைத் தாங்கள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10-50

மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலம்-கரூர் இரயில் பாதை பல வருடங்களாக இயங்காமல் கேட்பாரற்றுக் கிடக்கின்றது. இயங்காமல் என்றால், வேலையே நடக்காமல் கிடக்கின்றது.

இந்த வருடம்கூட மத்திய நிதிநிலை அறிக்கையிலே அதற்கு 20 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த 20 கோடி ரூபாயில் எந்த ஒரு பெரிய சாதனையையும் சாதித்துவிட முடியாது என்ற மாத்திரத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் வேண்டிக்கொள்வது, மத்திய அரசிடம் இதை நேரடியாக எடுத்துவைத்து, இந்த கரூர், சேலம், நாமக்கல் இரயில் தடத்தை உடனடியாகச் செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகம்தான் இந்தியாவிலேயே அத்தனை மாநிலங்களிலும் மின் சக்தித் துறையிலே அதிகமான முதலீட்டை மத்திய அரசிலேயிருந்து பெற்றிருக்கின்றது என்பதை மிக மகிழ்ச்சியோடு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 26,000 கோடி ரூபாய் இங்கே முதலீடு செய்யப்பட இருக்கின்றது என்பதை இங்கே பேசி இருக்கின்றார்கள். இதற்காக அன்னை சோனியா காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடக்கின்ற மத்திய அரசானது தமிழகத்திற்கு எத்தகைய முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது; தமிழகம் எந்த அளவுக்கு ஒரு முக்கிய மாநிலமாகத் திகழ்கின்றது என்பதற்காக அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் என்னுடைய நன்றியினை இங்கே நான் தாக்கல் செய்துகொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடுங்கள்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** இரண்டே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சுய உதவிக் குழுக்கள் எல்லாம் சிறப்பாகச் செயல்படவேண்டுமென்றால், அவர்கள் செய்கின்ற அந்தக் கைவினைப் பொருள்கள் எல்லாம் நல்ல விலையிலே விற்கப்படவேண்டும். அதற்கு முக்கியமாக தேவை, அவர்களுக்கு ஒரு

சிறப்பு அங்காடி. எனவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சிறப்பு அங்காடியை, சுய உதவிக் குழுக்கள் தாங்கள் தயாரிக்கின்ற பொருள்களை வைத்து விற்பதற்காக மாவட்ட ரீதியாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே கடந்த ஆட்சியிலே குளிர்பதனக் கிடங்கு ஒன்று கட்டித் தருவதாக வாக்குறுதி தந்தார்கள். அது வாக்குறுதியாகவே இருக்கின்றது. அந்த வாக்குறுதியை மாற்றி இப்போது அதைச் செயல்படுத்த வேண்டும். இதற்காக அங்கே இருக்கின்ற கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்திலே இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அங்கே உடனடியாக குளிர்பதனக் கிடங்கு ஒன்றை தாங்கள் அமைத்துத் தரவேண்டும்.

பறவைக் காய்ச்சல் நோய் ஆராய்ச்சி மையம் நாமக்கல்லிலே தொடங்கப்படும் என்று கடந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். இதுநாள் வரையில் அது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றே கருதுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தப் பறவைக் காய்ச்சல் நோய் ஆராய்ச்சி மையத்தை உடனடியாக அங்கே நிறுவிட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நல்லதொரு நிதிநிலை அறிக்கையில், புதிய வரிகள் இல்லாமல், விதிக்கப்பட்ட பல வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. வரி விதிக்கப்பட்ட பல பொருள்களுக்கு வரியே இல்லாமல் இரத்து செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை இங்கே அளித்து அதற்கு முத்தாய்ப்பாக, அதன் உச்சகட்டமாக—எந்த அரசும் கடந்த அரசிலேகூட பல திட்டங்கள் கடந்த ஆட்சியில், கடைசி காலத்திலே, ஆறு மாத காலத்திலே தினமும் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது; எந்தத் திட்டமும் செயல்படாமல் போயிருக்கிறது; ஆனால், அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட வேண்டுமானால், அதற்கு ஓர் உயர்நிலைக் கண்காணிப்புக் குழு வேண்டும் என்பதை நன்குணர்ந்த இந்த அரசு—ஓர் உயர்நிலைக் கண்காணிப்புக் குழுவை இந்த நிதிநிலை அறிக்கையில் உச்சகட்டமாக அறிவித்திருக்கிறது. அந்த உயர்நிலைக் கண்காணிப்புக் குழு, அறிவிக்கப்பட்டிருக்கிற பல திட்டங்களையும் சிறப்பாகக் கண்காணிக்கவேண்டும். அந்தக் குழுவிற்கு வேண்டிய அத்தனை அதிகாரங்களையும் நீங்கள் அளிக்கவேண்டும். இந்த அறிவிக்கப்பட்ட திட்டங்களின்மூலம் கிடைக்கின்ற பயன்கள் அனைத்தும் மக்களுக்குச் சென்று சேருகின்றனவா என்பதை இந்தக் குழு கண்காணிக்க



வேண்டுமென்பதிலே நீங்கள் கருத்தோடு இருக்கவேண்டுமென்று கேட்டு, நல்லதொரு வாய்ப்பினை அளித்து, இந்தச் சிறப்பான ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள்.

இந்த நேரத்திலே வேறொரு கருத்தை, தொடர்ச்சியாக ஒரு கருத்தைச் சொல்லி அமர்வது சாலப் பொருத்தமாகும் என்று கருதுகின்றேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்ற கருத்தை, மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் உரையிலேயும் குறிப்பிட்டிருந்தீர்கள். இப்போதும் இந்த நிதிநிலை அறிக்கையிலும் அதைக் குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். அதைச் சற்று ஆய்வு செய்யவேண்டுமென்பது என்னுடைய மிகத் தாழ்மையான கருத்து. ஏனென்றால், இத்தனை ஆண்டுகள், அறிவுலகக் கோமான், அரசியல் மாமேதை பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் வடித்துத் தந்த அந்த அரசியல் அமைப்புச் சட்டமானது, Justice, Liberty, Equality and Fraternity என்பதை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. அதில் எந்த மாற்றமும் செய்யப்படக்கூடாது; செய்ய முற்படுதல் கூடாது என்பது இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியினுடைய ஆழமான கருத்து. கடந்த ஆட்சியிலே, மத்திய ஆட்சியிலே, பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலே இருந்த ஆட்சியிலே வெங்கடாசலையா என்பவருடைய தலைமையிலே—நீதியரசர் வெங்கடாசலையா என்பவருடைய தலைமையிலே—இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது என்பதை இந்தச் சபையிலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் நன்றாகவே அறிவார்கள். (மணியடிக்கப்பெற்றது) அந்தக் குழுவின்மீது மக்களுக்கு எந்த அளவுக்கு நம்பிக்கை இருந்தது என்பதையும் மக்கள் நன்றாக அறிவார்கள். எனவே, நாம் தேன்கூட்டிலே கைவைத்த நிலையாக ஆகிவிடக்கூடாது என்ற ஒரு ஐயப்பாட்டினாலும், இதுநாள் வரையில் இந்திய அரசியல் சாசனமானது, தான் செய்யவேண்டிய பணியைச் சிறப்பாகவே செய்திருக்கின்றது என்ற இந்தக் காலக்கட்டத்திலேயும், உங்களுடைய கருத்தை மீண்டும் ஒருமுறை நீங்கள் ஆய்வு செய்யவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

**•திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பேரவைத் தலைவர் மாத்திரம் அல்ல; நேரத்தையும்

கணிக்கிற அவைத் தலைவர். எனவே, நீங்கள் கொடுக்கிற நேரத்தில் குறைவில்லாது ஓரிரு கருத்துகளை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஒரு சாதாரண வீடாக இருந்தாலும் அல்லது ஓர் ஓட்டு வீடாக இருந்தாலும், அல்லது வானுயர்ந்த அடுக்கு மாடிக் கட்டடமாக இருந்தாலும் இவற்றுக்கெல்லாம் ஓர் அடிப்படை, ஓர் அஸ்திவாரம் வேண்டும். கிராமப்புறப் பாணியில் சொல்ல வேண்டுமானால், கடைக்கால் என்று சொல்வார்கள். அப்படி அந்த அஸ்திவாரம் சரியாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அஸ்திவாரத்தை உருவாக்குகிற ஓர் அறிக்கைதான், இந்த நிதிநிலை அறிக்கை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேசுகிற நல்ல வாய்ப்பை அளித்த, எங்கள் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், தலைவர் அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், நான் குறிப்பிட்ட இந்த அஸ்திவாரம் வீட்டிற்கு மாத்திரம் அல்ல; கல்விக்கும் பொருந்தும். குறிப்பாக, எப்படிப்பட்ட கல்வியாக இருந்தாலும், அதிலும் குறிப்பாக, ஒரு மாணவன் கற்க வேண்டிய பள்ளிக் கல்வியாக இருந்தாலும், எதிர்காலக் கல்வியாக இருக்கிற உயர்நிலைக் கல்வியாக இருந்தாலும், அவனுக்குத் தேவையான அந்த அடிப்படைக் கல்வி சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். அந்தத் தொடக்கக் கல்வி மாத்திரம் சிறப்பாக அமையவில்லை என்று சொன்னால், அவனுடைய எதிர்காலம் நிச்சயம் திட்டமிடுகிறபடி அமைய முடியாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இதைத் திட்டமிட்டுச் செயல்படுத்துகிற அரசாங்கம்தான் ஒரு சிறந்த அரசாங்கமாக இருக்க முடியும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இன்றைய இந்திய அரசும் சுட்டிக்காட்டுகிற ஒரு சட்டம், 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இருந்தும்கூட, அது எந்த மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்று. காரணம், ஏழ்மை, வறுமை. இதன்மூலமாக இன்றைக்கு ஏராளமான குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை நீக்குவதற்கு அல்லது போக்குவதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகள் என்ன என்று பார்த்தால், அதிலே நம்மால் ஒரு நிச்சயமான கருத்தைக் கூற முடியாது. ஆனால், நம்மை அடிமைப்படுத்திய நாடு, நம்மை ஆண்ட நாடு, ஆங்கிலேயர்கள்



இருக்கும் நாடு, இங்கிலாந்து நாட்டில் இன்றைக்கும் அது வளர்ந்த நாடாக இருந்தாலும், 16 வயதுக்குட்பட்ட அனைவரும் படித்தே ஆக வேண்டும்; அப்படிப் படிக்காத ஒரு மாணவன், படிக்க வைக்காத பெற்றோர் ஆகிய இருவருக்குமே இன்றைக்கும் தண்டனை கொடுக்கின்ற நாடாக அது இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சட்டத்தை நம் இந்திய நாட்டிலே, தமிழ்நாட்டிலே ஏன் கொண்டு வரவில்லை என்பது என்னுடைய கேள்வி!

அதேநேரத்தில், ஏழ்மையாக இருக்கிற மாணவன் எப்படிக் கல்வி கற்க முடியும் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் இங்கிலாந்திலே இன்றைக்கு ஏழ்மையான மாணவனுக்குப் படிப்பதற்கு வாராந்திர உதவித் தொகை என்று சொல்லி, அவன் படிப்புக்கேற்றவாறு, வகுப்புக்கேற்றவாறு வாரத்திற்கு 10 பவுண்டு முதல் 30 பவுண்டு வரை கிட்டத்தட்ட 4 இலட்சம் மாணவர்களுக்கு இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சீரிய திட்டத்தை நாம் ஏன் கொண்டு வரமுடியாது? இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய ஆரம்பக் கல்வி என்ற அந்தக் கடைக்கால் strong-ஆக இருக்க வேண்டுமானால், அந்தத் தொடக்கக் கல்வி சிறப்பாக இருக்க வேண்டுமானால், நாம் அதை திட்டமிட்டே ஆக வேண்டும். தரமான கல்வி, கட்டாயக் கல்வி, தொடக்கக் கல்வி சிறப்பாக அமைய முடியும் என்றால், அதற்கென்று ஓர் அமைச்சர் இருக்க வேண்டும். பள்ளிக் கல்விக்கு ஓர் அமைச்சர், உயர்நிலைக் கல்விக்கென்று ஓர் அமைச்சர் இரண்டு பேரைக் கொடுத்திருக்கிற தமிழக முதல்வரை நான் பாராட்டுகிற அதேவேளையில், தொடக்கக் கல்விக்கென்று ஓர் அமைச்சர் இருந்தால் இப்படிப்பட்ட பணிகளை எல்லாம் சிறப்பாகச் செய்ய முடியும். ஏனென்று சொன்னால், ஒதுக்குகிற ரூ.7,000 கோடியில் உயர்நிலைக் கல்விக்கும், பள்ளிக் கல்விக்கும் நீங்கள் ஒதுக்குகிற பணத்தில், அடிப்படைக் கல்வியாக இருக்கிற ஆதாரக் கல்வி, தொடக்கக் கல்விக்கு நீங்கள் எந்த அளவிற்குப் பணத்தை ஒதுக்குகிறீர்கள் என்பது உங்களுக்குத்தான் தெரியும். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த சமூகத்தின்பால் இந்த ஏழைக் குழந்தைகள்பால் அக்கறை இருக்கிற மருத்துவர் அய்யா அவர்கள், இந்தக் கோரிக்கையை என்றைக்கும் எடுத்து வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். மூன்று அமைச்சர்கள் இருந்தால்தான், இந்தப் பள்ளிக் கல்வியை நாம் சீராக்க முடியும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம், நாம் வீட்டின் மேல்தளங்களை, உட்புறங்களை எவ்வளவுதான்

அழகுபடுத்தினாலும், அடியில் இருக்கிற அஸ்திவாரத்தைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அந்த வீடு என்னவாகும் என்று நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.

*முற்பகல் 11-00*

இப்போது, தொடக்கக் கல்வி நிலை எப்படியிருக்கிறது? கிராமப்புறத்திலே இருக்கிற கட்டமைப்புகள் சரியில்லை. அங்கே ஆசிரியர்கள் இல்லை. அதனாலே, தரம் இல்லையென்று மக்கள் நினைத்து, இப்போது ஆங்கிலக் கல்விமீது மோகம் கொண்டு, வேறு வழியின்றி தங்கள் பிள்ளைகளை அங்கே சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது வருங்காலத்தில் ஒரு பேராபத்தில்போய் முடிய இருக்கிறது. ஏனென்றால், பல பள்ளிகள் எதிர்காலத்திலே மூடப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. பள்ளிகள் மூடப்பட்டால், அங்கே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்குப் பணிபுரிவதற்குப் பள்ளியும் இருக்காது. ஆங்கிலப் பள்ளிகள் வைத்ததுதான் சட்டமாகிவிடும். ஏழைக்குக் கல்வி என்பது எட்டாக் கனியாகிவிடும். இதை அரசு உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், பள்ளிகளில் நீங்கள் இரண்டு முட்டைகள் வழங்கியதை, இன்றைக்கு மூன்றாக மாற்றியிருக்கிறீர்கள்; பாராட்டுகிறோம். ஆனால், ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு முட்டைகள் கொடுக்கிறபோதும் சரி, பள்ளிகளில் இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப அந்த முட்டைகள் வழங்கப்படுவதில்லை என்பது ஒரு குற்றச்சாட்டு. இது வெளிப்படையாகச் சொல்லக்கூடிய ஒன்று. ஆசிரியர்களும், அமைப்பாளர்களும் சொல்கிற வேதனை, 'முட்டை கொடுக்கிறபோது எண்ணிக்கைக்கேற்ப கொடுப்பதில்லை; இதே எண்ணிக்கையில் இலவச ஆடையும் கொடுத்தால் நாங்கள் எப்படிக் கொடுப்பது?முட்டையை எப்படியோ நாங்கள் பிரித்துக் கொடுத்துவிடுகிறோம். ஆனால், ஆடையை எப்படிக் கொடுப்பது? எனவே, மாணவர்கள் எண்ணிக்கைக்கேற்ப எங்களுக்கு இலவச முட்டையை வழங்க வேண்டும்' என்று கோரிக்கை வைத்ததை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, நீங்கள் கொடுத்த ஒரு பணி, மக்கள் நலப் பணியாளர்கள் பணி. ஆட்சி மாறினாலும், காட்சி மாறினாலும் பந்தாடப்படுவது அவர்கள்தான். நீங்கள் கொடுத்த அந்தப் பணியில் ஆயிரக்கணக்கான பேர் மக்கள் நலப் பணியாளர்களாகப் பணியாற்றி,



இதுவரை ஒரு பணிப் பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த பட்ஜெட்டிலே எந்த அறிவிப்பும் இல்லை. அதே நேரத்தில், இந்த மக்கள் நலப் பணியாளர்கள் உருவாக்கப்பட்ட ஆட்சியிலேயே எங்களுக்கு ஒரு பாதுகாப்பும் இல்லையென்று சொன்னால், எந்த ஆட்சி எங்களைப் பாதுகாக்கும் என்று கேட்கிறார்கள் என்பதை நான் இங்கே முதல்வரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோல, பேரூராட்சிகளிலே பணிபுரிகின்ற குடிநீர்த் திட்டப் பணியாளர்கள், மின் பணியாளர்கள், Fitter போன்ற பணி செய்வோர், 30 ஆண்டுகள் பணிபுரிந்தாலும் அவர்களுக்குத் தகுதியிருந்தும் பதவி உயர்வு தரப்படுவதில்லை என்பதை நீங்கள் அறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அதேபோல, ஆசிரியர்களை உருவாக்குகின்ற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பாடம் நடத்துகின்ற Lecturer-கள், அவர்களுடைய பணிகள் இதுவரை வரையறுக்கப்படவில்லை. ஊக்க ஊதியம் தரப்படவில்லை. கல்லூரி ஆசிரியர்களுக்கு இணையாக ஊதியமும் வழங்கப்படுவதில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, தமிழக அரசின் பாலிடெக்னிக் விரிவுரையாளர்கள் 27 பேர் பணியில் இருக்கும்போது B.E.,/M.E. பட்டம் பெற்று, இதுவரையிலும் பணி வரன்முறைப்படுத்தப்படாமல் இன்னும் ஓரிரு மாதங்களுக்குள்ளாக ஓய்வுபெற இருக்கிறார்கள். எனவே, அவர்களின் பணியை வரன்முறைப்படுத்தி, உரிய பதவியில் அமர்த்தி, ஓய்வுபெற வழிவகை காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கரூர் மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு காகித நிறுவனத்தில் பணிபுரியும் 3 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறத்திலே மாத்திரமல்ல; நகர்ப்புறத்திலும் வீடுகள் கட்டுவதற்கு வாங்கிய கடனைக் கட்ட முடியாதவர்கள், அவர்களுக்கு என்றிருந்த அபராத வட்டியை நீங்கள் நீக்குவதாக அறிவித்திருக்கிறீர்கள். நீக்குவதாக அறிவித்த அந்த அறிவிப்பின்படி, இன்றைக்கு அந்தக் கடனைக் கட்டாதவர்களுக்கு அந்தப் பலன் முழுமையாகப் போய்ச் சேருகிறது. ஆனால், ஏற்கெனவே கட்டியவர்கள், அந்த அபராத

[திரு. கோ. எதிரொலி மணியன்] [2007 மார்ச் 27

வட்டியைச் செலுத்தியவர்களுக்கு நீங்கள் சலுகை வழங்குகின்ற விதமாக, கட்டப்பட்ட அந்த அபராத வட்டியை அவர்களுடைய அசல் கணக்கிலே வரவு வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்கள் பகுதியிலே, திருவண்ணாமலை மாவட்டத்திலே, குறிப்பாக, திருவண்ணாமலையிலே இருந்த ஒரு தனியார் சர்க்கரை ஆலை, அருணாசலம் சர்க்கரை ஆலை என்கிற ஓர் ஆலை தொடங்கப்பட்டு, அதை நம்பி விவசாயம் செய்த விவசாயப் பெருமக்கள் கிட்டத்தட்ட 6½ கோடி ரூபாய் பணத்தை வாங்க முடியாமல் ஆறு ஆண்டுக் காலமாக அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த அரைவை ஆலையை நம்பி விவசாயம் செய்த கரும்பு உற்பத்தியாளர்கள் இன்றையவரையில் 14 மாதங்கள், 15 மாதங்கள் கடந்தும்கூட அந்தக் கரும்பை வெட்டுவதற்கு உத்தரவு வழங்காத ஒரு சூழ்நிலையில், அரசு உத்தரவு போட்டும், தனித் தனியாக ஓர் ஐந்து ஆலைகளுக்கு அந்தப் பகுதியினுடைய கரும்பை வெட்டிக்கொள்வதற்கு உத்தரவு போட்டும், அந்த அரசு ஆலைகளும் சரி, தனியார் ஆலைகளும் சரி அந்தச் சட்டத்தை மதிப்பதே இல்லை. 15 மாதங்களாகக் கரும்புகள் காய்ந்து அந்த, விவசாயிகள் வேதனைத் தீயில் தாங்களே தீயிட்டுக் கொளுத்துவதை நாங்கள் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். இதற்கு எடுக்கப்போகிற நடவடிக்கை என்ன என்பதை நான் இங்கே அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

அதேபோல, அன்பிற்கினிய நம்முடைய பேரவைத் தலைவருடைய தொகுதி, அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில், 3 ஆண்டுக் காலமாக மக்கள் செலுத்த வேண்டிய குடிநீர்க் கட்டணத்தை ஒரே நேரத்தில் கட்ட வேண்டும் என்று மதுரை உயர் நீதிமன்றம் ஆணையிட்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவரும், பேரூராட்சித் தலைவரும் மனது வைத்தால், ஓர் ஆறு மாத கால அவகாசம் தந்தால், அத்துணைப் பேரும் கட்ட வேண்டிய பணத்தைச் சீராகக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சுட்டிக்காட்டி, அதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய முதல்வர் அவர்கள், கடந்த கூட்டத் தொடரிலே நான் வைத்த ஒரு வேண்டுகோளை ஏற்று, என் தொகுதியிலே இருக்கின்ற காவல் நிலையம், குடியிருப்போடு கட்டப்படும் என்று அறிவித்ததை வரவேற்கிற அதேவேளையில்,



2007 மார்ச் 27] [திரு. கோ. எதிரொலி மணியன்]

என்னுடைய தொகுதியில் இருக்கின்ற சேத்துப்பட்டு மருத்துவமனையை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று நான் வேண்டுகோள் வைத்திருக்கிறேன்.

அதேபோல, சேத்துப்பட்டு பேரூராட்சி இருக்கின்ற நகரத்தை மையமாக வைத்து ஒரு பணிமனை தொடங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு இருக்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல; என் தொகுதியில் இருக்கின்ற செய்யாற்றின் குறுக்கே இரண்டு தரைப் பாலங்கள் வேண்டும் என்று கடந்த கூட்டத் தொடருக்கு முன்பே இந்த வினா தொடுத்தும் இதுவரை விடை இல்லை.

அதைப்போல, என் தொகுதிக்குட்பட்ட நெடுங்குளம், பொன்னூர் போன்ற அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே இந்த அவையிலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலும் குறிப்பாக, தேசூர் பேரூராட்சியில் கிட்டத்தட்ட சுற்றுப்புறத்தில் இருக்கின்ற 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு, தீ என்று ஏற்பட்டால் அணைப்பதற்கு ஆள் இல்லாத சூழ்நிலையில், வண்டி வாகனம் இல்லாத சூழ்நிலையில், அந்தப் பேரூராட்சி இருக்கிற காரணத்தினாலே, அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் கொண்டு வரவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் அதிகம் இருக்கின்ற ஜவ்வாது மலைப் பகுதியிலே இருக்கின்ற பள்ளிகளில், குறிப்பாக, உண்டு உறைவிடப் பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை. அங்கு ஆசிரியர்களை நியமித்தாலும் அவர்கள் பணிக்குப் போவது இல்லை. அவர்களை இந்த அரசும், உரிய அதிகாரிகளும் கண்டிப்பதும் இல்லை. எனவே, அந்த மலைவாழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய கல்வி எப்படிச் சீராகக் கிடைக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி, அதற்காக நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு எண்ணெய் வித்து உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினுடைய சார்பிலே, நம்முடைய திருவண்ணாமலை மாவட்டத்தைப் போன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து எண்ணெய் வித்து உற்பத்தி செய்யும் உழவர் பெருமக்கள் பயனடையும் வகையில், இருந்த சங்கங்கள் எல்லாம் இன்றைக்கு மூடப்பட்ட சூழ்நிலையில், அவற்றிலே பணியாற்றியவர்களுக்கு உரிய வேலைவாய்ப்பு

வழங்கப்படாமல் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு உரிய பணிப் பாதுகாப்பு வழங்கி உதவிடுமாறு கேட்டு, நல்ல வாய்ப்புத் தந்த உங்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. துரை சந்திரசேகரன் தலைமை)

நிதிநிலை அறிக்கையில் பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் அறிவிப்பு, கூட்டுறவு வங்கிகளில் பயிர்க் கடனுக்கான வட்டி குறைப்பு, அத்தியாவசிய பொருட்கள் அனைத்திற்குமான On-line வர்த்தக நடைமுறையை இரத்து செய்ய மைய அரசை வலியுறுத்துவது, மன வளர்ச்சி குன்றியோர் நலன் காக்க ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு போன்ற பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு இருப்பதை எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோன்று, பொது விநியோகத் திட்டத்திற்கென்று இந்த நிதிநிலை அறிக்கையில் 1,950 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய ரேஷன் கடைகளில் பருப்பு, எண்ணெய் மட்டுமல்லாது அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் வழங்குவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை நாங்கள் வைக்க விரும்புகிறோம்.

(முற்பகல் 11–10

நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருப்பதுபோல, எடைக் குறைவைத் தடுத்து நிறுத்துவதற்கு மின்னணு தராசு மட்டும் போதுமானதாக இருக்க முடியுமா என்றால் நிச்சயமாக இருக்க முடியாது. இப்போது தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ரேஷன் கடைகளிலும் வழங்கப்படக்கூடிய பொருட்களது எடை குறைவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் தொடர்ந்து வந்து



கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்தக் குற்றச்சாட்டுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ரேஷன் கடைகளிலே வழங்கக்கூடிய பொருட்கள் அனைத்தையும், பாக்கெட் மூலமாக விநியோகிக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று, தமிழக மக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு என்று 2,286 கோடி ரூபாய் நிதி இதிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 2,286 கோடி ரூபாய் நிதியில், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து மருத்துவமனைகளுக்கும் தேவையான மருந்துகளை வாங்குவதற்கு 193 கோடி ரூபாய் என்பது போதுமானதாக இருக்க முடியாது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், கடந்த நிதிநிலை அறிக்கையில், கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையில், தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய அனைத்து மருத்துவமனைகளுக்கும் மருந்து வாங்குவதற்கு 174 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. இந்த ஆண்டு அது 193 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்வு என்பது வெறும் 19 கோடி ரூபாய்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது தமிழகத்தினாலும் சரி, இந்தியாவிலானாலும் சரி, கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் மருந்துகளது விலை, கடந்த காலத்தில் விற்றதைவிட 50 சதவீதம் உயர்ந்து இருக்கிறது. 50 சதவீதம் உயர்ந்து இருக்கக்கூடிய விலையின் அடிப்படையில் பார்த்தால்கூட, குறைந்தபட்சம் இந்த ஆண்டு 85 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 19 கோடி ரூபாய்தான் கூடுதல் என்ற வகையில் 193 கோடி ரூபாய் ஒதுக்கீடு போதுமானதாக இருக்க முடியாது.

இப்போது, சென்னை மாநகரத்தில் சின்னம்மை நோய் போன்ற தொற்று நோய்கள் கடுமையான அளவிற்குப் பரவிக் கொண்டிருக்கிறன. தமிழகத்தில் 18 மாவட்டங்களிலே இந்த நோய் பரவி இருப்பதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நேற்றையதினம் ஒரு பேட்டியிலே சுட்டிக்காட்டியிருக்கிறார். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் வலியுறுத்த விரும்புவது, சென்னை மாநகரத்தில் 525 பேர்தான் இந்தச் சின்னம்மை நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது, ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க முடியாது. அரசு மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவம் பார்க்கக்கூடியவர்களது எண்ணிக்கை வேண்டுமானால் அதுவாக இருக்கலாமே தவிர, இன்றைக்கு ஆயிரக்கணக்கான மக்கள் சாதாரண மக்கள், சென்னை மாநகரத்திலே சின்னம்மை நோயினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்கு

தேவையான மருத்துவ உதவிகளைச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை நாங்கள் வலியுறுத்துவதற்குக் காரணம், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை தண்டையார்பேட்டையில் இருக்கக்கூடிய தொற்று நோய் மருத்துவமனையில் மட்டும் அனுமதிக்கப்பட்டவர்களது கணக்கு என்பது சொல்லப்படுகிறதே தவிர, வீடுகளிலிருந்து மருத்துவம் பார்க்கக்கூடியவர்களது கணக்குகள் என்பது மறைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, சின்னம்மை நோய் போன்ற தொற்று நோய்கள சென்னை மாநகரத்திலே பரவாமல் இருப்பதற்கு, தடுப்பதற்குப் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நோயைத் தடுப்பதற்கான மருந்து என்பதை ஒரு நபருக்குக் கொடுக்க வேண்டுமென்றால் *1,200* ரூபாய் நாம் செலவு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அது ஓர் உயிர்க்கொல்லி நோய் இல்லை என்ற காரணத்தினால், அதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படாமல் இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை இந்த நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் போதுமான நிதி, மக்கள் நல்வாழ்வுத் துறையால் ஒதுக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று நிதிநிலை அறிக்கையிலே, புதிய பேருந்துகள் கடந்த ஆண்டு *2,230* வாங்கப்பட்டிருக்கின்றன; இந்த ஆண்டைப் பொறுத்தவரை *3,000* பேருந்துகள் வாங்குவதற்கு *150* கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது; சென்னை மாநகரத்திலே மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயக்கப்படக்கூடிய பேருந்துகளது எண்ணிக்கை *2,773*; இந்த *2,773* பேருந்துகளில் *1,700* பேருந்துகள் வரை, *2001* ஆம் ஆண்டிற்கு முன்பாக மாநகரப் போக்குவரத்துக் கழகங்களால் வாங்கப்பட்ட பேருந்துகள் என்ற கணக்கு சொல்லப்பட்டு இருக்கிறது. *1,700* பேருந்துகளும் இன்றைக்கு ஒட்டை உடைசல்களாக சென்னை மாநகரத்திலே இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றால், இந்தப் பேருந்துகளை மாற்றுவதற்குப் போதுமான நிதியை ஒதுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். அதேபோன்று, சென்னை மாநகரத்தில் இயக்கப்படக்கூடிய பேருந்துகளைப் பொறுத்தவரை, கடந்த காலத்தில் இயக்கப்பட்ட சாதாரண பேருந்துகளுக்குக் குறைந்த கட்டணம் *2* ரூபாய் வசூலிக்கப்பட்டது. L.S.S. பேருந்துகளுக்கு *2* ரூபாய் *50* காசும், M. Service என்று கடந்த ஆட்சியிலே கொண்டுவரப்பட்ட பேருந்துகளுக்கு *3* ரூபாய் என்றும் கட்டணம் வசூலிக்கப்பட்டது. ஆனால், இப்போது, சென்னை மாநகரத்திலே மாநகரப்



போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படக்கூடிய Blue line அல்லது Yellow line என்று அழைக்கப்படக்கூடிய பேருந்துகளுக்குக் குறைந்த கட்டணம் என்பது, *5* ரூபாயாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. சாதாரண பேருந்துகளிலே இருக்கக்கூடிய கட்டணத்தைவிட *2* மடங்கு கட்டணம் என்பது உயர்த்தப்பட்டிருக்கிறது என்றால், இந்தக் கட்டண உயர்வு என்பது அறிவிக்கப்படாத உயர்வாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

*முற்பகல் 11–15*

வெளி மாநிலங்களுக்கு இயக்கப்படக்கூடிய பேருந்துகளைப் பொறுத்தவரை, *440* பேருந்துகள் நம்முடைய போக்குவரத்துக் கழகங்களால் வெளி மாநிலங்களுக்கு இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பேருந்துகளைத் தனியாருக்கு contract விடுவது என்ற அரசாணை வெளியிடப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. G.O. Ms. No. *131*, dated *21-1-2007* என்ற அரசாணை வெளியிடப்பட்டு, அதில் தனியாருக்கு contract முறையில் கொடுப்பது என்றிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன் இதை நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்றால், *2002* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அன்றைய ஆட்சியாளர்களால் சொல்லப்பட்டது, தமிழகத்தில் இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகங்களது பணிகள், சேவைகள் படிப்படியாகத் தனியார் மயமாக்கப்படும்; *50* சதவிகிதப் பேருந்துகளைத் தனியார் மயமாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொன்னபோது, இந்தியத் தொழிற் சங்க மையம், சி.ஐ.டி.யு. சார்பாக உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டது. அந்த வழக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. இப்போது மீண்டும் வெளி மாநிலங்களுக்கு இயக்கப்படக்கூடிய பேருந்துகள் தனியார் மயமாக்கப்படும் என்று சொல்லப்பட்டால், இந்த அரசு தன்னுடைய கடந்தகால கொள்கையிலிருந்து விலகிச் செல்கிறதோ என்ற ஐயம் எங்களுக்கு ஏற்படுகிறது. ஆகவே... (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** Point of order, sir.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** Point of order எதுவும் இதிலே இல்லையே! (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொல்கின்றபோது, கடந்த ஆட்சியிலே போக்குவரத்துக் கழகங்களை...

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** இல்லை, அமருங்கள் நீங்கள். நான் அனுமதி கொடுக்கவில்லை. திரு. மகேந்திரன் நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்தகால நிதிநிலை அறிக்கையிலும், ஆளுநர் அறிக்கையிலும் தமிழகத்திலே இயக்கப்படக்கூடிய போக்குவரத்துக் கழகங்களது பணிகள், சேவைகள் படிப்படியாகத் தனியார் மயமாக்கப்படும் என்று உங்களால் சொல்லப்பட்டது என்பதைத்தான் நான் சொல்கிறேன். இப்போதும் அதுபோன்ற ஒரு நிலையை, கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடாது என்பதுதான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் முன்வைக்க விரும்புவது.

அதேபோன்று, கல்வியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு தமிழகத்தில் 14 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி கிடைப்பதற்கான நடவடிக்கையை மாநில அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்றைக்குக் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியம் தமிழகத்திலே இருக்கிறது. ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரத்தைப் பொறுத்தவரை, கடந்த காலத்தில் இருந்ததுபோல் 1 : 30 என்ற நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். ஒன்றுக்கு 40 என்ற அந்த விகிதாச்சாரம் என்பது, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குப் போதுமானதாக இருக்க முடியாது என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வதோடு, இன்றைக்கு உயர் கல்வி படிக்கக்கூடிய மாணவர்களுக்கு, கல்லூரிகளில், அரசுக் கல்லூரிகளில் இளங்கலை பட்டப் படிப்பு பயிலக்கூடிய மாணவர்களுக்கான கட்டணம் என்பது இரத்து செய்யப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். அதேபோன்று, அரசுப் பொறியியல் கல்லூரிகளிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கான கட்டணம் என்பது 10,350 ரூபாயிலிருந்து 6,350 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில், தமிழகத்தைப் பொறுத்தவரை, இப்போது 250-க்கும் அதிகமான தனியார் பொறியியல் கல்லூரிகள், அரசு ஒதுக்கீட்டிலே இடம் கிடைக்கக்கூடிய மாணவர்களுக்குக்கூட 36,000 ரூபாய்



வருடத்திற்குக் கட்டணமாக வசூலித்துக் கொள்ளை அடிக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு என்பது நமக்கெல்லாம் இருக்கிறது. ஏனென்றால், ஒரு காலத்தில் இலட்சாதிபதிகளுக்குத்தான் உயர் கல்வி கிடைக்கும் என்ற நிலைமை இப்போது மாற்றப்பட்டு, கோடீஸ்வரர்களுக்குத்தான் தரமான உயர் கல்வி கிடைக்கும் என்ற நிலைமை என்பது உருவாக்கப்பட்டால், தமிழகத்திலே இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கு இந்த உயர் கல்வி என்பது கிடைக்குமா என்றால் நிச்சயமாகக் கிடைக்காது. ஆகவே, கடந்த காலத்திலே உயர்த்தப்பட்ட, தனியார் பொறியியல் கல்லூரிகளிலே உயர்த்தப்பட்ட அந்தக் கட்டண உயர்வை வாபஸ் பெறுவதற்கு அல்லது குறைப்பதற்கு—அண்டை மாநிலமாக இருக்கக்கூடிய கர்நாடக மாநிலத்திலே, இப்போது கட்டணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன—அதுபோன்று கட்டணங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கையை நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று, அரசுப் புறம்போக்கு நிலங்களிலே வாழக்கூடிய மக்களுக்கு, 10 ஆண்டுக் காலம் வாழக்கூடியவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற உத்தரவு என்பது கடந்த காலத்தில் கொடுக்கப்பட்டது. இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையில், மேலும் அந்தக் கால அவகாசம் என்பது 6 மாத காலம் நீட்டிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய பணிவான வேண்டுகோள் என்னவென்றால், தமிழக அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. தமிழகத்திலே இருக்கக்கூடிய வருவாய்த் துறையினரால் இந்தக் கணக்கெடுப்புப் பணிகள் என்பது இதுவரையில் துவக்கப்பட்டிருக்கிறதா என்றால் துவக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். காரணம் கேட்கும்போது, நம்முடைய அரசைப் பொறுத்தவரை பல்வேறு நலத் திட்டங்களைத் தொடர்ச்சியாக அறிவித்துக்கொண்டிருக்கக்கூடிய காரணத்தினால், இந்த நலத் திட்டப் பணிகள் மக்களுக்குச் சென்றடையக்கூடிய பணிகளில்தான் இன்றைக்கு வருவாய்த் துறை அதிகாரிகள் ஈடுபட முடிகிறதே தவிர, அரசால் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய பட்டா வழங்கக்கூடிய பணிகளிலே இன்றைக்கு வருவாய்த் துறை அதிகாரிகளால் ஈடுபட முடியவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இதை விரைந்து செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–20*

என்னுடைய சட்டமன்றத் தொகுதியைப் பொறுத்தவரை, 1966 ஆம் ஆண்டு, 1967 ஆம் ஆண்டு தாயகம் திரும்பிய பர்மா தமிழர்கள், பக்தவத்சலம் காலனி, சாஸ்திரி நகர், இந்திரா நகர் என்று 3 பகுதிகளில் குடியேறியவர்கள் அல்லர்; அன்றைய ஆட்சியாளர்களால், மாவட்ட ஆட்சித் தலைவர்களால் குடியமர்த்தப்பட்டவர்கள். 40 ஆண்டுகளாக அந்தப் பகுதிகளிலே ஆட்சியாளர்களால் குடியமர்த்தப்பட்ட தாயகம் திரும்பிய பர்மா தமிழர்களுக்கு, இன்றுவரை இலவச வீட்டுமனைப் பட்டா என்பது வழங்கப்படாமல் இருக்கிறது. கடந்த ஆண்டு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நேரடியாகச் சந்தித்து, இது சம்பந்தமான கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தினார். ஆனால், இன்றுவரை அந்தப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், துவக்கப்படவில்லை. 1988 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் தேதி, இன்றைய தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள், ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தில், 'தங்களது கடிதம் கிடைக்கப்பெற்றது; பர்மா தமிழர் பிரச்சினை பற்றி தாங்கள் எழுதியிருக்கும் விவரங்களை அறிந்தேன்; அவர்களின் துயரம் போக்கிட உரிய நேரத்தில் என்னாலான நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்று 23-2-1988 அன்று தமிழகத்தினுடைய முதல்வர் கலைஞர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இந்தக் கடிதம் எழுதி 20 ஆண்டுகளுக்குப் பின்புகூட, தாயகம் திரும்பிய பர்மா தமிழர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், வழங்கப்படவில்லை என்ற வேதனையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தினுடைய பெருநகர வளர்ச்சி சம்பந்தமாகப் பல்வேறு விவரங்கள் இதிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மெட்ரோ இரயில் திட்டமாக இருந்தாலும் சரி, பாதாள இரயிலாக இருந்தாலும் சரி, பறக்கும் இரயிலாக இருந்தாலும் சரி, விரிவடைந்த சாலைகளாக இருந்தாலும் சரி, இந்த வாய்ப்புக்கள் அனைத்தும் இப்போது சென்னை மாநகரத்திலே தென் சென்னை, மத்திய சென்னைப் பகுதியிலே வாழக்கூடிய மக்களுக்குத்தான் கிடைத்துக்கொண்டிருக்கின்றன என்ற வேதனை எங்களுக்கெல்லாம் இருக்கிறது. கடந்த 6 ஆண்டுக் காலமாக



வியாசர்பாடியிலே இரயில்வே மேம்பாலம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கை இந்த அவையிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. கடந்தகால ஆட்சியில், 50 கோடி ரூபாய் செலவில் அந்தப் பாலம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில்கூட, வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால், சென்னை மாநகராட்சியினுடைய இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால், ஒதுக்கப்படவில்லை. சமீபத்திலே என்னுடைய தொகுதிக்கு வருகை தந்திருந்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில்கூட, நான் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியபோது, 'கடந்த காலத்திலே (மணியடிக்கப்பெற்றது) புறக்கணிக்கப்பட்டுவிட்டதோ என்ற உணர்வு என்பது எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. நிச்சயமாக உங்களது கோரிக்கையை நிறைவேற்றித் தருவேன்' என்று சொல்லியிருக்கிறார்கள். வியாசர்பாடி இரயில்வே மேம்பாலம், கணேசபுரம் இரயில்வே மேம்பாலம் என்பது கட்டப்பட்டால்தான், மழைக் காலங்களில் வட சென்னை மாவட்டத்திலே வாழக்கூடிய மக்கள் சென்னை மாநகரத்தோடு தொடர்பை வைத்துக்கொள்ள முடியும் என்பதால், அந்த நிலைமையை நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். அதேபோன்று, கடந்த காலத்தில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வியாசர்பாடி இரயில்வே மேம்பாலப் பணிக்க [illegible]ஞ்சாலைத் துறையின் மூலமாக ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது. நிச்சயமாக அந்த மேம்பாலம் அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையிலேயே ஆய்வுப் பணி மேற்கொள்ளபபடும் என்று சொல்லப்பட்டிருந்தது. நான் அன்றைக்கு நன்றி சொன்னேன். ஆனால், இன்றைக்கும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில், இரயில்வே பகுதியானது நிரம்ப உயர்மட்ட அளவிலே சென்றுகொண்டிருக்கின்றது. அதன் மேலே பாலம் அமைப்பது என்று சொன்னால், அதிக அளவில் நிலம் கையகப்படுத்த வேண்டியுள்ளது. அதே சூழ்நிலையில் கீழ்ப்பாலமாக அமைத்தாலும், போக்குவரத்திற்கு இசைவாக இல்லாத சூழ்நிலை இருப்பதால், அதற்குரிய விரைவான திட்ட அறிக்கை தயார் நிலையில் உள்ளது. விரைவாகப் பணி துவங்கும்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களது அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலையில்லாக்கால நிவாரணம் வழங்க வேண்டுமென்ற எங்களது கோரிக்கை, 1994 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட அந்த நிவாரணம், நம்முடைய அரசாங்கத்தால் இப்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வழங்கப்படக்கூடிய இந்த நிவாரணத்தைப் பெறுவதற்கு அரசின் சார்பாகப் பல condition–கள் போடப்பட்டிருக்கின்றன. அந்த condition–கள் தளர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்கிறேன்.

*முற்பகல் 11–25*

கடந்த நிதிநிலை அறிக்கையிலே, மாவீரன் பகத்சிங்கினுடைய நூற்றாண்டு விழாவைத் தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரு நகரங்களிலே நடத்துவது என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையில், அதுசம்பந்தமாக எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே மாவீரன் பகத்சிங்கினுடைய நூற்றாண்டு விழாவினை நடத்துவதற்கும், அதேபோன்று பகத்சிங்கினுடைய சிலையை சென்னை மாநகரத்திலே அமைப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகை போன்ற பகுதிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் கிடைக்க இரண்டு ஆண்டுகள் நீட்டித்து (மணியடிக்கப்பெற்றது) அரசு உத்தரவு வழங்கியிருந்தது. ஆனால், இந்தக் கல்வி ஆண்டு முடியும் தறுவாயில்கூட இதுவரையில் அந்த நிவாரண நிதி கிடைக்கவில்லை. உடனடியாக அந்த நிதி கிடைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை வைப்பதோடு, 1990–1991–க்குப்பின்....



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** ஒரு நிமிடம்தான்.

**திரு. கே. மகேந்திரன்:** 1990–1991–க்குப்பின் துவக்கப்பட்ட தனியார் பள்ளிகளில் பணிபுரிவதற்கான பணியிடம் என்பது அனுமதிக்கப்படாமல் இருக்கிறது. 1999–ல் கொண்டுவரப்பட்ட தனியார் பள்ளி ஒழுங்குமுறை சட்டத்தின்மூலம் இது தடுக்கப்பட்டு இருக்கிறது. அதேநேரத்தில், 1990–1991–க்குமுன் துவக்கப்பட்ட பள்ளிகளுக்கான பணியிடம் என்பது, இன்னும் சில இடங்களிலே அனுமதிக்கப்படாமல் இருக்கிறது. விட்டுப்போன ஒருசில பள்ளிகளுக்கும் அந்தப் பணியிட அனுமதியை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் கலந்துகொள்வதற்கான வாய்ப்பினை வழங்கிய பேரவை மாற்றுத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை சந்திரசேகரன்):** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜசேகர். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன் அவர்களும், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன் அவர்களும், ஏதோ இந்த அரசு நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்துகளையெல்லாம் தனியாருக்குத் தருகின்ற ஒரு முயற்சியை—அவர்கள் ஒரு வார்த்தை வைத்திருக்கிறார்கள்,—பின் கதவு வழியாக நுழைக்கிறார்கள் என்ற ஒரு வார்த்தையை வைத்திருக்கிறார்கள். இது ஏற்கெனவே கடந்த ஆண்டு சட்டமன்றத்திலே மானியக் கோரிக்கையிலே அறிவிக்கப்பட்டிக்கிறது. மானியக் கோரிக்கையிலே அறிவித்து தொழிற்சங்கத் தலைவர்களோடு உரையாடுகின்றபோது இந்தத் திட்டத்தைப் பற்றி அவர்களோடு உரையாடி, அப்படி உரையாடிய பிறகுதான் மானியக் கோரிக்கையாக வந்து அந்தத் திட்டம் இன்றைக்குச் சட்டபூர்வமாக ஆக்குவதற்காக முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

குறிப்பாக விரைவுப் போக்குவரத்துக் கழகம், 920 வழித் தடங்களிலே விரைவுப் பேருந்துகளை இயக்கிக்கொண்டிருக்கிறது. அதில் வெறும் 110 பேருந்துகள் மட்டும்தான் புதிய பேருந்துகளாக இருந்துகொண்டு இருக்கின்றன. மீதமிருக்கின்ற 800-க்கும் மேற்பட்ட

பேருந்துகள், கழிக்கப்பட வேண்டிய, காலங்கடந்து நான்கு ஐந்து ஆண்டுக் காலம் கூடுதலாக இயங்கிக்கொண்டு இருந்தன. நம்முடைய நிதித் துறைத் துணைச் செயலாளர் அவர்கள், கோப்பிலே கையெழுத்துப் போடும்பொழுது, இனிமேல் இந்தப் போக்குவரத்துக் கழகம் இயங்க முடியாது; இதை உடனடியாக மூட வேண்டுமென்று நிதித் துறையினுடைய துணைச் செயலாளராக இருந்தவர் எழுதியிருக்கிறார். அவ்வளவு மோசமான நிலைமை.

அதுமட்டுமல்ல; தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய தொகை அவர்களுக்குத் தரப்பட முடியாமல், *26* கோடி ரூபாய் பாக்கி இருந்தது. இந்த நிலையிலேதான் ஒரு புதிய முடிவாக அரசு முடிவெடுத்தது. காரணம், தமிழ்நாட்டில் ஓடுகின்ற விரைவுப் பேருந்துகளை எல்லாம் அரசின் சார்பாக புதிய பேருந்துகளாக மாற்றுவது என்றும், தமிழ்நாட்டிலிருந்து அயல் மாநிலங்களுக்குச் செல்கின்ற பேருந்துகளை வாடகைக்கு எடுத்து அந்தப் பேருந்துகளைப் புதிய பேருந்துகளாக இயக்குவது என்ற அந்த ஒரு திட்டம்; அதுதான் இன்றைக்குச் சட்டமாக ஆக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதிலேகூட வந்திருக்கின்ற objections என்று சொல்லி ஒரு *30* நாள் அதற்காகக் காலங்கழித்து சட்டமாக இன்னும் ஆக்கப்படவில்லை. இனிமேல்தான் சட்டமாக ஆக்கப்படப் போகிறது. Back Door வழியாகத் தனியார்மயம் ஆக்குகிறார்கள். Back Door வழியாகத் தனியார்மயம் ஆக்குகிறார்கள் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படித் தனியார்மயம் ஆக்குவதற்கு நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் போக்குவரத்துத் துறை அமைச்சராக முதன்முதலாக இருந்தபோதுதான் இந்தப் போக்குவரத்துத் துறையை ஆரம்பித்தார். அவர் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக இருக்கின்ற காலத்திலா தனியார்மயமாகும்? நிச்சயமாக இந்த அரசு எந்தப் பேருந்தையும் தனியார்மயம் ஆக்காது. ஆனால், இந்தப் பேருந்துகள், புதிய பேருந்துகளை வாடகைக்கு எடுக்கின்றபோது ஓட்டுநர் மட்டும் அவர்கள். நடத்துனர் நம்முடைய அரசு நடத்துனர். நம்முடைய அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் என்ற பெயர் இருக்கும். அதுதான் திட்டம். அதுதான் நடைமுறை. ஏற்கெனவே இப்போது நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட மறுபடியும் உங்களை கலந்துகொள்ளவேண்டும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்று எடுத்துரைத்தேன். மீண்டும் அவர்களோடு பேசு என்று என்னிடத்திலே



சொல்லியிருக்கிறார்கள். அதை உங்களிடம் பேசி அனைவருடைய சம்மதம் ஏற்பட்டால்தான் அந்தத் திட்டம் வரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன் ஒன்று.

*முற்பகல் 11–30*

அடுத்து, மகேந்திரன் அவர்கள் சொல்கிறார்கள்; ஏற்கெனவேயும் சொல்லப்பட்டு இருக்கிறது; Blue Line, Yellow Line என்று பேருந்துகள் ஓடுவதாகவும் அப்படி ஓடுகின்ற பேருந்துகளுக்குக் கூடுதல் கட்டணமாக வசூல் செய்வதாகவும் சொன்னார்கள். ஆம். ஏற்கெனவே இருந்த அரசு, அந்த Blue Line, Yellow Line என்ற பேருந்துகள் ஓடப்போவதாக அவர்கள் அரசு ஆணை வெளியிட்டு இருந்தார்கள். ஆனால், அவர்கள் அப்படி விடவில்லை. பேருந்துகள், புதிய பேருந்துகளாக விடவில்லை. அரசு ஆணையிட்டது, கடந்த கால ஆட்சியிலே. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, புதிய பேருந்துகள் சென்னைக்கு வந்த பிறகு, போக்குவரத்து மிகவும் நெரிசலாக இருக்கிறது; இரண்டு சக்கர வாகனங்கள், ஆட்டோ என்று போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது; இதைக் குறைப்பதற்காக ஒரு வழி செய்ய வேண்டுமென்று எண்ணியது. ஏற்கெனவே அண்டை மாநிலங்களாக இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலும், ஆந்திர மாநிலத்திலும் இதுபோல இயக்குகிறார்கள் என்பதை அறிந்து, அங்கு சென்று, நம் அதிகாரிகளைப் பார்த்து வரச் சொன்னது. குறிப்பாக, தாம்பரத்திலிருந்து பேருந்து பிராட்வே வருகின்றது என்றால், இடையிலே *30* இடங்களிலே நிற்க வேண்டும் என்று சொன்னால், *5* இடங்களிலே நின்றால் போதும்; *7* இடங்களிலே நின்றால் போதும் என்று ஒரு கணக்கு எடுத்து, அப்படிக் குறைவான இடத்திலே நின்று, விரைவாகக் கொண்டு வந்து சேர்ப்பதற்கான கட்டணம் yellow line, blue line என்ற அளவிலே கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதுவும் கடந்தகால ஆட்சியிலே நிர்ணயிக்கப்பட்ட தொகைதான். நாங்கள் புதிதாக எதையும் நிர்ணயிக்கவில்லை. அதுதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது பொதுமக்கள் மத்தியிலே நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. நீதிமன்றத்திலேகூட, நீதிபதிகூட வழக்கு வந்தபோது, பொது மக்கள் இதனைச் சிறப்பாக வரவேற்றிருக்கிறார்கள்; தடையாணை கேட்டபோது, கொடுக்க முடியாது என்று நீதிமன்றத்திலேகூட சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இங்கே இருக்கின்ற American Consulate Generalகூட மேலாண் இயக்குநரை அழைத்துப் பாராட்டியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அது பாராட்டப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசசேகரன், கொஞ்சம் பொறுங்கள். என்ன வேண்டும், சொல்லுங்கள்?

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் இங்கே ஓர் உண்மையை ஒத்துக்கொண்டதற்கு நன்றி. கடந்த கால ஆட்சியிலே எடுக்கப்பட்ட அத்தனை நடவடிக்கைகளுக்கும் இப்போது மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது என்றும் அதை இப்போது அவர்கள் அமல்படுத்துகின்றபோது பெரிய வரவேற்பு கிடைத்திருப்பதாகவும் சொன்னார். அதற்காக முதலிலே நன்றி. இருந்தாலும், மற்றொரு விளக்கத்தையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த yellow line, blue line என்பது கடந்த ஆட்சியிலே கொண்டு வரப்பட்டது அல்ல. 'எம்' சர்வீஸ் மட்டும்தான் கடந்த ஆட்சியிலே கொண்டு வந்தோம். அதுகூட எக்ஸ்பிரஸ்; அந்த நேரத்தை மிச்சப்படுத்துவதற்காக சில வசதிகளைச் செய்து கொடுப்பதற்காகக் கொண்டு வந்தோம். 5 சதவிகித 'எம்' சர்வீஸ்தான் ஓடியது. இப்பொழுது 5 சதவிகித 'எம்' சர்வீசுகளுக்குப் பதிலாக 50 சதவிகித 'எம்' சர்வீஸ், 25 சதவிகித yellow line, 28 சதவிகித... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், பேசுகிறார். கொஞ்சம் பொறுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். நான் அதைப் புரிந்துகொண்டு பதில் சொல்ல வருகிறேன். முன்னாள் உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கொதிக்கிறாரே ஏன்? (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். இடத்திலேயே உட்காரவில்லை நீங்கள் என்று நினைக்கிறேன் முதலில். மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. காரணம், நாங்கள் செய்ததை ... (குறுக்கீடுகள்) எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருப்பீர்கள்? சொன்னது வேறு. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார், மக்கள்



வரவேற்கிறார்கள் என்று. சட்டம் போட்டுவிட்டு, எழுதி வைத்துவிட்டு, சும்மா இருந்தால் வரவேற்கவில்லை. கலைஞர் பணம் கொடுத்து புது பஸ் வாங்கிக் கொடுத்ததால்தான் வரவேற்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், போக்குவரத்துக் கழகத்தினுடைய பணம் அல்ல, அரசாங்கம் கொடுத்த பணத்தைத் தந்து, கடந்த ஆண்டு 550 கோடி ரூபாய் அரசாங்கப் பணத்தைக் கொடுத்த காரணத்தால் புது பஸ் வருகிறது. அதனால் மக்கள் வரவேற்கிறார்கள். அதற்கு நன்றி என்று நீங்கள் சொன்னால், அது எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், கருத்தைச் சொல்லுங்கள். திரு. விசுவநாதன். (குறுக்கீடுகள்) முதலிலே சொல்கிறேன், கேட்டுக்கொள்ளுங்கள். உங்களை நீங்களே பாராட்டிக்கொள்ளக் கூடாது. மக்கள் பாராட்ட வேண்டும். முதலிலே கருத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவுப் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, ஒரு கொள்கை முடிவு. அதற்காகத்தான் சொல்கிறேன். ஏற்கெனவே இந்தக் கருத்தை கடந்த ஆட்சியிலேகூட மற்ற மாநிலங்களுக்குப் பேருந்து இயக்குவதை பொறுத்து, வாடகைக்கு எடுத்து, பேருந்து இயக்குவதைப் பற்றி அங்கே பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டன. ஆனால், அது சரியாக இருக்காது; தனியாரை Back Door வழியாகக் கொண்டு வருவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொன்ன கருத்துகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அது தனியாருக்குப் பின்வழியாக, வரவிடுகின்ற ஒரு முயற்சி என்பதைத் தெரிந்துதான் நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நாங்கள் நிராகரித்ததை நீங்கள் மீண்டும் இங்கே கொண்டு வருகிறீர்கள், அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் வந்தால் முன்னாலே, நாங்கள் வந்தால் பின்னாலேயா? அது எப்படி? (சிரிப்பு) நீங்கள் போட்டு சொன்னால், அது முன்னாலே விடுவது மாதிரி. விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டால் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். இராசசேகரன்.

*முற்பகல் 11–35*

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துகளை இங்கே நான் எடுத்து வைக்க விரும்புகின்றேன். குறிப்பாக, நம்முடைய முதல்வர் அவர்கள், கடந்த 50 ஆண்டுக் காலமாக இந்தச் சட்டப் பேரவையின் உறுப்பினராக இருந்து பணியாற்றி, பல்வேறு நல்ல திட்டங்களை நாட்டிற்குத் தந்து, இன்றைக்கு அவர் பாராட்டப்படுகின்றார். அவ பாராட்டப்படுகின்ற நாள் மே மாதத்தில் இருந்தாலும், இப்பொழுது முன்னதாகவே அவரைப் பாராட்டி என்னுடைய உரையை நான் தொடங்குகின்றேன்.

குறிப்பாக, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, "தமிழக அரசு சமர்ப்பித்துள்ள வரவு–செலவு அறிக்கை, அனைத்துத் தரப்பு மக்களாலும் வரவேற்கப்படக்கூடியவகையில், பாராட்டத்தக்க வகையில் வரி இல்லாத பட்ஜெட்டாக அமைந்துள்ளது; அதை நாங்கள் வரவேற்கிறோம்" என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதேபோல நானும் இந்த அறிக்கையைப் பொதுவாக வரவேற்று, அதிலே சில அம்சங்களை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

விலைவாசி உயர்வு என்பது எனக்கு முன்னால் பேசிய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சொல்லியதைப்போல 50 சதவீதம் உயர்ந்து இருக்கின்றது. மக்களால் உபயோகிக்கப்படுகின்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த பாதிப்பு, விலை உயர்வு வந்ததற்குக் காரணம் on-line என்ற வர்த்தக அமைப்பை—வர்த்தக முறையை—இந்தியாவில் அறிமுகப்படுத்தியதன் காரணமாகத்தான் இந்த விலை உயாவு வந்திருக்கிறது என்று எடுத்துக்காட்டி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பல மாதங்களாக அதைச் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது. அதை உணர்ந்த நம்முடைய அரசு, பேராசிரியர் அவர்கள் படித்த உரையிலே, இந்த on-line வர்த்தகத்தை அறவே தடை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளை மத்திய அரசுக்கு வைத்திருக்கின்றார். ஆகவே, மத்திய அரசுக்கு வைத்திருக்கின்ற இந்த வேண்டுகோளை நாங்களும் ஆதரித்து, இனிமேல் on-line வர்த்தகமே இந்தியாவில் இருக்கக் கூடாது என்கின்ற அடிப்படையில், இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றோம்.



அடுத்தபடியாக, கல்வித் துறை என்று எடுத்துக்கொள்கின்றபோது, இன்றைக்கு கிராமப்புறங்களில் ஆரம்ப, தொடக்கப் பள்ளிகள் அதிக அளவில் இருக்கின்றன. அதிக அளவில் இருக்கின்ற அந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கின்றது. இந்த அரசு கடந்த 10 மாதங்களாக, விரைவாக, பல்லாயிரம் ஆசிரியர்களை நியமித்தாலும், பற்றாக்குறை தொடர்கின்றது. அந்தப் பற்றாக்குறை தொடர்கின்றபோது இப்போது 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கின்ற விகிதாசாரம் இருக்கின்றது. அதை 30 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கின்ற அடிப்படையில் அந்தக் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். ஏனென்றால், கிராமப்புறக் கல்வி இப்போது மிகவும் போட்டியாக இருக்கின்றது. கிராமப்புறத்திலேகூட, தனியார் கல்வி நிறுவனங்கள் புகுந்து இப்போது வசதி இருப்பவர்கள் படிக்கலாம்; வசதி இல்லாதவர்கள் படிக்க முடியாது என்கின்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அரசு நடத்துகின்ற ஆரம்ப, தொடக்கப் பள்ளிகளுக்கு அதிகமான அளவிற்கு ஆசிரியர்களை நியமித்து, அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கூட்டுறவுத் துறை என்று வரும்போது, வருகின்ற மே, ஜூன் மாதங்களில் கூட்டுறவுத் துறைக்குத் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. அதை நாங்கள் வரவேற்கின்றோம். அப்படிக் கூட்டுறவுத் துறைத் தேர்தல் வருகின்றபோது, இதுவரை பல்வேறு ஊழல் நடவடிக்கைகள் அந்தக் கூட்டுறவுத் துறையிலே நடைபெற்று இருக்கின்றன; பல்வேறு ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன; ஊழல்களின் காரணமாக அந்தத் துறையே இன்றைக்கு நாசமாகின்ற ஒரு சூழ்நிலை இருந்து வந்திருக்கின்றது. இப்போது அதை நிவர்த்தி செய்கின்ற முறையில் நம்முடைய அரசு, விவசாயிகள் கட்ட வேண்டிய கடன் 7,000 கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்திருக்கின்றது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டு இன்றைக்குப் புத்துயிர் பெற்றுவருகின்றது. அப்படிப் புத்துயிர்பெற்று வருகின்றபோது, இந்தக் கூட்டுறவுத் தேர்தல் வந்தபிறகு, மேலும் அதைப்போல நடப்புகள் நடக்காமல், அவை சில சட்டதிட்டங்களோடு கண்காணிப்போடு இருக்க வேண்டும். அதற்குப் புதிய சட்டங்களையும் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11–40*

அடுத்து, ஏழையெளிய மக்கள் வங்கியில்—நேற்றிலிருந்து அதுவும் விவாதிக்கப்பட்டிருக்கின்றது— டெபாசிட் செய்திருக்கின்றார்கள். 10 ஆயிரமோ அல்லது 20 ஆயிரமோ, ஒரு இலட்சமோ என்கின்ற

கணக்கில் டெபாசிட் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த டெபாசிட் பணம் வராமல் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். சில இடங்களில், "என்னுடைய மகளுக்காக நான் போட்ட பணத்தை எடுக்க முடியவில்லையே" என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சில நபர்கள் என்னிடம் வந்து, அந்தப் பணத்தை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், அந்த வங்கியிடம் சென்று கேட்டால், பணம் வந்தால் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த வங்கியில் இருக்கக்கூடிய அந்த டெபாசிட் தொகையை உடனடியாகத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதோடு மாத்திரமல்ல; குடும்பக் கார்டு. குடும்பக் கார்டு என்பது மிகவும் முக்கியமானது. இந்தக் குடும்பக் கார்டு எப்போது வரும் என்கின்ற ஏக்கப் பெருமூச்சு இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குடும்பக் கார்டு உடனடியாக வரும் என்று அறிவித்திருக்கிறார்களே தவிர, இதுவரையில் எங்கள் மாவட்டத்தில் யாருக்குமே ஒரு குடும்பக் கார்டுகூட வரவில்லை. கடந்த 6 மாதங்களாக குடும்பக் கார்டுக்காக, அலைந்து கொண்டிருக்கின்றார்கள். திருச்சி மாநகரத்திலே மிகப் பெரிய ஒரு பேரணி நடைபெற்றது. அந்தப் பேரணியில்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே கார்டுகள் தருவதிலே கொஞ்சம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பொதுவாக, மனுக்களைச் சட்டமன்ற உறுப்பினர்களிடத்திலே கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள் பரிந்துரை செய்து, மாவட்ட வழங்கல் அதிகாரிகளுக்குச் சென்று விடுகிறது. ஆனால், இரண்டு முறை தலத் தணிக்கை செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது இப்பொழுதெல்லாம். ஏற்கெனவே தவறான கார்டுகள் வந்ததற்கு என்ன காரணம் என்று சொன்னால், தலத் தணிக்கை செய்யாத காரணத்தினால் அப்படி நடந்து கொண்டிருந்தது. இப்பொழுது ஒரு முறைக்கு, இரண்டு முறை தலத் தணிக்கை செய்து, அவை எல்லாம் பிரிண்ட் செய்யப்பட்டு, எல்காட்டிலிருந்து சென்று கொண்டிருக்கின்றன. தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது. இது ஒரு தொடர் நடவடிக்கை. ஒரு குறிப்பிட்ட தேதியில்தான் போகும் என்றெல்லாம் அல்ல; தொடர் நடவடிக்கை. அதுவும் குறிப்பாக, நாகப்பட்டினம் மாவட்டம், திருவாரூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களிலே தொடர்ந்து சென்ற



கூட்டத்தொடருக்கும் இந்தக் கூட்டத்தொடருக்கும் இடையிலேமட்டும் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 2,721 கார்டுகள் சென்றிருக்கின்றன. அதேபோன்று திருவாரூர் மாவட்டத்திற்கு 8,338 கார்டுகள் சென்றிருக்கின்றன. நாகப்பட்டினத்திற்கு 6,070 கார்டுகள் சென்றிருக்கின்றன. தொடர்ந்து இவ்வாறு சென்று ஆங்காங்கே இதைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இது ஒரு தொடர் நடவடிக்கை. தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கூடிய சீக்கிரத்திலே, இன்னும் 15, 20 தினங்களிலே முழுமையும் சென்று அடைந்துவிடும்.

**திரு. எஸ். இராசசேகரன்:** நன்றி. நான் என்ன சொல்கிறேன் என்றால், குடும்பக் கார்டு பெறுவதற்காக ஒரு குடும்பத்திலிருந்து விடுவித்து விடுகின்றார்கள். விடுவிக்கப்பட்டவர்கள் புதிய கார்டு கேட்கின்றார்கள். ஒரு பக்கத்தில் விடுவித்தும் விடுகின்றார்கள்; புதிய கார்டும் கிடைக்கவில்லை என்கின்ற காரணத்தினால்தான் கேட்கிறேன். இன்றைக்கு எதற்கெடுத்தாலும், குடும்பக் கார்டு மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆகவே, குடும்பக் கார்டைப் பற்றி, அக்கறையோடு பரிசீலித்து, உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, ஒரு சம்பவத்தை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

திருச்சி நகரத்தில் குடும்பக் கார்டு கேட்டும் அல்லது குடியிருப்பு மனை கேட்டும் ஒரு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பாக நடத்தினார்கள். அந்தப் பேரணியில் 5,000 மக்கள் கலந்துகொண்டு, அதில் அதிகமான அளவிற்குக் குடும்பக் கார்டு வேண்டுமென்கின்ற கோரிக்கைதான் வந்தது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதைப்போல, விவசாயத்திற்குத் தண்ணீர் மிக முக்கியமானது. ஆனால், இப்போது தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை என்பது அதிகரித்து வருகிறது. காவிரியைப் பற்றியும் அல்லது பல்வேறு நதிகளைப் பற்றியும் இங்கே விவாதிக்கப்படுகின்றது. ஆனால், நதிகள் பாயாத இடமான எங்களுடைய தொகுதிகளிலே எல்லாம், 500 அடிக்குக் கீழே தண்ணீர் சென்றுவிட்டது. ஆகவே, இங்கே தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கின்றது. இந்தப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, விவசாயிகளை ஆஸ்திரேலியாவுக்கும், இஸ்ரேலுக்கும் அழைத்துச் சென்று காட்ட வேண்டுமென்ற ஒரு நல்ல முடிவை இந்த அரசு

எடுத்திருக்கின்றது. விவசாயிகள் மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துச் செல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11—45*

அடுத்து, மின்சாரம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில், அது அதிகமாகத் தேவைப்படுகின்றது. தொழில் வளங்கள் பெருகப் பெருக, மின்சாரம் தேவைப்படுகின்றது. மின்சாரம் தேவைப்படுகின்றபோது, புதிய உற்பத்திகள் தொடங்கப்பட வேண்டும். அப்படி உற்பத்திகள் தொடங்கப்படுகின்றபோது, கூடன்குளம் அணுமின் நிலையம், அதாவது ரஷியாவினுடைய உதவியோடு அங்கே மின்சார நிலையம் அமைக்கப்படுகிறது; நான்கு உலைகள் புதிதாக உருவாக்கப்படுகின்றன. அப்படி உருவாக்கப்படுகின்ற உலைகள் விரைவாக செயல்பட வேண்டும்; அதையெல்லாம் எதிர்பார்த்து இந்த தமிழ்நாட்டில் மின்சாரம் தேவை என்பதை இந்த நேர்த்திலே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்றைக்கு நலத் திட்டங்கள் பெரிய அளவிற்கு வழங்கப்படுகின்றன. நலத் திட்டங்கள் வழங்கப்படுகின்றபோது சில சின்ன சின்ன தவறுகளும் சில நேரங்களில் சில இடங்களில் நடைபெற்று விடுகின்றன. அதைக் கண்காணிப்பதற்காக ஓர் உயர்நிலைக் கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டும் என்கிற ஒரு யோசனையை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கின்றேன். அதே நேரத்தில் மாவட்ட அளவிலும், தொகுதி அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் இருக்க வேண்டும். இப்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு கண்காணிப்புக் குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக் கண்காணிப்புக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்கள் கிடையாது; அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே அந்தக் கண்காணிப்புக் குழுவில் இருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

சென்ற தடவை இங்கே பேசுகிறபோது, ஜீவா நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும், அரசு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். அந்த அடிப்படையில் ஜீவாவினுடைய நூற்றாண்டு துவக்க விழாவில் நம்முடைய கலைஞர் அவர்கள், முதல்வர்



அவர்கள் கலந்துகொண்டு ஜீவா நூற்றாண்டு விழாவை இந்த அரசு நிச்சயமாகக் கொண்டாடும் என்று அறிவித்ததோடு மட்டுமல்ல, இன்றைக்கு நாகர்கோவில், மதுரை, கோவை போன்ற நகரங்களில் அந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டுமென்று அறிவித்திருப்பதை நாங்கள் மனதார வரவேற்கிறோம், நன்றி கூறுகிறோம். அதேநேரத்தில் அவருடைய படத்தைத் தபால் தலையாக வெளியிடுவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சென்ற பட்ஜெட் உரையில், வரவு-செலவுத் திட்டத்தில், ஒன்று அறிவிக்கப்பட்டிருந்தது. புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய வறட்சியைப் போக்குவதற்காக திருச்சி மாநகரத்திலிருந்து புதுக்கோட்டைக்குக் கால்வாய் வழியாக உபரித் தண்ணீரைக் கொண்டுவந்து புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய வறட்சியைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுக்க, 295 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது; நபார்டுமூலமாக அது செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது இன்றைக்கு என்ன நிலையில் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், பத்திரிகையிலே வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோது, அந்தத் தண்ணீரும் புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒருசில பகுதிகளுக்கு மட்டும்தான் செல்லும் என்கின்ற நிலை இருக்கிறது. குறிப்பாக, வெள்ளாறு, அக்கினியாறு, பாம்பாறு என்கின்ற மூன்று ஆறுகளில் மட்டும்தான் அந்தத் தண்ணீர் செல்லும் என்று பத்திரிகையின் வாயிலாக அதனுடைய அதிகாரிகள் அறிவித்திருக்கின்றார்கள். ஆனால், அந்த மூன்று ஆறுகளுக்கும் சென்றால், அந்த மாவட்ட மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அதற்குப் பதிலாக, ஆலங்குடி பகுதியிலே ஓடுகின்ற வில்லுணியாறு, அம்புலியாறு ஆகிய ஆறுகளிலும் அந்தத் தண்ணீர் வர வேண்டும்; அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கை எந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்வதற்கு விரும்புகின்றேன்.

அதைப்போல, இன்றைக்கு 6,985 கோடி ரூபாய் அளவிற்குப் பல்வேறு தொழிற்சாலைகள் இங்கே வந்திருக்கின்றன. அதைப்போல, இன்னும் 4,000 கோடி ரூபாய்க்குத் தொழிற்சாலைகள் வர இருக்கின்றன. ஆக, பதினோராயிரம் கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீட்டில், அன்னிய முதலீடுகள் இங்கே வந்திருக்கின்றன. அதைப்போல பல்வேறு இடங்களில், இப்போது சிவகங்கையில் கிராஃபைட் தொழிற்சாலை வந்திருக்கிறது. அதைப்போல, விருதுநகரில் ஒரு சிறப்புப் பொருளாதார

மண்டலம் அமைக்கப்படுவதற்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, பெரம்பலூரில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அறிவிப்பையெல்லாம் கேட்கின்றபோது, புதுக்கோட்டை மக்களைப்பற்றி, புதுக்கோட்டைப் பகுதியைப்பற்றி இந்த அரசு என்ன கருதுகிறது; என்ன யோசிக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. குறிப்பாக, 1974 ஆம் ஆண்டு, புதுக்கோட்டை மாவட்டம் புதியதாக உருவாக்கப்பட்ட மாவட்டம். அந்த மாவட்டம் தெற்குப் பகுதியிலும் சேராது; வடக்குப் பகுதியிலும் சேராது, நடுவிலே நின்றுகொண்டு ஒரு சவலைப் பிள்ளையாக இருந்துகொண்டிருக்கிறது. இந்தப் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு, இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த விதமான திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை; ஒரே ஒரு இடத்தில்தான் புதுக்கோட்டை என்று இருக்கிறது. குறிப்பாக, சிவகங்கை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய இந்த மூன்று மாவட்டங்களுக்கு குடிதண்ணீருக்காக அறுநூற்றுச் சொச்சம் கோடி பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினால், எங்கள் மாவட்டத்தில் ஒரு சிறு பகுதிக்குத்தான் அந்தக் குடிதண்ணீர் வருகின்றது; பெரும்பகுதிக்கு வரவில்லை.

*முற்பகல் 11-50*

அதேநேரத்தில், புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்காக இன்றைக்கு இந்த அரசு நல்லதொரு திட்டத்தைத் தீட்டி, ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கித் தொழில் தொடங்கவேண்டும். ஏனென்றால், அங்கே சிப்காட் தொழில் வளாகம் இருக்கின்றது; அங்கே தொழில்கள் கிடையாது; மற்றும் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன; தொழில்கள் கிடையாது. இருக்கின்ற தொழிற்சாலைகளும் திருச்சி நகரத்தையொட்டி இருக்கின்றன. ஆகவே, புதுக்கோட்டை மாவட்ட மக்களை இந்த அரசு, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்பாகக் கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

கடைசியாக, ஆலங்குடி தொகுதியில் பல்வேறு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஆலங்குடி தொகுதி, விவசாயப் பகுதி. ஆகவே, அங்கே விவசாயக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். ஆலங்குடியில் அரசுக் கலைக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அரசுப்



போக்குவரத்துப் பணிமனை ஒன்று ஆலங்குடியில் தொடங்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். மேலும் கறம்பக்குடி ஒன்றியத்தை, வருவாய் வட்டமாக ஆக்கித்தர வேண்டுகிறேன்.

இந்த ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி வரும் என்று எங்களுடைய மாவட்ட மக்களெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனால், அது, இப்போது திருவாரூருக்கும், தருமபுரிக்கும் சென்றிருக்கிறது. நாங்கள் அதை வரவேற்கிறோம். அடுத்த ஆண்டாவது, அந்த மருத்துவக் கல்லூரி புதுக்கோட்டைக்கு வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்திலேயிருந்து பல இலட்சக்கணக்கான பேர் கடன் பெற்றிருக்கின்றார்கள். அந்தக் கடனைக் கட்டமுடியவில்லை. ஆகவே, அந்தக் கடன்களையெல்லாம் இரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்துக் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிட்டன என்று குடிநீர் வடிகால் வாரியப் பொறியாளர்கள் சொல்கிறார்கள். ஆனால், இப்போது உள்ளவை, பல வருடங்களுக்கு முன்னால் உருவாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள். இன்றைக்கு மக்கள் தொகை அதிக அளவிற்கு வளர்ந்திருக்கிறது; மக்கள் பெருக்கம் உருவாகியிருக்கின்றது. அந்த அடிப்படையில், அங்கே புதிதாக மக்கள் தொகையைக் கணக்கிட்டு, குடிதண்ணீர் வசதியைச் செய்துதர வேண்டும்.

என்னுடைய தொகுதியில், மூன்று பேரூராட்சிகள் இருக்கின்றன. கீரமங்கலம், கறம்பக்குடி, ஆலங்குடி பேரூராட்சிகள் இருக்கின்றன. இந்த மூன்று பேரூராட்சிகளிலுமே குடிதண்ணீர், பற்றாக்குறையாக இருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து, அந்தப் பேரூராட்சிகளுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பொன்னன்விடுதி என்கின்ற ஊரில் அரசு உயர்நிலைப் பள்ளியை உருவாக்கித் தரவேண்டும். அதேபோல, 2 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. கீரமங்கலத்திலும், கறம்பக்குடியிலும் இருக்கின்ற அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களை, அரசு மருத்துவமனைகளாகத் தரமுயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கின்றேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

***திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டிற்கான அம்பேத்கர் விருது பெறுவதற்காக, எமது இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர், உலகமெல்லாம் இருக்கின்ற தமிழர்கள் 'எழுச்சித் தமிழர்' என்று போற்றிப் பாராட்டப்படுகின்ற திரு. தொல். திருமாவளவன் அவர்களைத் தேர்ந்தெடுத்து, அவரை அங்கீகரித்தது மட்டுமல்லாமல், இந்த ஆதி திராவிடர் சமூகத்திற்கே மிகப் பெரிய அரசு அங்கீகாரம் அளித்து, மரியாதை செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமத்துவபுரங்களை அமைத்தது மட்டுமின்றி, இன்றைக்குச் சமத்துவப் பொங்கல் என்று அறிவித்து, இனி ஆண்டுதோறும் பொங்கல் விழாக்கள் சமத்துவப் பொங்கலாகவே கொண்டாடப்படும் என்று சொன்ன, சமத்துவப் பெரியார், தமிழக முதல்வர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை பகுதியிலே மயானங்களிலே பணியாற்றிக் கொண்டிருந்த அந்த மக்களையெல்லாம் 'வெட்டியான்கள்' என்று இழிவான சொற்களால் அழைக்கப்பட்டுக் கொண்டிருந்த ஒரு நிலையை மாற்றி, இன்றைக்கு அவர்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்ததோடு மட்டுமின்றி, அவர்கள் இனி 'மயான உதவியாளர்கள்' என்று அழைக்கப்படுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற சிறப்பான அறிவிப்பைச் செய்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய மனமார்ந்த நன்றியைச் சொல்லி, வாழ்த்தி வணங்குகின்றேன்.

*முற்பகல் 11-55*

இந்த நிதிநிலை அறிக்கையிலே பாராட்டத்தக்க அம்சங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அம்சத்தைச் சொல்லிப் பாராட்டிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு இதிலே வந்திருக்கின்ற அறிவிப்புகளிலே நாங்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று



அறிவிக்கப்பட்டிருக்கின்ற அறிவிப்புகளை முதலிலே சொல்லி அவற்றைப் பாராட்டி அதற்குப் பின்னாலே என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். 100 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழ்நாட்டிலே துவக்கி நடத்தப்பட்ட அந்த அயோத்திதாசப் பண்டிதர் என்ற பெருமகனாரால் நடத்தப்பட்ட 'தமிழன்' வார ஏட்டுக்கு நூற்றாண்டு விழாவினைத் தமிழக அரசு சார்பிலே நடத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் கோரிக்கை விடுத்தேன். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, இன்றைக்கு 'தமிழன்' வார ஏட்டுக்கான நூற்றாண்டு விழா அரசு விழாவாக நடத்தப்படும் என்கின்ற அறிவிப்பு இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திட்டக்குடி பகுதியிலே இருக்கின்ற வெலிங்டன் ஏரியை மேம்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகும். எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. கு. செல்வம் அவர்கள் பேச எழுந்த ஒவ்வொரு முறையும் அந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வந்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அந்த வெலிங்டன் ஏரியை மேம்படுத்துவதற்காக 20 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். அதற்கான அறிவிப்பு இந்த நிதிநிலை அறிக்கையிலே வந்திருக்கிறது. அவர்களுக்கும், இதைச் செய்திருக்கின்ற நம்முடைய அரசுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததாக, எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சையிலே தேர்வு பெறுகிற ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுள், முதல் மதிப்பெண் பெறுகிற 10 மாணவர்களை மாவட்டந்தோறும் தேர்ந்தெடுத்து, அவர்களையெல்லாம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற சிறந்த மேல்நிலைப் பள்ளிகளிலே அவர்கள் விருப்பத்திற்கேற்ப சேர்த்து, படிக்க வைக்கின்ற செலவைத் தமிழக அரசே ஏற்கும் என்கின்ற அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அந்த அறிவிப்பை நான் மனமார வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

இந்த அறிவிப்புகளுக்கெல்லாம் சிகரம்போல, சென்னையிலே 100 கோடி ரூபாயில் நூலகம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. நூலகம் அமைப்பதற்கு 100 கோடியா என்று சிலபேர் வியக்கக்கூடும். இதற்கு முன்னாலே உலக அளவிலே, சிங்கப்பூரிலேதான் தேசிய நூலகம் என்று 16 மாடிகள் கொண்ட அந்த

நூலகம், பார்க்கிறவர்கள் எல்லாம் பார்த்து வியக்கிற ஒரு நூலகமாக அமைக்கப்பட்டிருந்தது. அந்த நூலகத்தை மாதிரியாகக் கொண்டு இங்கே சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பிலே 10 மாடிகளோடு இந்த நூலகம் அமையும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கின்றது. அதற்காக நூலகத் துறை நிதியிலிருந்து 80 கோடி ரூபாயை வழங்கி, இந்தியாவிலே வேறு எங்கும் இல்லாத ஒரு சாதனையாக, இங்கே இருக்கின்ற எழுத்தாளர்கள், படைப்பாளிகள் எல்லோரும் காணாத ஒரு கனவாக இருந்த அந்த விஷயத்தை, இப்போது நடைமுறைப்படுத்துவதற்கு ஆவன செய்திருக்கின்ற நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டி இந்த அறிவிப்பை வரவேற்கின்றேன்.

இப்போது தமிழ்நாட்டிலே நடந்துகொண்டிருக்கின்ற இந்த ஆட்சியை எழுத்தாளர்களுடைய பொற்காலம் என்று நாம் வர்ணிக்கலாம். ஏனென்று சொன்னால், அரசு விழாக்களிலே சால்வைகள் வழங்குவதற்குப் பதிலாக நூல்களை வழங்க வேண்டுமென்ற அறிவிப்பு; அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராமங்கள் எல்லாவற்றிலுமே 2 இலட்சம் ரூபாய் செலவிலே நூலகங்கள்; 100 கோடி ரூபாயிலே சென்னையிலே மிகப் பிரம்மாண்டமான நூலகம். இப்படிப் பல்வேறு அறிவிப்புகளைச் செய்ததோடு மட்டுமல்லாமல், தன்னுடைய சொந்தப் பணத்திலிருந்து பதிப்பாளர்களுக்கு ஒரு கோடி ரூபாயை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பதிப்பாளர்கள் எல்லாம் தங்களுடைய புத்தகங்களை நிரந்தரமாகக் கண்காட்சியாக வைப்பதற்குச் சென்னையிலே இடம் வேண்டுமென்று கோரிக்கை விடுத்ததை ஏற்று புத்தகப் பூங்கா ஒன்றை அமைப்பதற்கு இந்த அரசு நிலம் வழங்கும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலேயே அறிவிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அதையும் நான் வாழ்த்திப் பாராட்டி வரவேற்கின்றேன்.

நான் இந்த அவையிலே வெட்டுத் தீர்மானமாக, கடந்த முறை ஒரு கோரிக்கையை விடுத்திருந்தேன். நம்முடைய வேலையற்ற இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, மாவட்டந்தோறும் திறன் மேம்பாட்டு மையங்களை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கோரிக்கை விடுத்தேன். நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே, அது அந்தத் தொழில் கொள்கையிலே சேர்த்துக் கொள்ளப்படும் என்று அப்போது அறிவித்தார்கள். அதன் அடிப்படையிலே 50,000 இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இது மிகவும் பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய ஓர் அறிவிப்பாகும்.



நண்பகல் 12-00

கல்லூரிகளிலே, அரசுக் கல்லூரிகளிலே இடம் கிடைக்காமல் பரிதவித்துவந்த ஏழை மாணவர்களுடைய நலனை மனதில் கொண்டு, அரசுக் கல்லூரிகள் எல்லாவற்றிலுமே shift முறையை அறிவித்து, 30,000 மாணவர்கள் கூடுதலாக இப்போது அரசுக் கல்லூரிகளிலே படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதற்காக நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இப்போது பொதுப் பல்கலைக்கழகச் சட்டம் இங்கே கொண்டு வரப்படுவதாக இருக்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட 20 பல்கலைக்கழகங்கள் அந்தச் சட்டத்திற்குக்கீழே உள்ளடக்கப்பட இருக்கின்றன. இத்தகைய ஒரு நல்ல முயற்சியையும் பாராட்டுகின்ற அதே நேரத்திலே, அந்தப் பல்கலைக்கழகப் பொதுச் சட்டத்திலே அமைய இருக்கின்ற Syndicate, Academic Senate போன்ற அவைகளிலே இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நடைமுறைப்படுத்தி, ஆதி திராவிட மக்களுக்கும், மாணவர்களுக்கும், பெண்களுக்கும் அதிலே பிரதிநிதித்துவம் வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பள்ளிக் கல்வித் துறை சார்பிலே இன்றைக்கு Activity Based Learning என்கின்ற அந்த முறை, முதலாம் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்பு வரை அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றது. இரண்டொரு நாட்களுக்கு முன்னாலே எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும், நானுமாக எங்கள் தொகுதியிலே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு, இருக்கின்ற ஒரு பள்ளியைப் பார்வையிட்டோம். அந்தப் பள்ளிக் குழந்தைகளிடத்திலே நம்முடைய மதிப்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களைப் பேசச் சொல்லி, பாடச் சொல்லிக் கேட்டார்கள். ஒன்றாம் வகுப்புப் படிக்கின்ற, இரண்டாம் வகுப்புப் படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் மிகச் சிறப்பாக ஆங்கிலத்திலே, தமிழிலே அற்புதமான பாடல்களைப் பாடியதை நாங்கள் கேட்டோம். அந்த Activity Based Learning என்பது எந்த அளவிற்கு மாணவர்களுடைய திறனை வளர்த்திருக்கிறது என்பதைக் கண்கூடாக நாங்கள் கண்டோம். இதற்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள், இது தொடர்பாக ஒரு ஐயத்தை எழுப்பினார்கள். நிச்சயமாக இந்தக் கல்வி முறையானது, மாணவர்களுடைய அறிவுத் திறனை வளர்ப்பதற்கு உதவக்கூடிய முறை. அத்தகைய முறையைக்

கொண்டுவந்த பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற அம்சங்களை இப்படிப் பாராட்டுகின்ற அதேநேரத்திலே, இனி மானியக் கோரிக்கைகள், அது தொடர்பான அறிவிப்புகள் வரும்போது கவனத்தில் கொள்வதற்காக சில குறிப்பான விஷயங்களை நான் இந்த அவையின் முன்னால் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்திய அளவிலே ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னால் ஆதி திராவிட மக்களுடைய, பழங்குடியின மக்களுடைய நலனுக்காக S.C., S.T. Commission என்கின்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டது. அந்த அமைப்பு உருவாக்கப்பட்டு அதற்குப் பின்னாலே அத்தகைய அமைப்பு மாநிலந்தோறும் உருவாக்கப்பட வேண்டுமென்று வழிகாட்டுதலும் தரப்பட்டது. இப்போது அத்தகைய S.C., S.T. Commission-கள் அண்மையிலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே, ஆந்திர மாநிலத்திலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. சமூக நீதிக் கொள்கையிலே இந்தியாவிற்கே முன்மாதிரியாக விளங்குகின்ற நம்முடைய தமிழகத்திலே, மற்ற Commission-கள் எல்லாம் உருவாக்கப்பட்டிருக்கின்றன; இங்கே மகளிர் ஆணையம் அமைக்கப்பட்டிருக்கின்றது; மனித உரிமை ஆணையம் அமைக்கப்பட்டிருக்கின்றது; சிறுபான்மை மக்களுடைய மேம்பாட்டுக்காக ஆணையம் அமைக்கப்பட்டிருக்கின்றது; ஆனால், கடந்த பத்தாண்டுகளாக S.C., S.T. ஆணையம், மாநில அளவிலான ஆணையம் இதுவரை உருவாக்கப்படாத ஒரு நிலை இருக்கின்றது. நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மனம் வைத்தால், இதை நிச்சயமாக இந்த அவையிலே இந்த பட்ஜெட் கூட்டத்தொடரிலேகூட அறிவித்து, இந்தக் குறையை நீக்கிவிட முடியும். அத்தகைய அறிவிப்பை நீங்கள் செய்ய வேண்டுமாய் உங்களை நான் அன்போடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, நாங்கள் பலமுறை வலியுறுத்துகின்ற அந்த Indira Awaas Yojana என்கின்ற திட்டம். அந்தத் திட்டத்தைப்பற்றி நம்முடைய நிதிநிலை அறிக்கையினுடைய இணைப்புப் புத்தகத்திலே கொடுக்கின்றபோது, அந்த Indira Awaas Yojana என்பதை, இந்திரா மகளிர் மேம்பாட்டுத் திட்டம் என்று தவறாக மொழிபெயர்த்து இருக்கிறார்கள். Indira Awaas Yojana என்பது, வீடுகட்டுவதற்கான ஒரு திட்டமாகும். அந்தத் திட்டத்திற்கு மாநிலத்தினுடைய பங்குத் தொகை, இப்பொழுது 12 ஆயிரம் ரூபாயாக இருக்கின்றது. அதை 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, அந்த unit cost என்பதை ஒரு இலட்சம் ரூபாயாக ஆக்கவேண்டும் என்று நாங்கள் மீண்டும் மீண்டும் இந்த அவையிலே கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றோம்.



*பிற்பகல் 12-05*

இந்தியாவிலே குடிசைகள் அதிகம் நிறைந்திருக்கின்ற மாநிலமாகத் தமிழ்நாடு இருப்பது, தமிழ்நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு ஒருபோதும் பெருமை சேர்ப்பதாக இருக்காது. நாம் தொழில் துறையிலே பல மடங்கு முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். இன்றைக்கு இந்தியாவில் முதல் மாநிலமாக விளங்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றோம். அந்த நிலையிலே, இந்தக் குடிசைகளையெல்லாம் மாற்றி, கான்கிரீட் வீடுகளாக அமைத்துத் தருவதற்கு மாநிலப் பங்குத் தொகையை நீங்கள் அதிகரிக்க வேண்டுமாய் நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

சிறப்புக் கூறுகள் திட்டத்தைப்பற்றி, இதற்கு முன்னாலே பேசிய உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். இந்தச் சிறப்புக் கூறுகள் திட்டத்திற்கான நிதி மெல்ல மெல்ல உயர்த்தப்படுவது, பாராட்டப்படவேண்டிய ஒரு விஷயமாகும். அந்தச் சிறப்புக் கூறுகள் திட்டத்தை மேலாண்மை செய்வதற்காக, மேற்பார்வை செய்வதற்காக, இங்கே இருக்கின்ற ஆதி திராவிடர் நலத் துறையை, நீங்கள் Nodal Agency-யாக அமைக்க வேண்டுமென்கின்ற வழிகாட்டுதல், பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே மத்திய அரசால் வழங்கப்பட்டிருக்கின்றது; திட்டக் கமிஷனால் வழங்கப்பட்டிருக்கின்றது. அதை ஏற்று, ஆதி திராவிடர் நலத் துறையை, இந்த Special Component Plan-க்கான Nodal Agency-யாக நீங்கள் ஆக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் அமைக்கின்ற நல்ல திட்டத்தை நம்முடைய அரசு இன்றைக்கு நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையிலே, இரண்டு இடங்களிலே மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும் என்று அறிவிப்பு வந்திருக்கின்றது. அப்படி மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் அமைப்பதுபோலவே, மாவட்டந்தோறும் சட்டக் கல்லூரிகளையும் அமைத்து, இங்கே இருக்கின்ற ஏழையெளிய மாணவர்கள் வாழ்விலே ஓர் ஒளி ஏற்படுவதற்கு நீங்கள் வழிகாட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், நம்முடைய மாநிலம் மட்டுமல்ல; உலகம் முழுவதுமே அதிகம் பெருகிக் கொண்டிருப்பது நோய்களும்,

[திரு. து. ரவிக்குமார்] [2007 மார்ச் 27

குற்றங்களும்தான். ஆக, மருத்துவக் கல்லூரிகள் எந்த அளவிற்கு அவசியமோ, அந்த அளவிற்குச் சட்டக் கல்லூரிகளும் அவசியம்.

அதுபோலவே, தேசிய சட்டப் பள்ளிகள். இப்போது பெங்களூரிலே இருக்கின்றது; ஹைதராபாத்திலே இருக்கிறது. National Law School என்கின்ற அந்த அமைப்பு, I.I.T. நிறுவனத்திற்கு ஒப்பான தரத்தைப் பெற்ற ஓர் அமைப்பாக விளங்கிக் கொண்டிருக்கிறது. நாம் சட்டப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருந்தாலும்கூட, தேசிய சட்டப் பள்ளி ஒன்றைத் தமிழ்நாட்டிலே உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, மகளிர் நலன். மகளிர் நலனுக்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, இப்போது பேறுகாலத்திலே கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஆறாயிரம் ரூபாயை அள்ளித் தருகின்ற ஓர் அரசாக இருக்கின்றது. பேறுகாலத்திலே பெண்கள் இறந்துபோகிற ஒரு கொடுமை, இப்போது பெருமளவிலே குறைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இப்போது பெண்களுக்கு வருகின்ற நோய்கள், குறிப்பாக அவர்கள் கருப்பைப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிற விவரங்கள், நம்முடைய ஆய்வுகளிலே தெரிய வருகின்றன. இதற்கான காரணம், மாதவிடாய் காலங்களிலே அவர்கள் சுகாதாரமான முறையைப் பின்பற்ற முடியாத ஓர் ஏழ்மை நிலையிலே இருப்பதுதான். இதைக் கருத்திலேகொண்டு, இப்போது கிராமப் பகுதியிலே இருக்கின்ற இளம் பெண்களும், Sanitary Napkins போன்றவற்றைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றார்கள். ஆனால், விலை அதிகம் இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் அவற்றைத் தொடர்ந்து வாங்கமுடியாத ஒரு நிலை இருக்கின்றது. நாம், நம்முடைய நியாயவிலைக் கடைகள்மூலமாக, அந்த Sanitary Napkin-களையும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல், Sri Ram Industries நிறுவனம், இந்த Sanitary Napkin-களைக் குறைந்த விலையிலே தயாரிப்பதற்கான இயந்திரம் ஒன்றை உருவாக்கியிருக்கின்றது. நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக இந்த Napkin-களைத் தயாரித்தோமேயானால், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை போன்றவற்றால் நடத்தப்படுகின்ற மாணவியர் விடுதிகளில், இந்த Sanitary Napkin-களை இலவசமாக நாம் அவர்களுக்குக் கொடுக்க முடியும். இதன்மூலமாக, கருப்பைப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிற நம்முடைய மகளிரை நாம் காப்பாற்ற முடியும். இந்தத் திட்டத்தையும் நீங்கள் செயல்படுத்த முன்வர வேண்டுமென்று நான் உங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.



2007 மார்ச் 27] [திரு. து. ரவிக்குமார்]

இப்போது அண்ணா பல்கலைக்கழகம் பிரிக்கப்பட்டு, பல்வேறு இடங்களிலே பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. தொழில் துறைக்கு நாம் கொடுக்கின்ற முக்கியத்துவம்போலவே பிற துறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். குறிப்பாக, இசை என்பது, தமிழ்நாட்டினுடைய வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்று. இப்போது இசை, மக்களுடைய பண்பாட்டினுடைய ஆணி வேராக இருக்கின்றது. அப்படியிருக்கின்ற அந்த இசையை வளர்ப்பதற்கு, அந்த இசைத் துறையிலே ஈடுபடுகிறவர்களை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக, சென்னையிலே இருக்கின்ற இசைக் கல்லூரியை மேம்படுத்தி, இசைக்காக ஒரு பல்கலைக்கழகத்தைத் தமிழ்நாட்டிலே நாம் உருவாக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கோரிக்கையாக முன்வைக்கின்றேன்.

பிற்பகல் 12-10

கலைமாமணி விருதுகள், இப்போது தமிழ்நாட்டிலே வழங்கப்படுகின்றன. பல்வேறு துறைசார்ந்த கலைஞர்களுக்கு அந்த விருதுகள் வழங்கும்போது, சிலம்பக் கலையிலே ஈடுபட்டிருக்கின்ற கலைஞர்கள் யாருக்கும் இதுவரை கலைமாமணி விருது வழங்கப்படாமல் இருக்கின்றது. சிலம்பம் என்பது தமிழர்களுடைய வீர விளையாட்டு மட்டுமல்ல; அது ஒரு மிக அற்புதமான கலை. அண்மையிலே இங்கே 'சென்னை சங்கமம்' நடந்தபோது, முதியோர்கள்கூட அந்தச் சிலம்பக் கலையை அற்புதமாக நடத்திக் காட்டினார்கள். *(மணியடிக்கப்பெற்றது)* ஆக, கலைமாமணி விருது, சிலம்பக் கலைக்கும் வழங்கப்படவேண்டும். அவர்களையும் உள்ளடக்கிக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

உச்ச நீதிமன்றம் புதிய போலீஸ் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மாநில அரசுகளுக்கெல்லாம் வழிகாட்டுதல் தந்திருக்கின்றது. மார்ச் மாதம் 31 ஆம் தேதி அதற்கான கெடு என்று உச்ச நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டிருக்கின்றது. போலீஸ் கமிஷனை உருவாக்கிய நம்முடைய அரசு, அந்தப் போலீஸ் சட்டத்தை உருவாக்குகின்றபோது அந்தச் சட்டத்திலே சேர்க்கப்படவேண்டிய அம்சங்கள் என்னென்ன என்பதை ஆய்வு செய்வதற்காக இன்றைக்கு சமூகத்திலே அதிகம் பாதிக்கப்படுகின்ற ஆதி திராவிட மக்கள், பெண்கள், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களுடைய பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து, அவர்களுடைய ஆலோசனைகளையும் கலந்து, அந்தப் புதிய போலீஸ் சட்டத்தை உருவாக்கவேண்டும்.

அதுபோலவே, நம்முடைய மூத்த குடிமக்கள்—முதியோர்கள் என்று இப்போது சொல்லக்கூடாது—அவர்களை senior citizen என்று அழைக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த மூத்த குடிமக்களுடைய பாதுகாப்பிற்காக மாநில அளவிலேயே நாம் ஒரு சட்டத்தை உருவாக்க முடியும். இப்போது மத்தியிலே அதற்காக ஒரு மசோதா கொண்டு வரப்பட்டிருந்தாலும்கூட, மாநில அளவில் நாம் அந்த மூத்த குடிமக்களைப் பாதுகாப்பதற்காக புதிய சட்டம் ஒன்றைக் கொண்டுவர வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எந்த அளவிலே இங்கே கொண்டு வரப்பட வேண்டுமென்று குடியரசுத் தலைவர் அவர்கள் சொன்னாரோ, அந்த வழிகாட்டுதலை இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் மேற்கோள் காட்டியிருக்கின்றோம். இப்போது நம்முடைய மாநிலத்திலே வேளாண் துறையைச் சார்ந்திருக்கின்ற மக்களுடைய தொகை, ஏறத்தாழ 56 விழுக்காடாக இருக்கின்றது. ஆனால், விளைநிலங்களுடைய பரப்போ மிக மிகக் குறைந்துகொண்டே வருகின்றது. ஆக, இந்த விளைநிலங்களைச் சார்ந்திருக்கின்ற மக்கள்தொகை அதிகரிக்க அதிகரிக்க, வேளாண் துறையிலே பிரச்சினை, சிக்கல் என்பது அதிகமாகிக் கொண்டுதான் இருக்கும். இத்தகைய ஒரு நிலையின் காரணமாகத்தான் 19 ஆம் நூற்றாண்டிலே ஏராளமான பஞ்சங்கள் வந்தன என்பதை புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் தன்னுடைய ஆரம்பகட்ட ஆய்வுரையிலே மிக அற்புதமாக விளக்கிக் காட்டியிருக்கின்றார்கள். இன்றைக்கு அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், அந்த நிலங்களைச் சார்ந்திருக்கின்ற மக்கள்தொகையைக் குறைத்தாக வேண்டும். அவர்களைச் சேவை மற்றும் தொழில் துறையை நோக்கித் திருப்பிவிட்டாலொழிய, இந்த வேளாண் துறையின் பிரச்சினைகளை, சிக்கல்களை நாம் தீர்க்கவே முடியாது. ஆக, இன்றைக்குச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வந்தால், இந்த வேளாண் துறையைச் சார்ந்திருக்கின்ற மக்கள் புதிய வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கேதுவான முறையிலே அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படுமேயானால் நிச்சயமாக அது தொழில் துறையை முன்னேற்றுவதாக மட்டுமல்லாமல் வேளாண் துறையினுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவும் இருக்கும். அந்தவிதத்திலே அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைந்தால் அதை வரவேற்கிற முதல் இயக்கமாக எங்களுடைய இயக்கம் இருக்கும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.



அடுத்து, இப்போது retail trade, சில்லறை வர்த்தகத்திலே பன்னாட்டு நிறுவனங்கள் நுழைகின்றன என்று சொல்கிறார்கள். இந்த retail trade-லே பன்னாட்டு நிறுவனங்கள் நுழைந்தாலும், நம்முடைய ஏழை எளிய வியாபாரிகள் அதனால் பெரிய அளவிலே பாதிக்கப்படமாட்டார்கள் என்பதுதான் உண்மை. ஏனென்று சொன்னால், அவர்கள் பெரிய நகரங்களில் மட்டும்தான் தங்களுடைய கடைகளைத் திறக்க முடியும். சிறு நகரங்களுக்கு அவர்கள் வரவேமாட்டார்கள். அங்கே இருக்கின்ற காய்கறி கடைக்காரர்களுக்கு, அங்கே இருக்கின்ற மளிகைக் கடைக்காரர்களுக்கு, இந்தப் பன்னாட்டு நிறுவனங்களால், அது Reliance-ஆக இருந்தாலும், Wal-mart-ஆக இருந்தாலும், அவர்களால் எந்தவிதத்திலும், ஒருபோதும் ஆபத்து வராது. அப்படிச் சொல்வது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்படி வருகின்ற நிறுவனங்களிலே நாம் போய் பார்த்தோமேயானால், நாம் சந்தையிலே வாங்குகின்ற விலையைவிட அவர்கள் மலிவாகப் பொருட்களைக் கொடுக்கிறார்கள் என்னும்போது அத்தகைய கடைகள் திறக்கப்படுவது சரிதானே என்றுதான் மக்கள் நினைப்பார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆக, இந்தப் பிரச்சினைகளை நாம் மக்களுடைய நோக்கில் இருந்து பார்த்து, இந்தப் புதிய நிறுவனங்கள் வருவதனால் எந்தவிதத்திலும் சிறு வியாபாரிகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்கின்ற உண்மையை உணர்ந்து, இந்தப் பிரச்சினையை அணுக வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–15

அடுத்ததாக, கூடன்குளம் அணுமின் நிலையத்திற்காக, 26 ஆயிரம் கோடி ரூபாய் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதுபற்றி நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கூடன்குளம் அணுமின் நிலையத்திலே அமைக்கப்படவிருக்கின்ற அணு உலைகளுக்கு பேச்சிப்பாறையிலிருந்து தண்ணீர் எடுக்கப்படும் என்று சொன்னார்கள். பின்னால் அது மாற்றப்பட்டு, இப்போது கடல் நீரைச் சுத்திகரித்து அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்திக்கொள்வோம் என்று அறிவித்திருக்கின்றார்கள். அப்படிக் கடல் நீரைச் சுத்திகரிக்கின்ற அந்த அமைப்புகளை ஏற்படுத்தும்போது, Desalination Plant-களை ஏற்படுத்துகின்றபோது, அதனால் ஏற்படுகின்ற சுற்றுச்சூழல் கேடுகள் என்ன என்பதுபற்றி, மீண்டும் புதிதாக Environmental Impact Assessment Report என்கின்ற—E.I.A. என்று சொல்லப்படுகின்ற—அந்த Report சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கோரிக்கை

விடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அந்த அச்சத்தை நீக்கும்விதமாக, புதிதாக E.I.A. அமைப்பதற்குத் தமிழக அரசு வலியுறுத்த வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதிப்புக் கூட்டு வரியிலே, பல்வேறு பொருட்களினுடைய வரிகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** அதிலே குறிப்பாக, எலும்புத் தூளுக்கு– இப்போது திருநெல்வேலி மாவட்டத்தில் குளம்புகளுடைய தூளை விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய இறைச்சிக் கடைகளிலே, தூக்கி எறியப்படுகின்ற எலும்புகளையெல்லாம் சேகரித்து எலும்புத் தூள் தயாரிக்கின்ற வேலையிலே, பெரும்பாலும் சிறுபான்மை இன மக்கள்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த எலும்புத் தூளுக்கு வரிவிலக்கு வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள். அவர்களுடைய அந்தக் கோரிக்கையைப் பரிவோடு பரிசீலித்து, அந்த எலும்புத் தூளுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமாய் நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மீனவ மக்களுடைய பிரச்சினை. கச்சத் தீவுப் பகுதியிலே மீனவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டு இறக்கின்ற பிரச்சினையைப்பற்றி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆழ்ந்த வருத்தத்தோடு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதை நாம் அறிவோம். கச்சத் தீவு என்பது தமிழ்நாட்டிலேயிருந்து 18 கடல் மைல் தொலைவிலே இருக்கிறது என்பதை நாம் எல்லாம் அறிவோம். 9 கடல் மைல் தொலைவு வரையிலே பாறைகள் நிறைந்து இருக்கின்ற காரணத்தினாலே, அங்கே மீன்பிடிக்க முடியாத நிலை இருக்கிறது. 13–வது கடல் மைலிலே சர்வதேச எல்லை தொடங்குகிறது. இதற்கு இடையிலேதான் அவர்கள் மீன்பிடித்தாக வேண்டும் என்கின்ற ஒரு இக்கட்டான நிலையிலே மீனவ மக்கள் அந்த எல்லையைத் தெரியாமல் தங்களை அறியாமலேயே தாண்டிவிடுகிற ஒரு நிலை இருக்கிறது. அப்படிப் போகிறவர்களைச் சுட்டுக்கொல்லுகின்ற, நூற்றுக்கணக்கான மீனவர்களைச் சுட்டுக்கொல்லுகின்ற ஒரு நிலையை நாம் இப்போது பார்க்கிறோம். அதற்கு நிரந்தரத் தீர்வு காணும்விதமாக அந்தக் கச்சத் தீவை மீண்டும் நாம் நமது நாட்டிற்கே உரிமையாக்குகின்ற ஒரு தீர்மானத்தை இந்தப் பேரவையிலே இயற்ற வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக்கொண்டு,



என்னுடைய தொகுதி சார்ந்த ஒருசில கோரிக்கைகளை மட்டும் ஒரு நிமிடத்திலே வைத்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிவிட்டது; ஒரு வரியிலே சொல்லி முடியுங்கள்.

**திரு. து. ரவிக்குமார்:** என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற வீராணம் ஏரியிலே படகு குழாம் அமைப்பதற்கும், நந்திமங்கலம், நாஞ்சலூர், அக்கரை ஜெயங்கொண்டம்பட்டினம் போன்ற பகுதிகளிலே பாலங்கள் அமைக்க வேண்டுமென்றும், நான் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே மாவட்ட ஆய்விற்கு வந்தபோது அவர்களிடத்திலே மனு கொடுத்திருக்கிறேன். அவற்றைப் பரிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். வல்லம்படுகையிலே முதலைப் பண்ணை ஒன்றை அமைக்க வேண்டுமென்றும், கொள்ளிடம் ஆற்றிலே தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்றும் இலால்பேட்டையிலே பெரும்பகுதி இஸ்லாமிய மக்கள் இப்போது வெற்றிலைக் கொடிக்கால் அமைத்து இருக்கிறார்கள்; அந்த மக்களுக்குப் பயன்படும்விதத்திலே அவர்களுக்குக் கொடிக்கால் பயிற்சி நிலையம் ஒன்றை அங்கே அமைக்க வேண்டுமென்றும், குமராட்சிப் பகுதியிலே மகளிர் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டுமென்றும், அக்கரை ஜெயங்கொண்டம்பட்டினத்துக்குக் கொள்ளிடத்திலே ஒரு தரைப் பாலத்தை அமைத்து அந்த மக்களுடைய இன்னலைக் களைய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

***திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் விடிவெள்ளியாய், விவேகத்தின் இருப்பிடமாய், துணிச்சலின் பிறப்பிடமாய்த் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) கிளைக் கழகச் செயலாளராகவும், அம்மா பேரவை ஒன்றியச் செயலாளராகவும், ஒன்றிய கழகச் செயலாளராக மட்டுமல்லாமல், விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை திருவிடைமருதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக்கி, சான்றோரும், ஆன்றோரும் சரித்திரம், சகாப்தம் படைத்திட்ட தமிழகச் சட்டமன்றத்தில் இன்று நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசும் மாபெரும் வாய்ப்பினை உருவாக்கித் தந்த தங்கத் தாரகை டாக்டர்

புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இதயபூர்வமான நன்றியை இந்த மாமன்றத்திலே பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த, திருவிடைமருதூர் தொகுதி மக்களுக்கும், என்னை ஈன்ற தாய், தந்தைக்கும், கூட்டணி கழகத் தோழர்களுக்கும், கழகப் பொறுப்பாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னைத் தேர்ந்தெடுத்த திருவிடைமருதூர் தொகுதி மக்களின் கோரிக்கையை முன்வைக்கிறேன்.

*பிற்பகல் 12–20*

தஞ்சை மாவட்டத்திலிருந்து சென்னைக்கு செல்லும் சாலையில் அமைந்துள்ள கீழ் அணைக்கரை, லோயர் அணைக்கட்டு பாலம் கட்டப்பட்டு 171 ஆண்டுகள் முடிவடைந்துள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், 1836 ஆம் ஆண்டில் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அது மிகப் பழமையானதாகும். பொது மக்கள் நலன் கருதி புதிய பாலம் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

எனது தொகுதியில், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஆகிய இரண்டு காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுகிறேன்.

திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தில் 44 ஊராட்சிகள், ஒரு பேரூராட்சி உள்ளடங்கிய பகுதிக்குப் புதிய தீயணைப்பு நிலையமும், திருவிடைமருதூரில் இயங்கிவரும் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடமும் கட்ட வேண்டும்.

திருப்பனந்தாள் பேரூராட்சியில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட வேண்டும். கதிராமங்கலம் மையப் பகுதிக்குப் புதிய காவல் நிலையம் உருவாக்க வேண்டும். பந்தநல்லூர் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். சுவாமிமலையிலிருந்து வில்லியநல்லூர் வரை உள்ள பூம்புகார் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆடுதுறையில் இயங்கிவரும் தோட்டக் கலை ஆராய்ச்சிப் பண்ணையை விரிவுபடுத்த வேண்டுமாய்ப் பொதுமக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதி கீழசூரியமலை–திருலோகி வழியாக திருப்பனந்தாள் செல்லும் சாலையை அகலப்படுத்த வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.



ஆலவேலி–செருகுடி இணைப்புச் சாலையில் கனரக வாகனங்கள் செல்லக்கூடிய பாலம் அமைக்க வேண்டும்.

பந்தநல்லூர்–குத்தாலம் சாலையில் பழவாற்றில் பழுதடைந்துள்ள பாலத்தை புதிய பாலமாகக் கட்ட வேண்டும்.

திருபுவனம் பட்டுக் கூட்டுறவு சொசைட்டியில் நெசவாளர்கள் வாங்கிய கடனை நெசவாளர்கள் நலன் கருதி தள்ளுபடி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பனந்தாள்–பந்தநல்லூர் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. தார்ச் சாலையைப் புதுப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

திருபுவனம் பட்டுக் கூட்டுறவு சொசைட்டியில் கடந்த ஓராண்டாக நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு தரப்படவில்லை. உடனடியாக கூலியை உயர்த்தித் தருமாறு தொழிலாளர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மணலூர் ஊராட்சியில் குமணன்துறை கிராமத்திற்குச் செல்லும் காவிரி நடைப் பாலம் பழுதடைந்துள்ளது. இந்த நடைப் பாலம் வழியாகச் செல்லும் அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளின் மாணவ மாணவிகள் எந்த நேரத்திலும் அந்தப் பாலத்தால் பழிவாங்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. அதற்குப் புதிய பாலம் அமைத்துத் தர மாணவ மாணவிகளின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அணைக்கரை ஆய்வு மாளிகை, சுற்றுலாப் பயணிகளும், அரசியல் பிரமுகர்களும், அதிகாரிகளும் தங்க முடியாமல் உள்ளதால் புதிய கட்டடம் அமைத்துத்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 10 சட்டமன்றத் தொகுதிகள் அடங்கியுள்ளன. 3 தொகுதி மக்கள், மாவட்டத் தலைநகரமான தஞ்சைக்குச் செல்வதாக இருந்தால், 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக பயணம் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உள்ளிட்ட எல்லாத் தலைமை அலுவலகங்களும் அங்கேதான் இருக்கின்றன. மாவட்டத் தலைமை மருத்துவமனையும், மருத்துவக் கல்லூரியும் மற்றும் பெரிய அரசு மருத்துவமனைகளும் தஞ்சை நகரில்தான் இருக்கின்றன. அவசர மருத்துவத் தேவையை நிறைவேற்றும் வகையில்கூட எந்தவிதமான வசதிகளும் எங்களுடைய பகுதியில் இல்லை. எனவே, கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம்

ஒன்று அமைக்கப்படுவது, எல்லாத் தேவைகளையும் ஓரளவு நிறைவு செய்வதற்கு ஏற்றதாக இருக்கும். நிர்வாகத்தின் வசதியைக் கருதியும், இந்த நடவடிக்கை எல்லோராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிதிநிலை அறிக்கை பக்கம் 4–ல், பத்தி 10–ல், '.... 10 இலட்சம் விவசாயிகளுக்கு. பயிர்க் காப்பீடு செய்துகொள்ள நிதியுதவி அளிக்கப்படும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 3 கோடிக்கு மேல் இருக்கும் விவசாயிகளில் 10 இலட்சம் பேருக்கு மட்டும் பயன்படுவதாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது. அதிலும் ரூபாய் 15 கோடி மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 45 ஆயிரம் கோடி அளவுக்குத் தயாரிக்கப்பட்டுள்ள வரவு–செலவுத் திட்டத்தில் 15 கோடி ரூபாய் என்பது எந்த மூலைக்கு என்பதை இந்த அரசு எண்ணிப் பார்க்க வேண்டும். இது கடலில் கரைக்கப்பட்ட பெருங்காயமாக மாறிவிடாமல், பெரும்பாலான விவசாயிகளுக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–25*

என்னுடைய திருவிடைமருதூர் தொகுதி, காவிரி நீர்ப்பாசனத்திற்கு உட்பட்ட தொகுதி என்ற போதிலும் நிலத்தின் மட்டத்தைவிட பாசன வாய்க்கால்கள் மற்றும் காவிரி ஆற்றில், இரண்டு அடி முதல் 3 அடி வரை கீழே தண்ணீர் ஓடிக் கொண்டிருப்பதால் எங்களுடைய பகுதிக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டு பயிரிடுவதற்கான வாய்ப்பே இல்லை; நிலத்தடி நீரைக் கொண்டுதான் பயிரிட்டு வருகிறோம். காவிரியின் குறுக்கேயும், கிளை நதிகளிலேயும் ஏராளமான அணைகளைக் கர்நாடக மாநில அரசு கட்டி இருப்பதாலும், இங்கு வரவேண்டிய தண்ணீரைத் தடுத்து நிறுத்திவிட்டதாலும், நீர்வரத்து குறைந்து, அவர்கள் பயன்பெற முடியாத பரிதாப நிலை ஏற்பட்டுவிட்டது. கடவுள் இருக்கிறாரா, இல்லையா என்று கேட்டு சண்டையிட்டுக்கொள்வதைப் போலத்தான், காவிரியிலேயிருந்து நீர் கிடைக்குமா, கிடைக்காதா என்று கேட்டு அடித்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. 'கடவுள் இருப்பதும், இல்லை என்பதும் கவைக்கு உதவாத வெறும் பேச்சு, கஞ்சிக்கு இல்லாதவர் கவலை தீரவே கருத வேண்டியதை மறந்தாச்சு, காலம் வீணாச்சு' என்று பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் சுட்டிக்காட்டிய நிலையில்தான் இன்னும் நாம் இருந்துவருகிறோம்.

எங்களுடைய பகுதியில் போதிய நீர்வரத்து இல்லாததால், நெல்லுக்குப் பதிலாக அதிகக் கரும்பு பயிரிடப்பட்டு வருகிறது. ஆனால்,



அந்தக் கரும்பை அரைவைக்குப் பயன்படுத்துவதற்குக் கூட்டுறவுத் துறையில் மணல்மேட்டில், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி ஆலையும் இயங்கி வருகிறது. தனியார் துறையில், கோட்டூரில் ஸ்ரீஅம்பிகா சர்க்கரை ஆலையும், திருமண்டலக்குடியில் திரு ஆரூரான் ஆலையும் இயங்கி வருகின்றன. ஆனால், தற்போது 14 மாதங்களாகியும். கரும்பைக்கூட வெட்டி எடுத்துச் செல்வதற்கான அனுமதியையே இந்த ஆலைகள் தரவில்லை. எனவே, கரும்பு வெட்டப்படாத நிலையில், தட்டையாகக் காய்ந்துபோய்க் கொண்டிருக்கிறது. கரும்பை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கான வாடகையைத் தனியார் ஆலைகள் ஏற்க மறுக்கின்றன. வட மாநிலங்களில்கூட, கோதுமை பயிரிடுவோருக்கு உதவும்வகையில், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.100 உயர்த்திக் கொடுக்கப்படும் என்று மத்திய அரசு இப்போது அறிவித்துள்ளது. தற்போது இந்த அரசுகூட, கோதுமைமீதான விற்பனை வரியை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைப்பதாக அறிவித்துள்ளது. ஆனால், இங்கு கோதுமை பயிரிடப்படுவது இல்லை. ஆகவே. விவசாயிகள் யாரும் இங்கு இதனால் பயன்பெறப் போவதில்லை. வியாபாரிகளுக்கு வேண்டுமானால் பயன்படலாம். ஆனால், இங்குள்ள கரும்பு விவசாயிகளுக்குப் பலனளிக்கும் வகையில் எந்த அறிவிப்பும் வரவில்லை. பக்கம் 22, பத்தி 58–ல் குறிப்பிடப்பட்டுள்ள, பன்னாட்டு நிறுவனங்களின் வருகையால் எங்கள் பகுதிக்கு எந்தவிதப் பயனும் இல்லை. எனவே, இத்தகைய பின்தங்கிய பகுதியில் உள்ள மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய திட்டங்களோ, அறிவிப்புகளோ இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை.

கரும்புச் சக்கையைக் கொண்டு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்புகள் எங்கள் தொகுதியில் அதிகமாக இருக்கின்றன. அதேபோன்று வேளாண் தொழில் சார்ந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்கான வாய்ப்புகளும் இருக்கின்றன. தற்போது ஆடுதுறையில் மட்டுமே நெல் ஆராய்ச்சிப் பண்ணை இயங்கி வருகிறது. அத்துடன் வேளாண் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகக் கோரிக்கை வைக்கிறேன்.

பக்கம் 5, பத்தி 12–ல், '.... 1.15 கோடி பயனாளிகள் குடும்பங்கள் கண்டறியப்பட்டு, 57.30 இலட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே புதிய திட்டத்தின்மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடையாள அட்டைகளே பெறாத மற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் புதிய திட்டத்தின்மூலமாக எந்தப் பலனையும் அடைய முடியாது. ஏற்கெனவே பெறறுவந்த

உரிமைகளையும் பறி கொடுத்து நிற்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 1.37 கோடி குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏற்கெனவே பயனடைந்து வந்தார்கள். அவர்களில், சுமார் 79 இலட்சத்து 70 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், இருந்ததையும் இழந்துவிட்டு, ஏங்கித் தவிக்க வேண்டிய பரிதாப நிலையில் இருக்கிறார்கள்.

இதனை ஒரு சாதனையாக இந்த அரசு கருதுகிறதா என்று தெரியவில்லை. தமிழர்களின் உயிர்நாடி...

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அ.தி.மு.க. ஆட்சியிலே உழவர் பாதுகாப்பு அட்டை, ஒரு கோடியே 37 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டதாக ஒரு தவறான தகவலைத் தருகின்றார். இந்தத் திட்டம் தலைவர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்ட திட்டம். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும், 4 ஆண்டுக் காலம் இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அதேசமயத்திலே இன்று 72 இலட்சம் குடும்பங்கள், விவசாயக் குடும்பங்களின் குடும்ப அட்டையிலே விவசாயிகள் என்று குறிப்பிட்டிருக்கின்ற அத்தனை பேருக்குமே கழக அரசால் இன்றைக்கு அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர் தெரிவித்ததைப்போல ஒரு கோடியே 37 இலட்சம் குடும்பங்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியிலே வழங்கப்படவில்லை. அவர்களுடைய ஆட்சியிலே ஏறத்தாழ 60 இலட்சம் குடும்பங்களுக்குத்தான் அவசர அவசரமாக அட்டைகளை வழங்கினார்களே தவிர, அவர் தெரிவித்ததைப்போல, ஒரு கோடியே 37 இலட்சம் குடும்பங்கள் கண்டறியப்படவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரதி மோகன், பேசுங்கள். (குறுக்கீடு) பாண்டுரங்கன் என்ன வேண்டும்? (குறுக்கீடு) திரு. பாண்டுரங்கன், என்ன சொல்ல வேண்டும்? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** (குறுக்கீடு) இருங்கள் சொல்கிறேன். ஒரு கோடியே 27 இலட்சம் உறுப்பினர் என்று பாரதி மோகன் சொல்கிறார். ஆனால், கழக அரசு அறிவித்திருப்பது, 72 இலட்சம்



குடும்பங்களுக்கு இன்றைக்கு அட்டை வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு கோடி சொச்சம் பேர் இடம் பெற்றிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? யார் பேசுவது? திரு. செங்கோட்டையன், நீங்கள் பேசுகிறீர்களா அல்லது பாரதி மோகன் பேசுகிறாரா? (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையில் கொடுத்ததற்கு மாறாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அறிக்கையிலே 57 இலட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 72 இலட்சம் என்று இங்கே தவறான தகவலைத் தருகிறார்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** இல்லை, தவறான தகவலைச் சொல்லவில்லை. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 57 இலட்சம் குடும்பங்கள் என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பது, வழங்கப்பட்டிருப்பது பற்றியது. (குறுக்கீடு) இருங்கள், சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். (குறுக்கீடு) நான் தெளிவாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன், சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** அரசாங்கத்தால் 72 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்ல வருகின்றேன். (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்ல வருகின்றேன். (குறுக்கீடு) நான் சொல்ல வருகின்றேன், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) இருங்கள். 57 இலட்சம் குடும்பங்களுக்கு இதுவரை வழங்கப்பட்டிருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் விவசாய சமூகப் பாதுகாப்புத் திட்டத்திலே 57 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு இதுவரையிலும் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுதான் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், மொத்த அட்டைகள் வழங்குவதற்காக அச்சடிக்கப்பட்டிருப்பது, 72 இலட்சம் குடும்பங்கள் கண்டறியப்பட்டிருக்கிறது. இன்னும் பாக்கியுள்ளவை வழங்கப்படவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் 72 இலட்சம்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2007 மார்ச் 27

குடும்பங்கள் கண்டறியப்பட்டு, 57.30 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நீங்கள் அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் 1.15 கோடி பயனாளிகள் குடும்பங்கள் கண்டறியப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும். ஒரு திருத்தம். அதிலே சொல்லியிருப்பது, (குறுக்கீடு) இருங்கள். அவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஏன் அவசரப்படுகிறீர்கள்? நான் சொல்கிறேன், அதற்கு விளக்கம் தருகிறேன். அவர் சொல்லியிருப்பது, ஒரு கோடியே சொச்சம் என்பது, உறுப்பினர்களுடைய எண்ணிக்கை. குடும்பங்களுடைய எண்ணிக்கை அல்ல. ஆமாம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நிதிநிலை அறிக்கையில் 1.15 கோடி பயனாளிகள் குடும்பங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய, உறுப்பினர்கள் என்று அதிலே சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, நீங்களே பாருங்கள். அதிலே குடும்பங்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது; உறுப்பினர்கள் என்று சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வரியை முழுமையாகப் படியுங்கள். இத்திட்டத்தின்கீழ் 1.15 கோடி பயனாளிகள் குடும்பங்கள் கண்டறியப்பட்டு 57.30 இலட்சம் குடும்பங்களுக்கான அடையாள அட்டைகள் (குறுக்கீடுகள்) அதைத்தான் சொல்கிறோம். 57 புள்ளி. . . (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** அமைதியாக உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** சார், நான் சொல்வதைக் கேட்கச் சொல்லுங்கள்; கோரஸ் பாடுவதாக இருந்தால் பேச வேண்டாம். (குறுக்கீடு)



2007 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி மோகன், பேசி முடியுங்கள் சீக்கிரம்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** இல்லை, தெரியவில்லை என்றால் சொல்லுங்கள்; சொல்கிறேன். 57 புள்ளி. . . (குறுக்கீடுகள்), சொல்கிறேன் கேளுங்கள். (குறுக்கீடு) சார், முக்கியமாக எங்களுடைய குறிப்புகளிலே, அவர் சொல்கிற மாதிரி கார்டு அச்சடிப்பது என்பது வேறு; இவ்வளவு family என்று identify பண்ணியிருப்பது அது வேறு. அவ்வாறு identify பண்ணியிருக்கிற family 1.15 கோடி, வழங்கியிருப்பது 57.30 இலட்சம். மீதி வழங்க இருக்கிறது என்பது உண்மை. ஆக, இது குடும்பங்கள்; எண்ணிக்கை கிடையாது. குடும்பங்கள் என்றுதான் சொல்கிறேன். எண்ணிக்கை கிடையாது. (குறுக்கீடுகள்) பயனாளிகள் கண்டறியப்பட்டு- (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பேசுகிறோம் இல்லையா? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக உட்காருங்கள், சண்முகம், திரு. சிவி. சண்முகம், (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. சண்முகம், திரு. அக்ரி, உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் கொறடா பேசுகிறார், நீங்கள் ஏன் பேசுகிறீர்கள்? மற்ற உறுப்பினர்களை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். எல்லோரும் ஏன் கத்துகிறார்கள்? திரு. அக்ரி, உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், அமைதியாக இருங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அங்கே போய் உட்கார்ந்துவிட்டார்கள், பாருங்கள். (குறுக்கீடு)

[2007 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன், சும்மா ஏன் போட்டுத் தூண்டுகிறீர்கள்? உட்காருங்கள், அப்படியே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 1.15 கோடி பயனாளிகள் குடும்பங்கள் கண்டறியப்பட்டிருக்கின்றன. அவற்றிலே வழங்கப்பட்டிருப்பது 57.30 இலட்சம் குடும்பங்கள். அவர் இதுவரையிலே கார்டு தயாரிக்கப்பட்டிருப்பதுதான் 73 இலட்சம் என்று சொல்லியிருக்கிறார். தயாராகியிருப்பது; அதுதான் உண்மை. புள்ளிவிவரக் கணக்கின்படி அதுதான் நடந்திருக்கிறது. ஆகவே, 1.15 கோடி பயனாளிகள் குடும்பங்களுக்கு அவற்றிலே இருக்கிற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். அதுதான் உண்மை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள், சீக்கிரம். நான் சொல்லுகிறேன், கேளுங்கள். Time வேண்டும். உங்கள் உறுப்பினர் பேசுகின்ற time-தான் கடைசியில் போகும். திரு. பாரதி மோகன், பேசுங்கள்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** தமிழர்களின் உயிர்நாடிப் பிரச்சினையில் தன் உடலை வருத்தி, ஒரு சொட்டு நீர்கூட அருந்தாமல் தமிழகத்தின் விடிவெள்ளி, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்ணா நோன்பு இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முழுவதும் இலட்சக்கணக்கானோர் உண்ணா நோன்பு இருந்தும், இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியீடு செய்வது குறித்து, இந்த அரசு முரண்பாடான தகவல்களை அளிப்பது தமிழக மக்களுக்கு எதிரான ஒன்று. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை ஒரு முறை ஆட்சியில் இருந்தபோது, முதல்வராக இருந்து, வேனை நிறுத்திக்கொண்டும் உண்ணாவிரதம் இருந்தார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.



2007 மார்ச் 27]

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுடைய ஜீவாதாரப் பிரச்சினையாக இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினைக்கு, உண்ணாவிரத்தை மேற்கொண்டு, தமிழ்நாட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குகின்ற வகையில் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறபொழுது, இதையே கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், துணிந்து கர்நாடக மாநிலத்தையும், மத்திய அரசையும் வாதாடி பெற முடியாமல் இன்றைக்கு இங்கே அமர்ந்து கொண்டிருக்கிற இவர்களுக்குச் சுட்டிக்காட்டுகின்ற வகையிலேதான் மாண்புமிகு அம்மா அவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்களே தவிர, இவர்களைப் போல கோழை அல்ல அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Right, நீங்கள் முடியுங்கள், திரு. பாரதி மோகன் ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** உறுப்பினர் அப்பாவு சபையில் பேச அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டபோது மிகவும் அருமையாகப் படித்தார், எழுதிக் கொடுத்ததை. ஆனால், பேரறிஞர் அண்ணா சொன்னதுபோல், ஒரு விரலை நீட்டி... (குறுக்கீடுகள்) ஒரு விரலை நீட்டிக் குற்றம் சாட்டுகிறபோது, உன்னை நோக்கி மூன்று விரல்கள் குற்றம் சொல்வதைக் கவனிக்க வேண்டும் என்பதை அறியாத உறுப்பினர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரதி மோகன், நீங்களும் எழுதி வைத்துக்கொண்டுதான் வாசிக்கிறீர்கள். அது முறையல்ல. அது எதற்கு? (குறுக்கீடுகள்) Time ஆகிவிட்டது. முடியுங்கள். உங்கள் time-தான் cut-ஆகப் போகிறது, முடியுங்கள். (குறுக்கீடுகள்) முடியுங்கள், முடியுங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 12–40

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** பக்கம் 22-ல், பத்தி 58-ல் குறிப்பிட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்களின் வருகை, இந்தத் தமிழகத்துக்கே பயன்படாது. இந்த பட்ஜெட் தமிழக மக்களுக்கு நாமம் செலுத்தி இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது). (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்தாகிவிட்டது. அவர் முடித்துவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் ஏன் கத்துகிறீர்கள்? முடித்தாகிவிட்டது. அவர் முடித்துவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** ஒரு விளக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்பொழுது, அவருடைய தொகுதியில் அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தையும், நாகை மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய பந்தநல்லூர்-குத்தாலம் இடையேயுள்ள பழவாறு பாலம் கட்டப்பட வேண்டும் என்று கூறினார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞருடைய அரசு, இப்போது அதற்குரிய நடவடிக்கையை எடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மாற்றுப் பாதையும் அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பாலம் இடிக்கப்பட்டு புதிய பாலம் விரைவில் கட்டப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்ற பாலங்களைப்பற்றிக் குறிப்பிட்டார். டெல்டா பகுதிக்கு என்று நம்முடைய மாண்புமிகு பட்டுக்கோட்டை தொகுதியினுடைய உறுப்பினர், ஏற்கெனவே குறிப்பிட்ட காரணத்தினால், அந்தப் பகுதியை ஏற்கெனவே நான் ஆய்வு செய்திருக்கிறேன். அதற்குரிய பணிகளும் இப்பொழுது வலுவிழந்த பாலங்கள், குறுகிய பாலங்கள் என்றும் பட்டியல் எடுக்கப்பட்டுள்ளது. அவையும் விரைவில் அமைவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய ஒப்புதல் பெறப்படும். ஏற்கெனவே அந்த மாவட்டத்தில் நான் .ஆய்வுப் பயணத்திற்குச் சென்றிருக்கிறேன். அங்கேகூட எதையும் நம்முடைய உறுப்பினர் குறிப்பிடவில்லை. ஆனால், தற்போது குறிப்பிட்டிருக்கின்றார். நிச்சயம் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்.

***திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பொன்விழா நாயகர், தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர், செம்மொழி கொண்டோன், எங்கள் தமிழ்த் தாய், முதல்வர்களுக்கெல்லாம் முதல்வராக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) கலைஞரின் உற்ற தோழராய் நட்பிலக்கணத்தின் உதாரணமாய், அரசியல் சான்றாண்மையோடு நடைபோடும், எதிரிகளையும் வாயடைக்கச் செய்துவிட்ட சிறந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களே, தந்தை வழி நின்று தமிழக அரசியலில் தனி முத்திரை பதித்து



உழைப்பின் சிகரமாய் உழைத்திடும் ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரும், இளைஞர்களின், இல்லை, இல்லை, அனைத்துத் தரப்பு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாய்த் திகழும் தளபதி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, அரசு அலுவலர்களே, பத்திரிகையாளர்களாய், பார்வையாளர்களாய் இம்மாமன்றத்தில் வீற்றிருக்கும் அனைவருக்கும் எனது அன்புநிறை வணக்கங்கள்.

2007-2008 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கைமீது உரையாற்றும் வாய்ப்பினை எனக்கு அளித்து உலகத் தமிழர்களின் ஒப்பற்ற பாதுகாவலர், கின்னஸ் சாதனை போன்ற கற்பனைக்கும் எட்டாத அனைத்துத் தரப்பு மக்களையும் மகிழ்ச்சி வெள்ளத்தில், ஆச்சரியப் பெருங்கடலில் மூழ்கடித்துள்ள ஓர் அற்புத நிதிநிலை அறிக்கையைத் தந்து நிறைகுடமாய் வீற்றிருக்கும் தலைவர் கலைஞர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்தாவது முறையாக முதல்வர் பொறுப்பேற்று அந்நாளிலிருந்து நித்தம் நித்தம் ஒரு சாதனை அறிவிப்பாகத் தமிழக மக்களுக்கு வாரி வழங்கிக் கொண்டிருக்கும் தங்களைக் கண்டு இந்தியத் திருநாடே வியந்து நிற்கிறது. தாங்கள் அளித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை வற்றாத ஜீவநதியாய் வளம் கொழிக்கும் எதிர்காலத் தமிழகத்தைக் கண் முன்னே நிறுத்துகிறது. வரியில்லா நிதிநிலை அறிக்கையை வழங்கியுள்ளீர்கள்.

இந்திய நாட்டின் முதுகெலும்பாய் உள்ள விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட விவசாயிகளின் முதுகெலும்பு நொறுக்கப்பட்டு, கடனாளியாய் நின்றவர்களின் கவலையைப் போக்கும் மாமருந்தாய் அவர்கள் பட்டிருந்த ரூபாய் 7ஆயிரம் கோடி கூட்டுறவுக் கடன்களை பதவியேற்ற நிமிடத்திலேயே இரத்து செய்து, கிலோ அரிசி 2 ரூபாய் என அறிவித்து, பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டை என அறிவித்து, அறிவிக்காமலேயே இப்போது மூன்று முட்டை வாரத்திற்கு குழந்தைகளுக்கு என்று தேர்தல் களத்திலே கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றி, கொடுக்காத வாக்குறுதிகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற தலைவர் அவர்களே, கூட்டுறவு அமைப்புகளுக்குப் புத்துயிர் ஊட்டி, 1,360 கோடி ரூபாய் கடன் வழங்கவும், வட்டியை அன்று 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகக் குறைத்தும், இன்றைக்கு 7 சதவிகித வட்டியை 5 சதவிகிதமாகக் குறைத்தும் தங்களது நிர்வாகத் திறமையை நாட்டிற்கு உணர்த்தியிருக்கிறீர்கள்.

[திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்] [2007 மார்ச் 27 பிற்பகல் 12–45

விவசாயி நீர்ப் பாசன வசதிகளைப் பெறுவதற்கும், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்மூலம் ரூ.100 கோடி கடனுதவி, பயிர்க் காப்பீட்டிற்கு ரூ.15 கோடி ஒதுக்கீடு, நெல் கொள்முதல் நிலையங்கட்கு நவீன எடைபோடும் இயந்திரங்கள், தொடரும் இலவச மின்சாரத் திட்டம், விவசாயிகளின் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின்மூலம் கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உத ஓய்வூதியம், ஈமச் சடங்கு உதவி, இழப்பீடு போன்ற உதவிகள்; 57 இலட்சம் குடும்பங்கட்கு அடையாள அட்டைகள் வழங்கி, ரூ.152 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளீர்களே! இப்போது ஏழை விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்படும் என்ற அறிவிப்பின்மூலம் 77,117 ஏக்கர் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, அதை வழங்குவதற்குக்கூட திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசிக்குச் சென்ற கலைஞர் அவர்கள், அந்த நிலத்தைப் பார்வையிட வேண்டுமென்று வழியிலே வாகனங்களை நிறுத்திவிட்டு, இறங்கிச் சென்று, பண்படுத்தப்பட்ட அந்த நிலத்தைப் பார்வையிட்டு, இரவு நேரத்திலே 7-30 மணிக்குப் பார்வையிட்டுச் சென்ற அந்த மிகப் பெரிய சாதனை, கலைஞர் அவர்களே உங்களைவிட்டால் வேறு யார் செய்வார்கள்? இப்படிப் பண்படுத்தப்பட்ட நிலத்தை ஏழை விவசாயிகளுக்கு வழங்கி, நிறைவேற்ற முடியாது என ஏகடியம் பேசினார்கள். ஏன், இன்றைக்குக்கூட கையளவு நிலத்தில் ஒற்றைக் காலில்தான் நடனமாட முடியும் என்று விமர்சித்தார்கள். ஆனால், விவசாயியினுடைய கையில் கையளவு நிலம் கிடைத்தால்கூட அதிலே ஒரு பூஞ்செடியை வைத்து வளர்க்க வேண்டுமென்றுதான் அவன் திட்டமிடுவானே தவிர, நடனமாடமாட்டான் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி நிறைவேற்ற முடியாத அத்துணைத் திட்டங்களையும் ஏழை விவசாயிகளுக்கு நிறைவேற்றித் தந்து, தோட்டக் கலைத் திட்டத்தின்கீழ் மா, முந்திரி, மஞ்சள், நறுமணப் பயிரென 77,300 ஏக்கர் நிலத்தில் 98 கோடி ரூபாய் செலவில் பயிரிட அறிவிப்பு, பண்ருட்டியில் முந்திரி ஏற்றுமதி செய்திட 17 கோடி ரூபாய் செலவில் முந்திரி பதப்படுத்தும் தொழிற்சாலை, கரும்பு, பருத்தி, காய்கனிகள் உற்பத்தியை இருமடங்காக்கும் துல்லிய பண்ணை முறை, ஆஸ்திரேலியா, இஸ்ரேல் நாடுகளுக்கு முன்னோடி விவசாயிகளை அழைத்துச் சென்று, அங்குள்ள நவீன தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிந்து வந்து, நமது மாநிலத்தின் விவசாயத்தை வளர்ச்சியடையச் செய்து, பயன் தரும் மிகப் பெரிய



2007 மார்ச் 27] [திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்]

தொழிலாகவே மாற்றிட எடுக்கப்பட்டுள்ள தங்களுடைய தீர்க்கமான முடிவுகள், நம் நாட்டின் பொருளாதாரத்தை மிக மிக உயர்த்திடும் என்பதில் சந்தேகமில்லை.

விவசாயிகளின் வருவாய் பெருகிட, கால்நடை வளர்ப்புமூலம் பால் உற்பத்தி பாதுகாத்திட, கூட்டுறவு அமைப்புகளுக்குப் பெரிய அளவில் Bulk Coolers–க்கு ஒரு கோடி ரூபாய் மானியம். துருப்பிடிக்காத எஃகுக் கலன்கள் வாங்க ஒரு கோடி ரூபாய் மானியம். வேளாண்மை, தோட்டக் கலை, மீன் வளர்ப்பு, கால்நடைப் பராமரிப்பு ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து அரசால் செயல்படுத்தப்படவிருக்கும் நீர்வள நிலவளத் திட்டத்திற்கு-The Irrigated Agriculture Modernisation and Water Bodies Restoration and Management Project—ரூ.2,547 கோடி, உலக வங்கி ஒப்புதல்மூலமாக நிதியுதவி. இதனால் 63 துணை வடி நிலங்களில், நீர்ப் பாசனக் கட்டமைப்பு, ஏரிகளைச் சீரமைத்தல், உயர் மதிப்புள்ள வணிகப் பயிர்களைப் பயிரிடுதல், சொட்டு நீர்ப் பாசனம், காவிரி தீரத்து மாவட்டச் சிற்றாறுகளையும் வாய்க்கால்களையும் தூர் வாருதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் முன்பு முதலமைச்சராக இருந்தபோது நாகை மாவட்டத்தில் ஆலங்குடியில் சீரா வட்டம் பாலத்தில், அங்கேயிருந்து, ஆற்றிலே தூர் வாரப்படுவதை நீங்களே அந்த வெயிலில் பார்வையிட்டு, அந்தப் பணி சிறக்க, நீங்கள் உத்தரவிட்ட காட்சியை உடன் இருந்து பார்த்தவள் என்ற முறையிலே, அந்தப் பாசனக் கட்டுமானப் பணிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் தூர் வாருவதற்காக இப்போது ரூ.40 கோடி ஒதுக்கீடு, இப்படி இன்னும் பல அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களாலும் எதிர்காலத்தில் விவசாயிகளின் நிலை உயர்ந்திடும். வறுமையை விரட்டி நம்முடைய தமிழ் மாநிலம் உபரி மாநிலமாக மாறிடும் ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளீர்கள்.

காவிரி நடுவர்மன்றத் தீர்ப்பிற்கும் தீர்வு காண்பீர்கள்; முல்லை பெரியாறு அணைப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பீர்கள் என்ற நம்பிக்கை; இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்கு, விவசாயிகளுக்கு உங்களைவிட்டால் வேறு யார்மீதும் அந்த நம்பிக்கையில்லை; நீங்கள் அதற்குத் தீர்வு காண்பீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–50

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாத்திட, முதன்முதலில் போலீஸ் கமிஷன் அமைத்தவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள். இப்போது மூன்றாவது போலீஸ் கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது. சரித்திரப் புகழ்வாய்ந்த,

[திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்] [2007 மார்ச் 27

தொன்மைவாய்ந்த காவல் துறைத் தலைவர் அலுவலகம், முந்தைய D.G.P. அலுவலகத்தை முந்தைய ஆட்சியால் இடிக்கப்பட இருந்ததைத் தடுத்து, இப்போது கூடுதல் கட்டடத்தோடு புதுப்பிக்க ரூ.20 கோடி; சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் அலுவலகம் கட்டிட ரூ.21 கோடி; திருவாரூர் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்டிட ரூபாய் 3 கோடி; தீயணைப்பு-மீட்புப் பணித் துறைக்காக ரூ.204 கோடி; அடிப்படை வசதிகளை மேம்படுத்த, சிறைத் துறைக்கு ரூ.96 கோடி என இவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றங்களில் தமிழ் வழக்கு மொழியெனத் தீர்மானமும், நீதிமன்றக் கட்டடங்களை மேம்படுத்தவும், அவர்களுடைய குடியிருப்புகளுக்காகவும் ரூ.270 கோடி நிதி ஒதுக்கீடு எனவும் மாண்புமிகு முதல்வர் அவர்களே, இப்படி ஒவ்வொரு துறையையும் உங்களை விட்டால் திட்டம் தீட்டுவதற்கு வேறு யாரால் முடியும்?

பள்ளிக் கல்வியில் இலவசப் பாடநூல், இலவசச் சீருடை, இலவச மிதிவண்டி, இலவச மற்றும் சலுகைக் கட்டணத்தில் பேருந்து பயணச் சீட்டு, 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்தல்; நிரப்பப்படாமல் இருந்த 24,642 ஆசிரியர் பணியிடங்கள் சென்ற நிதியாண்டில் நிரப்பப்பட்டு, இவ்வாண்டு 8,837 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவும், தரமான கல்வி வழங்கிட மேலும் 7,979 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவும் நடவடிக்கை; மேலும், கணினிப் பயிற்சி, பின் தங்கிய மாவட்ட மாணவர்களுக்குச் சிறப்புக் கல்வி முறைப் பயிற்சி, ஆங்கிலம் பேசும் திறன் வளர்த்திட திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. * ஆதி திராவிட மாணவர்கள் யாரெல்லாம் அதிக மதிப்பெண்களைப் பெற்று விளங்குகிறார்களோ, அந்த 10 ஆம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 பேர் என்று தேர்ந்தெடுத்து, அவர்கள் விரும்புகின்ற மேல்நிலைப் பள்ளிகளில் 11, 12 ஆம் வகுப்புகளில், கல்வியைப் பெறுவதற்குக் கல்விக் கட்டணமும், உதவித் தொகையும் அந்த * ஆதி திராவிட மாணவர்களுக்கு அரசே வழங்கும் என்று அறிவித்திருக்கின்ற அறிவிப்பு, * ஆதி திராவிட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



2007 மார்ச் 27] [திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்]

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சர்வதேசத் தரத்தில் நூலகக் கட்டடத்திற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் புத்தகப் பூங்கா உருவாக்குதல், உயர் கல்விக்காக, ஏழை மக்களுக்குக் கிடைக்க முடியாத கல்வியைத் தர, நுழைவுத் தேர்வு இரத்து, கல்லூரிகளில் இளங்கலைப் படிப்பு இலவசம், மாற்று முறை (shift), ஏழை மாணவர்கள் அரசுக் கல்லூரிகளிலே படிப்பதற்கு, அண்ணா பல்கலைக்கழகத் தொழில்நுட்பக் கல்லூரிகள், திருநெல்வேலி, திருச்சி, கோவையில் எனக் கல்வி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் நல்வாழ்வுத் துறையின்மூலமாக 'வருமுன் காப்போம்' திட்டத்தின்மூலம் இப்போது கிராமப்புறங்களிலே எல்லா மருத்துவர்களும் நேரில் சென்று, நோய்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கின்ற திட்டம் ஓர் அற்புதமான திட்டம். ஒவ்வொரு வட்டாரத்திலும், 24 மணி நேரமும் பணியாற்றுவதற்கு இப்போது ஊர்திகள்.

தொழில் துறையிலே நம்முடைய பொருளாதாரம் வளர்ச்சியடைய, Motorola, Apollo Tyres, Tessolve, Dell Computers, Growth Link, Samsung, Mahindra-Renault-Nissan மற்றும் Caparo ஆகிய நிறுவனங்களுடன் 8 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள். மஹேந்திரா நிறுவனமும், பிரெஞ்சு, ஜப்பான் ஆகிய நாடுகளும் இணைந்து ஒரகடத்தில் கார் உற்பத்தித் தொழிற்சாலை. ஒரு கார் வந்தால், ஓடிப்போய் எட்டி எட்டிப் பார்த்த காலம் எங்களுக்கு நினைவிருக்கிறது. ஆனால், வெளிநாட்டுத் தரம் உயர்ந்த கார்களைத் தமிழகத்திலே உருவாக்குவதற்கு, கார் தொழிற்சாலையை உருவாக்கித் தருகின்ற கலைஞர் அவர்களே, எண்ணூர் துறைமுகத்தில் இரண்டு கப்பல் கட்டும் தளங்கள், விருதுநகரில் சிறப்புப் பொருளாதார மண்டலம், நாங்குநேரியிலே மறைந்த மாமேதை முரசொலி ம்மாறன் அவர்களால் அன்று கொண்டு வரப்பட்ட அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம், இப்போது கோவை, திருச்சி, சேலம், மதுரை என்று சிறப்புத் தொழிற் பூங்காக்கள் பரவுகின்றன. தரமணியில் இரண்டாவது 'டைடல் பார்க்.'

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி தருவோமா, தரமாட்டோமா என்று கிண்டல் அடித்தவர்கள் மத்தியில், இப்போது அவற்றை வாரி வழங்குதல்; இந்த நிதியாண்டிலே, 25 இலட்சம் தருவோம்; எஞ்சியவர்கள் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தருவோம் என்று வாக்குறுதி மட்டும் அல்ல; தலைவர் கலைஞர் அவர்களே, அந்த நிகழ்ச்சிகளிலே வாரந்தோறும் சனிக்கிழமை எங்கள்

தொகுதிகளிலே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குகிற நிகழ்ச்சியில், இரண்டு ஊராட்சிகளிலே அ.தி.மு.க.வைச் சார்ந்தவர், பஞ்சாயத்துத் தலைவர், அவர் தலைமை ஏற்க, அவர் முன்னிலை ஏற்க, அவர் பார்வையிட, அந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கி நான் உரையாற்றினேன். முடியாது என்றீர்கள். உங்கள் தலைமையிலே இதை நடத்திக் காட்டுகின்ற பெருந்தன்மைமிக்க தலைவர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய ஆட்சியில் சொன்னதைத்தான் செய்வார்; செய்வதைத்தான் சொல்வார் என்றேன். இலவச எரிவாயு அடுப்புகள்; போக்குவரத்துத் துறையில், இந்த 10 மாத காலத்தில் எவ்வளவு சிறந்த அருமையான ஏர்கண்டிஷன் பொருத்தப்பட்ட சொகுசுப் பேருந்துகளாக, பயணிகளுக்குப் பயன்தரத்தக்க அளவில் ஐந்தாண்டுக்கால ஆட்சியில் விடப்பட்ட பேருந்துகளுக்கு இணையாக, இப்போது, 5,000 பேருந்துகளை விட்டிருக்கின்ற பெருமை, எங்களுடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களைச் சாரும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–55*

1971–ல் முதன்முதலிலே குடிசை மாற்று வாரியம் கண்டு, ஏழையெளிய மக்களுக்கு அடுக்குமாடி வீடுகளைக் கட்டித்தந்த கலைஞர் அவர்களே, இப்போது சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு 17,000 வீடுகள், கடலோர மீனவர்கள் பாதுகாப்பிற்கு 13,000 வீடுகள், மாநகராட்சி, நகராட்சிகளுக்கு 40,000 வீடுகள் என்று ஏழை மக்களுடைய தரம் உயர்த்த உங்களுடைய திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம்பெற்று மக்கள் மகிழ்ச்சிக் கடலில் உள்ளார்கள். சென்னை மெரினா கடற்கரை, தலைமைச் செயலக வளாகம், எல்லீஸ் கடற்கரையை அழகுபடுத்த, ரூபாய் 25 கோடி, மாநகராட்சிக்கு நிதி; அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்மூலமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் சாலை வசதிகள், விளக்கு வசதிகள் என்று அனைத்துக் கிராமங்களும் நிறைவுபெற்று, எதிர்காலத்திலே இது தமிழகமா, கிராமங்களா என்ற புதுமையான ஓர் உலகைக் காண இருக்கின்ற அளவு இந்தத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களே, முதியோர்கள், ஆதரவற்றோர், உடல் ஊனமுற்றோர், கண் பார்வையற்றோர், நெசவாளர், மீனவர், ஆதி திராவிடர், பழங்குடியினர் இப்படி அத்துணைப் பேருக்கும் நல வாரியங்களாக தாங்கள் கண்டு, குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் என 10 ஆம் வகுப்பில்





அதிக மதிப்பெண் பெறுபவர்களுக்குக் கல்விக் கட்டணம் இலவசம், அந்த ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்புகளுக்கெனத் தொழிற் பயிற்சிகள், மேலும் சுய உதவிக் குழுக்கள் இதற்காக 25.56 கோடி ரூபாயில் 1 இலட்சத்து 70 ஆயிரத்து 36 ஆதிதிராவிடர்கள் பயனடையக்கூடிய ஒரு நல்ல திட்டத்தைத் தந்து, மனிதக் கழிவை மனிதனே அள்ளும் கொடுமையை நீக்கி, 11 ஆயிரத்து 691 துப்புரவுப் பணியாளர்களுக்கு மறுவாழ்வு அளித்திட 58.4 கோடி ரூபாயிலே இப்போது திட்டத்தைத் தந்திருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களே,. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள் அம்மா!

**திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்:** அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் போராட்டக் காலம், வேலை நாட்களாக சம்பளத்துடன்: எண்ணிப் பார்க்க முடியுமா? எவ்வளவு கொடுமைகள், கண்ணீரோடு அவர்கள் சிறை புகுந்தார்கள்; அவர்களைச் சிறைப்படுத்தினார்கள். ஆனால், தற்போது அவர்களுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட பயணச் சலுகைகள், ஓய்வூதியம், அகவிலைப்படி 6 சதவிகிதம் அதிகரிப்பு. இப்போது நாடு முழுவதும் அரசு ஊழியர்கள் அத்துணைப் பேரும் மகிழ்ச்சிப் பெருங்கடலிலே நீந்திக் கொண்டு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் கலைஞருடைய ஆட்சியை என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அங்கன்வாடி, சத்துணவு, காவல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் மருத்துவர்கள், ஆசிரியர்கள் நியமனம் எனவும், எல்லாத் துறைகளிலும் இளம் பொறியாளர்கள் பணி நியமனம் எனவும், இந்த அரசு ஒரு welfare Government-ஆக ஒரு நல அரசாக மக்களுக்குப் பயன்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய காஞ்சி மாவட்டம், தொழில் நிறைந்த, பூத்துக் குலுங்கும் மாவட்டமாக உருவாக்கப்பட்டு கலைஞர் அவர்களே, தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கானோர் வேலை பெறுவதற்காக இந்த வாய்ப்புகள் தரப்பட்டு இப்போது சிறப்பாக இருந்தாலும், அச்சரப்பாக்கம் தொகுதி, * ஆதி திராவிட மக்கள் நிறைந்த தொகுதி; தனித் தொகுதி; ஏழைகள், விவசாயிகள், பிற்படுத்தப்பட்ட மக்கள் நிறைந்த தொகுதி; ஆகவே, என்னுடைய தொகுதிக்கு ஒரு தொழிற் திட்டம் நிறைந்த ஒரு நல்ல தொழிற் பூங்காவை, ஒரு industry-ஐத் தாருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

[திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்] [2007 மார்ச் 27

வேடந்தாங்கல் ஒன்றையே ஒரு கனவு உலகாக நாங்கள் கண்டுகளித்துக் கொண்டு இருக்கிறோம்; மக்கள் கண்டுகளித்துக் கொண்டிருக்கிறார்கள். அண்மையில், வெளி நாடுகளில் இருந்து எங்கெங்கேயோ உள்ள பறவைகள் எல்லாம், குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட இடம் என்று வேடந்தாங்கலை நோக்கி வந்து அமர்ந்த அந்தக் காட்சியை வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் வந்து பார்வையிட்ட காட்சியை நான் சமீபத்தில் பார்த்தேன். வேடந்தாங்கலில் அவர்களைப் பார்த்து நான் எங்கேயிருந்து வந்தீர்கள் என்று கேட்டதற்கு, அவர்கள் இத்தாலியில் இருந்து வந்தோம் என்று சொன்னார்கள். இப்படிப் பல நாடுகளைச் சொன்னார்கள். ஆனால், தங்குவதற்கு உத்திரமேரூர் போன்ற வெளியிடங்களில் தங்கிவிட்டு, இங்கே வந்து பார்க்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, அவர்களுக்கு, அந்தப் பயணிகளுக்குத் தங்குவதற்கு வசதி இல்லை. அப்படிப்பட்ட ஓர் உலகத் தரம் வாய்ந்த வேடந்தாங்கலைச் சுற்றுலாத் தலமாக, பறவைகள் சரணாலயத்தை உலகத் தரம் வாய்ந்த சுற்றுலாத் தலமாக மாற்றித் தந்தால், இன்னும் வெளிநாட்டுப் பயணிகளை ஈர்த்து, நல்ல வருவாயை நாம் ஈட்ட முடியும் என்ற அந்தக் கோரிக்கையை வைத்து அதை என் தொகுதிக்குத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, அரசுக் கலைக் கல்லூரி ஒன்று கேட்டேன். படித்த மாணவர்கள், 12 ஆம் வகுப்பைத் தாண்டியவர்கள் அல்லது அரசு வேலைக்குச் செல்பவர்கள் என்று என்னுடைய தொகுதியில் யாரும் இல்லை; ஆகவே, ஒரு அரசுக் கல்லூரியைக் கேட்டேன். எல்லோருக்கும் சொல்வதைப்போல 5 ஏக்கர் நிலம், ஒரு கோடி ரூபாய் என ஏழைகள் நிறைந்த என்னுடைய தொகுதியிலே கொடுக்க முடியவில்லை; கருணை உள்ளம் நிறைந்த கலைஞர் அவர்களே, தாங்கள் என்னுடைய தொகுதிக்கென்று தனியாக, தங்களுக்குள்ள பிரத்தியேக அதிகாரத்தில்— using your discretionary power—நீங்கள் என்னுடைய தொகுதிக்கு இந்த விதி இல்லாமல் ஒரு அரசுக் கலைக் கல்லூரியைத் தந்து, ஏழையெளிய மக்களை நீங்கள் உயர்விக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

சட்டமன்றப் பொன்விழா காணும் நாயகரே, உங்களோடு, உங்கள் காலத்தில், ஆரம்பம் முதல் இன்றுவரை இந்த இயக்கத்தில் உங்கள் பின்னால் நின்று, சட்டப் பேரவையில் பணியாற்றிட, தாங்கள் பொன்விழா காணும் இந்நேரத்தில் உங்களோடு நின்று பணியாற்றிட பேறு பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்ந்து, பெருமையோடு என்னுடைய நன்றியை



2007 மார்ச் 27] [திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்]

இங்கே தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்; நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய, கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு சுதர்சனம் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாக வரவேற்பதோடு, நமது முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் 50 ஆண்டுக் கால சட்டமன்றச் சேவையில், அவர் ஆற்றிய மக்கள் பணி, தமிழ் மொழிக்கு ஆற்றிய பணிகளைப் பாராட்டி மகிழ்ந்து, நானும் அவர் இருக்கின்ற சபையிலே இரண்டு முறை பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, இந்த பட்ஜெட் விவாதத்தின்மீது என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

இந்த பட்ஜெட்டிலே எத்தனையோ திட்டங்களை, நல்ல பல திட்டங்களை எல்லாம் அறிவித்திருக்கிறார்கள். இன்ன திட்டம் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கு அல்ல. ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு para-விலும் நல்ல நல்ல திட்டங்கள் மக்களுக்கு அளிக்கின்ற திட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் முழுமையாக வரவேற்கிறேன்.

குறிப்பாக, திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகம் என்ற பெயரிலே தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், வரும் ஆண்டில் தொடங்கப்படும் என்ற அறிவிப்பு தென் மாவட்ட மக்களுக்குத் தேனாக இனிக்கின்ற நல்ல வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

அதேபோன்று, நாங்குநேரி உயர் தொழில்நுட்பப் பூங்கா இந்த ஆண்டே துவங்கப்பட வேண்டுமென்று தென்மாவட்ட மக்களுடைய சார்பாக நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், கடந்த ஐந்தாண்டுக் காலம், கடந்த ஆட்சியிலே அது கிடப்பிலே போடப்பட்டு, மீண்டும் இப்போது வரும் என்ற எதிர்பார்ப்போடு நெல்லை மாவட்ட மக்கள் எல்லாம்—நாங்கள் எல்லாம்—ஏங்கிக் கொண்டிருக்கிறோம். அந்தத் தொழில்நுட்பப் பூங்காவை இந்த ஆண்டே

துவங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று, கடந்த நிதிநிலை அறிக்கையிலே வீட்டுமனை இல்லாதவர்களே இருக்கக்கூடாது என்று சொல்லி அனைத்து ஏழைகளுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தை முழுமையாக, எந்தக் கிராமத்திலும் வீட்டுமனை இல்லாத ஏழையே எவரும் இருக்கக் கூடாது என்ற நிலையிலே, அவசர போர்க்காலத் திட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இரண்டு ஏக்கர் நிலம் என்பது ஒரு நல்ல திட்டம். அந்தத் திட்டத்தில் அந்த ஊரில் இருக்கிற ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் நிலத்தைக் கொடுத்துவிட்டுத்தான் மற்ற பக்கத்து கிராமத்து மக்களுக்குக் கொடுப்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். அதிலும், குறிப்பாக, தென் மாவட்டங்களிலே சில நேரங்களிலே, சில தவறான சூழ்நிலைகூட உருவாகிவிடும். எனவே, அந்தந்த ஊர் மக்களுக்கு மட்டுமே, அந்த இரண்டு ஏக்கர் நிலம் கொடுக்கின்ற திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, தொகுப்பு வீடுகள்; இப்போது கிராமங்களிலே இருக்கிற நிறைய ஏழை மக்கள், அது ஆதி திராவிட மக்களாக இருந்தாலும் சரி, மற்ற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களாக இருந்தாலும் சரி, நிறைய மக்கள் குடியிருக்க வீடு இல்லாமல் வாடகை வீடுகளிலே ஒண்டிக் குடித்தனமாக வாழ்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தத் தொகுப்பு வீடுகளுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தி, வருகின்ற நான்கு ஆண்டுகளில், இந்தச் சட்டமன்றக் காலத்தில், இன்னும் இருக்கிற நான்கு ஆண்டுக் காலத்திற்குள்ளாக அனைத்து ஏழைகளும் வீடு பெறுகின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வெள்ள நேரத்திலே வீடுகள் இடிகின்றன; தீப்பிடித்து எரிகின்றன. அதற்கு இரண்டு ஆயிரம் ரூபாய் மட்டும்தான் நிதி வழங்கப்படுகிறது, இழப்பீட்டுத் தொகையாக. அது எந்தச் சூழ்நிலையிலும் அந்த ஏழை மீண்டும் தன்னுடைய வாழ்வைத் துவக்குவதற்குப் போதுமானதாக இல்லை. எனவே, வீடு இடிந்தாலோ அல்லது தீப்பிடித்து எரிந்தாலோ 10,000 ரூபாயாவது,—minimum, குறைந்தது 10,000 ரூபாயாவது—



வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, ரேஷன் கார்டுகள். இப்போது சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால் ரேஷன் கார்டுகள் வழங்குகின்ற ஒரு நிலை இருக்கிறது. ஆனால், அது உடனடியாக வழங்கப்படவில்லை. தொடர்ந்து 6 மாதங்கள் ஆகிவிட்டன, எங்களுக்கு ரேஷன் கார்டு கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. அந்த ரேஷன் கார்டுகள் வழங்கப்படுகிற நிலைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 1–05*

அதேபோன்று, புதிய ரேஷன் கடைகள். அதேபோன்று, துணை ரேஷன் கடைகள் போன்ற கடைகளெல்லாம் நிறைய கிராமங்களிலே அவசியமாகத் தேவைப்படுகின்றன. அவற்றையும் உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, போக்குவரத்துத் துறையிலே; இப்போது சாலைகளிலே சென்றாலும், தினந்தோறும் பேப்பரைப் படித்தாலும் எவ்வளவு விபத்துகள் நடக்கின்றன என்பதைப் பார்த்தால், எண்ணிக்கை கணக்கிலடங்காது. அப்படிப்பட்ட விபத்துகள் நிறைய, விபத்துச் சாவுகளாக ·உள்ளன. பேப்பரைப் படித்தால் அவ்வளவு பரிதாபமாக இருக்கிறது. அந்த நிலை மாற வேண்டுமென்று சொன்னால், உடனடியாக இந்த C.L.R. முறை, temporary-ஆக Drivers-ஐப் போடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் அவர்கள்தான் அதிகமான பாதிப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது நிறுத்தப்பட வேண்டும். முறையாகப் பயிற்சி கொடுத்து, முறையான ஓட்டுநர்களை நியமிக்க வேண்டும். அதேபோன்று, பேருந்துகள் ரோட்டிலே போகும்போது நடு ரோட்டிலேயே அதை நிறுத்திவிடுகிறார்கள். அதற்கு, ரோடு போடும்போதே தனியாக பஸ் நிறுத்துவதற்கு ஒரு bus stop-ஐ உருவாக்கித் தருவது கண்டிப்பாக அவசியம். அப்படியில்லை என்று சொன்னால், நிற்கிற பஸ்சிலே போய் மோதுவதைத் தவிர்க்கவே முடியாது. அதற்கேற்ற நடவடிக்கைகளைப் போக்குவரத்துத் துறை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இப்போது நாட்டில் மிகப்பெரிய பாதிப்பு, நாட்டையே பயமுறுத்துகிற ஒரு நிலை on-line trading. On-line Trading என்று சொன்னால், ஒரு காலத்திலே வியாபாரிகளில் பதுக்கல்காரர்கள் இருந்தார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** ஒரேயொரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துத் துறையில் தற்காலிகப் பணியாளர்கள் நியமிக்கப்படுவதை நிறுத்திவிட்டு, நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. 1997 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டுவரை நியமிக்கப்பட்ட ஓட்டுநர்களை, முந்தைய ஆட்சி பல்வேறு காரணங்களால் நிறுத்தியது. அவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றம் சென்ற பிறகு, நீதிமன்றத்தில் அவர்களுக்கெல்லாம் மீண்டும் பணி வழங்க வேண்டுமென்று ஓர் உத்தரவு வந்தது. அவர்களுக்குப் பணி வழங்கப்பட்டது. மீண்டும் அ.தி.மு.க. ஆட்சியினுடைய கடைசி 2001 ஆம் ஆண்டிலே 2,017 பேரை ஓட்டுநர்களாக நியமித்தார்கள். ஏற்கெனவே நீதிமன்றத்தில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால், 1997 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டுவரை நியமிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பணி தந்துவிட்டுத்தான், புதிய ஓட்டுநர்களையும், நடத்துநர்களையும் எடுக்க வேண்டுமென்ற நீதிமன்ற உத்தரவை மீறி, அந்த 2,017 பேருக்கும் உத்தரவு தந்த காரணத்தினால், இந்த அரசு அதை நிறுத்தி வைத்தது. அவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றத்தில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்ட அந்த ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டுமென்று உத்தரவு வந்தது. நாங்கள் துறையின் சார்பாக அதை மறுத்து மேல் முறையீடு செய்யலாம் என்றபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குப் பணி வழங்க வேண்டுமென்று உத்தரவு தந்துவிட்டார்கள். இப்போது அவர்கள் காலத்திலே நியமிக்கப்பட்ட அந்த 2,017 ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கும் பணி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்ந்து போக்குவரத்துத் துறையிலே காலிப் பணியிடங்கள் என்று எடுத்துக் கொண்டால், ஓட்டுநர்கள், நடத்துநர்கள் என்ற அளவிலே 8,000 பேர்களுக்குமேல் காலிப் பணியிடங்கள் இருக்கின்றன. அவர்கள் ஆட்சிக் காலத்தில் போட்ட அந்த 2,017, திராவிட முன்னேற்ற ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட 1,600 பேர், அதுபோக, இப்போது நேரடியாக வேலைவாய்ப்பு அலுவலகத்தின்மூலம் கேட்கப்பட்டு, ஆங்காங்கே ஓட்டுநர்கள், நடத்துநர்கள் நியமிக்கப்பட்டுக்



கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அந்தக் காலிப் பணியிடங்கள் முழுவதுமாக நிரப்பப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல நிரந்தர ஓட்டுநர்கள், நல்ல ஓட்டுநர்கள், திறமையான ஓட்டுநர்கள் இந்த ஆட்சியிலே நியமிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, பேருந்தை சாலையிலேயே நிறுத்தி போக்குவரத்திற்கு இடையூறு செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு நல்ல யோசனையையும் சொல்லியிருக்கின்றார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. விசுவநாதன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் இல்லையா? உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** அதற்குரிய நடவடிக்கைகள் நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுக்கப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில், கடந்த 15 நாட்களுக்கு முன்புகூட நான் வந்தவாசிவரை சென்றுவிட்டு சென்னை திரும்புகின்ற நேரத்தில், தேசிய நெடுஞ்சாலை 45-லேகூட, அதற்குரிய வழிமுறை செய்யப்பட்டுள்ளதை நேரில் கண்டேன். ஆனால், போக்குவரத்துக் கழகப் பேருந்து ஓட்டுநர்கள் சாலையிலேயே நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்கிக் கொண்டிருந்தார்கள். "திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால், திருட்டை ஒழிக்க முடியாது" என்கின்ற போக்கில், ஓட்டுநர்களே அதற்குரிய வழிமுறைகளைத் தேட வேண்டும். அந்த அடிப்படையிலே, உறுப்பினர் அவர்களுடைய யோசனையும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக அதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) என்ன?

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விசுவநாதன், பேசியது திரு. வேல்துரை. கேள்வி கேட்டவர் அவர். அதற்குப் பதில் சொன்னவர் அமைச்சர். அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொன்னார்கள். நீங்கள் ஏன் போட்டுக் குழப்புகிறீர்கள்? நாளைக்குப் பேசும்போது, உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பா. வேல்துரை:** On-line Trading என்று சொல்வது. (குறுக்கீடு) On-line Trading என்று சொல்வது. (குறுக்கீடு) ஒரு காலத்திலே பதுக்கல் தொழிலைச் செய்கிறவர்கள் On-line Trading என்ற முறையின் காரணமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை, கொஞ்சம் இருங்கள். என்ன சொல்கிறீர்கள், விசுவநாதன்? பேசுவது அவர், அமைச்சரைக் கேட்டவர் அவர். அமைச்சர் பதில் சொன்னார்கள். நீங்கள் ஏன் இடையிலே இதிலே தலையிடுகிறீர்கள்?

**திரு. இரா. விசுவநாதன்:** Clarification மட்டும். Point of clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

பிற்பகல் 1-10

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலே ஓட்டுநர், நடத்துனர் பணியிடங்களில் நிரப்பப்பட்டவர்களுக்கு, முறைப்படி வேலைவாய்ப்பு அலுவலகம்மூலமாக நேர்முகத் தேர்வு நடத்தி, பணி நியமனம் செய்யப்பட்ட அனைவருக்கும் இந்த அரசு வந்தவுடன் பணி வழங்க மறுத்தது. அதற்குப் பின்பு, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். அப்போதுகூட நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்றபோது, அமைச்சர் அவர்கள் இங்கே ஓர் உறுதிமொழியைச் சொன்னார்கள். நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால், அதை நாங்கள் அப்பீல் செய்ய மாட்டோம்; மறுக்கமாட்டோம்; உடனடியாகப் போட்டுவிடுவோம் என்ற உறுதிமொழியும் சொன்னார்கள். நீதிமன்றமும் அவர்களுக்குப் பணியாணை வழங்க வேண்டும் என்றும், பணி வழங்குவதிலே முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்றும் தீர்ப்பினை வழங்கியது. அந்தத் தீர்ப்பினை வழங்கியதற்குப் பின்பும், இங்கே துறை அவர்களுக்குப் பணி வழங்க மறுத்துவிட்டது. அதற்குப் பின்பாக, மீண்டும் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் அங்கே நீதிமன்றம் சென்றார்கள். நீதிமன்றத்திற்குச் சென்றதற்குப் பின்பு, இந்த அரசுக்கு உள்ளாட்சித் தேர்தலிலே எப்படிக் கடுமையான மரண அடி கொடுக்கின்ற வகையிலே



ஒரு தீர்ப்பு அளித்ததோ, அதைப்போல மீண்டும் இந்த அரசுக்குக் கண்டனம் தெரிவித்து, அவர்களை மீண்டும் நியமிக்க வேண்டும் என்று ஆணை வழங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது முறையாகவும் ஆணை வழங்கியது. அதற்குப்பின்புதான், இந்த அரசு ஒத்துக்கொண்டு இருக்கிறது. ஆனால், ஒத்துக்கொண்டதற்குப் பின்பும், இன்றுவரை பணி நியமனம் வழங்கப்படவில்லை. ஆனால், உள்நோக்கத்தோடு குறிப்பிடுவது... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர்கள் கை தட்டும்போது நான் சொல்கின்ற பதிலைக் கேட்டுவிட்டு கை தட்டினீர்கள் என்றால் பரவாயில்லை. மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் இரண்டாவது முறையும் நீதிமன்றத்திற்குப் போனார்கள் என்று. ஏற்கெனவே retrenchment ஆன 1997 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டுவரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நியமிக்கப்பட்ட ஓட்டுநர், நடத்துனர்களை எக்காரணத்தைக் கொண்டோ, ஏதோ பல காரணங்களைச் சொல்லி நிறுத்தியதால், அந்த ஓட்டுனர்களும், நடத்துனர்களும் நீதிமன்றம் சென்று, அந்த நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு, இவர்களை எல்லாம் பணியிலே எடுத்துக்கொண்ட பிறகுதான், புதியவர்களை நீங்கள் நியமிக்க வேண்டும் என்று நீதிமன்றம் சொன்னது. (குறுக்கீடுகள்) ஆனால்,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** ஆனால், வழக்கம்போல் நீதிமன்றத்தை நீங்கள் எப்படி நடத்துவீர்கள் என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். எங்களுக்குத் தெரியும், நீங்கள் அதை மதிக்காமல் 2,017 பேரை நியமித்தீர்கள். நாங்கள் நீதிமன்றத்தை மதிக்கின்றவர்கள். அதனால் நீதிமன்றம் சொன்னதை, இந்த 2,017 பேரை, திராவிட முன்னேற்றக் கழகத்தில் நியமிக்கப்பட்டவர்களை மீண்டும் பணிக்கு அமர்த்திவிட்டு, உங்களை எடுக்கிறோம் என்று சொல்லித்தான் நிறுத்தினோம். அதுவும் மீண்டும், நீங்கள் போகவில்லை நீதிமன்றத்திற்கு. போனது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்; பாதிக்கப்பட்டவர்கள்; போனது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. உட்கார்ந்து இருந்தீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் விசுவநாதன்

அமர்ந்து பேசுவது சரியல்ல. போனது, நீங்கள் போகவில்லை. போனது மார்க்சிஸ்ட். அவர்கள் போய் நீதிமன்றத்தில் சொன்னார்கள். அதுவும் G.O. 41–ன்படி 'இவர்களை consider செய்' என்றுதான் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. ஆனால், 'consider செய்' என்று சொன்னாலும், அவர்களுக்கெல்லாம் பணி தரவேண்டும் என்று சொன்னவர் இப்பொழுது இருக்கின்ற முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் மீண்டும் பணி தரப்பட்டிருக்கிறது. அதிலே அவர்களுக்குப் பணி தரப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கின்ற இடங்களையும் நிரப்பப்போகிறோம். அதுதானே தவிர, நான் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும். உங்களை எந்தக் குறையும் சொல்லவில்லை. நீங்கள் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்தவில்லை. நீங்களாக ஆட்கள் எடுத்தீர்கள். அதைத்தான் சொன்னோமே தவிர, உங்களுடைய காலத்தில் நியமிக்கப்பட்டவர்களுக்கும், தி.மு.க. காலத்தில் நியமிக்கப்பட்டவர்களுக்கும் கலைஞர் தருகிறார் வேலை. அதைத்தான் இங்கே சொல்கிறேன். எடுத்திருக்கிறோம், மீண்டும் காலிப் பணியிடங்களை நிரப்பப்போகிறோம். தேர்தல் நேரத்தில் சொன்னதுபோல இந்த இலாகாவில் இருக்கின்ற அத்தனை காலிப் பணியிடங்களையும் நிரப்பப்போகிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. வேல்துரை, இரண்டு நிமிடங்களில் பேசி முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** என்னங்க, இரண்டு நிமிடத்தில் முடிக்கச் சொல்கிறீர்கள்? இரண்டு நிமிடத்தில் எப்படி முடிக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. No... No... Time இல்லை. Time இல்லை.

**திரு. பா. வேல்துரை:** இரண்டு பேரும் பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On-line Trading இன்றைக்கு முழுமையாகத் தடை செய்யப்படவேண்டும். இந்த On-line Trading–ஆல் மிகப்பெரிய விலைவாசி உயர்வை மக்கள் சந்திக்கப் போகிறார்கள். இந்த On-line Trading–ஐ கண்டிப்பாகத் தடை செய்ய வேண்டும். ஏன் என்று சொன்னால், On-line மூலமாகப் பதுக்கல் செய்யப்படுகிறது. பதுக்கல் செய்வதன்மூலமாக செயற்கையான ஒரு தட்டுப்பாட்டை உருவாக்கி, விலைவாசியை உயர்த்தி வியாபாரிகள் இலாபம் அடைகிற ஒரு திட்டம்; அதைத் தடை செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே



நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, சில்லறை வர்த்தகத்திலே வெளிநாட்டுக் கம்பெனிகள்... (குறுக்கீடு)

பிற்பகல் 1–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கையாக ஒரு demand–ஐ உருவாக்கி, அதன்மூலமாக உணவுப் பொருட்களின் விலைவாசி எல்லாம் ஏறிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்த காரணத்தால்தான், தமிழகத்தினுடைய மாண்புமிகு அண்ணன் கலைஞர் அவர்கள், பிரதம முதலமைச்சர் நேரடியாக ஒரு கடிதம் எழுதி, இந்த உணவுப் அமைச்சருக்கே பொருட்களை எல்லாம் On-line Trade–லிருந்து கட்டுப்படுத்த வேண்டும்; முழுமையாக அது நீக்கப்பட வேண்டும் என்று சொல்லி, கடிதம் எழுதப்பட்டு, அதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையிலே இப்பொழுது சிறுகச் சிறுக விலைவாசிகள் குறைந்து கொண்டிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கன் கம்பெனி, ரிலையன்ஸ் போன்ற கம்பெனிகள் எல்லாம் சில்லறை வர்த்தகத்திலே வருகிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், அசலுக்கே வாங்கி அசலுக்கே விற்று, இலாபமே இல்லை என்று சொன்னாலும்கூட, ஒரு 6 மாதம் இப்படியே வியாபாரம் செய்து கொண்டிருந்தால், இப்பொழுது இருக்கிற சில்லறை வியாபாரிகளைக் காலி செய்து விட்டு, பிறகு முழுமையான கட்டுப்பாட்டைத் தன் கையிலே கொண்டு வந்து, முழுமையாக அந்த சில்லறை வியாபாரத்தைத் தங்கள் கையிலே எடுக்கிற நடவடிக்கையை, முழுமையாக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நாங்கள் எல்லாம் எதிர்க்கிறோம். ஏன் என்று சொன்னால், இப்போது 20 இலட்சம் சில்லறை வியாபாரிகள், அதுவும் குறிப்பாக, தென் மாவட்டங்களிலே இருக்கிற வியாபாரிகள், இந்தியா முழுவதும் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தென் மாவட்டத்து மக்கள், குறிப்பாக மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படுவார்கள். அந்தச் சில்லறை வர்த்தகத்திலே வெளித் தலையீட்டை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, காவல் துறை. காவல் துறை என்பது மிகவும் முக்கியமான துறை. இப்போது தொடர்ந்து, எங்கள் பகுதியிலே இருக்கிற பனையேறும் தொழிலாளர்கள், இந்தக் காவல் துறையின் மதுவிலக்கு என்ற ஒரு துறையின் மூலமாக, மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டுள்ளனர். பனையேறுகிறவர்கள், பனையிலே கள்ளைப் போட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் பொய்யாகச் சொல்லி, சில நேரத்திலே அவர்கள் கொஞ்சம் குடிப்பதற்காக வைத்திருக்கிற கள்ளை எடுத்து, அதற்காகவும் கைது செய்யப்படுவது குறித்து, இன்றைக்குக் காலையிலே எனக்குத் தொலைபேசியிலே தகவல் வந்திருக்கிறது. இன்றைக்குக் காலையிலே எங்கள் சொந்த கிராமத்திலே இருக்கிற நிறைய பேரை வரச் சொல்லி, அவர்களிடத்திலே, "நாங்கள் ஒரு petty case போடுகிறோம்" என்றும், "நீங்கள் fine-ஐக் கட்டிவிட்டுப் போய்விடுங்கள்" என்றும் சொல்லி. இப்படி எத்தனை நாள்? பிறகு, கடைசியிலே பனையையே விற்றுவிட்டுப் போய்விடுவார்கள். இதுதான் அந்தப் பனையேறும் தொழிலாளர்களுடைய நிலைமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை 'முடியுங்கள் சீக்கிரம். முடியுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்)

**திரு. பா. வேல்துரை:** காவல் துறை, பனையேறும் தொழிலாளர்கள்மீது நடத்துகிற அத்துமீறல்களை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். அதேபோன்று... (குறுக்கீடுகள்) சார், பேசவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, பாருங்கள்; நிறைய, அந்தக் காலத்திலேயிருந்து தொடர்ந்து கொலைகள் எல்லாம் நடந்து கொண்டு வருகின்றன. அதாவது, இலாபத்திற்காகக் கொலை செய்வது, பெண்களுக்காகக் கொலை செய்வது, மற்ற சந்தர்ப்பவசத்தால் கொலை செய்வது என்று சொல்லி, பல வகைகளிலே கொலைகள் நடக்கின்றன. நாட்டிலே நிறைய நடக்கின்றன. எல்லா நாட்டிலும் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், கொலை நடந்து விட்டால், ஒரு ரௌடி கொலையிலே சம்பந்தப்பட்டிருந்தால், அந்த ரௌடிக்குப் பயந்து யாரும் சாட்சி சொல்வதில்லை. அதனால் கேஸ் விட்டுப் போகிறது. ஆனால், கேஸ் விட்டுப் போகிறதினாலே என்ன நடக்கிறது? திரும்ப அவன் இன்னும் பல கொலைகளைச் செய்வதற்கு வாய்ப்பாக இருக்கிறது. இதைத் தடுக்கிற வகையிலே, சாட்சியே சொல்லவில்லை என்று சொன்னால்கூட, காவல் துறை தலையிட்டு—எந்த உண்மையும் கண்டுபிடிக்க முடியாத



உண்மை என்று நாட்டிலே கிடையாது—கண்டிப்பாக, காவல் துறை கண்டுபிடித்து, அந்தக் குற்றத்தைச் செய்த குற்றவாளிகளுக்குச் சரியான தண்டனை கொடுப்பதோடு, அந்தக் கொலை செய்யப்பட்ட குடும்பத்திற்கு நஷ்ட ஈடு வழங்குகிற நடவடிக்கைகளை, நமது அரசு ஒரு முன்னுதாரணமாக, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நாம் செய்ய வேண்டும். அது நம்முடைய கலைஞர் அவர்களுடைய துறை. அவர்கள் நினைத்தால் அதைச் செய்ய முடியும் என்ற இந்தக் கோரிக்கையை இந்த நேரத்தில் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, திருநெல்வேலியிலே, நெல்லை by-pass சாலை. வண்ணாரப்பேட்டையிலே ஏகப்பட்ட விபத்துகள் நடைபெறுகின்றன. அதிலே ஒரு by-pass, பாலம் வேண்டுமென நிறைய நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த வண்ணாரப்பேட்டையிலே, ஒரு by-pass சாலை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று. கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, முன்னீர்பள்ளம் இரயில்வே கேட். அதிலே ஒரு இரயில்வே மேம்பாலம் வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தென்காசி, அம்பாசமுத்திரம், திருநெல்வேலியிலே மீட்டர்கேஜ் பாதையை மாற்றி, விரைவாக அகல இரயில் பாதையாக மாற்ற வேண்டுமென்ற பணியை நமது அரசாங்கம், மத்திய அரசாங்கத்திலே கோரிக்கை வைத்து, நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, களக்காடு பகுதியிலே இருக்கின்ற செங்கந்தேரி; இப்போது இருக்கிற மாஞ்சோலை, ஊட்டி, கொடைக்கானல் போன்ற அருமையான பகுதி அது. அந்த செங்கந்தேரியைச் சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நெடுநாட்களாக இருக்கிறது. ஆனால், சிங்கவால் குரங்கு இருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி, அதைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்காத நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. உடனடியாக, செங்கந்தேரியைச் சுற்றுலாத் தலமாக அறிவித்தால், குற்றாலம், ஊட்டி போன்ற ஒரு அருமையான இடமாக சுற்றுலாப் பயணிகளுக்குக் கிடைக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை, இன்னொரு உறுப்பினர் பேச வேண்டியிருக்கிறது. உரையை முடியுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** நிறைய குறுக்கீடாகிவிட்டது, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரைட், ரைட். உரையைச் சீக்கிரம் முடியுங்கள். முடியுங்கள். முடியுங்கள். கோரிக்கையெல்லாம் சொல்லிவிட்டீர்களே!

பிற்பகல் 1-20

**திரு. பா. வேல்துரை:** பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தாலுகாவுக்குக் கடந்த ஆண்டு, ஒரு Sugar Mill வருமென்று அறிவிக்கப்பட்டது. ஆனால், அதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை இல்லை. Sugar Mill வருமென்ற அந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும். Sugar Mill வந்தால் ... (குறுக்கீடு) நம்முடைய மாவட்டம்தானே? அம்பாசமுத்திரம் தாலுகாவுக்கு, (குறுக்கீடுகள்) அந்த Sugar Mill திட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று முக்கியமான விஷயம், தாமிரபரணி ஆற்றிற்கு 198 கோடி ரூபாயில் ஒரு நல்ல திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள், உண்மையிலேயே நான் வரவேற்கிறேன். அந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அதை உட்கார்ந்து பேசி, மீண்டும் ஆய்வு செய்து, அந்தப் பகுதி மக்களுக்கு நிரந்தரமாகத் தண்ணீர் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அங்கே எலுமிச்சை ஆறு திட்டம் என்ற ஒரு சின்ன அணை; அதைக் கட்டினால் அந்தத் தண்ணீர் வரும். (மணியடிக்கப்பெற்றது) அதேபோன்று வண்டலோடை என்ற அணை இப்பொழுது கட்டப்பட்டிருக்கிறது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதேபோன்று, பாபநாசம், சேர்வலாறு போன்ற அணைகளிலே இருக்கிற தண்ணீரை மணிமுத்தாறு அணைக்கு tunnel மூலமாக எடுத்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை, திரு. வேல்துரை நன்றி சொல்லி முடியுங்கள். கோரிக்கை எல்லாம் பார்த்துக்கொள்ளலாம். சொல்லுங்கள், சொல்லுங்கள். சொல்லிவிட்டீர்கள் இல்லையா?

**திரு. பா. வேல்துரை:** இல்லை, முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை அவர்கள் சொன்ன கருத்துக்கு ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். மீண்டும் இந்த அவையில் என்னிடத்திலிருந்து வாக்குறுதி பெற விரும்புகிறார் என்று



கருதுகிறேன், அதை மிகத் தெளிவாகச் சொல்லுகிறேன். கென்னடியன் கால்வாயில் இருந்து தண்ணீரை எடுத்துச் செல்லும்போது, ஏற்கெனவே இருக்கிற ஆயக்கட்டுதாரர்களுக்கு எந்தவிதத்திலும் பாசனத்திற்குத் தண்ணீர் குறையாது. உபரியாக மழைக் காலங்களில் வீணாகிப் போவதைக் கணக்கிட்டுத்தான் அந்தத் தண்ணீரை எடுக்க வேண்டுமேதவிர, ஏற்கெனவே இருக்கிற பாசனதாரர்கள் பாதிக்கிற வகையில் எந்த முயற்சியும் இந்த அரசு எடுக்காது என்பதைத் திட்டவட்டமாக நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. வேல்துரை:** அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி. இருந்தாலும் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அணையிலே தண்ணீர் சேர்வலாறு, பாபநாசம்--இந்த வருடம் மறுகால் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால், அந்த மணிமுத்தாறுக்குத் தண்ணீர் வரவில்லை. ஆகவே, tunnel போட்டால், அந்த இரண்டு அணைகளினுடைய தண்ணீரையும் மறுகால் போடாமல் தடுத்து, மணிமுத்தாறு வழியாகத் தண்ணீர் கொண்டுபோகலாம். இதுகுறித்து நான் நேரடியாக வருகிறேன்; நான் உங்களிடம் பேசுகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டமும் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இரண்டு திட்டம். ஒன்று, இங்கிருந்து எடுப்பது. இரண்டு, tunnel-கள் போடுவது. இது இந்த ஆண்டு எடுத்திருக்கிறோம். அடுத்த ஆண்டு அதைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்துரை தனியாகப் போய் அமைச்சரைப் பார்த்துப் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.வி.ஆர். வீரகபிலன். (குறுக்கீடு) திரு. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** நான் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. பா. வேல்துரை:** என்னுடைய தொகுதியிலே இன்னும் ஒரு black spot Highways-ல் number 33 black spot அது இன்னும் முடியவில்லை. அதனால் நிறைய விபத்துகள் நடக்கின்றன. அது அமைச்சருக்குத் தெரியும். அதை உடனடியாக tender வைத்து, அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று O.D.R. சாலையில் கிட்டத்தட்ட 200 கிலோ மீட்டர் இருக்கிறது என்னுடைய தொகுதியில். ஒரு 60 கிலோ மீட்டர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீரகபிலன். (குறுக்கீடு)

**திரு. பா. வேல்துரை:** போக்குவரத்திற்குச் சரியில்லாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பைத் தந்த உங்களுக்கு என்னுடைய நன்றியைக்கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீரகபிலன்.

***திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை"*

என்பதன் கருத்துப்படி, காலங்கடந்து எனக்குக் காலத்தைத் தந்தாலும் அந்தக் காலத்தை நீட்டித் தந்து, ஜனநாயகத்தினுடைய தன்மையை உயர்த்தவேண்டும் என்று பணிவோடு தெரிவித்து, 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற அண்ணாவின் கூற்றை மெய்ப்பிக்கும் விதமாக, எளியோர் பாமரரையும் ஆட்சிக் கட்டிலில் அமரவைத்து அழகுபார்த்து, அன்பால், இரக்கத்தால் மக்கள் மனதில் எழுச்சியை ஏற்படுத்தி, ஒரு சமூகப் புரட்சியை ஏற்படுத்தி, 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்னும் விதமாக மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்று தம் பூதவுடலை உகுத்தாலும், புகழுடலால் என்றும் வாழும் புரட்சித் தலைவர் அவர்களால் அடையாளம் காட்டப்பட்ட எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கழகத்தின் கிளைச் செயலாளர் என்ற பொறுப்பில் மட்டும் இருந்த என்னை, தன் விரலசைவால் இம்மாமன்றத்தில் அமர்வதற்கு வாய்ப்பளித்ததற்கு மனதார வணங்கி, "பேர், இளமை, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு, இவை ஆறும் கருவின் அமைப்பு" என்ற முதுமொழிக்கு ஏற்ப, உலகிற்கு அறிமுகப்படுத்திய எனது தாய் சிவகாமி, தந்தை ரெங்கசாமி என்ற முன்னறி தெய்வங்களை நன்றியோடு நினைத்து, என்னைத் தங்கள் வாக்குகளால் வெற்றிபெறச் செய்த பேராவூரணித் தொகுதி மக்களையும் மனதார வணங்கி, எனது உரையைத் தொடங்குகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேப்பர் நிறைய இருக்கிறது. கொஞ்சம் குறைத்துவிடுங்கள்.



**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** இல்லை, இல்லை. நிறைய அடித்திருக்கிறேன். எனது தொகுதி சார்பாகப் பேசுகிறேன். பேராவூரணி சட்டமன்றத் தொகுதி, தஞ்சை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் என்ற இரு மாவட்டங்களின் எல்லைப் பகுதியாக உள்ளது.

மருதம் எனும் வயல் வெளியும், நெய்தல் எனும் கடல் சார்ந்த பகுதியுமாக உள்ள இந்தத் தொகுதியின் தேவைகள் இன்னும் ஏராளம். கல்லணைக் கால்வாயின் கடைசிப் பகுதியாக வருவதால், தூர் வாரப்பட்டு பல ஆண்டுகள் ஆனதால், போதிய நீர் எங்களுக்குக் கிடைத்து பல்லாண்டுகள் ஆகிவிட்டன. எனவே, முழுமையாகத் தூர் வாரப்பட ஆவன செய்ய வேண்டும்.

*பிற்பகல் 1–25*

அனைத்து ஏரிகளும், குளங்களும் தூர் வாரப்பட்டு, நிலத்தடி நீரை அதிகம் பயன்படுத்தும் எனது தொகுதியின் நீர்மட்டம் உயர்வதற்கு வகை செய்ய வேண்டும்.

தென்னை, எங்கள் தொகுதியின் வாழ்வாதாரமாக இருப்பதால், தென்னை வணிக வளாகம் அரசால் அமைக்கப்பட வேண்டும். அதற்குத் தாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறீர்கள். ஆனால், அதற்கான நிலப்பரப்பை 50 ஏக்கருக்குக் குறையாமல் அதிகப்படுத்தி, விரைந்து கையகப்படுத்தி, நிலையான விலையைத் தேங்காய்க்கு நிர்ணயம் செய்ய வேண்டும். தென்னை சார்ந்த உப தொழில்கள், தொழில்நுட்பப் பயிற்சி மையங்களை அமைத்து, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தென்னை சார்ந்த பொருட்களை உருவாக்க முனைய வேண்டும். இதனால் அநேகருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள எனது தொகுதிக்கு இது வரப்பிரசாதமாக அமையும்.

எனது தொகுதியில் அரசு சார்ந்த எந்தக் கல்லூரியும் இதுவரை தொடங்கப்படவில்லை. எனவே, அரசுக் கலைக் கல்லூரி, பொறியியல் சார்ந்த தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும். எனது தொகுதியின் தலைநகர் பேராவூரணியில் உரிமையியல் நீதிமன்றம், குற்றவியல் நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும். தங்கள் பரிசீலனையில் இருக்கும்பட்சத்தில் விரைந்து செயல்படுத்தி அமைத்துத்தர வேண்டுகிறேன்.

வேளாண் துறையைப் பொறுத்தவரையிலே, மாவட்ட ரீதியான மண் ஆய்வு மையங்கள் இருந்தாலும், தொகுதி முழுவதும் உள்ள மண்

மாதிரிகளை முழு நேரப் பணியாக, அத்துறை முடுக்கி விடப்பட்டு, எந்த நேரத்திலும் தாலுகா, கிராமம் சார்ந்த மண் ஆய்வு சோதனை விவரம் ஒவ்வொரு விவசாயியும் தெரிந்துகொள்ளும்வகையில் நிரந்தரமான விவரப் பட்டியல் வெளியிடப்பட வேண்டும். இது தமிழகம் முழுவதற்கும் பொருந்தும். இந்த மண்ணுக்கேற்ற தாவரத்தை, மரத்தை, பணப் பயிரை சாகுபடி செய்ய எங்களுக்கு நல்வழி காட்டும். இதை வனத் துறையும் கூட்டு முயற்சியாக செயல்படுத்துதல் அவசியம் என வேண்டிக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களின் உட்பகுதியில் சாலைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். இன்னும் பல கிராமங்கள் சாலையில்லாமல் உள்ளன. புதிய சாலைகள் போர்க்கால அடிப்படையில் போடப்பட வேண்டும். அக்னி ஆறு, நரியாறு, மகாராஜாசமுத்திரம், இன்னும் சேதுபாவாசத்திரம் பகுதியில் தடுப்பணைகள் கட்டப்பட்டு விவசாயத்திற்கு உதவ வேண்டும்.

பேராவூரணி அரசு ஆஸ்பத்திரியில் எந்த மருத்துவ உபகரணங்களோ அல்லது வசதியோ கிடையாது. இருக்கின்ற கருவிகளும் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளன. இவை சீர்செய்யப்பட வேண்டும். புதிய ஆம்புலன்ஸ் வழங்கப்பட வேண்டும். அதுபோல், செருவாவிடுதி மகப்பேறு மருத்துவமனை எந்நேரத்திலும் இடிந்துவிழும் நிலையில் உள்ளது. புதிய கட்டடங்கள் உடன் தேவை.

திருச்சிற்றம்பலத்தில் சார் பதிவாளர் அலுவலகம், பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைக்கப்பட வேண்டும். பேராவூரணியைத் தலைமையிடமாகக் கொண்ட காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும். மல்லிப்பட்டினம் அருகிலுள்ள மனோரா எனும் சுற்றுலாத் தலத்தை மேம்படுத்தி அழகுபடுத்த சுற்றுலாத் துறை அதிக நிதி ஒதுக்க வேண்டுகிறேன். நரியாற்றுப் பாலம், 25-11-2005-இல் 54 பேரை பலிகொண்ட மகாராஜாசமுத்திரம் தரைப் பாலங்கள் போன்றவை தங்கள் பரிசீலனையில் விரைந்து கட்டப்பட வேண்டும்.

சேதுபாவாசத்திரம் பகுதியில் மீன் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட வேண்டும். கடல்சார் பல்கலைக்கழகம் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இந்த அரசு, அதுசார்ந்த கல்லூரி ஒன்றை, எனது தொகுதியில் சேதுபாவாசத்திரம் பகுதியில் தொடங்க வேண்டுகிறேன். மீனவர் நல்வாழ்விற்கு ஒதுக்கப்பட்ட நிதியில்



சேதுபாவாசத்திரம், கீழத்தோட்டம், ஏரிப்புறக்கரை மற்றும் ஏனைய எனது தொகுதியின் மீனவர் அனைவரின் நலனிற்கு உதவும் வகையில் அதிக நிதியை ஒதுக்க வேண்டும். கண்ணாடி இழைப் படகுகள், வலைகள் போன்றவற்றை, சுனாமியில் பாதிக்கப்பட்டவர்கள் என்று பாராமல், அனைவரும் வங்கிக் கடன் பெற்று உயர்வதற்கு வகை செய்ய வேண்டும். மீனவர் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். விரைவில் நல்ல முயற்சி எடுத்து கடல் எல்லையை நிர்ணயித்து, nautical mile என்று சொல்லக்கூடிய கடல் எல்லையில், நமது இந்தியக் கப்பற்படை, எல்லைப் பாதுகாப்பாக நிறுத்தப்பட வேண்டும்.

அதிராம்பட்டினம் பகுதியில் அடிக்கடி தீ விபத்து நடப்பதால், அந்தப் பகுதி சார்ந்த பிலால் நகரில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும். பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கில், 1930-இல் கட்டப்பட்ட, கல்லணைக் கால்வாயின் குறுக்கில் கட்டப்பட்ட பாலம் இடிந்துவிட்டது. அது உடனடியாகக் கட்டப்பட வேண்டும்.

கூட்டுறவு வங்கிக் கடன் இரண்டு, மூன்று கட்டங்களாக சென்ற ஆண்டு வழங்கப்பட்டது. இதில் பல பிரச்சினைகள் எழுந்தன. இரண்டாவது கட்டமாக வழங்கப்பட்ட அந்தக் கடன் கொடுக்கப்பட்டு, இன்று 60 நாட்களுக்குள்ளாக மீண்டும் வசூலிக்கக்கூடிய நிலையில், மூன்று கட்டம், நான்கு கட்டம் என்று வழங்காமல், ஒரே தவணையாக வழங்க நான் வேண்டிக்கொள்கிறேன். மத்திய அரசு, மாநில அரசு எவ்வளவுதான் கடனுதவிபற்றி அறிவித்தாலும் தேசிய வங்கிகள் கிராமப்புறங்களில் அந்தக் கடன்களை எவருக்கும் வழங்குவதில்லை என்பதைத் தாங்கள் கவனத்தில்கொண்டு, அதைச் சீர்செய்ய வேண்டுமென்று வேண்டுகிறோம். எனது தொகுதியில் 40 ஆண்டுக் காலமாக பழுதடைந்த மின் கம்பிகள் உள்ளன. அடிக்கடி அறுந்து பல விபத்துகள் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே, புதிய மின் கம்பிகளை மாற்றித் தர வேண்டும். 110 K.V. துணை மின்நிலையங்கள் மூன்று வரை அமைக்கப்பட வேண்டும்.

அதேபோல், எல்லாத் தொகுதிகளுக்கும் அரசு விரைவு சொகுசுப் பேருந்துகள் இன்று தரப்பட்டிருக்கின்றன. ஆனால், எனது தொகுதி பேராவூரணியிலிருந்து ஒரு சொகுசுப் பேருந்துகூட இல்லை என்பதைக் கவனத்தில்கொண்டு, விரைவாக அதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–30

பட்ஜெட் விஷயத்தில், on-line–ஐப்பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது. ஐந்து நிமிடத்திற்குள் முடிக்க வேண்டும் நீங்கள்.

**திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்:** முடித்துவிடுகிறேன். On-line வர்த்தகத்திலுள்ள உணவு மற்றும் அத்தியாவசியமான அனைத்துப் பொருள்களுக்கும் விதிவிலக்குத் தர வேண்டும் என்பதை அனைத்துக் கட்சி நண்பர்களும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். நீங்களும் அதுகுறித்துப் பேசப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். ஆனால், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் மட்டுமல்ல; நடுத்தட்டு மக்களும் இன்று உணவுக்கு, உணவு சார்ந்த அத்தியாவசியப் பொருட்களுக்கு மிகவும் சிரமப்படக்கூடிய நிலையை கவனத்தில்கொண்டு, அதற்காகக் கடிதம் மட்டும் போதாது; கவனத்தை ஈர்த்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு நிச்சயமாக நல்ல பலனைத் தர வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன்.

அதைப்போல், இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.45,000 கோடியில் விவசாயக் காப்பீடுத் திட்டத்திற்கு 15 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது எவ்வகையிலும் நியாயமில்லை. ஏனெனில் ஏறக்குறைய 56 சதவீதமுள்ள விவசாய மக்களுக்கு இந்தத் தொகை எந்தக் காலத்திலும் போதாது. மேலும் மேலும் நமக்கு நீர்வரத்துக் குறைந்துவிட்டது. நிலத்தடி நீர் குறைந்துகொண்டே போகிறது. இந்தவகையில் பார்க்கின்றபோது, திருக்குறளே மாறக்கூடிய சூழ்நிலை வந்துவிடும் என்று நாம் கருத வேண்டியிருக்கிறது. ஏனெனில்,

*'தொழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*உழுதுஅலைந்து பின் சாவார்'*

எனறு புதிய குறள் அமைக்கக்கூடிய சூழ்நிலை இன்று வந்திருக்கிறது.

அறநிலையத் துறையில் பல ஆலயங்கள் புதுப்பிக்கப்பட நிதி ஒதுக்கிய இந்த அரசு, தமிழகத்திலுள்ள அனைத்து ஆலயங்களுடைய தல வரலாறு, சிறப்பு, கலைகளின் மேன்மை, இவற்றைத் தொகுத்து ஒரு கலைக்களஞ்சியம்—encyclopaedia—வெளியிட்டு, நம் முன்னோரின் பண்பாட்டை, கலைநயத்தை எதிர்காலச் சந்ததியினரும் எந்நாட்டவரும் அறிந்துகொள்ள வாய்ப்புத் தர வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றேன்.



அதைப்போல், பலமுறை போராட்டம் நடத்தி இருக்கிற எஸ்.சி., எஸ்.டி. என்ற பிரிவில் காட்டுநாயக்கன், குறவர் என்ற இனம் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மட்டும்தான் அந்தச் சலுகைகளை ஜாதிச் சான்றிதழ்களைப் பெறக்கூடிய ஒரு துயரமான சூழ்நிலை இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. இதனைக் கொஞ்சம் தளர்த்தி, அந்த இனங்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்கு அரசு சார்ந்த அனைத்துச் சலுகைகளும் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுத் தர வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றோம்.

அதைப்போல, ஆலயங்கள் சார்ந்த நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது, தனியார்வசம். இவை சார்ந்த வழக்குகளை விரைவில் முடித்து, அந்த ஆலயங்களுக்கு அந்த நிலங்களை அளித்து ஆலயங்கள் சிறப்புற, அறநிலையத் துறை அமைச்சகத்திற்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

அதைப்போல, பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையிலே நிதி உதவி மட்டுமல்ல; தலைசிறந்த பத்திரிகையாளர்களுக்கு வருடா வருடம் கௌரவப் பரிசுகளைத் தந்து பத்திரிகை தர்மம் நிலைத்து வாழ நான் வேண்டுகோள் வைக்கின்றேன்.

நிறைவாக, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்துமே மக்கள் நல்வாழ்வை எதிர்காலச் சந்ததியை முன்னோக்கி வழங்கப்பட்டவையே அல்லாமல், இலவசமாக, வாக்குகளை மட்டும் முன்னிறுத்தி அளிக்கப்பட்டவை அல்ல. தொட்டில் குழந்தைத் திட்டத்தை, பெண் சிசுக் கொலை தவிர்த்ததை, அன்னை தெரசா பாராட்டியிருக்கிறார்கள். தங்கத் தாரகை என்ற பட்டத்தை உலகம் இன்று வழங்கியிருக்கிறது. ஆகவே, இவை எல்லாம் எதிர்காலச் சந்ததிகளை, அதாவது இந்தக் குழந்தைகள் 18 வயது ஆனதற்குப் பிறகு, தனக்கு வாக்குகள் தரும் என்ற நோக்கத்தில் அல்ல; இதயத்திலிருந்து எழுப்பப்பட்ட இரக்கமிக்க திட்டங்கள் என்பதை இந்த அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, உழவர் பாதுகாப்புத் திட்டம் என்பது கம்யூனிச பொதுவுடைமை நாடுகள்கூட காணாத ஒரு புரட்சி. அதை எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்திருக்கிறார்கள். அதைப்போல நிலத்தடி நீர் குறைந்துகொண்டே இருக்கிறது. இந்தியாவில் ஓர் ஆண்டுக்கு 50 ஆயிரம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. இதனால் நேபாளம், பர்மா, இலங்கை போன்ற பகுதிகளில் பூகம்பம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை பிரிட்டிஷ் கவுன்சில் வெளியிட்ட காலத்திற்குப் பிறகு, இந்த மழைநீர் சேகரிப்புத் திட்டம்

[திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்] [2007 மார்ச் 27

என்ற ஒன்றைக் கொண்டுவந்ததை உலகமே பாராட்டியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எல்லாத் திட்டங்களும் எதிர்காலச் சந்ததியை இந்தத் தமிழ் மக்கள் மட்டுமல்ல; உலகத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து அப்படிப்பட்ட திட்டங்களை அறிவித்து, இன்னும் நல்ல திட்டங்களை மக்களுக்கு அறிவிக்கக் காத்திருக்கிறார்கள் என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, இந்த பட்ஜெட்டிலே பஞ்சாமிர்தம், விபூதி, பென்சில், இரப்பர், நாமக்கட்டி போன்றவற்றிற்கு வரி விலக்கு தந்ததற்கு நான் பாராட்டுகளைத் தெரிவித்து, எந்தக் காலத்திலும் இந்தத் திட்டங்கள் மக்களுக்கு உதவாது; வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களை உயர்த்துவதற்கு அவர்களுடைய அத்தியாவசியப் பொருட்களுக்கு நீங்கள் வரி விலக்கு அளிக்காவிட்டால், இந்தச் சமுதாயம் மன்னிக்காது என்று சொல்லி, தந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(28-3-2007)* புதன்கிழமை, காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-34* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*21. 2005-2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர்) முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. *[1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]*. (தமிழ், ஆங்கிலம்)

*22. 2005-2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (சேலம்) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. *[1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]*. (தமிழ், ஆங்கிலம்)

*23. 2005-2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை) முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. *[1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]*. (தமிழ், ஆங்கிலம்)



2007 மார்ச் 27]

*24. 2005-2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம்) முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. *[1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]*. (தமிழ், ஆங்கிலம்)

*25. 2005-2006* ஆம் ஆண்டிற்கான மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் (சென்னை) முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. *[1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956) 619*—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது*]*. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*14.* உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல்—(முதல் பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை).

*15.* உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல்—(இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் *1* முதல் *100* வரை).

---

D
V211, 31'07
107.22.1
2275579